

ஸேது பார்வதிபாய்.



ஸேது லக்ஷ்மிபாய்.

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
3 OCT 1908
M...S.



श्रीः

# ॥ आनन्दलहरी ॥

भवानि स्तोतुं त्वां प्रभवति चतुर्भिर्न वदनैः
प्रजानामीशानस्त्रिपुरमथनः पञ्चभिरपि ।
न षड्भिः सेनानीर्दशशतमुखैरप्यहिपति-
स्तदान्येषां केषां कथय कथमस्मिन्नवसरः ॥ १ ॥

धृतक्षीरद्राक्षामधुमधुरिमा कैरपि पदै-
र्विशिष्यानाख्येयो भवति रसनामात्रविषयः ।
तथा ते सौन्दर्यं परमशिवदृङ्मात्रविषयः
कथंकारं ब्रूमः सकलनिगमागोचरगुणे ॥ २ ॥

मुखे ते ताम्बूलं नयनयुगले कज्जलकला
ललाटे काश्मीरं विलसति गले मौक्तिकलता ।
स्फुरत्काञ्ची शाटी पृथुकटितटे हाटकमयी
भजामि त्वां गौरीं नगपतिकिशोरीमविरतम ॥ ३ ॥

विराजन्मन्दारद्रुमकुसुमहारस्तनतटी-
नदद्वीणानादश्रवणविलसत्कुण्डलगुणा ।
नताङ्गी मातङ्गी रुचिरगतिभङ्गी भगवती
सती शंभोरम्भोरुहचटुलचक्षुर्विजयते ॥ ४ ॥

नवीनार्कभ्राजन्मणिकनकभूषापरिकरै-
र्वृताङ्गी सारङ्गी रुचिरनयनाङ्गीकृतशिवा ।
तटित्पीता पीताम्बरललितमञ्जीरसुभगा
ममापर्णा पूर्णा निरवधिसुखैरस्तु सुमुखी ॥ ५ ॥

हिमाद्रेः संभूता सुललितकरैः पल्लवयुता
सुपुष्पा मुक्ताभिर्भ्रमरकलिता चालकभरैः ।
कृतस्थाणुस्थाना कुचफलनता सूक्तिसरसा
रुजां हन्त्री गन्त्री विलसति चिदानन्दलतिका ॥ ६ ॥

सपर्णामाकीर्णां कतिपयगुणैः सादरमिह
श्रयन्त्यन्ये वल्लीं मम तु मतिरेवं विलसति ।
अपर्णैका सेव्या जगति सकलैर्यत्परिवृतः
पुराणोऽपि स्थाणुः फलति किल कैवल्यपदवीम् ॥ ७ ॥

विधात्री धर्माणां त्वमसि सकलाम्नायजननी
त्वमर्थानां मूलं धनदनमनीयाङ्घ्रिकमले ।
त्वमादिः कामानां जननि कृतकन्दर्पविजये
सतां मुक्तेर्बीजं त्वमसि परमब्रह्ममहिषी ॥ ८ ॥

प्रभूता भक्तिस्ते यदपि न ममालोलमनस-
स्त्वया तु श्रीमत्या सदयमवलोक्योऽहमधुना ।
पयोदः पानीयं दिशति मधुरं चातकमुखे
भृशं शङ्के कैर्वा विधिभिरनुनीता मम मतिः ॥ ९ ॥

कृपापाङ्गालोकं वितर तरसा साधुचरिते
न ते युक्तोपेक्षा मयि शरणदीक्षामुपगते ।
न चेदिष्टं दद्यादनुपदमहो कल्पलतिका
विशेषः सामान्यैः कथमितरवल्लीपरिकरैः ॥ १० ॥

महान्तं विश्वासं तव चरणपङ्केरुहयुगे
निधायान्यं नैवाश्रितमिह मया दैवतमुमे ।
तथापि त्वच्चेतो यदि मयि न जायेत सदयं
निरालम्बो लम्बोदरजननि कं यामि शरणम् ॥ ११ ॥

अयः स्पर्शे लग्नं सपदि लभते हेमपदवीं
यथा रथ्यापाथः शुचि भवति गङ्गौघमिलितम् ।
तथा तत्तत्पापैरतिमलिनमन्तर्मम यदि
त्वयि प्रेम्णा सक्तं कथमिव न जायेत विमलम् ॥ १२ ॥

त्वदन्यस्मादिच्छाविषयफललाभे न नियम-
स्त्वमज्ञानादिच्छाधिकमपि समर्था वितरणे ।
इति प्राहुः प्राञ्चः कमलभवनाद्यास्त्वयि मन-
स्त्वदासक्तं नक्तंदिवमुचितमीशानि कुरु तत् ॥ १३ ॥

स्फुरन्नानारत्नस्फटिकमयभित्तिप्रतिफल-
त्त्वदाकारं चञ्चच्छशधरकलासौधशिखरम् ।
मुकुन्दब्रह्मेन्द्रप्रभृतिपरिवारं विजयते
तवागारं रम्यं त्रिभुवनमहाराजगृहिणि ॥ १४ ॥

निवासः कैलासे विधिशतमखाद्याः स्तुतिकराः
कुटुम्बं त्रैलोक्यं कृतकरपुटः सिद्धिनिकरः ।
महेशः प्राणेशस्तदवनिधराधीशतनये
न ते सौभाग्यस्य क्वचिदपि मनागस्ति तुलना ॥ १५ ॥

वृषो वृद्धो यानं विषमशनमाशा निवसनं
श्मशानं क्रीडाभूर्भुजगनिवहो भूषणविधिः ।
समग्रा सामग्री जगति विदितैव स्मररिपो-
र्यदेतस्यैश्वर्यं तव जननि सौभाग्यमहिमा ॥ १६ ॥

अशेषब्रह्माण्डप्रलयविधिनैसर्गिकमतिः
श्मशानेष्वासीनः कृतभसितलेपः पशुपतिः ।
दधौ कण्ठे हालाहलमखिलभूगोलकृपया
भवत्याः संगत्याः फलमिति च कल्याणि कलये ॥ १७ ॥

त्वदीयं सौन्दर्यं निरतिशयमालोक्य परया
भियैवासीद्गङ्गाजलमयतनुः शैलतनये ।
तदेतस्यास्तस्माद्वदनकमलं वीक्ष्य कृपया
प्रतिष्ठामातन्वन्निजशिरसि वासेन गिरिशः ॥ १८ ॥

विशालश्रीखण्डद्रवमृगमदाकीर्णघुसृण-

प्रसूनव्यामिश्रं भगवति तवाभ्यङ्गसलिलम् ।

समादाय स्रष्टा चलितपदपांसून्निजकरैः

समाधत्ते सृष्टिं विबुधपुरपङ्केरुहदृशाम् ॥ १९ ॥

वसन्ते सानन्दे कुसुमितलताभिः परिवृते

स्फुरन्नानापद्मे सरसि कलहंसालिसुभगे ।

सखीभिः खेलन्तीं मलयपवनान्दोलितजले

स्मरेद्यस्त्वां तस्य ज्वरजनितपीडापसरति ॥ २० ॥

श्री शंकरभगवत्पादाः ।



# ॥ चतुःश्लोकी ॥

कान्तस्ते पुरुषोत्तमः फणिपतिः शय्यासनं वाहनं
वेदात्मा विहगेश्वरो यवनिका माया जगन्मोहिनी ।
ब्रह्मेशादिसुरव्रजः सदयितस्त्वद्दासदासीगणः
श्रीरित्येव च नाम ते भगवति ब्रूमः कथं त्वां वयम् ॥

यस्यास्ते महिमानमात्मन इव त्वद्वल्लभोऽपि प्रभु-
र्नालं मातुमियत्तया निरवधिं नित्यानुकूलं स्वतः ।
तां त्वां दास इति प्रपन्न इति च स्तोष्याम्यहं निर्भयो
लोकैकेश्वरि लोकनाथदयिते दान्ते दयां ते विदन् ॥

ईषत्त्वत्करुणानिरीक्षणसुधासंधुक्षणाद्रक्ष्यते
नष्टं प्राक्तदलाभतस्त्रिभुवनं संप्रत्यनन्तोदयम् ।
श्रेयो न ह्यरविन्दलोचनमनःकान्ताप्रसादादृते
संसृत्यक्षरवैष्णवाध्वसु नृणां संभाव्यते कर्हिचित् ॥

शान्तानन्तमहाविभूति परमं यद्ब्रह्मरूपं हरे-
र्मूर्तं ब्रह्म ततोऽपि तत्प्रियतरं रूपं यदत्यद्भुतम् ।
यान्यन्यानि यथासुखं विहरतो रूपाणि सर्वाणि ता-
न्याहुः स्वैरनुरूपरूपविभवैर्गाढोपगूढानि ते ॥ ४ ॥

श्री यामुनाचार्यः ।

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 3 - OCT 1908 MADRAS.

॥ श्रीः ॥

# ॥ शारदाभुजंगम् ॥

सुवक्षोजकुम्भां सुधापूर्णकुम्भां
प्रसादावलम्बां प्रपुण्यावलम्बाम् ।
सदास्येन्दुबिम्बां सदानोष्ठबिम्बां
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ १ ॥

कटाक्षे दयार्द्रां करे ज्ञानमुद्रां
कलाभिर्विनिद्रां कलापैः सुभद्राम् ।
पुरस्त्रीं विनिद्रां पुरस्तुङ्गभद्रां
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ २ ॥

ललामाङ्कफालां लसद्गानलोलां
स्वभक्तैकपालां यशःश्रीकपोलाम् ।
करे त्वक्षमालां कनत्प्रत्नलोलां
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ ३ ॥

सुसीमन्तवेणीं दृशा निर्जितैणीं
नमत्कीरवाणीं नमद्वज्रपाणीम् ।
सुधामन्थरास्यां मुदाचिन्त्यवेणीं
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ ४ ॥

सुशान्तां सुदेहां दृगन्ते कचान्तां
लसत्सल्लताङ्गीमनन्तामचिन्त्याम् ।
स्मरेत्तापसैः सङ्गपूर्वस्थितां तां
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ ५ ॥

कुरङ्गे तुरङ्गे मृगेन्द्रे खगेन्द्रे
मराले मदेभे महोक्षेऽधिरूढाम् ।
महत्या नवम्यां सदा सामरूपां
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ ६ ॥

चलत्कान्तिवह्निं जगन्मोहनाङ्गीं
भजे मानसाम्भोजसुभ्रान्तभृङ्गीम् ।
निजस्तोत्रसंगीतनृत्यप्रभाङ्गीं
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ ७ ॥

पुरा शंकराचार्यवर्यप्रसन्नां
लसन्मन्दहासप्रभावक्त्रचिह्नाम् ।
चलच्चञ्चलाचातुताटङ्ककर्णां
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ ८ ॥

श्री शङ्करानन्दः ।



# ॥ भारतगीतम् ॥

श्रीमत्समस्तसंप-
　　त्समृद्धिसंपूर्णरम्यतोत्कर्षम ।
हृद्यानवद्यविद्या-
　　विद्योति विभाति भारतं वर्षम् ॥ १ ॥

सहकारनालिकेरा-
गरुपाटीरादिमतरुवररुचिरम् ।
फलविनतकलमशालि-
क्षेत्रव्याख्यातसारसर्वस्वम् ॥ २ ॥

नानाकलाकलाप-
प्रचारविस्तारिकीर्तिकमनीयम् ।
देशान्तरानुकार्य-
प्रगुणपरिष्कारसाररमणीयम् ॥ ३ ॥

प्रतिदिनमधीयमान-
श्रुतिपरिपूताग्रहारमहनीयम् ।
षड्दर्शनीपटिष्ठ-
द्विजगोष्ठीचिन्त्यमानशास्त्रार्थम् ॥ ४ ॥

वैदिककर्मठविद्व-
त्परिषदनुष्ठीयमानबहुयागम् ।
अनवरतमुदितनिर्जर-
भावितसस्यादिसंपदभिरामम् ॥ ५ ॥

'देवान्भावयतानेन ते देवा भावयन्तु वः'
इति गीता ॥

अत्र विराजति गौरी-

गुरुरच्युतमूर्तिराश्रयो जगताम् ।

व्योमावगाहिपादः

सुरसरिदवतारकारणं हिमवान् ॥६॥

गुरुः पिता, भ्राता च । अच्युतमूर्तिः स्थिर-स्थितिः, विष्णुस्वरूपश्च; 'स्थावराणां हिमालयः' इति हि गीता । पादः प्रत्यन्तपर्वतः, चरणश्च । सुरसरित् गङ्गा ॥

यं किल यज्ञाङ्गखनिं

धरणीधरणक्षमस्वसाराढ्यम् ।

परिकलितयज्ञभागं

शैलाधिपतिं प्रजापतिर्व्यधित ॥ ७ ॥

'यज्ञाङ्गयोनित्वमवेक्ष्य यस्य सारं धरित्रीधरणक्षमं च । प्रजापतिः कल्पितयज्ञभागं शैलाधिपत्यं स्वयमन्वतिष्ठत्' इति कालिदासः ॥

यत्र महामहिमानो

विषयविदूरा महात्मानः ।

भगवद्ध्यानैकपरा-

स्तप्यन्ते तेपिरे च तप्स्यन्ते ॥ ८ ॥

श्रीखण्डखण्डजनिभू-
रगस्त्यवासातिपावनोद्देशः ।
दक्षिणसमीरसूति-
र्लसतितरां मलयशैलोऽत्र ॥ ९ ॥

या कापिलकोपानल-
शलभायितसगरनृपतितनयानाम् ।
त्रिदिवाधिरोहलीला-
कल्पितदृढपुण्यरज्जुनिश्रेणिः ॥१०॥

निश्रेणिः अधिरोहणी ॥

यां किल हरिचरणारुण-
सरसिजनिष्यन्दिमधुरमधुधाराम् ।
आसेव्य सुकृतिलोक-
स्तापं विजहाति सर्वतः प्रसृतम् ॥

बहुतीर्थशोभमाना
संगतयमुना सरस्वतीरुचिरा ।
प्रथमा महानदीनां
प्रवहति साप्यत्र पावनी गङ्गा ॥

तीर्थं अवतारः, गुरुः शास्त्रं वा । सरस्वती नदी, वाग्देवी च । अत्र मैत्रेय्यादिसमाधिः ॥

मातेव पोषयन्ती
पयसा चोलानबाधमङ्कगतान् ।
श्रीरङ्गसङ्गसंगत-
मङ्गलतुङ्गाव वहति कावेरी ॥ १३ ॥

पयः जलम्, क्षीरं च । अङ्कः समीपदेशः, उत्सङ्गश्च ॥

मुक्ताकलितं तीर्थं
दधती विरजेव यावगाहिजनान् ।
मुक्तामयान्वितनुते
प्रवहति सरिदव ताम्रपर्णी सा ॥

मुक्ताकलितं मुक्ताफलैर्व्याप्तम्, मुक्तपुरुषैरवगाढं च । मुक्तामयान् मौक्तिकप्रचुरान् त्यक्तसकलशारीररोगान्वा त्यक्तसंसाररोगांश्च ॥

यस्मिन्विन्यस्य पदं
सुरलोकाद्भारतीदेवी ।
स्वयमवततार भूमा-
ववाभूत्कविगुरुः स वाल्मीकिः ॥

पदं चरणम्, शब्दं च ॥

सूक्तिसुधारसदाना-
दखिलानामोदयन्विबुधान् ।
रूपान्तरगतविष्णुः
कृष्णद्वैपायनोऽत्र संजज्ञे ॥ १६ ॥

विबुधान् विदुषः देवांश्च । 'कृष्णद्वैपायनं विद्धि साक्षान्नारायणं प्रभुम् ।'

सूर्याचन्द्रमसाविव
संतमसं यौ विधूनुतो जगतः ।
ताभ्यां पूतं भारत-
वर्षं वर्णयतु कः कथंकारम् ॥ १७ ॥

देहस्य वाङ्मनसयो-
रपि मलमुन्मूलितं येन ।
तेन पतञ्जलिनेदं
वर्षमभूष्यात्मनो जनुषा ॥ १८ ॥

चरकस्य व्याकरणमहाभाष्यस्य योगशास्त्रस्य च कर्ता पतञ्जलिः ॥

आस्थिषत कर्मणैव हि
संसिद्धिं ब्रह्मवादिनो ये ते ।

जनकादयो महान्तो
वर्षमिदं ज्ञानपूर्णमतनिषत ॥ १९ ॥

'कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः' इति गीता ॥

श्रीशंकररामानुज-
मध्वाचार्या अवातरंन्नत्र ।
ये किल सोपानततिं
निरमासत मुक्तिसौधमधिरोढुम् ॥

यद्ग्रथितसूक्तिमाला
सुदृशां प्रतिदेशमुल्लसति कण्ठे ।
कविलोकसार्वभौमः
कीर्त्या रेजे स कालिदासोऽत्र ॥

सुदृशः विद्वांसः, स्त्रियश्च ॥

वाचां विहारभवनं
प्रसन्नगम्भीरसरसमधुराणाम् ।
बाणकविरत्र जज्ञे
यः किल सारस्वतं पौंस्त्वम् ॥ २२ ॥

दुष्करसंगरधीरो
नीतिविदां ज्ञानिनां च धौरेयः ।
स्वच्छन्दमृत्युरासी-
दव महात्मा स गाङ्गेयः ॥ २३ ॥

संगरः युद्धं प्रतिज्ञा च । गाङ्गेयः भीष्मः ॥

सत्यपरिपालनाय
व्यक्रीणाद्यः कलत्रपुत्रौ स्वौ ।
चण्डालकिंकरोऽभू-
त्स्वयमिह सोऽभून्महान्हरिश्चन्द्रः ॥

पितृवाक्यपालनरतो
यो वनमध्यास्त धन्विनां धुर्यः ।
नियतैकदारचर्यो
धर्मात्मा सोऽजनीह रघुवर्यः ॥२५॥

मेधाविहारिवाचा
नन्दितविजयः सुरेन्द्रशिवदाता ।
गोकुललालनपालो
मोहनतिलकोऽनुजगृह इह कृष्णः ॥

मेधाविनो बुद्धिमतः पुरुषान् हरति आकर्षतीति तादृश्या वाचा गीतया। विजयः अर्जुनः। मोहनतिलकः मोहनं तिलकं विशेषकं यस्य सः। 'साक्षान्मन्मथमन्मथः' इत्युक्त्या मोहकश्रेष्ठ इति वा। (तिलकः) 'न स्त्रियां तु विशेषके' इति मेदिनी॥

अत्र पद्ये उपलक्षणतया महामहिम्नां बहूनां स्वदेशाभिमानिनां नामान्यपि प्रकृतानुगुण्याविरोधेन घटितानि सन्ति। मेधा पि. एम्. मेधामहाशयः। विहारि डाक्टर्. राष्विहारिघोषः। वाचा डि. इ. वाच्छा। नन्दि ए. नन्दि। विजयः सि. विजयराघवाचार्यः। सुरेन्द्रः सुरेन्द्रनाथबानर्जी। शिवः पि. एस्. शिवस्वाम्यार्यः। दाता सुप्रसिद्धः दाताबाय् नौरोजी महाशयः, टाटामहाशयः, आर्. सि. डट्प्रभृतयश्च। गोकुलः गोपालकृष्णगोखले महोदयः। लाल लाल्पदघटिताः लालालजपतिराय् लाल्मोहनघोष्प्रभृतयः। पालः विपिनचन्द्रपालः। मोहनः मोहनपदघटिताः पण्डितमदनमोहनमालविया आनन्दमोहनबोस्प्रभृतयः। तिलकः बालगङ्गाधरतिलकः। कृष्णः वि. कृष्णस्वाम्यार्यः॥

कर्मज्ञानप्रपदन-
योगैरौदार्यवीर्यशीलगुणैः ।
विद्याविवेकशिल्पै-
र्वर्षमिदं प्रागदिद्युतन्बहवः ॥ २७ ॥

ஸ்ரீ

# கலைமகள் துதி.

## மயங்கிசைக்கோச்சகக்கலிப்பா.

தரங்கமுயர் பெருங்கடலைத் தனியாடை யாக்கொண்டு
வரங்களுயர் தரும்புலவர் வதியிடமா நனியிலங்கும்
ஓங்குமுல குக்கொருபே ரொளியாய நல்லறமும்
பாங்குறுமவ் விருபொருளும் பரிவினூறு மின்பமுமாம்
பயன்மூன்று மவைகடந்த பரகதியு மடைந்துய்ய
அயனாவில் வதிந்தருளி யருமறையை யறிவித்தும்
அல்லாது மதன்பொருளை யனைத்துலகு முணர்ந்திடவே
நல்லார்தந் நாவிலுறை நற்கனியே! நாமகளே!

ஆக்குமா றயன்றனக்கு மவைகாக்க வரிதனக்கும்
வீக்குமா வான்றனக்கு விண்ணவரி னிறைதனக்கும்
மற்றுள்ள திசைவலர்க்கு மண்ணகத்து வேந்தர்க்கும்
பெற்றுள்ள பெருஞ்சத்தி யாயனைத்தும் பேணுதியால்
உரையுற்ற வாழ்பொருளு முலகுற்ற வாழ்பொருளும்
புரையற்று நிலைத்தாங்குப் பொறையுற்று நிலைத்தியால்
மலரினது மணம்போலு மாந்தரது குணம்போலும்
புலரிதன வொளிபோலும் பொற்பமைந்தாய் பாமகளே!!

இவை தரவு.

சாட்சியாற் பேருடையாற் கலன்களா விருந்தவிசான்
மாட்சியா லுனையறியு மாமறையா லருடன்னாற்
சாட்சியா யெங்குமுள தன்மையினான் முற்குணமே
யாட்சியா யென்றுணர வான்றோர்க்குத் தெரித்தனையே.

மறைதருமவ் வமுதத்தை மன்பதைக ளருந்தாமற்
குறைதரும்பல் யோனிதனிற் குலவுவதை யோர்ந்தனையா
யறைதரும்பேர்ப் புராணமுநற் கீதையுமா யளித்தருள்வான்
உறைதருநன் மாதவன்பான் மாதவன்பா லுதித்தனையே.

ஆரியநூ லறியாதா ரங்கவற்றை யறியாமால்
காரியமன் றெனக்கருதிக் கருவினிடை யவதரித்த
சூரியர்க ளாழ்வார்கண் புனிதர்நா யன்மார்கண்
கூரியதென் சொன்மறையாக் குணங்கொடுநீ குதித்தனையே.

காளிதா சக்கவியின் கவினீங்கப் பொலன்சிலம்புத்
தாளினாய்! நாவெனன்றி பவபூதி தருக்கொழிய
காளமே கப்புலவன் கவிதோற்றச் சிரமறுமவ்
வேளைவே ழத்துதித்து விடையேற்க விதித்தனையே.

செங்குந்த ரெழுபதின்மர் சிரமறுத்த கவிக்கூத்தன்
அங்குத்தன் னருண்மொழியா லவருயிர்க்க வருளினையாய்
கொங்குற்ற மலர்பொதுளுங் கோயில்பார்ப் பனச்சிறுவன்
துங்கக்கம் பனதருளாற் சாவொழிக்கத் துலங்கினையே.

பட்டினத்தார் தமமொழியாற் பகரும்பே ரெரிபொறித்து
யட்டறுசீ ரவரனையை மகிமகிழத் தகித்தனையாய்
கிட்டியுன வருட்செயலை யிழிந்தவருங்!கிளர்ந்துணரச்
சட்டமுட னகலமதிற் றிரிந்தாடற் றரித்தனையே.

இ.ர.வ தாழிசை.

அஃதான்று

## இது தனிச்சொல்.

சீருடை யுரைசெறி தெருள்கவிப் பெரியவன்
சேரனற் றிருந்தவை திகைத்திடு பொழுதினிற்
பேரருள் குறிக்கொடுப் பெருமணிச் சிலம்பணி
யாருமங் கறிந்திட வணிந்திடு புகழினை.

கூத்தனு வளவனுந் தமிழ்மொழி கொளவிலர்
காத்தரு ளெனக்கவல் கவிவலன் றுயரறப்
பூத்தொரு விடைத்தெரு விடைச்சிறு மியளென
மோர்த்தமி யெனவரு டருபெரு மொழியினை.

புலவரின் மனமல ரனமெனப் புகல்கொடு
வுலகிடை யுறுபொரு ணலமல தணர்சாச்
சலமுடை யவர்கெடச் சனமுயர் நலம்பெற
விலவிதழ் மதிநுதல்! இருளற வருளினை.

கூத்தனொர் தினநினைக் குறிக்கொடு துதித்திட
வார்த்தியொ டவரெதி ரடுத்தமு தளித்தனை
சாத்திரப் பலகலை கொடுத்தனை தனையலாற்
பேர்த்தொரு கடவுளு மிலதெனும் பெருந்தனை!.

## அராகம்.

போற்றுவார் போற்றுவதுன் மெய்ப்பொருளே யல்லாமல்
வேற்றுவா சகமவர்தாம் விளம்புமா றென்கொண்டோ?

எத்தொழிலுந் தொழில்பெறநீ யிலக்காவதல்லாமற்
றத்தொழியக் காண்பேநாந் தாயே!வே றென்கொண்டோ?

உலகமெலா முயர்ந்திடும தன்னருளா லல்லாமற்
பலகலைகளுணர்த்திடும்பேர்ப்பல்பொருளுமென்கொண்டோ?

பத்திக்கு வித்தாகப் பகர்பொருணின் னேக்கல்லான்
முத்திக்கோர் பெருவழியு முடிவில்வே றென்னுண்டோ?

பேச்சுறுதி யல்லாது பெருநட்பு வேறின்றால்
வேய்ச்சிறதோ ணறுநுதலே! வெண்கமல வெண்வண்டே.

மக்கட்கு மன்னேக்கு வளரன்பு னருளல்லாற்
றக்கதொரு பேறுண்டோ? தெவிட்டாத கற்கண்டே!

இவையுந்தாழிசை.

படியக விருளடு பரிதிம தியர்பலப்
படிவொடு படிந்தெனப் படிகமுட் காத்தினே.

அமலநல் லறிவவா வுவர்தனி யிருமெனக்
கமலமென் பொகுட்டதைக்கடிகொளுந் தவிசினே.

(பேரெண்)

வாய்தரு மனேயென வடிவுடை யாழினே.
தோய்தரு பொருளெலாந் தொகுத்தொரு நூலினே.

பாய்கதி ரொளியினேப் பகைத்தொரு முடியினே.
தாய்தரு மனத்தவர் துதிபெறு வடியினே. (அளவெண்.)

முக்குணமும் படைத்தோய் நீஇ.
மூவாப்பே றடைந்தோய் நீஇ.
நக்குணத்தி னின்றோய் நீஇ.
நல்லுளத்திற் சென்றோய் நீஇ.
எழின்மலரின் மிசையோய் நீஇ.
இருங்கடலின் மேயோய் நீஇ.
விழுச்சிலையிற் படிந்தோய் நீஇ.
மிடிக்களைத்து வடித்தோய் நீஇ. (இடையெண்.)

பெண்ணுநீஇ. ஆணுநீஇ. பெரியைநீஇ. சிறியைநீஇ.
உருவுநீஇ. அருவுநீஇ. ஊழிநீஇ. ஆழிநீஇ.
அறமுநீஇ. மறமுநீஇ. அரிமைநீஇ. எளியைநீஇ.
வித்துநீஇ. விளைவுநீஇ. மற்றுநீஇ. முற்றுநீஇ.

(சிற்றெண்)

இவையம்போதரங்கங்கள்.

எனவாங்கு

தனிச்சொல்.

நின்புக ழளவில பன்னவு மறியலன்
சொன்னய மெய்திலன் சோர்வுள னசையுளன்
இலம்படு மெந்தனைப் பலன்படச் செய்தியால்
பொலம்படு முளரியுட் பொற்புறு மணமதால்;
மன்பதை மன்னவர் வாழ
நின்பதந் தந்து நிலவு வாயே.

சுரிதகம்.

M. V. கோவிந்தராஜ அய்யங்கார்.





# ஸ்ரீராமாநுஜ சரிதம்.

பிறகு அங்கச்சேரி ஜனங்கள் வழிவிலகி ஸ்ரீ வைஷ்ணவர்களையும் ஸ்ரீ பாஷியகாரஸ்வாமிகளையும் வெளியேற்றினார்கள். அவர்கள் செய்த பெரிய உதவிக்குப் பிரதிபலமாகத் திருநாராயணபுரத்தில் அவர்களுக்கு ஒரு பெரிய மரியாதை யேற்பாடு செய்யப்பட்டது. அவர்களுக்குத் 'திருக்குலத்தார்' என்று பெயர் கொடுக்கப்பட்டது. (பங்குனிமீ த்தில் செல்வப்பிள்ளைக்கு நடக்கும் மஹோத்ஸவத்தில் திருத்தேர் முதல் மூன்று நாள் அவர்கள் திருக்கல்யாண ஸரஸ்ஸில் ஸ்நாநம் செய்யவும், கோவிலை பிரதக்ஷணம் செய்யவும் துவஜஸ்தம்பம் வரையில் செல்லவும் தளிகைக்கு அரிசியும் எண்ணெயும் ஸமர்ப்பிக்கவும் பிரஸாதம் பெறவும் தேரிழுக்கவும் அநுமதி செய்யப்பட்டது. இதுவே 'அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட மரியாதையாம். நாளது வரையில் இது இவ்வாறு நடந்து வருகிறது.) அவர்கள் பெருத்த மனமகிழ்ச்சியோடு வெகுதூரம் தொடர்ந்து துணை வந்து மீண்டார்கள்.

ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் மிக வேகமாகவே திருநாராயணபுரம் வந்து சேர்ந்து செல்வப்பிள்ளையைத் திருநாராயணனோடே சேர்த்துப் பிரதிஷ்டை செய்வித்து உத்ஸவம் முதலானவைகளைக் குறைவற நடப்பித்து வந்தார்கள்.

குதிரைப்படைவீரர்கள் திரும்பிச்சென்று செய்தியைத் தெரிவித்ததன்பின், ராஜகுமாரி பிராணத்தியாகஞ் செய்துகொள்வதாய்ப் பிடிவாதம்பிடிக்கவே, அரசன் தன் கீழதிகாரிகளை வரவழைத்து யோசிக்க, அவர்களும் ஸ்வாமிகளின் வரலாறுகளெல்லாவற்றையும் கூற, அரசன் தன் குமாரிக்கு அவற்றைத் தெரிவித்து இனித்தன்னால் செய்யக் கூடியதில்லையே யென்று மனந்தளர்ந்துவிடவே, ராஜகுமாரி தகப்பனைப் பணிந்து 'நான் அவரையே கணவனாக வரித்துவிட்டேன்' என்று கூறி அவர் தன்னுடன் கலந்திருந்த வகைகளையெல்லாம் தெரிவித்துத் தந்தையனுமதி பெற்று பெரிய விருதுகளோடு பல்லக்கேறித் திருநாராயணபுரம் வந்தாள். இதை அறிந்து ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் பெரிய மரியாதையோடெதிர்கொண்டு போய் அவளை அழைத்துவந்தார்கள். த்வஜஸ்தம்பம் தாண்டியவுடனே பல்லக்குடன் வந்தவர்கள் அனைவரும் அந்தர்த்தானமாய்விட்டார்கள். செல்வப்பிள்ளை ஸ்வப்நத்தில் நியமித்தபடி அந்த ராஜகுமாரியை விக்கிரஹமாகச் செய்து திருநாராயணப்பெருமாள் செல்வப்பிள்ளை யிவர்களது திருவடிகளில் இடையில் சேர்த்துப் பூஜிக்கலானார்கள். (இக்காட்சியிப்போதும் காணப்படுகிறது).

வெகுகாலம் புற்று மூடி மறைந்துகிடந்த அந்தத்திருநாராயணபுரம் ஸ்தலம் சீர் திருத்தப்பட்டு சூறையாடப்பட்ட உத்ஸவ விக்கிரஹமும் கிடைத்து கோவில் விமர்சைப்படவே வெளியிடங்களிலிருந்து பலர் அவ்விடம் வந்து

குடியேறினார்கள். நித்யம் நைமித்திகம் முதலிய பூஜை உத்ஸவங்கள் வெகு சிறப்பாய் நிறைவேறுகின்றன.

அவ்விடத்திலுள்ள அபிமான விசேஷத்தால் ஸ்ரீ பாஷியகாரஸ்வாமிகள் பன்னிரண்டு ஸம்வத்ஸரம் அங்கே யே வாஸம் செய்தார்கள். பத்மகிரியென்னும் மலையில் பல பௌத்தர்கள் இருந்ததாகவும் ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமி களோடு அவர்கள் வாது புரிந்து தோல்வியுற்றதாகவும் வாதம் துடங்கப்பட்டபோது செய்யப்பட்ட நிபந்தனைப் படி அவர்களைக் கற்காணத்தில் அரைத்துவிடப்பட்டதாக வும் குருபரம்பரை நூல்கள் கூறுகின்றன.

ஸ்ரீமத்வேதாந்த தேசிகஸ்வாமிகள் இந்த யதுகிரியை தக்ஷிணபதரி யாச்சிரமமென்றும் ஸ்ரீபாஷியகாரஸ்வாமி களின் விஜய ஸ்தானமென்றும் ஸங்கல்ப ஸூர்யோதயத் தில் சிறப்பித்துக் கூறுகிறார்கள்.

ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் திருநாராயணபுரத்தில் நிலை பெற்றவுடனே சிறியாண்டானென்பவரை கூரத்தாழ்வா னை விசாரித்து வரும்படி அனுப்பிவைத்தார்கள். சிறியா ண்டானும் பயணகதியாய்ப் பராந்தகம் வந்து விசாரித்துத் திருமாலிருஞ் சோலைவந்து கூரத்தாழ்வானை தண்டனி ட்டு எம்பெருமானாருடைய திக்விஜய விருத்தாந்தத்தையும் செல்வப்பிள்ளை கிடைத்த அதிசயத்தையும் தெரிவித்தார்க ள். கூரத்தாழ்வான் அதுகளைக் கேட்டு மனம் பூரித்தார் கள். ஆசார்யனை விட்டுப் பிரிந்திருக்கும் துயரம் கூரத் தாழ்வானுக்கு நாள்தோறும் அதிகரித்து ஸஹிக்கமுடியாத தாயிருந்தது. சிறியாண்டானால் விசேஷமான ஸங்கதிகள் கேள்விப்பட்டதனால் அது பொங்கியெழுந்தது. கண்கள் போய்விட்டதால் அவ்வளவு தூரம் போகச்சாத்தியமில்லை யென்பதும் தெரியும். அதனால் கூரத்தாழ்வான் 'ஸுந்தர

பாஹுஸ்தவம்' என்னும் கிரந்தத்தால் திருமாலிருஞ்சோலை யெம்பெருமானை ஸ்தோத்திரஞ்செய்தார்.

பகவத்பாகவத த்வேஷியான அந்த பெரும்பாவிச் சோழன் கழுத்தில் புழுத்து வாதைப்பட்டுப் புரளுவதாகக் கூறினேமல்லவா. அவன் அவ்வேதனையை வெகுகாலம் அநுபவித்துக் கடைசியாய் யமபாதனைகளை அநுபவிப்ப தற்காகப் புறப்பட்டு விட்டான். இந்த வ்ருத்தாந்தத்தைக் கேட்ட உடனே திருமாலிருஞ்சோலை யெம்பெருமான் தனது பிரார்த்தனையின் ஒரு பாகத்தை நிறைவேற்றி விட்ட படியால் மற்றொரு பாகத்தையும் துரையில் நிரைவேற்றி வைப்பார் என்று விசுவாஸத்தோடு கூரத்தாழ்வான் அழகரது நியமனம் பெற்று ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். சிறியாண்டான் ஆழ்வானை ஸ்ரீரங்கத்தில் விட்டு விட்டு சோழன் மாண்ட செய்தியின் உண்மையை நேரே அறிந்துகொண்டு அம்மங்கி அம்மாளுடன் திருநாராயணபுரத்துக்குப் பிரயாணமானர்.

ஸந்தோஷ ஸமாசாரத்தைத் தெரிவிக்கப்போகிற உத்ஸாஹத்தாலே இவ்விருவரும் கடுநடையாய் நடந்து துரையாய் திருநாராயணபுரம் போய்ச் சேர்ந்தார்கள். அப்போது ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் திருக்கல்லியாணியில் அநுஷ்டானம் செய்துகொண்டிருந்த தருணம். சிறியாண்டானும் அம்மங்கி அம்மாளும் அந்த ஸமயத்தில் ஸ்வாமிகள் அருகே சென்று "சோழன் புழுத்துப் புரண்டு மாண்டான்" என்று தெரிவித்தார்கள். ஸ்வாமிகள் அதைக்கேட்டு மனம் பூரித்தார்கள். 'இந்தக் கல்யாண ஸரஸ்ஸு இன்று நமக்கு யதார்த்தமாயிற்று.' என்று ஸந்தோஷித்துக் கொண்டாடினார்கள். ஸந்தோஷ ஸமாசாரம் கூறிய உங்களுக்கு வெகுமதி செய்யவேண்டும். வாருங்களென்று அவர்களை யழைத்து அவர்கள் காதிலே த்வயத்தை உப

தேசித்தார்கள். அநுஷ்டானம் முடித்து மலைமேல் அழகிய சிங்கரையும் திருநாராயணனையும் ஸேவித்துத் தமது ஆச்ரமத்திற்குத் திரும்பினார்கள்.

திருநாராயணப் பெருமாள்து கைங்கர்யங்கள் குறைவற நடக்கும்படி கைங்கர்யபரர்கள் அங்கே ஏற்பாடு செய்து வைத்தார்கள். ஸ்ரீ பாஷியகாரஸ்வாமிகள் ஸ்ரீரங்கம செல்வதாக ஸ்வாமிகள் நிச்சயித்துக்கொண்டதை அறிந்து அவ்வூரார் ஸ்வாமிகளைப் பிரிந்து பிழைத்திருக்க மாட்டோமென்று துடிக்கவே அவர்களுக்குத் தேறுதலாகத் தம்மைப்போல ஒரு மூலவிக்கிரஹம் செய்வித்துக் கொடுத்துத் தமக்குப்பதிலாக அதைப்பார்த்துக்கொண்டிருக்கும்படி அவர்களுக்கு உத்திரவுசெய்து திருநாராயணப் பெருமாள் செல்வப்பிள்ளைகள் விடைபெற்று ஸ்ரீரங்கம் பிரயாணமானார்கள். ஸ்ரீவிஷ்ணுவர்த்தன நாராயணராயனும் தொண்டனூர் நம்பியும் வெகுதூரம் பின்தொடர்ந்து வழிவிட்டு மீண்டார்கள். வடுகநம்பியும் சிறியாண்டானும் மற்ற முதலிகளோடு ஸ்ரீரங்கம் வந்தார்கள்.

ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் எழுந்தருளும் ஸமாசாரத்தைக் கேட்ட ஸ்ரீரங்கத்தார் அனைவரும் ஸ்வாமிகளையெதிர்கொண்டழைத்து வந்தார்கள். கூரத்தாழ்வான் ஸ்வாமிகளின் திருவடிகளில் விழுந்து இத்தனை நாள் பிரிந்திருந்ததற்கு மிகவும் சோகித்துத் துடித்தார். ஸ்வாமிகள் அவரை வாரி யெடுத்தணைத்து 'எனக்காக நீர் கண்ணை யிழந்தீரே' என்று சோகித்து அவருடன் கோயில் சென்று ஸ்ரீரங்கநாதனையும் ஸ்ரீரங்கநாயகியாரையும் ஸேவித்துத் தம்மாச்ரமம் வந்து முன்புபோல ஸ்ரீபாஷ்யம் பகவத்விஷயகாலக்ஷேபங்களை நடத்தியும் ஸ்ரீரங்கநாதரை நித்ய நைமித்திக உத்ஸவாராதனதிகளைக் குறைவற நடப்பித்தும் வந்தார்கள்.

கல்பத்தின் துவக்கத்தில் வரபலம்பெற்று மதமேறிய மதுகைடபர்கள் வேதாபஹாரம் செய்ய, பகவான் அவர்களை வதம் செய்தபோது, அவர்களின் பிரார்த்தனைப்படி ஒரு வரம் கொடுக்கப்பட்டது. அதன்படி பெரிய திவ்ய தேசங்களில் மார்கழிமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி முதலாகப் பத்துநாள் பெரிய உத்ஸவம் நடத்தப்படும். அது பெரிய உயரமான கொட்டகையில் நடக்கும். அந்த பத்து தினமும் பகல்பொழுதில் நாலுவேதங்களும் பாராயணம் செய்யப்படும். அவ்வொரு வேதமும் சரிபாகமாய்ப் பத்துப்பிரிவாய் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரிவு பாராயணம் செய்யப்படும். நாலு கலசங்களில் நாலு வேதங்கள் ஆவாஹநம் செய்யப்பட்டுப் பாராயணகாலத்தில் கோஷ்டியில் வைக்கப்பட்டிருக்கும் உத்ஸவத்தில் அக்கலசத்தின் தீர்த்தங்கள் ஸ்வாமியின் திருவடிகளில் சேர்க்கப்படும். இதற்கு அத்தியயன உத்ஸவமென்று பெயர்.

ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தத்தில் முக்கியர்களாகப் பூஜிக்கப்படும் ஆழ்வார்களில் கடைசியவராகிய திருமங்கையாழ்வார் பிரதி வ்ருஷமும் இவ்வத்தியயனோத்ஸவத்துக்கு ஆழ்வார் திருநகரியிலிருந்து ஆழ்வாரை எழுந்தருளுவித்து உத்ஸவம் பத்துநாளும் தினம் நூறு பாடலாகத் திருவாய்மொழியாயிரத்தையும் வேதங்களுடன் பாராயணம் செய்யும்படி ஏற்பாடு செய்துவைத்திருந்தார். அப்படி பலநாள் நடந்தது. பிறகு அது நின்றுவிட்டது. பிரபந்தங்களும் லோபமடைந்துவிட்டன.

ஸ்ரீமந்நாதமுனிகள் அவதரித்து யோகாப்பியாஸபலத்தால் ஆழ்வாரை ஸாக்ஷாத்கரித்து திவ்யப்ரபந்தம் நாலாயிரமும் த்வயமும் பெற்ற பின்பு அத்தியயனோத்ஸவத்துக்கு முன் பத்து நாள்களில் முதலாயிரம் திருமொழியாயிரங்களையும் ஏகாதசி முதல் பத்து நாள்களில் வேதங்களோடு

திருவாய்மொழியாயிரமும் இருபத்தோராவது நாள் இயற்பாவாயிரமும் பாராயணம் செய்யும்படி நிபந்தனை செய்து திருமங்கையாழ்வார் செய்த ஏற்பாட்டுப்படி ஆழ்வார் திருநகரியிலிருந்து நம்மாழ்வாரை எழுந்தருளப்பண்ணிவைத்து அவ்வுத்ஸவத்தை நடத்திவைத்து அப்படியே பிரதிவருஷமும் நடக்கும்படி யேற்பாடு செய்திருந்தார்கள். அவ்வாறே பலகாலம் நடந்துவந்து பிறகு சோழபாண்டிய அரசர்களின் தொல்லையால் அது நிறைவேறத் தடையாய்விட்டது.

ஆகவே ஸ்ரீ பாஷியகாரஸ்வாமிகள் ஸ்ரீரங்கத்திலேயே நம்மாழ்வாரையும் மற்றையாழ்வார்களையும் பிரதிஷ்டை செய்வித்துத் திருமங்கையாழ்வார் ஸ்ரீமந்நாதமுனிகள் இவர்கள் செய்த நிபந்தனைப்படி திருவத்தியயனோத்ஸவத்தை நடப்பித்தார்கள்.

கூரத்தாழ்வானது சிஷ்யராகிய திருவரங்கத்தமுதனார் 'இராமாநுஜநூற்றந்தாதி' என்னும் கட்டளைக்கலித்துறையந்தாதி பாடி அரங்கேற்றியது அப்போது தான். நம்மாழ்வார்விஷயமாக மதுரகவிகள் அருளிச்செய்த 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் அந்தாதிப்பத்து முதலாயிரத்தின் முடிவில் சேர்க்கப்பட்டதுபோல ஸ்ரீவைஷ்ணவர்கள் வேண்டுகோளினாலும் ஸ்ரீரங்கநாதனது நியமனத்தாலும் இந்த நூற்றந்தாதியும் இயற்பா முடிவில் சேர்க்கப்பட்டு நாலாயிரப்பிரபந்தமாக்கப்பட்டது.

மற்றுமொருமுறை ஸ்ரீ பாஷியகாரஸ்வாமிகள் திவ்யதேசயாத்திரைசென்றபோது அங்கங்கு ஆழ்வார்கள் ஆண்டாள் ஆசார்யர்களை விக்கிரஹமாகப் பிரதிஷ்டை செய்துவைத்து திவ்யப்ரபந்த பாராயணம் திருவத்தியயனோத்ஸவம் முதலியவைகள் நடக்கும்படி நிபந்தனை செய்தார்கள்.

அம்முறையில் பெருமாள்கோவில் வந்தபோது கூரத்தாழ்வானை அழைத்து 'வரந்தரும்பெருமாளான அருளா

எம்பெருமானை பிரார்த்தியும் கண் கொடுப்பார்' என்று ஸ்வாமிகள் உத்தரவுசெய்தார்கள். அவரும் வரதராஜ ஸ்தவம் அருளிச்செய்து முடித்தார். ஸ்ரீபாஷியகார ஸ்வாமிகள் அதன் மத்தியில் நேத்ரஸாத்குரு கரீச என்று கூறப் பட்டதைக் கேட்டு 'ஆழ்வான்! முகத்தைக்காட்டும், நீர் இப்படிப் பிரார்த்தித்தும் பெருமாள் கண்கொடுக்கவில் லையா?' என்றார்கள். 'ஸதா மே என்று நான் பிரார்த்தித் தேன்' என்று ஆழ்வான் சொன்னார். இதைக்கேட்டு ஸ்ரீ பாஷ்யகாரஸ்வாமிகள் வருத்தமுறவே பேரருளாளப் பெருமாள் அப்போது சாத்திக்கொண்டிருந்த திருவாபர ணங்களை இவையிவையென்று ஆழ்வான் பிரித்துக்கூறி னார்கள். மற்றும் ஸ்ரீ பாஷியகாரஸ்வாமிகள் நிர்ப்பந்திக் கவே எம்பெருமான் எம்பெருமானார் இவர்களை ஸேவிக் கும்படி மாத்திரம் கண் வேண்டிப் பெற்றுக்கொண்டார். அம்முறை இவ்வாறு திவ்யதேச யாத்திரை ஸுகமாய் நிறைவேறியது. ஸ்வாமிகள் அடியார்களோடு ஸ்ரீரங்கத் தில் வாஸம் செய்துவந்தார்கள்.

இப்படி திவ்யதேசமெங்கும் வைஷ்ணவஸம்ருத்தி தழைத்தோங்கும்படி பாமதநிரஸநமும் ஸ்வமதஸ்தாபந மும் செய்து விசிஷ்டாத்துவைத ஸித்தாந்தத்தை நிலைநிறு த்திய ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகளின் சிஷ்யர்கள் அநேகமாயி ரம் பெயர்களாகும். அவர்களில் எழுநூறு பெயர் யதிகள். ஏகாந்திகள் பன்னீராயிரம் பெயர். அம்மையார்கள் மூந நூறு பெயர். சாத்தாதவர்களும் கிருஹஸ்தர்களும் அநே கர்கள். அவர் அவர்கள் தங்கள் தங்களுக்கு உரிய கைங் கர்யங்கள் செய்துகொண்டு ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகளை உபசரித்துவந்தார்கள்.

(இன்னும் வரும்).

ச்யாம திருமலை தாத்தாசாரியர்

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
3 OCT 1908
MADRAS.



ஸர். ஏ. சேஷய்ய சாஸ்திரிகள்.

# திருவிதாங்கோடுராணிமார்கள்.

திருவிதாங்கோடு என்பதற்கு ஸ்ரீம்காலட்சுமி நித்தியவாஸஞ் செய்கின்ற நாடென்று பொருள். அதை திருவாழும் கோடு என்றும் திருவாங்கோடு என்றும் சொல்லுவார்கள். அது தென்னிந்தியாவின் தென்கோடியில் கடற்கரையோரமாகவுள்ள வளநாடு. அதில் அடர்ந்த காடுகளும், செரிந்த மலைகளுந் திரளாகவுண்டு. அழகிய மாஞ்சோலைகளும், தென்னந்தோப்புகளும் அங்கெங்கும் பரந்திருக்கின்றன. அதை தர்மபூமியெனலாம். எந்நாளும் மழை பெய்கின்றதனால் அந்த தேசத்தில் க்ஷாமமுண்டாவது மிகவும் அரிதேயாம். ஸ்திரீகளுக்கே அந்நாட்டில் எல்லா ஸ்வதந்திரங்களுமுண்டு. மருமக்கள்தாயம் அந்நாட்டிலேதானுண்டானது.

இத்தனை வளம்பெற்ற நாடெனினும், யாதுகாரணம் பற்றியோ அதையாளுகின்ற ராஜவம்சம் மட்டும் நன்றாய் அபிவிர்த்தியாகாமலேயிருந்து வருகின்றது. அந்த ராஜவம்சத்தில் சென்ற அறுநூறு வருஷகாலத்திற்குள்ளே ஸந்ததியில்லாமைபற்றி ஆறுமுறை ராஜகுமாரிகளை ஸ்வீகாரஞ்

செய்யவேண்டியதாயிற்று. கொல்லம் ஆண்டு 480, 860, 883, 923, 964, 1033 இந்த வருஷங்களில் ஸ்வீகாரஞ் செய்துகொண்டார்கள். சென்ற 1076ம்ஆண்டிலும் தத்து எடுக்கும்படித்தான் நேர்ந்தது. முதன்முதலில் தத்தெடுக்க ஆரம்பமானது ஆதித்திய மஹாராஜா ஆண்டகாலத்தில். அதற்குப்பிறகு முந்நூற்றைம்பது வருஷங்களுக்கு ஸந்ததி அவிச்சின்னமாகவே வந்தது. வஞ்சிராமவர்ம மஹாராஜாவால் இப்பொழுது மஹாராஜாவாகவிருக்கிற மூலம் திருநாள் 964-ம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட தத்தின் வம்சத்தார். இவருக்கு 1033-ம்ஆண்டில் இவர் தாயாரால் தத்தெடுக்கப்பட்ட லட்சுமிபாய், பார்வதிபாய் என்னும் இரண்டு ஸகோதரிமார்களிருந்தார்கள்; இவர்கள் மாவேலிக்கரை வம்சத்தைச்சேர்ந்தவர்கள். அவ்வம்சத்தில் இவர்களுக்கு இன்னுமொரு ஸகோதரியும் அவருக்கு இரண்டு பெண்களும் இருந்தார்கள். இவர்களுள் இளையராணியாராகிய பார்வதிபாய்க்கு நான்கு குமாரர்களும், ஒரு பெண்ணும் பிறந்தார்கள். குழந்தையாயிருந்தபோதே அந்தப்பெண் இறந்துபோயிற்று. பார்வதிபாய் இறந்துபோவதற்கு முன்னேதானே அவர்கள் புத்திரர் நால்வருள் ஒருவர் மிகவும் பால்யத்திலேயே இறந்துவிட்டார். ஆதலினால் 1893-ம்வருஷத்தில் இளையராணியாகிய பார்வதிபாய் காலஞ் சென்றபொழுது மிஞ்சிய புத்திரர்கள் மூவரே.

இச்சமயத்தில் இவ்வரச வம்சத்தில் மிஞ்சிய பெண்வார்ஸ் ராணி லட்சுமிபாய் C. I. ஒருவரேயாம். இவர்கள் தகப்பனார் பல்லம் வம்சத்துக் கோயில் தம்பிரானை ரவிவர்மா என்பவர். இந்த ராணி லக்ஷ்மிபாயவர்கள் பெயர்பெற்ற ஸம்ஸ்கிருதபண்டிதரான கேரளவர்மா வலியகோயிற்றம்பிரானவர்களை கொல்லம் 1033-ம் ஆண்டில் விவாஹஞ்செய்து கொண்டார்கள். இவர்களுக்கு ஸந்ததி

யில்லாக்குறை பெருங்குறையேயாம். இந்த துக்கத்தோடு, பார்வதிபாயின் குமாரர்கள் மூவருள் இளைய மஹாராஜா வாகவிருந்த ராஜா கேரளவர்மா 1895-ம் ௵ டிஸம்பர் ௴ 5௳ தேகவியோகமானது பெருந்துக்கமாயிற்று. இதனால் அந்த ராஜவம்சத்தில் அரசாளவிருந்தவர்கள் இரண்டு ஆண் பிள்ளைகள்மட்டுமேயாயிற்று. மூத்த ராணியாகிய லக்ஷ்மி பாய்க்கோ வயதாயிற்று. இதனால் இத்தேசத்தின் க்ஷேமத்தைக் கோருபவர்களெல்லோரும் மிகவும் கவலைப்பட வாரம்பித்தார்கள். இத்தேயத்து ராஜவிசுவாஸமுள்ள பிரஜைகளெல்லாம் மனவருத்தப்பட்டார்கள். எல்லோருமே இச்சமயத்தில் அரசவம்சத்தில் ஸ்வீகாரம் நடக்கவேண்டியது அவசியமென்று கருதினார்கள்.

மலையாளதேசம் பெண்வார்ஸ் என்கிற மருமக்கள் தாயமுள்ளதாதல்பற்றி, ஸந்ததி அபிவிர்த்தியார்தற்பொருட்டுபெண்களை ஸ்வீகாரஞ் செய்துகொள்ளவேண்டியது அவசியமாக ஏற்பட்டது.

அதுவிஷபமாக மகாராணியாருக்குக் கவலை மிகவாக உண்டாயிற்று. ஆனாலும் தாம் ஒரு கார்யத்தைச் செய்வதற்குமுன் ஈசுவரானுக்கிரஹம் பெறவேண்டுமென்ற எண்ணத்துடன் ஸேது யாத்திரை புறப்பட்டார்கள். இந்த யாத்திரையில் தம்முடன் தமது தாயாரையும், தமது ஸகோதரியையும், அவருடைய பெண்களையும் கூட்டிக்கொண்டு போனார்கள். தமது மருமகள்களாகிய அப்பெண்களுக்குக் குழந்தைகளுண்டாய் அவைகளை ராஜவம்சத்தில் ஸ்வீகாரம் செய்துகொள்ளவேண்டுமென்பது மகாராணியின் அபிலாஷை. தெய்வபலமிருந்தால் எந்தக்காரியமுங் கைகூடுவது அரிதன்றாதலால், திருவணை யாத்திரையின் பிரபாவத்தால்அடுத்த 1895ம் ௵ நவம்பர் ௴ 19ம் ௳ யன்று மகாராணியின் ஸகோதரியின் மூத்த பெண் ஓர் ஸீமந்த

புத்திரியை யீன்றாள். இந்த அற்புதத்தைக் காணவே எங்கும் பேரானந்தமுண்டாயிற்று.

இந்தச் சமயத்தில்தான் இந்நாட்டின் அபிவிர்த்தியையே நாடிக்கொண்டிருந்த காலம்சென்ற ஆனரபிள் சேஷய்ய சாஸ்திரியாரவர்கள் ராஜவம்சத்தில் நடக்கவேண்டியஸ்வீகார விஷயத்தைப்பற்றி மகாராணியாருக்கு பின்வருமாறு மிகவும் சமத்காரமாக 1896ம் வரு பிப்பரவரி மீ 6உ யில் ஓர் கடிதம் எழுதியனுப்பினர். "இளையராஜா காலஞ்சென்ற செய்தி எனக்கு மிகவும் வருத்தத்தை உண்டாக்கியது. இதனால் ராஜாங்கத்துக்குள்ள வார்சுகள் இரண்டுபேர்தானென்றாய்விட்டது. கொச்சின் ஸம்ஸ்தானத்தில் 36 பேர்கள் வார்ஸகளும் அது தவிர அநேக மருமகள்களும் இருக்கையில் அநந்தசயனம் இப்படியாயினதைப்பற்றி நினைத்து நினைத்து மனமுருகி என்னை யறியாமல் எனக்கு மேலான ஒரு சக்தியால் ஏவப்பட்டு நான் இக்கடிதத்தை எழுதத் துணிந்தேன். அரசவம்சத்தைப் பலப்படுத்துவதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டிய காலம் இதுவேயென்று சொல்லுவது அநாவசியம். என்னுடைய தாழ்மையான புத்திக்கு இத்தகைய கார்யங்களில் முதன்முதலில் பிரயத்தினம் செய்யவேண்டியது மகிமைபொருந்திய தாங்களேயென்று தோணுகிறது. ஏனெனில் குடும்பத்திற்கே பெரியவர்களாயிருக்கும் தங்களைத்தவிர வேறு யார் இக்காரியத்தில் பிரவேசிப்பார்கள். மஹாராஜாவோ தங்களுக்குச்சிறுவர். குடும்பத்தலைவராகிய தாங்களிருக்கும்பொழுது இதுவிஷயத்தில் மகாராஜா பிரவேசிக்க ஸங்கோசப்பட்டுத் தயங்குவார். ஆதலால் இது விஷயத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கவேண்டியது தங்களுடைய கடமையாயிருக்கிறது. தாங்கள் அவ்வாறு தயவுசெய்தீர்களேயானால் பிறகு மகாராஜா தங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிவ

தற்கு மிகவும் ஸந்தோஷமுள்ளவராயிருப்பார். உடனே இரண்டு இளம் ராஜகுமாரிகளின் ஸ்வீகாரம் நடந்தேறி விடும். பிறகு அவர்களை வளர்ப்பதும், படிக்கவைப்பதும் அவர்களந்தஸ்துக்குத் தக்கபடி பழக்குவதும், ஸ்வபாவமாகவே தங்களைப் பொருத்ததாகும். வேறு யார் இக்காரியங்களை தங்களைக்காட்டிலும் சிறப்பாகச் செய்யக்கூடியவர்கள்? தங்களுடைய குணநிச்சயங்களோ லோகப்பிரஸித்தியாயிருக்கின்றன. உலகத்தில் மிகவும் மேன்மைபொருந்திய இந்தியா சக்கரவர்த்தினியவர்களே தங்களது குணங்களை நன்றறிந்திருக்கிறார்கள். கொஞ்சநாட்களுக்கு முந்தி ஸதா இதேகவலையோடு தூங்குகையில் தாங்கள் ஸ்ரீஅநந்த பத்மநாபஸ்வாமியின் ஒற்றைக்கல் மண்டபத்தில் நின்று, தங்கத்தை உருக்கி வார்த்த பதுமைகளைப்போல மிக்க அழகுள்ள ஸுந்தரிகளான இரண்டரசிளஞ்சிறுமிகளைத் தங்களது கையிலே பிடித்துக்கொண்டபடியே அவர்களை ஸ்வாமியிடம் ஒப்புவித்து தாங்கள் அவர்களை ஸ்வீகாரம் செய்துகொள்ளுதல் கூடுமோவென்று அநுமதி கேட்டதாகக் கனவு கண்டேன். விழித்துக்கொண்டதும் இது என்ன ஆதாரமில்லாத கனவா அல்லது பின்நடக்கப்போகிறதின் ஸூசகமா என்று யோசித்தேன். பிந்தியதுதானென்று நிச்சயப்படுத்திக்கொண்டேன். நான் கனவில்கண்ட அப்ஸரஸுகளுக்கொப்பான அவ்விரண்டு குழந்தைகளும் மேன்மைபொருந்திய தங்களுடையதே என்றும், தாங்களே அவைகளை தங்களுடைய காலத்திலேயே ராஜவம்சத்திற்கு கொடுக்க விரும்பியதாயும் நிச்சயமாக நம்பினேன். எல்லாவிஷயங்களையும் உற்றுநோக்குங்கால் இத்தகைய கீர்த்தி பெறக்கூடிய ஸமயத்தைத் தாங்கள் கைவிடமாட்டீர்களென்றும் ஸ்ரீ பத்மநாபருடைய தர்மராஜியத்திலுள்ள ஸகல பிரஜைகளும் அந்தரங்கமாக ஸந்தோஷமடையக்கூடிய கா

ரியத்தைத் தாங்கள் செய்யாமலிருக்கமாட்டீர்களென்றும் நான் நிச்சயித்தேன். தாங்கள் இக்காரியத்தைச் செய்வதால் மனுஷ்ய யத்தனத்தில் இன்னும் அநேக நூற்றாண்டுகளுக்கு அரச வம்சத்தை ஸ்திரப்படுத்தினதாக ஆகும். நான் இன்னும் என்ன சொல்லப்போகிறேன்? நான் இவ்விஷயமாய்த்தங்களுக்கு எழுதத் துணிந்ததைப்பற்றி மன்னிக்கக்கேட்டுக்கொள்ளுகிறேன். சென்ற 19 வருஷகாலமாக நான் அநந்தசயநத்தின் உப்பை வெட்டியில் சாப்பிட்டு வருகிறேன். என்னைத்தவிர மற்றய பெண்ஷன்பெற்ற திவான்களெல்லோருமே காலஞ்சென்றுவிட்டார்கள். நானும் கூடிய சீக்கிரத்தில் அவர்களைப் பின்றொடருவேன். ஆதலால் இத்தகைய முக்கியமான ஸமயத்தில் பேசாமலிருப்பது ஸரியல்லவென்றும் இக்கடிதம் தங்களுக்கு எழுதவேண்டியது என் கடமையென்றும் எண்ணி நான் இதை எழுதத்துணிந்ததற்கு மீளவும் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்.” இந்த மாதிரியாகவே மூத்த ராணியாகிய லக்ஷ்மிபாயின் பர்த்தாவாகிய கேரளவர்மாவுக்கும் ஓர் கடிதமெழுதினர். இதற்கு அவர்கள் இருவரும் தகுந்தபடி விடையளித்தார்கள். ராணியவர்கள் எழுதிய கடிதத்தில் தாம் ஸந்ததியை உத்தேசித்தே தமது தாயார் மருமகள்கள் முதலியவர்களோடு ஸேதுயாத்திரை செய்ததாகவும், ஈசுவர அனுக்கிரஹத்தால் ஒரு மருமகளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருப்பதாகவும், இன்னும் அநேகம் குழந்தைகள் உண்டாகலாமென்றும், அவசியமான ஸமயத்தில் அக்குழந்தைகளுள் வேண்டியவர்களை ராஜவம்சத்தில் தத்தெடுத்துக்கொள்ளலாமென்றும், அவ்வாறே தாமும் தம்முடைய தம்பியாகிய மகாராஜாவிடம் சொல்லியிருப்பதாகவும் கண்டிருந்தார்கள். மகாராணியார் எழுதியவாறே அடுத்த நவம்பர்மீ 8உ இராணியின் ஸகோதரியின் இர

ண்டாவது பெண் ஓர் பெண்ரத்தினத்தைப் பெற்றாள். ஸேதுயாத்திரை போய்வந்ததின் மகிமையால் இவ்வாறு ராஜவம்சத்தில பட்டமாளும்படியான பாக்கியத்தைப்பெற்ற இரண்டுகுழந்தைகள் ஆண்டவனருளின்படியே உதித்தமையால், அவர்களுக்கு ஸேதுவென்ற முதற்பேரும், மற்றப்படி ராணிகளின் பேர்களாகிய லக்ஷ்மிபாய் பார்வதிபாய் என்பவைகளும் இடப்பட்டன. அதுமுதற்கொண்டு இந்த இரண்டு அருங்குழவிகளும் அநந்த பத்மநாபனுடைய வரப்பிரஸாதத்தால் நன்றாய் வளர்ந்துகொண்டு வந்தன. மகாராணிபாராகிய லட்சுமிபாயவர்களே இந்தக் குழந்தைகளைக் கண்ணுங்கருத்துமாக ஆவலோடு போற்றிப்புனைந்துவந்தார்கள். இந்தக் குழந்தைகளுக்கு ஐந்தாறு வயதானதும், லட்சுமிபாயவர்கள் ராஜகுடும்பத்தில் பூஜ்யரான மகாராஜா அவர்களிடத்தில் இந்த ஸ்வீகார விஷயமாய்ச்சொல்ல, அவர்களும் பிரிடிஷ் ரெஸிடெண்டுக்கெழுதி அந்தப்படியே தடையின்றிச் செய்துகொள்ளலாமென்று அநுமதியும் வாங்கிக்கொடுத்தார். 1900-ம்ஞூ ஆகஸ்டுமீ 31௳ காலை நாலரை மணி நல்லோரையில் பழய தர்பார் மாளியிகைல் அடியிற்கண்டிருக்கிற பிரசித்த பத்திரிகையின்படி பைரங்கமாக ஸ்வீகாரமஹோத்ஸவம் அதிஸம்பரமமாக நடந்தேறியது:—

"நம்முடைய ராஜகுடும்பத்தின் அபிவிர்த்திக்காக நமது குடும்ப வழக்கத்தின் முறையை அநுஸரித்து மாக்ஷிமையுள்ள பிரிடிஷ் கெவர்ன்மெண்டாரின் அநுமதியின்படி பூராட நக்ஷத்திரங்கூடி கொல்லம் 1071-ம்ஞூ விருச்சிகமீ 5௳ பிறந்த ஸேதுலட்சுமி, 1072-ம்ஞூ துலாமாஸம் 24௳ மூலா நக்ஷத்திரத்தில் பிறந்த ஸேதுபார்வதி ஆகிய இவ்விரண்டு பெண்களும் மாவேலிக்கரைவம்சத்திலிருந்து ஆத்தங்கல் இளையராணியாகவும், ஆத்தங்கல் முதலாவதுராஜகுமாரியாகவும் ஸ்வீகாரஞ்செய்துகொள்ளப்பட்டார்களென்ப

தை எல்லோரும் அறியும்படியாக இந்த விளம்பரம் பிரசுரஞ்செய்யலாயிற்று."

இப்படிக்குத் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டதைக் கண்டு மலையாளதேச முழுவதுமே நன்றுநன்றென்று கொண்டாடியது. இவ்விரண்டு அரசிளங்குமாரிகளும் ஸ்ரீபத்மநாபஸ்வாமியின் கண்ணளியாலே கிடைத்த பிரஸாதமாதலால், இவர்கள் தங்களிஷ்டஸித்திகளையெல்லாங் குறைவறப்பெற்று இன்புற்றுச் சிரஞ்சீவிகளாய் வாழ்ந்திருப்பார்களென்பதிற் சிறிதும் ஐயுறவேண்டாம்.

இந்த ராணிமார்களுக்குக் கார்டியனாக நியமிக்கப்பட்ட வலியகோயிற் றம்பிரானும் இவர்களை வளர்ப்பதிலும் தகுந்தபடி பழக்குவதிலும் தூங்காமுயற்சியுடையவராகவிருக்கிறார். மகாராஜாவும், இவர்களின் க்ஷேமத்திற்கென்று படுகின்ற பாட்டிற்கு அளவில்லை. Miss. D. H. Watts என்னும் ஆங்கிலேய மாது அவர்களை விட்டுப்பிரியாதிருந்து அவர்களைப் பாதுகாத்து வருகிறாள்; இந்த அம்மை நற்குலத்திற்பிறந்த உத்தமி. இந்த ராணிமார்களிருவரும் குடும்பவழக்கப்படி நாடோறும் அந்தப்புரத்தினின்றும் ஸ்ரீபத்மநாபஸ்வாமி ஸந்நிதிக்குச்சென்று அங்கே தாங்கள் விதிமுறைப்படி செய்யவேண்டிய வந்தனை வழிபாடுகளையுஞ் செய்துகொண்டுவருகிறார்கள்.

இவ்விரண்டு ராணிமார்களுக்கும் தங்கள் குலாசாரப்படி பதினோராவது வயதில் விவாகம் நடந்தேறியது. இப்பொழுது அரசாளுகின்ற மகாராஜா இன்னும் நெடுநாள் ஸுகமாக அரசாண்டுவரவேண்டுமென்பதும், அந்த ராணிமார்களிடமிருந்து நல்ல ஸந்தானவிர்த்தியுண்டாகி ராஜ்யம் இப்படியே அவிச்சின்னமாய் எந்நாளுஞ்சுகமாக வாழ்ந்திருக்க வேண்டுமென்பதும் எல்லோருடைய கருத்தாதலின், எங்கும் பரந்திருக்கின்ற இறைவன் அவ்வண்ணமே அருள்புரிவாராக.

R. வேதாந்தசார்லு.

# திருவாவணக்காமான்மியம்.

ஸ்நானவிதி.

முல்லையரும்புபோன்ற ஒளிபொருந்திய பற்களையுடைய தையலே! அரிட்டங்கள் நீங்கவும், உலக இன்பமுதல் மோக்ஷானந்தம் இறுதியான வரங்களையடையவும் விரும்பினோர், இவ்வொன்பது தீர்த்தங்களிலும் நீராடுக. அந்தணர்முதலிய மூன்று வருணத்தாரும் மந்திர பூர்வகமாக நீராடக்கடவர்; நான்காம் வருணத்தினரும், பெண்களும், தந்திரவழியால் நீராடுதல் அமையும். தைமீ பூரணை தினத்தில் விடியற்காலத்தெழுந்து நித்திய கன்மங்களை முடித்து, நம் சன்னிதிக்கெதிரே வந்து, முன் மண்டபத்தில் முப்பதுகோட்டம் வகுத்து, அவற்றுள் ஒன்பது மண்ணும், ஏழுதளிரும், பஞ்சகவ்வியமும், நவத்திரவியங்களும் வைக்க. மண் ஒன்பதாவது—அரசு, வில்வம், துளசி, புளி, ஆல், நாவல் இவற்றின் மூலத்திலுள்ள மண்ணும், யானை, குதிரை, பசு இவைகள் கட்டுமிடத்துள்ள மண்ணுமாம். தளிர் ஏழாவன—துளசி, புளி, நாவல், வில்வம், ஆல், அரசு, அறுகு என்பனவாம். கவ்வியம் ஐந்தாவன—பால், தயிர், நெய், கோஜலம், கோமயம் என்பனவாம். நவத்திரவியங்களாவன—எள், நெய், கோதுமை, வெல்லம், சிவலிங்கம், நெல், வஸ்திரம்,

பொன், இரத்தினம் என்பனவாம். கோட்டத்தில் வைத்திட்ட முப்பது பொருளையும், சந்தனம், புஷ்பம், தூபதீபங்களால் பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்து தனித்தனி அபிமந்திரித்துப்பின் விநாயகக்கடவுளை காரியசித்தியின் பொருட்டு வழிபடல்வேண்டும். பக்தியோடு விதிப்படி சங்கற்பஞ்செய்து, மனமுருகிக்கொடுப்பவனும் பெற்றுக்கொள்பவனும் தானப்பொருள்களும் அடையும் பயனும் எல்லாம் சிவரூபமென்று தியானித்து, ஒன்பது பொருளையும் பரிசுத்தமாக்கி, ஸ்நானத்தின் பயனைப் பரிபூர்ணஞ்செய்பவன் பரமசிவனேயென்று வணங்கி, முப்பதுபொருள்களையும் கையிலெடுத்துச் சென்று, பரமசிவ சரணாரவிந்தத்தில் புஷ்பங்களாலர்ச்சித்து, 'உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் அஞ்சும்படி பிச்சையேற்றுத்திரியும் பிக்ஷாடன மூர்த்தியே! ஊழித்தீப்போன்ற நிறம் விளங்கும் உருவமுடையவரே! அடியார்களுக்கு அருளைச்செய்யும் வைரவக்கடவுளே! உம்மைப்பணிந்தேன்; அடியேன், சிவதீர்த்தங்களில் நீராடவந்தேன். தேவரீர் உமது ஒப்பில்லாத பெருங்கருணையால் அனுக்கிரகிக்கவேண்டும்' என்று பிரார்த்தித்து, அந்தச் சன்னிதியினின்றும் அக்கினிதிக்கிற்சென்று, பிரமதீர்த்தத்தின் கரையிலே வளர்கின்ற தேமாமரத்தை அன்போடு வணங்கி, அதைக்கையால் தொட்டுப் பிரமதேவனாகிய ரிஷியைத் தியானித்துச் சங்கரநாத மந்திரத்தை நமவந்தம் படக்கையில் ஜபமாலையைக்கொண்டு அங்குள்ளவர்கள் காதில் கேட்கும்படி விளங்க ஜபித்து, அந்தத்தீர்த்தத்துக்குக் காவலாகிய கணங்களுக்குத் தலைவனான புஷ்பதந்தனை அன்போடு வணங்கி, அரையளவு ஜலத்திலிறங்கி, மண்ணைப்பார்த்து, பாவம், நோய்முதலான அரிஷ்டங்களெல்லாம் நீங்கவும் எல்லா நன்மைகளுண்டாகவும் நீ செய்ய வேண்டுமென்று சொல்லி, மண்ணைச் சரீரத்தில் பூசி, நீரில்மூழ்கி, அம்

கண்ணைக் கழுவி, மேற்கூறிய பஞ்சகவ்வியங்களில் கோஜல முதலானவைகளைத் தனித்தனி ஆடி ஸ்நானஞ்செய்து, ஏழுதளிர்களாலும் ஜலத்தைத் தோய்த்துப் பஞ்சாக்ஷர மந்திரத்தினல் புரோக்ஷணைஞ்செய்துகொண்டு, கரையேறி, உடம்பின் நீரைத்துடைத்து, தேவ ரிஷி பிதிர் தர்ப்பணங்களை விதிப்படி கையாற்செய்து, பிதிரர்களுக்குத் 'திருப்தி'யை விளைவிக்கும் இந்தத்திலதர்ப்பணத்தால் பரமசிவன் மகிழ்வடைந்து எனக்கு இவ்வுலகத்து நீண்ட ஆயுளைத்தருகவென்று உறுதியான பக்தியோடு திலத்தைக் கொடுக்க வேண்டும். மற்றைத் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தற்கு மிதுவே விதியாகும். அவைகளுக்குரிய விருக்ஷம், இருஷி, காவலர், தெய்வம், தானப்பொருள், மந்திரம், இவைவெவ்வேருகும். அவற்றைச் சொல்லுவோம். ஓ பார்வதியே! இந்திரதீர்த்தத்துக்குரிய விருக்ஷம் தென்னே; இருஷி இந்திரன்; மூன்று கண்களுடைய பரமசிவன் தெய்வம்; கும்போதரன் காப்போன்; வேதத்தில்வல்ல பிராமணர்க்குப் பசுவின் நெய்யைத் தக்ஷிணையோடு கொடுப்பது தானமாகும். 'யானையை யுரித்த மேருவில்லியாகிய பரமசிவனுடைய வீரியமாய் அவனுக்கு மகிழ்ச்சியைச் செய்யும் இந்த நெய்யின் தானத்தினுலே, அச்சிவபெருமான் பிரீதியடையக்கடவன்' என்று ஜபித்தல் மந்திரமாகும். சம்பு தீர்த்தத்துக்குரிய விருக்ஷம் நாவல்; வசிஷ்டன் இருஷி; மயேச்சுவரன் தேவன்; சுனந்தர் காப்போர்; தானப்பொருள் கோதுமை; வேதாந்தி ஏற்போனுகும். 'இனிமையையுடையதும் தேவர்க்கெல்லாம் உணவுமாகிய இக்கோதுமையால், மலங்களையெல்லாம் போக்கும் பூதேசனுகிய பரமசிவன் திருப்தியடையக்கடவ'னென்று உச்சரித்தல் மந்திரமாகும். இராம தீர்த்தத்துக்குரிய விருக்ஷம் இலுப்பை; இராமன் இருஷி; நீலஹரீசுவரர் தெய்வம்; வீரபத்திரன் காப்போ

ன்; பிரம்மவித்தான பிராமணனுக்கு வெல்லத்தைக் கொடுத்தல் தானம்; 'சுவையுடையாதும் சிவபத்திச் சுவையைக் கொடுப்பதுமான இந்தக்கருப்பங்கட்டி தானத்தாலே, சங்கரன் எக்காலத்தும் பிரீதனுகக்கடவ' னென்பது மந்திரமாகும். ஸ்ரீமத்தீர்த்தத்தின் பக்கத்துள்ள விருக்ஷம் நாவல்; கார்க்கியர் இருஷி; அமுதேசன் தெய்வம்; சுதந்தன் காப்போன்; சிவலிங்கத்தை நமது பக்தனுக்குக் கொடுத்தல் தானமாகும்; 'இச்சிவலிங்கதானத்தால், ஸ்ரீகண்டபரமேசுவரன் திருப்தியுற்று முத்தியளிக்கக் கடவ'னென்று ஜபித்தல் மந்திரமாகும். அக்கினி தீர்த்தத்தின் பக்கத்தேயுள்ள விருக்ஷம் புளி; இருஷி அக்கினி; தெய்வம் கிரிசானுரேதசு என்னும் சிவன்; கருபன் காப்போன்; ஏழையும் குடும்பியுமான பிராமணனுக்கு நெல்லைக் கொடுத்தல் தானமாகும்; 'எல்லாருக்கும் உணவாகி இன்பத்தைத்தரும் இந்த நெல்லின் தானத்தால் அமுதேசன் திருப்தியடைவானுக' வென்பது மந்திரம். அகஸ்திய தீர்த்தத்தின் பக்கத்தேயுள்ள விருக்ஷம் பலா; அகஸ்தியர் இருஷி; அகிலாண்டவல்லியென்று சொல்லப்பெறும் நீயே தெய்வம்; சுருத்தி காப்போன்; சிறந்த வித்வானுக்கு வெள்ளை வஸ்திரத்தைக்கொடுத்தல் தானமாகும்; 'சீதம், வெப்பம் இரண்டையும் நீக்குவதான இந்த வஸ்திர தானத்தினுல், தேவர்களெல்லாரும் திருப்தியடையக்கடவர்' என்பது மந்திரம். சந்திரதீர்த்தத்தின் பக்கத்துள்ள விருக்ஷம் புன்னை; சந்திரன் இருஷி; அவனே தெய்வமும்; புஷ்கரன், புஷ்கராக்ஷன், குமுதன் ஆகிய மூவரும் காவலர்; யாகஞ்செய்வோர்க்குப் பொன்னைக்கொடுத்தல் தானமாகும்; 'உலகுக்கெல்லாம் ஆனந்தத்தை விளைவிப்பதான இந்தச் சுவர்ணதானத்தாலே, பரமசிவனுடைய உவகையானது வளர்க'வென்பது மந்திரம். சூரியதீர்த்தத்தின் பக்கத்திலேயுள்ள விருக்ஷம்

வில்வம்; இருஷி பிருகு; தெய்வம் சூரியன்; வைரவன் காவலன்; சிவபத்தியிற் சிறந்தவருக்கு இரத்தினத்தைக் கொடுத்தல் தானமாகும்; 'இந்த இரத்தின தானத்தால், பிரபாகரனென்னும் பெயரையுடைய சூரியன் திருப்தி யடைக' வென்பது மந்திரம். விருக்ஷ முதலான பேதங் களையெல்லாம் தனித்தனியே சொன்னோம். பசுங்கொம்பு போன்றவளே! ஒன்பது தீர்த்தத்திலும் விதிப்படி நீராடு வோர், நமது திருக்கோயிற் சன்னிதியில் வணங்கி மனத் தை ஒருமைப்படுத்தி நின்று, 'மந்திர முதலானவை களில் வரும் குற்றங்களைப் பொறுத்து முன்னே சொன்ன நவதீர்த்தங்களிலாடிய பயன்களையெல்லாம் எங்களுக்கு ஈந்தருள்க' வென்று அன்போடு பிரார்த்தித்து, மூன்று பிரதக்ஷிணஞ்செய்து, ஐந்துமுறை கீழே விழுந்து நமஸ் கரித்து, ஒரு பக்கத்திலிருந்து மூலமந்திரத்தையும் திரியம் பக மந்திரத்தையும் நூற்றெட்டு முறை ஜபித்து, உன்னு டைய ஆலயத்திற்சென்று, உன்னை வணங்கி, தியானத் தோடு நான்கு முறை பிரதக்ஷிணம் செய்து, ஐந்துமுறை நமஸ்கரித்து, அவ்விடத்து மந்திரங்களை வேண்டியவளவு ஜபிக்கவேண்டும். பூவையணிந்த கூந்தலையுடைய மடந் தையே! அந்தப்புண்ணிய தீர்த்தங்களில் ஆடும் விதியைச் சொன்னோம்.'' என்று பரமசிவன் திருவாய் மலர்ந்தருளினா ர். அதைக்கேட்ட உமாதேவி பின்வருமாறு சொல்லுவா ளாயினாள்.

கரிய கண்டத்தையுடையவனே! கற்றைச்சடையாய்! கைலாசபதியே! அரிஷ்டங்களையெல்லாம் போக்கி இஷ்டங் களையெல்லாம் கொடுப்பனவான ஒன்பது தீர்த்தங்களும் ஞானதலத்திருக்கும்போது ஆன்மகோடிகள் பல நரகங்க ளிற் புகுந்து வருந்துங்குற்றம் யாது? புழுக்கள் நெளியவு ம், இரத்தம் ஒழுகவும், பலவித நோய்களால் துன்பப்படு

வதும் யாது? தளர்ந்தமனத்துடன் வீடுகள்தோறும் ஐயம் புகுந்தும் கிடைக்காமையினலே துயரப்பெருங்கடலில் முழுகிக் கஷ்டப்படுவதேன்? மனைவி மக்களை இழந்தும், செல்வங்களை இழந்தும், கண்செவி இவற்றை இழந்தும், தெளிவையுண்டாக்கும் வித்தைகளை இழந்தும், பலகோடி உயிர்கள் துன்பத்தில் அழுந்துவது என்னே? வெண்ணெய் கையிலிருக்கையில், நெய்க்கு வருந்தும் வீணர்களைப்போல, ஞானதலத்தில் பெருமையையுடைய அனேக தீர்த்தங் களிருக்கையில், அவற்றில் முழுகாமல், செல்லக்கூடாத கொடுங்காட்டிற்சேர்ந்து, ஆகாராதிகளை விடுத்துச் செயற்கரிய பெருந்தவங்களைச் சிலர் செய்யும் இஃது என்ன வியப்பு?" என்று பருவதராஜன் புத்திரியாகிய உமாதேவியார் கேட்க, மேருவில்லியாகிய பரமசிவன் குளிரக்கடாக்ஷித்து, பின்வருமாறு திருவாய்மலர்ந்தருளுவாராயினர். "பார்வதியே! பொறிகளைவென்ற நந்தியும் கௌதமனும் ததீசிருஷியும் முற்காலத்துச் சபித்திருக்கிறார்கள். வேதவொழுக்கம், தவம், தானம், சத்தியம், பொறுமை முதலிய தருமமார்க்கத்தில் யாவரும் மனத்தைச் செலுத்தமாட்டார்கள். சிலரே முற்பிறப்பிற்செய்த நல்வினைப்பயனல் சன்மார்க்கத்தில் ஒழுகுகின்றார்கள் என்பது திண்ணம். முன்னைத்தவத்தால் ஞானதலத்தில் முறைப்படி வசிப்போரும் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வோரும் அங்கே நம்மைத்தரிசிப்போரும் மறுபடி பிறப்பினையடையார்; மற்றத்துன்பங்களையும் அடையமாட்டார்கள்; சொல்லிய பயன்களையெல்லாம் நீங்காமல் எய்தி, நமது திருவடியின் கீழ் அமர்வர்; இது சத்தியமாகும். தலமகிமையும் தீர்த்த விசேடமும் அதிகரிக்கும்படி அங்கே எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் மேன்மையை இனி விளங்க எடுத்துக் கூறுவோம்.

ஓ, பார்வதி! உலகத்திலுள்ள மனிதர்களைக்காட்டிலும் தேவர்கள் உயர்ந்தவர்கள்; அவர்களில்பிரமன் உயர்ந்தவன்; அவனிலும் திருமாலுயர்ந்தவன்; அவனிலும் அறுமுகன் உயர்ந்தவன்; அவனிலும் ஐங்கரன் உயர்ந்தவன்; அவனிலும் நீ உயர்ந்தவள்; முன் சொல்லிய முறைப்படி அவர்களாலே பூஜிக்கப்பட்ட மூர்த்திகள் ஒன்றிலொன்று மேன்மையுடையனவாம். ஆகையால் உன்னால் பூஜிக்கப்பட்ட இலிங்கம் எவ்வகை இலிங்கங்களுக்கும் மேலானதாகும். உலகத்தில் இடர்களெல்லாம் நீங்கும்படி நீ அறமாதிகளைக்கருதிப் பூசித்த இலிங்கங்களைக் காட்டிலும், ஞானத்தையடையும் படி உன்னால் பூஜிக்கப்பட்ட இலிங்கம் மிகவும் மேலானதாம். உத்தம குணத்தோர் பலர் தவங்கள்செய்து, மெய்ஞ் ஞானத்தையடைந்து, முத்திபெற்ற தலமாகிய ஞானக்ஷேத்திரத்தின்கண் நீ உன் கைம்மலரால் தீம்புனலைத் திரட்டிப்பூசித்த சிவலிங்கமானது நாவல் மரத்தின்கீழ் எவ்வகை வரங்களையும் அளித்து விளங்குவதாகும். ஞானத்தை யளிக்கும் தீர்த்தங்களால் சூழப்பெற்று, ஞானத்தை மிகுதியாக அளிக்கும் க்ஷேத்திரத்தில், ஞானத்தை மிகுதியாக அளிக்கும் இலிங்கங்கள்பல. அவைகளுள், நின்கைம் மலரால் தாபிக்கப்பட்ட இலிங்கமானது மிகவும் மேலானதென்பதில் சந்தேகம் யாதுளது; எமக்கு உலகத்திலுள்ள அன்பைக்காட்டிலும் நின்னிடத்துள்ள அன்பு பெரிதாயினாற்போல, உலகத்து நாம் நிலவி வாழுகின்ற சிவலிங்கங்களிலிருந்து செய்யும் அனுக்கிரகத்திலும், ஞானதலத்தில் நின்னால் பூசிக்கப்பட்ட இலிங்கத்திலிருந்து செய்யும் அனுக்கிரகம் மிகப்பெரிதாம். வாள்போலும் கண்ணினையுடைய உமையே! துடையின்மீது இருக்கச்செய்தும், மேனியில் ஒற்றுமைகொண்டும், என்றும் உன்னைவிட்டு

மூர்த்திவிசேஷம்.

யாம் பிரியாதவாறுபோல, ஞானக்ஷேத்திரத்தின்கண் உன்ஞல் பத்தியோடு ஆராதிக்கப்பெற்ற சிவலிங்கத்தில் யாம் என்றும் பிரியாது வீற்றிருப்போம். அமுதமென்று சொல்லப்படும் ஜலத்தினல் திரட்டி யமைக்கப்பெற்றமையினுலும், வழிபடுபவர் நித்தியமெய்தி அமுதராதலினுலும், ஆன்மாக்களிடத்துண்டாகும் எம்மையறியும் அறிவானது, அழிதலில்லாமையாலும், அமுதலிங்கமென்னும் பெயர் வழங்கும். அப்படிப்பட்டதாகிய பரம இரகசியமான அரும்பெரும்பொருளையுடைய பெயரை ஒருதரம் நினைத்தாலும், நாவினுலுரைத்தாலும் சித்தியாகாத பெரும்போகம் எவ்வுலகத்துமில்லை. எப்படிப்பட்ட அரிஷ்டங்களும் நீங்காதனவில்லை. நான்குவகை முத்தியுள் அடையப்படாதனவுமில்லை. தேவதைகள் கற்பகமலரைச் சொரிந்து எத்தும் அமுதலிங்கத்தை அன்போடு ஒருதரம் பார்த்த கண், வறுமையினல் தன்புற்றுப் பொருளை விரும்பி வேறு ஒருவரையும் பாராது; அமுதலிங்கத்தின் பெயரைக் கேட்டவருடைய காதுகள், வறிஞர்கள் சொல்லும் குறைகளைக் கேளா; பிரகாசம் பொருந்திய அமுதலிங்கத்தைப் பிரதக்ஷிணஞ் செய்தவருடைய கால்கள், இப்பிறப்பில் ஒரு பொருளை விரும்பி ஒருவரிடத்தும் செல்லமாட்டா; மறு பிறப்புண்டாயின் திரும்பப் பூமியின்மேல் வைக்கப்படா; அமுதலிங்கத்தை அஞ்சலித்த கைகள், ஒருவரை 'நாதனே கொடுக்கவேண்டு' மென்று ஏற்கமாட்டா. மகா பாதகங்களைச் செய்தவராலும், அமுதலிங்கத்தைப் பத்தியுடன் பணிந்தால், அவர்கள் செய்ததீவினையெல்லாம் எரிவாய்ப்பட்ட பஞ்சுபோலத் தீயும். ஞானதலத்துள்ள அமுதலிங்க தெரிசனமானது, செல்வம், கல்வி, தவம், தானமுதலியவற்றுல் போக்கமுடியாத ஆணவத்தையும், உயிரை மாய்க்கும் மாயையையும் இருவினைகளையும் பரிதிமுன்

இருள்போல நீக்கும். ஞான க்ஷேத்திரத்திலுள்ள அமுதலிங்கமென்னும் பேரோடு ஜனனமரண நோயைப் போக்குவதான மருந்தை, மனமொழி மெய்களால் வணங்குவோரிடத்துப், பொன் முதலானவற்றாலுண்டாகும் துன்பமாகிய சிறுநோய்கள் என்ன செய்யும். நக்ஷத்திரங்களும், கிரகங்களும், இராசிகளும் வக்கிரித்துத் துன்பஞ்செய்யுமாயினும் அமுதலிங்கத்தை வழிபடுவோர்க்கு அவற்றாலுண்டாகும் தீங்குகளில்லையாகும். இதுவே ஊழிக்காலமோவென்று மேகங்கள் வருஷித்தாலும், வெப்பமுண்டாம்படி மழை மாறினாலும், பகைவேந்தர் வருத்துங்காலம் அடுத்திடினும், அமுதலிங்கத்தைத் துதிப்போர், 'இவையென்ன செய்யு' மென்று இறுமாந்திருப்பர். திருப்பாற்கடலில் கடைந்தெடுத்த அமுதத்தை யுண்டோர், தேவரானாலும், மனிதரானாலும், நித்தத்தன்மை யடைவர்; அதுபோல 'விதிப்படி நீராடுவோர், அசுத்தியுடையோராயினும் சுத்தியுடையோராயினும் இருவரும் பரிசுத்தத் தன்மையடைவர். அப்படியே உயர்குலத்துப் பிறந்தவரானாலும், இழிகுலத்துப் பிறந்தவரானாலும், மலமுடையவரானாலும், மலநீங்கியவரானாலும், அமுதலிங்கத்தையடைந்து வணங்கினால், இவ்விருதிறத்தோரும், மோக்ஷமடையும் விஷயத்தில் ஒரு தன்மையரே யாவர். பைத்தியங்கொண்ட உள்ளத்தினையுடைய ஒருவர் விஷத்தை யுண்ணும்போது சுவைமிக்க தேவாமிர்தத்தைக் கலந்துண்பாராயின், அவர்களுக்கு உன்மத்தத்தோடு விஷவேகமும் நீங்க, வலிமையுண்டாகும்; அதுபோல, ஒருவர் நாடகக்கணிகையை விரும்பிச் செல்வராயினும், அடியார் மனவிருளைப் போக்கும் தீபமாகிய அமுதலிங்க மணியைத் தொழுவரேல், அவருக்குச் சஞ்சிதமும் பிராரத்தமும், ஆகாமியமுமாகிய வினைகளெல்லாம் தொலைந்துபோம். குற்றமற்றவளே! சமீபத்திலிருப்

பவரானாலும், தூரத்திலிருப்பவரானாலும் அமுதலிங்கத்தைத் தெரிசிப்போமென்று மனத்திலே நினைப்பராயின், அவர்கள் பாவத்தை யெழுதிய கணக்கோலையைச் சித்திரகுப்தன் கிழித்தெறிவான். ஞானக்ஷேத்திரத்தில் அமுதலிங்கத்தைத் தெரிசிக்கும் விருப்பத்துடன் பூமியில் எழுடி நடப்பராயின், அவர்கள் முன்னேழுபிறப்பிற்செய்த பாவமெல்லாம் நசிக்கும். அங்கே எழுந்தருளியிருக்கும் அமுதலிங்கத்தின் திருமுடியின்மேல் ஒரு சங்கு தீர்த்தத்தினால் அபிஷேகஞ்செய்தோர், வேறு மூர்த்திகளுக்குக் கருப்பஞ்சாறு, தயிர், பால், நெய், தேன் முதலியவைகளைக் கோடிமிடாவினளவாக அபிஷேகஞ்செய்த பயனைப்பெறுவர். சம்புமூலத்தில் எழுந்தருளிய சிவலிங்கப்பெருமானை ஒரு கையளவு நீரினால் அபிஷேகஞ்செய்தோர், இவ்வளவு பெரும்பயன்களை யடைவரென்றால், ஆவின்பால் முதலியவற்றால் அபிஷேகஞ்செய்தோரடையும் பெருமையைத் தேவர்களினும் சொல்லவல்லவர் யாவர்? சம்புமூலத்தில் விரும்பியெழுந்தருளியிருக்கும் மூர்த்திக்கு நறுமணமுள்ள மலரொன்றை அன்பால் மனங்கரைந்து சாத்துவாரானால், தாமரை மலரில் வசிக்கும் பேற்றையடைவர். சங்கமொன்றைக் கொடுப்பரேல், தம்முடைய கையில் சங்கத்தையேந்தி உலகத்தைக் காக்கும் பதத்தைப்பெறுவர். நாவல்மூலத்தில் எழுந்தருளிய அமுதலிங்கத்தின் சன்னிதியடைந்து சரியையாதி நான்கு பணிகளையும் அனுட்டித்தோர், சாலோகமுதலிய நால்வகை முத்தியினையும் அடைவர். அறமுதல் நான்கினையும் சிறிதும் சிரமமில்லாமல் எளிதில் அடைய விரும்புவோரெல்லாம், சம்புமூலப்பெருமானைப் பூசைக்குரிய பொருள்களால் மிகுந்த பக்தியோடும் பூசிக்கக்கடவ"ரென்று மூர்த்தி விசேடத்தைப் பரமசிவன் விளங்கவெடுத்துரைத்தனர். பார்வதிதேவியானவள்,

மனத்தின்கண் பெருமகிழ்ச்சி பொங்க வணங்கிநின்று "நாதா! அவ்விடத்து நாவல் மரமொன்று உளதென்று கூறினீர். அதன் பெருமையைக் கேட்கவிரும்பினேன்; கிருபைகூர்ந்து திருவாய் மலர்ந்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தாள். இவ்வணம் உமாதேவியார் பிரார்த்தித்தலோடும், சிவபெருமான் புன்னகைசெய்து, சம்புவிருக்ஷத்தின் வரலாற்றைக் கருணையோடும் கூறத்தொடங்கினர்.

புன்னை, வில்வம், மகிழ், பலா, சந்தனம், அகில், அரசு, சண்பகம், மூங்கில், அசோகம், தென்னை, கடம்பு, குருந்தம், ஆச்சா, குங்குமமுதலான பலவிருக்ஷங்களடர்ந்த சோலைசூழ்ந்த ஞானக்ஷேத்திரத்தினிடையில் ஒரு நாவன் மரச்சோலை உண்டு. அச்சோலையின்கண் தேவர்களாலும் அளவிட்டறிய முடியாத பெருமை சம்புமுனிவர் தவம் புரிந்தது. பிணையுடைய மோக்ஷத்தை விரும்பினவனாகிய சம்புமுனிவனென்னும் ஒருதவசி மனத்தைத்தன் வசப்படுத்தி அருந்தவம் இயற்றினான். விபூதியைத்தரித்து, அக்கமாலை பூண்டு, சடாதாரியாய், எம்மையே தியானித்து, மெய்த்தவம் செய்த அம்முனிவன் முன்னே, வெண்ணாவற் பழம் ஒன்று வீழ்ந்தது. அதற்குமுன் பார்த்திராத திவ்யமான அப்பழத்தைக்காண்டலும், ஆச்சரியமடைந்து, மிக்க ஒளியையுடையதும் சிறந்ததும் ஊறுகின்ற சுவையையுடையதுமான இதை யாம் உண்ணல் தகாது என்று நினைத்து அப்பழத்தைக் கரத்தால் எடுத்து, அழகிய கைலையங்கிரியை யடைந்து, நம்மை மிகப்புகழ்ந்து பாடி, "சிற்பரனே! திருவருள் வைத்து இக்கனியை அமுதுசெய்க"வென்று நம் கரத்தில் ஈந்தனன். நாம், தீஞ்சுவையுடைய அப்பழத்தை உண்டு அதன் வித்தைப் பக்கத்தே உமிழ்ந்தனம். அதைப்பார்த்திருந்த தவசிரேஷ்டன் மனத்தில் உவகைகொண்டு அதை விரைந்து எடுத்து

விழுங்கினன். தக்கார்க்கீந்தபொருள், தினையளவாயினும் பனையளவாமாறு போலத், தவசியின் வயிற்றில் தங்கிய அவ்விதையானது கணப்பொழுதில் முளைத்தெழுந்தோங்கியது. அச்சம்புமுனியின் தவம் வளர்ந்தாற்போல அந்நாவலானது, அவனுடைய சிரம்வெடிக்கத் தேவர் நாட்டினையும் நிழல்செய்து, எட்டுத்திக்குகளும் நிரம்பத்தளிர்த்து வளர்ந்து தழைத்தது. கற்பகதருவின் தருக்கைப் போக்குவமென்று அதனை யுத்தத்திற்கு அழைப்பதுபோல, நாவல் விருக்ஷத்தின் கிளைகளிலிருந்து பக்ஷிகள் சப்தித்தன. மேலோங்கிவளர்ந்து சாய்ந்த மெல்லிய மரக்கிளைகளில் தங்கிய தூக்கணங்குருவியின் கூடுகள், விராட்புருஷனுடைய திருமேனியில் மயிர்க்கால்கடோறும் தங்கிய அண்டங்களைப்போல் விளங்கின. நமது வாயின் நீரினால் நனைந்த விதையே, குற்றம் நீங்கிய பெருந்தவத்தை யுடைய முனிவனது சரீரத்தில் முளைத்தலால் அம்மரத்தின் நிழலில் தேவர் முதலியோரும் விரும்பித்தவஞ்செய்வாராயினர். அம்மரத்தின் தளிர்களைக் கையாற்பரிசித்தாலும், நிழலில் தங்கினாலும், மெல்லிய மலர்களை மோந்தாலும், கண்ணால் தரிசித்தாலும், பெயரைக் காதினால் கேட்டாலும், அதன் கனியையுண்டாலும், தீயனவெல்லாம் நீங்க, நன்மையுண்டாகும். வேதங்களே மூலமாகவும், உபநிடதப்பொருளே பராரையாகவும், ஆகமங்களே பணைகளாகவும், சரியை கிரியை யோகங்கள் கிளைகளும் வளாரும் இணருமாகவும், ஐந்துஞானங்களும் அரும்பு மலர் காய் கனி கனியின் இரசமாகவும், விளங்கும் நாவல் மரமானது, ஆன்மாக்களின் பாவங்களையெல்லாம் போக்குவதாகும். வெண்ணாவலின் வளர்ச்சியைக் கண்ட செழுந்தவ முனிவர்கள் ஆனந்த நடனஞ்செய்தனர். தேவர் மலர்களைச் சிந்தினர். மரங்களும் மதுமழை பொழிந்தன. சம்புமா

முனிவன், இந்தகுதியை நோக்கி, ஆனந்தக்கடலில் மூழ்கினான். இந்நாவலின் நீழலே இப்பூவுலகில் தவஞ்செய்தற்கு மேலான தானமென்றெண்ணித் தவஞ்செய்தனன். அவன், அங்ஙனந் தவஞ்செய்துகொண்டிருக்கையில், பல தேவர்களும், முனிவரர்களும், கணதிபர்களும், அந்நிழலினிடத்து விரும்பித் தவஞ்செய்து வாழ்ந்தனர். இப்படிச் சிலகாலம் சென்றது. பின்னர் ஓர் நாள் அத்தவசிரேஷ்டன் வந்து, நம்சன்னிதியில் வணங்கித், "தலைவனே! தேவரீர் இனி இந்நிழலின்கண் வசிக்கவேண்டு" மென்று வேண்டினன். நாம் அவன் வேண்டுகோளுக்கிரங்கி, "நீ முன்கனி வீழ்ந்த இடத்துச்சென்று தவம்புரிந்திருப்பாய்; நாம் அவ்விடத்து வந்து நீ விரும்பியபடி உறைவோம்" என்று பணித்தனம். திசைகளிலெல்லாம்புகழ்விளங்கிய அம்முனிவன்நமது அருளைப்பெற்று ஞானக்ஷேத்திரத்தையடைய விரும்பிப் புறப்பட்டனன். அவன், பூமியில் நடந்து செல்லும்போது, கண்டோரெல்லாம் கிளைகளையுடைய ஒரு மரமானது நடந்து செல்கின்றதென்று சந்தேகமுற்று அற்புதமடைந்தனர். சமீபித்துச்சென்று பார்த்த மனிதர்கள், கைமுதலிய உறுப்புக்களும், இலை கிளைகள் முதலியனவும் பொருந்திய இப்பிறவி எழுவகைத் தோற்றத்துமில்லை; இதுவும் சிவபெருமான் திருவிளையாட்டோவென்று வியப்படைந்தார்கள். நல்லோர்கள் செய்த நல்வினைப் பயனை அவர்களை அடுத்தவரும் அடைதல்போலச் சம்புமுனிவனைச் சூழ்ந்துசென்ற முனிவர்களும், தகிக்கின்ற சூரியனுடைய வெப்பத்தை மாற்றிச்சென்றனர். மார்க்கத்தில் எதிர்ப்பட்ட பல தலங்களைத் தரிசித்து, மெல்லமெல்ல நடந்துபோய்க், காவிரியின் வடபக்கத்துள்ள ஞானக்ஷேத்திரத்தைக் குறுகி, முன்புபழம் விழுந்த இடத்தை வளர்கின்ற காதலோடுந்தொழுது, அவ்விடத்தையடைந்தனன்.

சூரியன் வெதுப்புகின்ற வேனிற்காலத்தில் அக்கினிமத்தியி னின்றும், தொகுதியான மேகங்கள் எழுந்து நீரைப்பொ ழிகின்ற கார்காலமுதலிய நான்கு பருவத்தும் நீரிடை நின் றும், அரியதவத்தைச் செய்து தன்னுடைய மனத்தை எமது அடிகளில் நிறுத்தினன். கந்தமூலபலங்களையும், சருகையும், நீரையும், காற்றையும் உண்டும் சில பகல் அவைகளை நீக்கியும், அங்கே தவஞ்செய்து கொண்டிருக் கின்றனன். அவனுடைய விழிகள் எதிர்சென்று நின்றவ ரையும் பாரா; உடல் பரிசத்தை அறியாது; செவிகள் ஒலியைக்கேளா; நாசி நாற்றத்தை புணராது; இங்ஙனம் அவன் தவஞ்செய்துகொண்டிருக்கையில், முன்னரே அங் கு வந்து தவம் செய்துகொண்டிருந்த பிரமன், முனியின் சிரசில் ஓங்கிநின்ற வெண்ணாவன் மரத்தையும், அருந்தவ ஞ்செய்யும் முனிவனுடைய மாட்சிமையையுங்கண்டு, விம் மிதமடைந்து, அவனுடன் அளவளாவி நட்புக்கொண்டி ருக்கின்றான். ஆருயிர்த்தொகைகள் இருண்மலம் நீங்கி, எமது அடிநிழலில் தங்கும்படி வந்ததாகிய அந்த நாவல் விருக்ஷத்தின் வரலாற்றைச் சொன்னோம். நீ அவ்விடத் தை யடைவாயாகவென்று பரமசிவன் உமாதேவியாருக் கருள் செய்தனன். அப்பொழுது உத்தமகுணத்தாலே உயர்ந்தவராகிய திருநந்திதேவர், வணங்கி, "திங்கள் சூடிய செஞ்சடைக்கடவுளே! உமது திருவுருவினின்றும் நீங்காத உமாதேவியார் உம்மைவிட்டுப் பிரிதற்கு நேர்ந்தகாரணம் யாதோ? கேட்கவிரும்புகின்றேன்; அருள்செய்யவேண்டு" மென்று பிரார்த்தித்தனர். சிவபெருமான் அவரை நோக் கித் திருவாய்மலர்ந்தருளுவாராயினர். "சம்புமுனிவர் ஞானக்ஷேத்திரத்திலிருந்த பின்னர், உலகமெல்லாம் சிற்றி ன்பவழியிலே ஒழுகியது. ஆன்மாக்கள் உய்யும்வண்ண ம், நாம் யோகத்திலிருந்தோம். இளமையும், கற்பும்

இணையில்லாத அழகும்பொருந்தி, அன்போடு நமது இடம் பிரியாத இப்பெண்ணரசியை நோக்காமல் அளவில்காலம் யோகத்தில் அமர்ந்திருந்தோம். அப்பொழுது இவள் நம்மை நோக்கி அருகிலிருந்த கணநாதர்கள் பார்த்திருப்பப் பரிகாசமாகச் சிரித்திட்டாள். "இதனால் உண்டாகிய தீவினை நீங்கும்படி நம்மைப் பிரிந்து மனம்வருந்தி இருப்பாய்" யென்று சாபங்கொடுத்தோம். இவள் அம்மொழியைக் கேட்டு வெய்துயிர்த்து நடுநடுங்கிக் கண்ணீர்பெருக்கி, மெய்வாடிப் பணிந்து சொல்லத் தொடங்கினாள். "அடியவர் செய்த குற்றம் ஆயிரமும் பொறுத்தருளும் கருணையனே! பரமேட்டி! நின்சரண்போற்றி; அடியேன் பேதைமையாலும் உரிமையாலும் பிழை செய்தேன்; ஆதலால் அடியேனை அன்னியரைப் போலப் புறக்கணித்து அருந்துயரத்து ழூழ்கும்படி போக்குதல் அழகன்று; தேவரீர் பொறுத்தருள்க, பொறுத்தருள்க;

"தண்டரளப் புனற்பொய்கை தணந்தமலர்த் தாமரைபோல்
விண்டலத்துக் கதிவழுவி விழுந்தபெருங் கடவுளர்போல்
கொண்டல்பொழி மழையொழிந்த குளிர்பண்ணைப் பசும்பயிர்போல்
அண்டர்தொழு மடிகளையா னகன்றிருத்த லழகேயோ.

உயிர்நீத்த வுடம்பென்ன வுணர்வொழிந்த வுயிரென்ன
மயிர்நீத்த மானென்ன மணிநீத்த பணியென்னப்
பயிர்நீத்த சூலென்ன பகனீத்த தினமென்னச்
செயிர்நீத்த வடிகளையரன் நீர்ந்திருந்த லழகேயோ.

புலனுகராப் பொறியேபோற் பூணணியா மடவார்போ
லலாணியா நீர் நிலேபோ லாயணையா மகவேபோற்
பலன் விளையா நிலமேபோற் பண்ணுகராப் பாடல்போல்
நிலவுமடி களையடியே னீத்திருத்த லழகேயோ.

கொம்பரிலா விளங்கொடிபோற் கொழுங்கணிலாத் திருமுகம்போல்
வெம்பாசி லாப்படைபோல் விரகினரில் லாவ்வைபோல்

பம்புமுயிர்க்கு குயிராகிப் பசுபதியாய்க் கணவனுமா
மெம்பெருமா னையுமடியே னிகந்திருத்த லழகேயோ."

என்று, ஆற்றமுடியாத பெருந்துயரத்தால் வருந்தி, வாடி அவசமுற்றனள். நாம் அவளது துன்பத்தைக் கண்டு மனமிரங்கி, "பெண்ணே! வருந்துதலையொழிவாயாகவென்று தேற்றி, சிலகாலம் எம்மைப்பிரிந்து, ஞானக்ஷேத்திரத்தில் வசித்து அருந்தவஞ்செய்து நம்மை ஆர்வத்தோடும் பூசிப்பாய்; பின்பு நாம் அங்குவந்து உனக்கு அருள் செய்வோமென்று சொல்லிய அவ்வார்த்தையைக் கேட்டுக் கவலை சிறிது நீங்கித் தோத்திரங்களைச் சொல்லிப், பிழைசெய்ததனாலுண்டாகிய நாணினோடு மணிவாய் திறந்து பின்வருமாறு சொல்லத்துணிந்தனள். "தேவதேவனே! இந்திராதிதேவர்களும், விஞ்சையர் கின்னரர் கிம்புருடர்களும், கணநாதரும், துறவிகளுமாகிய யாவரும் வாசஞ்செய்து இருமைப்பயன்களையும் பெறும்படியான பெருமையையுடையது இக்கைலாயமலையல்லது வேறில்லையே; அதுமாத்திரமன்றி, உலகத்துள்ளோர் யாவரும், மனத்தின்கண் அன்புடையராய்த் துதிபாடியும், திசைநோக்கித் தொழுதும், தியானித்தும், பயனடைவது இக்கைலாயமல்லது வேறில்லையே; ஒப்பாரும் மிக்காருமில்லாத இறைவனே! எல்லாத்தலங்களும் நீர் எழுந்தருளியதனாலன்றோ உயர்வடைவது; இக்கைலாயமலையோ தேவரீர் ஒருபொழுதும் நீங்காமல் எழுந்தருளியிருப்பது; இப்படிப்பட்ட சிறப்பினையுடைய கைலையங்கிரியை நீங்கி ஞானதலத்துக்குச் செல்லும்படி அருள்செய்தது தேவரீர் திருவுள்ளத்திலுள்ள வெறுப்பினாலென்றே எண்ணி என்மனம் அஞ்சுகின்றது. அடியேன், அறியாது செய்தபிழை நீங்கும்படி பிராயச்சித்தமாக அருந்தவத்தையும் நின்பூசனையையும் இம்மலையில் வசித்தே நெடுங்காலம் விதிப்படி செய்வேன்.

இந்த என் விண்ணப்பத்தை அங்கீகரித்தருள்க" வென்று நீங்காத அன்போடும் பணிந்து உரைத்தனள். இவ்வாறு கூறிய பார்வதியைப்பார்த்து நாம், "சுந்தரி! கைலாயவரையின்கண் பலநாள் செய்த தவமெல்லாம் ஞானதலத்திடை நாழிகையொன்றிற் பலித்திடும்; அதுவுமன்றி அவ்விடத்து உனக்கு ஞானத்தையும் உபதேசிக்கக்கருதினேம்; ஞானத்தைத் தருதற்குரிய சிறந்த தலங்கள் வேறுள்ளனவானாலும், ஞானக்ஷேத்திரமென்னும் பெயரைத் தனக்கேயுரியதாகக் கொண்ட அந்த க்ஷேத்திரமே நற்பயனடைவதற்குரிய சிறந்த தலமாகும். ஆங்குச்சென்று தவஞ்செய்தற்கு ஏற்ற காலம் இதுவன்று; அது வருங்காறும் இங்கே உறைவாய்" என்று முன்னே சொன்னேம். அங்கே செல்லுதற்கு இதுவே தக்க சமயமாக நேர்ந்தது. இந்த விருத்தாந்தத்தைத்தெரிந்துகொள்வா"யென்று சிவபெருமான் திருநந்திதேவருக்கு அருள்செய்தனர். நந்தியெம்பெருமான், பரமசிவனுடைய அருளைத்தாங்கி ஞானதலத்தைத் தியானித்து எழுந்தருளி இருந்தனர். இப்பால் பார்வதிதேவியார் திரிபுரத்தைத் தீக்குஇரையாக்கிய மேருவில்லினர் இட்ட சாபத்தைப் போக்கவும் மெய்ஞ்ஞானத்தை யடையவும் சிவபூசை செய்யத் திருவுளம் பற்றினள்.

பார்வதிதேவி, கைலாசபதியாகிய பரமசிவனை வணங்கி, "பூதேசா! அடியேன், ஞானதலத்துக்குச் செல்ல ஒருப்பட்டேன்; தேவரீர் விடையளிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க, அகிலகாரணராகிய பரமசிவன், "மடவாய்! ஒப்பற்ற சிறப்புக்களோடு செல்வாய்; அஞ்சாதே: யாம் அவண் வருவோம்" என்றனர். அவள் சிவபெருமான் திருவடிகளைத் திரும்பவும் வணங்கி விடைபெற்றுக் கோயிற் கடைவாயிலெய்த, சிவபெருமான் ஆஜ்ஞைப்படி, திருநந்திதேவர், படைக

அகிலாண்டநாயகி பூசித்தது.

ளோடு முன்செல்லும்படி, பூதகணைத்தலைவர்க்கு உத்தரவளித்தனர். கணநாதர் சிலர் அஞ்சத்தக்க சீற்றத்தோடு பெருந்திரளாகக் கூடினார்கள். திருமால்முதலிய தேவர்கள் நெருங்கி வணங்கினர். சயை, விசையை முதலிய தோழியர் பக்கத்தே சூழ்ந்துசென்றார்கள். பேரிகைகள் முழங்கின. சங்கங்கள் சத்தித்தன. இனிய கீதங்கள் செவிகளுக்கு விருந்துசெய்தன. வேதமுழக்கம் மேம்பாடுற்றது. மாதர்கள் நடனஞ்செய்தார்கள். பிச்சமும், குடையும், ஆலவட்டமும், சாந்தாற்றியும் நெருங்கின. வெண்ணிறமான கவரிகள் துள்ளின. துவசங்களின்கூட்டங்கள் ஆகாயவெளியை மறைத்தன. குறுகுறு நடந்துசெல்லும் குறளும் சிந்தும் முந்திச்செல்லவும் ஆணுடை தரித்துச் செல்லும் மாதர் வாளையேந்தி நெருங்கவும், பேடியர் பக்கத்தே நெருங்கிச் சூழவும், கிளிமுதலிய பறவைகளையுடைய கூடுகளைக் கையிலேந்திச் சில மாதர் மருங்கே துதித்துச் செல்லவும், மற்றைப் பணியாளர்கள் நெருங்கிச் செல்லவும், மாணிக்க விமானத்தில் ஏறி இறைவனைத் தியானித்துக்கொண்டு விரைவிற் சென்றனள். மார்க்கத்தில் ஆங்காங்குள்ள தலங்களில் இறைவனைவழிபட்டு, ஆங்காங்கு வந்து வணங்கிய அறிஞர்களுக்கு அருள்செய்து சென்று, ஞானக்ஷேத்திரமானது நெடுந்தூரத்தில் தோற்றுவதைக் கண்டார்கள். காண்டலும், பூமியிலிறங்கிப் பாங்கிமார் கொணர்ந்து கொடுத்த புஷ்பத்தைத் தனது செங்கையால் வாங்கித் தூவி கண்ணினின்றும் ஆனந்த பாஷ்பம் பெருக நமஸ்கரித்து பண் நிறைந்த துதிகளைச் செய்துகொண்டு மெல்லமெல்ல நடந்து சென்றனள். ஞானக்ஷேத்திரத்தின் எல்லையாகிய ஐந்துகுரோச அளவையும் பிரதக்ஷிணமாகச் சென்று, காவிரிதீர்த்தத்தில் முறைப்படி ஸ்நானஞ்செய்து, பின்பு உடன் சென்றசேனைகளை ஆங்காங்கு நிறுத்தவேண்டிய முறைப்

படி நிறுத்திச்சென்றனள். சென்றவள், அந்தச் க்ஷேத்திரத்தில் முத்துக்களும், வைரமும், பொன்னும் கிடந்து பிரகாசிப்பதையும், பசும்பொழில்களில் மேகங்கள் தங்கிக் கர்ச்சித்தலையும், தென்றல் வந்து உலாவுவதையும், கூட்டமாகிய குயில்களும், பூவைகளும், கிளிகளும், வண்டுகளும் இசை பாட மயில்கள் சிறைவிரித்து நடனமாடுதலையும், மலர்களில் வண்டுகள் குடைந்து பாடுதலையும் கண்டனள். வெண்ணாவல் மரத்தின் கனிகள் சிந்தி உடைந்து அதின் சாறு ஒழுகியோடுவதும் அம்மரத்தில் நிறம் பொருந்திய கனிகள் விளங்குவதுமாகிய விப்படிப்பட்ட பல வளங்களையும் பார்த்துக்கொண்டே சென்றனள். அங்கிருந்த முனிவர்கள், இந்த ஞான பூமியிலிருந்து தவஞ்செய்த பயன் பெற்றோமென்று அன்பு அதிகரிக்க எதிரே சென்று கைத்தலங் கூப்பித்தாழ்ந்தார்கள். பார்வதிதேவியும் தன் தோழியாகிய சுனந்தையைப் பார்த்து. "நாம் பரமசிவனைப் பிரிந்தோமாயினும், ஒப்பில்லாத இந்தத் தலத்தையடைந்தமையால், நீங்காத மகிழ்ச்சியைப் பெற்றோம்" என்றாள். முன்னமே அங்குச்சென்று தவஞ்செய்துகொண்டிருந்த பிரமன் அன்னையின் வரவினையறிந்து விரைந்துசென்று பணிந்து, விதிப்படி பூசனைசெய்து உமாதேவியைக் கேசாதி பாதம் துதித்து வணங்கி "அமுதமே! நின்னை யிங்குத் தரிசிக்கப்பெற்றேன்; யானே பெருந்தவஞ்செய்தேன்; யான்செய்த தவமும் வேள்வியும் பலித்தன; இனியெனக்கொரு குறையுமுண்டோ? வேதாகமங்களாலும், தேவர்களாலும், திருமாலாலும், அறியப்படாத நீ இவ்வாறு எளிவந்த இது என்னே, மொழியாய்" என்று துதித்துக் குறையாத அன்போடு வினவிநின்ற நான்முகனைப்பார்த்து, உமாதேவி பின்வருமாறு கூறினள். "கமலமலர்மேவிய கடவுளே! கைலாசபதியாகிய பரமசிவனுடைய திருவடிகளை வணங்கி நான் ஒரு

ஐயுற்ற பொருளை வினவினேன்; இறைவன், ஞானதலத்தை யடைந்து தவஞ்செய்வாய். யாம் அங்குவந்து இனிது விளக்குவோம் என்று கூறி விடுத்தமையால் இங்கு வந்தேன்" என்றனள். அப்படிச்சொல்லுகையில், யோகத்திலிருந்த சம்புமாமுனிவர் உணர்ந்து எழுந்து போற்றி வணங்க, அவருக்கு அருள்செய்து, பின்னர் பரமசிவனுடைய ஆஜ்ஞைப்படி பூசைக்குத் தொடங்கி, பக்கத்தில் நின்ற பரிஜனங்களைப் பார்த்து, சிவபூசைக்குரிய பொருளையெல்லாம் விரைவில் கொணரும்படி நியமித்துத் தான் காவிரியிலும் நவதீர்த்தங்களிலும் சென்று சிந்தைமகிழ நீராடினள். மணிக்கலன்களும், வாசனைக்கலவைகளும், பூம்பட்டுக்களும், அணியாளாய், வெள்ளாடையுடுத்து, திருநீறும் அக்கமாலையும் திருமேனிமுழுதுமணிந்தனள். அகத்திய தீர்த்தத்தின்முன்னிருந்து, இறைவி தவத்தினை யெய்தினள். பரிஜனத்தேவர்கள் பூசைக்குரிய பொருள்களையெல்லாம் ஞானக்ஷேத்திரத்தில் நிரப்பினர். சம்புமூலத்தின்கண் பரமசிவன் கோயில்கொண்ட முறையினையறிந்துவிண்ணுலகிலுள்ள தச்சர்கள், மதில்களும், மாடங்களும், பூங்கோயில்களும், மலர்க்காவணங்களும், அழகுபெற நிருமித்தார்கள். சிலர் நீராடி மலர்களையாய்ந்து வேறுவேறு அமைத்து வைத்தனர். சிலர்பலவகை மாலைகளைச் சேர்த்து வைத்தார்கள். சிலர் சந்தனக்குழம்பைக் கஸ்தூரி முதலிய வாசனைப்பொருள்களைச் சேர்த்துச் சால்களில் பெய்து நிரைத்தார்கள். சிலர் அபிஷேகத்துக் குரிய பொருள்களைச் சேர்த்தார்கள். சிலர் நைவேத்தியத்துக்குரிய நால்வகையுண்டிகளையும் பொற்பாத்திரங்களில் துகிலால் மூடித்தொகுத்தார்கள். பூதகணங்கள் பல்வகை வாத்தியங்களை முழக்கினர். யாவரும் இவ்வகைப்பணிகளைச் செய்ய, அம்பிகை யெழுந்து ஆருயிர்த்தோழியர் கடலைப்போல் சூ

ழ்ந்து செல்லவும், தேவர் பூமாரி பொழியவும், பிரமதீர்த் தத்தின் பக்கத்தே சென்றனள். பிரமதேவனையழைத்து "ஒப்பற்றவனே! யான் பூசிப்பதற்கு ஒரு சிவலிங்கத்தைத் தருவாயாக" வென்றனள். கேட்ட சதுமுகன், வணங்கி, "அகிலலோகங்களையும் பெற்றவுன்னாலறியப்படாத பொரு ள்களுமுண்டோ? எல்லாமுணர்ந்த வுனக்குச்சொல்லுவ தென்னே? எல்லாம் ஐம்பெரும் பூதங்களாலேயே நிகழ்வன. உனக்கு விருப்பம் செல்லுமாறு அப்பூதமைந்தனுள் ஒன் றினால் இயற்றுவாயாக" வென்றனன். அதைக் கேட்ட அம்பிகை இன்பச்சுவையை உதவுகிறமுத்தியின் தன்மை யைத்தெரிந்துகொள்ளும்படி பூசிப்பவளாகையால், சுவை யைத்தருவதாகிய ஜலத்தைக்கொண்டு சிவலிங்கம் நிரு மிக்க நினைத்து, அந்தத்தீர்த்தத்தினைச் சார்ந்தாள். எங் கும் நிறைந்த பூரணமாகிய அந்தத் தாணுவின் சரணங் களைத் தியானித்து, தீர்த்தத்தையே திரட்டியொளிமிக்க இலிங்கமாகச் செய்து தாபித்தனள். மங்கலவாத்தியங்கள் ஆர்ப்ப, மாதர்கள் கீதம்பாட, முனிவர்கள் ஆனந்தக் கூத் தாடினார்கள். சங்கரி, சம்புமுனியை யழைத்து அச்சிவலிங் கத்திற்கு நிழல்செய்யும்படி பணித்து, தீர்த்தங்களைக்கொ ண்டு சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்யவெண்ணி, எ ல்லாத் தீர்த்தங்களும் பெருகும்படி தியானித்தனள். உமை யவளுக்குப் பரமசிவனிடத்துண்டாகிய பக்தி பெருகுவது போல, எல்லாத் தீர்த்தங்களும் பெருகிவந்தன. அதற்கு ஸ்ரீமத்தீர்த்தமென்று பெயருண்டாயிற்று. அந்த ஸ்ரீமத் தீர்த்தத்தையும் யானைகளின்மேற்கொண்டு வந்த மற்றைத் தீர்த்தங்களையும் சுகந்தங்களும் மலர்களுஞ் பெய்தமைத் துப் பூசித்து, ஆகமவிதியால் அபிஷேகஞ்செய்து மெல் லிய வஸ்திரத்தால் திருவுருவின் ஈரம்புலர்த்தி, அரை நாணுங் கோவணமும் பட்டும் சாத்தி, சந்தனக்காப்பணி

ந்து அதன்மீது விபூதியைப்பூசி, திருவாபரணங்களும் மாலைகளும் வேறுவேறு எடுத்து அலங்கரித்தனள். அறு சுவை கொழிக்கும் நால்வகையுண்டிகளையும் நிவேதனஞ் செய்து, தாம்பூலமளித்து, பலவகைத் தீபங்களும் முறைப் படி சுழற்றி, குடை முதலிய உபசாரங்களனைத்துஞ்செய்து வாத்தியங்களைக் கோஷிக்கச்செய்து, ஊர்வசி முதலிய தேவமாதர்களை நடனஞ்செய்வித்தனள். இவ்வாறு தின ந்தினம் காலங்கள்தோறும் பூசை செய்துகொண்டு ஒழு குநாட்களில் ஒருநாள், பூசை முடிந்தபிறகு, தான் இறை வனைப் பிரிந்த முறைமையை நினைந்து வெய்துயிர்த்து. புளகமுற்றுத் துதிப்பாளாயினள்.

"கலங்கிப் புலவோர் பெரிதுங் குலையக் கறவுந் தருவோர் குலவாழ்க் [கையுறும்
வலங்கொள் புரமூன் றுமொருங் கவிய யாயப் படைதொட் டமல [ர்க் கரனே
தலங்குங் கிரணப் பனிமா மதியோன் றொடர்சா பமறத் துவரஞ் [செறிவித்
திலங்கும் புகழ்ஞா னதலத் தடியேற் கெளிவந் தருளா மையியைந் [திடுமே.
விண்ணு டுநெடும் புவியுந் துயர வெள்ளிக் கிரியைப் பெயர்வித் திடு [வோன்
கண்ணூர் முகமும் புயமுஞ் சிரமுங் கடிதா கநெரித் தருள்கால் விர [லோய்
புண்ணு டியவார் குலிசப் படையோன் புகர்வன் கொலைபோக் கிவ [ரங்கள்பல
வெண்ணூ தருண்ஞா னதலத் தடியேற் கெளிவந் தருளா மையியைந் [திடுமே."

என்று கரைந்து கரைந்து உருகி இடைதள்ளாடவும், விழி யினின்றும் புனல்சோரவும், கைகள் சிரமேற்குவியவும், புளகங்களுண்டாகவும், சோகமடைந்தாள்; சிவபெருமான் விரைந்து வெள்விடைமேல் பிரசன்னமாயினர்.

பூதகணம் புடைசூழப் புத்தேளிர் பொழிகின்ற
சீதமலர் வெளிதூர்ப்பத் திசைமுழுது மிசைதேங்க
வேதமுனி வர்பழிச்ச மெய்யன்பர் குதுகலிப்ப
நாதரினி தருள்காட்சி நயனமலர்ந் தெதிர்கண்டாள்.

தம்பிரான் எதிர் தோன்றலும், அங்கமனைத்தும் பூரித்தனள். அகிலாண்டநாயகி விரைந்து திருவடிகளில் வணங்கி ஒருபால்நிற்ப, பரமசிவன் கிருபாநோக்கமளித்து, பெருங் கருணையினால், விரும்பிய வரங்களைக் கேட்டுக்கொள்ளும் படி பணித்தனர். எல்லாவுயிர்களுக்குந் தலைவனாகிய பரமசிவனையே தனக்குத் தலைவனாகக் கொண்டவம்மை, நாயகருடைய திருவருளை நோக்கி எல்லாவுலகங்களு முய்யும் படியாகச் சில வரங்களைக் கேட்பாளாயினள்.

"தேவதைகள் தொழுதேத்தும் எம்பெருமானே! தேவரீர் இத்தலத்தில் கொண்டருளியிருக்கும் அமுதேசனென்னும் திருநாமத்தைக் கேட்டவர்கள், சாலோகபதவியையும், அமுதேசனென்னும் அருட்குறியைத் தரிசித்தவர்கள் சாமீபபதவியையும், தியானத்தோடு தரிசித்தவர்கள் சாரூப பதவியையும், அதைப்பூசித்தவர்கள் தேவரீ உமாதேவியாருடைய திருவடிக் கீழ்மாறாத சாயுச்சியமாம்பெற்ற பதவியையுமடைக. பெருமானே! ஒருநாளைப் பூசைக்குரியபொருள்களை யுதவினோர், இம்மையிலே விரும்பிய போகங்களை யெல்லாமனுபவித்து, சிவலோகத்தில் நெடுங்காலம் உறைந்து நினைத்தவை யெல்லாம் கிடைக்கப்பெற்றுத் திருவருளில் சேர்க; இந்த ஸ்ரீமத் தீர்த்தத்தைப் பார்த்தாலும், தொட்டாலும், நீர்வேட்கையால் குடித்தாலும், ஊர்வனவாகிய பிராணிகளும் முத்திநிலையைப்பெறுக. தீர்த்தத்தின் பெயரைக் கூறினோரும் எல்லா நலங்களையும் பெற்று முக்தியைச்சேர்க. ஸ்ரீமத்தீர்த்தத்தின் பக்கத்தேயிருந்து தவஞ்செய்தோர்க்கு எல்லையில்

லாத பயனுண்டாகுக. ஒரு பசுவைப் பிராமணனுக்கு விரும்பிக்கொடுத்தவர்க்கு அசுவமேதஞ்செய்த பயனுண்டாகுக. திலதானஞ்செய்தவர்க்கு எல்லாப்பாவமும் நீங்குக. சுவர்ண தானஞ்செய்தோர் சூரியமண்டலத்தில் வாழ்க. ஆச்சியதானஞ் செய்தோர்க்கு அக்கினிட்டோமத்தின் பயனுறுக. வஸ்திரதானங்கொடுப்போர், தீர்க்காயுளையும், செல்வத்தையும் அடைந்து, இறுதியில் வருணபதத்தை அடைக. தானியதானஞ்செய்வோர், எல்லாரும் பக்திசெய்யத்தக்க தெய்வமாகுக. வெல்லத்தைத் தானஞ்செய்வோர், எல்லாப்போகங்களையும் அடைக. வெள்ளியைக் கொடுப்போர், சந்திரபதத்தை யடைக. பூதானஞ்செய்தோர், இந்திரனாகி விண்முழுதையும் ஆளுக. இலவணதானஞ் செய்வோர் எல்லாத்துன்பங்களும் நீங்கி இன்பத்தை யடைக. கன்னிகாதானஞ் செய்வோர் விஷ்ணுபதத்தில் வாழ்க. அன்னதானஞ் செய்வோர் ஒவ்வொரு அன்னத்திற்கு ஒவ்வொரு கற்பகாலம் சிவலோகத்தில் விரும்பிவாழ்க. சிவலிங்கத்தைத் தானஞ்செய்வோர் இவ்வுலகத்தில் எல்லாப்பொருள்களையுமடைந்து ஈசுவரபதத்தில் இனிது வாழ்க. சிவராத்திரியில் சிவலிங்கத்தைப் பூசைக்குரிய உபக்ரணங்களோடுந் தானஞ்செய்வோரும், அந்தத் தானத்தையேற்றுப் பூசைசெய்வோரும், அப்போதே சீவன் முத்தராகுக. உருத்திராக்ஷ மணிகளை ஈவோரும் ஏற்போரும் கைலாசத்திலும், சிவபுரத்திலும் ஒவ்வொரு மணிக்குப் பத்துவருஷமாக வசித்து வாழ்க. இத்தலத்தில் சிவஞானத்தை யுபதேசிப்போரும், ஏற்றுக்கொள்வோரும் வாதனைகளற்று, ஆனந்தவெள்ளத்தில் மூழ்குக. இந்த ஞானக்ஷேத்திரம் அமுதேசுவரமென்னும் பெயரையும் அடைக. அமுதேசமென்னப்பட்ட இத்தலத்தின் எல்லையாகிய ஐந்து குரோசத்துக்குள் பிராம்மணருடைய குடு

ம்பத்தைப் பிரதிஷ்டை செய்தோர், துன்பங்களெல்லாம் நீங்கித் தேவர்களெல்லாம் அழுக்காறடையப் பிரமத்தின் வாழ்க. அவ்வந்தணர்க்குப் பூமியைத் தானஞ்செய்வோர் சிவசாரூப்பியத்தோடு சீவன்முத்தராகுக. திருமாலைப் பிரதிஷ்டை செய்வோர், ஸ்ரீவைகுந்தம் சேர்ந்து வாழ்க. ஒப்பற்ற சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வோர் இம்மை மறுமைப் போகங்களை நுகர்ந்து மோக்ஷத்தைப் பெறுக. இந்தப் புண்ணிய தலத்தில் வசிப்போர், உமது திருவடியைப் பிரியாராகுக." என்று இவ்வாறு வெவ்வேறு வரங்களை விரும்பி யாசித்துத் துதித்து, அம்பிகை, நாயகருடைய திருமுகத்தை நோக்கி "நம்பனே! நான் முன்கூறிய ஓர் வினவுக்கு இந்தத் தலத்தில் வந்து உத்தரமளிப்பதாகப் பணித்தீரன்றே. அடியேன் தெளியும் வண்ணம் அதைத் தெரிவித்தருளவேண்டும்" என்று வணங்கிக்கூறினள். அதுகேட்ட தேவதேவன் உமாதேவியைப்பார்த்து "யாசித்த வரங்களையெல்லாம் கொடுத்தோம்; நீ கேட்ட மற்றொரு வினவிற்கு விடையளிப்போம்." என்று கூறிப் பிறகு நாவல் மரவடிவாய் நின்ற சம்புமுனிவரை நோக்க, அம்முனிவர் அந்தக்குறிப்பை யுணர்ந்து, வணங்கியெழுந்து, களிப்பினால் உரைக்கத்தொடங்கினர். "என் சிரசு வெடித்தெழுந்த இந்த நாவல் மரத்தில் தேவரீர் கருணையோடும் எழுந்தருளியிருந்த தன்மையினாலே, அடியேனுய்ந்தேன்; அடியேனும், என் முன்னோர்களும் உய்ந்தோம். அமுதீச்சுரமென்னும் தலம் ஜம்புவீச்சுவரமென்று பெயர் பெறவும், என் நிழலில் தேவரீர் என்றும் நீங்காது வைகவும் வரம் அருளல்வேண்டும்." என்று வரங்களை யாசிக்க, எம்பிரான் அவற்றையெல்லாம் அளித்துப் பக்கத்தில் துதிசெய்து நின்ற நான்முகனை அருளிப்பார்க்க, பிரமன் தாழ்ந்தெழுந்து, "அடியேனுய்ந்தேன் அகிலகோடிகளும் உய்ந்தன. மாசிமாதத்தில் வருகின்ற சந்திரனுக்கு உரியநா

ளாகிய மிருகசிரீஷ நக்ஷத்திரத்தில் இடபக்கொடியை யேற்றி, பிறகு பங்குனிமாதத்தில் எனக்குரியதாகிய உரோகிணி நக்ஷத்திரத்தில் அக்கொடியை யிறக்கி, அந்தத்தினத்தில், என்பேரால் விளங்குகிற தீர்த்தத்தில் யாவரும் ஸ்நானஞ்செய்யவும், அவர்கள் விரும்பிய பலவரங்களையும் அடையவும் வரமளிக்கவேண்டுகிறேன்." என்றனன். பங்கயாசனன் இங்ஙனம் சொல்லக்கேட்ட பரமசிவன், "அங்ஙனமே ஆகுக." என்று அநுக்கிரகஞ்செய்து, பக்கத்தில் நின்றவர்களை யெல்லாம் பார்த்தருளி, அவரவர் அபேக்ஷித்த வரங்களையெல்லாம் அளித்தபின், ஒப்பற்ற சிவஞானத்தைப் பார்வதிக்கு உபதேசிக்கத் தொடங்கினர்.

சந்திரகலாதரராகிய பரமசிவன் நந்திகேசுவரருடைய முகத்தைப் பார்க்க, திருநந்திதேவர் தாழ்ந்தெழுந்து, பரமசிவனுடைய திருவுள்ளக் குறிப்பையறிந்து, அங்கிருந்தோரை யெல்லாம் அகலநீக்கினர். சம்புமுனிவரும் திருநந்திதேவரும் தேவர்களாலும் செய்தற்கருமையான பெருந்தவஞ் செய்தோராதலின், உமாதேவிபோடிருந்து அவ்வுபதேசத்தைக் கேட்கும்படி அருளப்பெற்று, சிவபெருமான் எழுந்தருளியிருந்து உபதேசிப்பதற்காக ஒரு மண்டபம் நிருமித்தார்கள். சிவபெருமான், அம்மண்டபத்து அமைக்கப்பெற்ற ஒரு சிறந்த ஆசனத்தில் வீற்றிருந்து, உமாதேவியை நோக்கி, "நீ யோக ரகசியத்தை வினவினை; ஆறுவகைச் சமயத்தோர்களும் உய்யும்படி அதைச் சொல்லுவோம்; கேட்பாய்." என்று உபதேசிக்கத்தொடங்கினர். "உலகங்களெல்லாம் நமது அருள்வழியே நடப்பனவாதலின், கூத்தாட்டத்தைக் கற்பிப்பவன் முன்பு தான் ஆடிக்காட்டுதல்போல, முதலில் நாமே அநுஷ்டித்து உலகத்தைப் பயிற்ற வேண்டும்; ஆகையால், ஆன்மகோடிகள் போகத்தை நுகரும் பொருட்டு உன்னைத்தழுவிப் போகியாகவும், யோகத்

பார்வதிதேவி ஞானோபதேசம் பெற்றது.

தைச் செய்து மெய்ஞ்ஞானத்தை யடைந்து வீடடையும் பொருட்டு யோகியாகவும் இருந்தோம்." என்று கூறலும், உமாதேவி, அகமகிழ்ந்து வணங்கி "நம்பனே, மலத்தழுந் திய சீவான்மாக்களெல்லாம், போகங்களை நுகர்ந்து, உமது அருளால் ஞானத்தையடைந்து மோட்சத்தைப் பெறுவார் களென்று கூறினீர். மலம் என்பது யாது? ஜீவன் யாது? மாயை யாவை? கர்மம் யாது? மெய்ஞ்ஞானம் யாது? முத் தி எத்தன்மையது? இவைகளையெல்லாம் அடியேன் உள்ள படியே அறிந்துகொள்ளும்படி அருளிச்செய்யவேண்டு" மென்று பிரார்த்திக்க, சிவபெருமான் அவற்றின் இயல்புக ளையெல்லாம், சந்தேகவிபரீதமறத் தெளியும் வண்ணம், உபதேசித்தருளினர். அம்பிகையும், திருநந்திதேவரும், சம்புமாமுனிவரும், திருவருளைத் தியானித்துத் தெளிந்து நிஷ்டைகூடி முப்பாழுமற்று மேலே பெரும்பாழ் என்னும் சத்தான பொருளொடு இரண்டறக்கலந்து, சீவன் முத்தி பரமுத்தியென்று கூறப்படும் இரண்டுவகை முத்திகளையும் பொருந்தி, சிவகைங்கரியங்களைப் புரிந்து மகிழ்ந்திருந் தார்கள்.

ஜம்புவிருட்சத்தின் நிழலில் எழுந்தருளியிருக்கும் ஐந்து திருமுகங்களையுடைய பரமசிவனுக்கு, நான்கு திரு முகங்களையுடைய பிரமன், திருவிழாச்செய்ய விரும்பித் திருமதில் முதலாகிய பல உறுப்புக்களும், மண்டபங்களும், பிராகாரங்களும், மாடமாளிகைகளும், ஆலயநூல் விதிப்படி

பிரமதேவன் திரு விழாச்செய்தது.

அமைத்து, சுவர்க்கமும் நாணும்படி, நகரத்தை நிருமித்தான், அகிலாண் டேசுவரியின் திருவுருவத்தை நேரில் தரிசித்தபடியே தியா னித்து அமைத்துப் பிரதிஷ்டைசெய்து பூசித்து, விநாயகக் கடவுளுக்கும் குமாரக்கடவுளுக்கும் மற்றப்பரிவார தேவ தைகளுக்கும் உருவங்களமைத்துப் பிரதிஷ்டை செய்தன ன். தேர், யானை, குதிரை, தங்கப்பல்லக்கு, குடை, கொடி,

சாமரம் முதலிய சிறப்புக்களையெல்லாம் மிகுதியாகத் தொகுத்து, திருவிழாவைக் காணவரும்படி தேவர் முதலியோர்களுக்கு உத்ஸவ பத்திரிகைகளை யனுப்பினன். திருமுகத்தையேற்று உபசரித்து வணங்கி ஆனந்தமுற்று, தேவர்களும் எட்டுத் திக்குகளிலுள்ளவர்களும் நாகர் முதலியோரும் வேந்தர்களும் வந்து நெருங்கினர்கள். பிரம்மதேவன் மாசிமாதத்துக் கிருத்திகை நக்ஷத்திரம்கூடிய தினத்தில் பலவகை வாத்தியங்களும் கோஷிக்க மிருத்ஸங்கிரகணமும் அங்குரார்ப்பணமுஞ்செய்து, அடுத்த தினமாகிய உரோகிணியில், படத்தில் விருஷபத்தை யெழுதிப்பூசித்து, துவஜாரோகணஞ் செய்தனன். அன்று மாலைமுதல் விநாயகாதி தேவதைகளுக்குத் திருவிழா நடந்தது. பதினேழாந் திருநாள் ஸாயங்காலத்தில், எட்டுக்கொடிகளைப் பூசித்து, பதினெட்டாந்திருநாள் காலையில், சுவாமி எழுந்தருளி எதிரே வந்துநிற்க, அந்த எட்டுக்கொடிகளையும் ஏற்றினன். பதினெட்டாநாள் காலைமுதல் சிவபெருமானுக்குத் திருவிழா நடக்கத்தொடங்கியது. அன்றுமுதல் எம்பிரான் காலையிலும் மாலையிலும் பலவாகனங்களில் திருவுலாப் போந்து இருபத்தேழாநாள் உரோகிணி நக்ஷத்திரத்தன்று மத்தியானத்தில் பிரமதீர்த்தத்தில் தீர்த்தங்கொடுத்தருளினர். அன்று மாலை எட்டுக்கொடிகளும் இறங்கின. இருபத்தெட்டாநாள் மாலை முதல், மூன்றுதினம் மாலைப்பொழுதில், பள்ளியறைப் பெருமான், திருச்சிவிகையில் உலாப் போந்தனர். முப்பத்தோராந்தினம் முதல் மூன்று நாள் சண்டேசப்பெருமானுக்கு திருவிழா நடந்தது. அன்று இராத்திரியில், நான்முகன் மற்றைக் கொடியையும் இறக்கினன். முப்பத்தேழாநாளில், ஜம்புநாதர் உட்பிரகார முதல் பஞ்சப்பிரகாரங்களிலும் திருவுலாப்போந்தார். முப்பத்தெட்டாநாள் நீராடிப் புஷ்பசந்தனாதிகளை யணிந்து சுவையுள்ள நிவேதனங்களைக் கொண்டருளி விடாயா

ற்றியுற்சவம் கொண்டருளினர். அன்று சாயங்காலம், முத்துப்பந்தரின் நீழலினிலே தேவர்கள் போற்றப் பவனிவந்து இறைவர் உமாதேவியோடு திருக்கோவிலில் எழுந்தருளியிருந்தார். இவ்வாறு ஆதிப்பெருஞ்செல்வராகிய பரமசிவனுக்குப் பிரமதேவன் சிறப்பாகச் செய்த திருவிழாவைத் தேவர்களும் மனிதர்களும் பிரம்மோற்சவமென்று வருஷந்தோறுங் கொண்டாடத் தொடங்கினர். திருவானைக்காவின்கண் எழுந்தருளிய சிவபிரானுக்கு ஆதிப்பிரமன் இனிதாகச் செய்த திருவிழாவைச் சிறப்புறச் செய்தோரும், தரிசித்தோரும், எல்லாத்துன்பங்களுமகற்று, இவ்வுலகத்தில் அரசராய் வாழ்ந்து, மறுமையில் சுவர்க்கானுபவங்களை யனுபவித்துப், பின்பு பேரின்ப வீட்டையடைவர். முதல்வனுடைய திருவிழா முடிவில் பிரம தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தோர் உலகைமுழுது மொருகுடையிலாண்டு விண்ணுலகில் அரசு செலுத்திப் பேரின்பநலத்தைத் தருகின்ற முத்திநிலை பெறுவர். சந்திர சூரியர் சேர்கின்ற அமாவாசியை தோறும் ஒருவருடம் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து வெண்ணாவல் நீழலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய திருவடிகளை வணங்கினோர் பாவமும் பிணியுநீங்கி ஆனந்தவெள்ளத்திலழுந்துவார்.

திருமால், தேவதைகளுக்குப் பகைவனும் தோலாவலிமைபடைத்தோனுமாகிய இராவணனை வதஞ்செய்தற்பொருட்டு, அயோத்தியில் தசரதசக்கிரவர்த்திக்குப் புத்திரனுக அவதரித்து, தந்தையின் ஏவலால் வனத்தில் சஞ்சரிக்குங்காலில், இராவணன் சீதையை யெடுத்துச் சென்றனன். இராமபிரான் மிக்கத்துயரமுற்று, பரமசிவனைப் பூசித்துப் பகைமுடிக்கும் ஆற்றலைப்பெற்று, இளையபெருமாளுந்

**இராமன் பூஜை செய்தது.**

தானும் விரைந்துசென்று, கிஷ்கிந்தையையடைந்து, சுக்கிரீவனோடு சினேகஞ்செய்து, சமுத்திரமீது அணைகட்டி, வானரசேனையுடன் இலங்

கையில் பிரவேசித்து, இராட்சஸப்படைகளையும், கும்பகர்ணனையும், இராவணனையும் வதஞ்செய்து, இலங்காராச்சியத்திற்கு விபீஷணனை அரசனாக்கி, சீதாதேவியுடன் வழிக்கொண்டு மீண்டனன். மீளும்போது, இராவணனும், கும்பகர்ணனும் பயங்கரமான வடிவத்தோடு, தண்டத்தைக் கையிலேந்தி, இடிமுழக்கம்போலக் கர்ச்சித்துத் தன்னை வளைந்து வருதலைக்கண்டு, இறந்த அரக்கர்கள் மாயையால் மீண்டும் உடல்பெற்று எழுந்தார்களோவென்று பயந்து உற்றுநோக்கி அவை அவர்களுடைய சாயையென்று துணிந்து அவைகளையும் தொலைக்கக் கருதி, இராமேசுவரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசிக்க, இராவணனுடைய சாயை மாத்திரம் நீங்கியது; கும்பகர்ணனுடைய சாயை நீங்காமல் பின்தொடர்ந்து வருத்த, இதை எங்ஙனம் போக்குவோம் என்று கவலையுற்று நடந்து ஜம்புகேசுவரத்தின் ஐந்துகுரோச அளவில் சென்றவுடன் அந்தச்சாயை சூரியனைக்கண்ட இருள்போல நீங்கிற்று. தசரதராஜன் புதல்வனாகிய இராமன், அந்தச் சாயை தன்னைவிட்டு நீங்கியதுகண்டு, மிக்க உவகையுற்று அந்தத்தலத்தினுள்ளே புகுந்து, காவிரியில் தீர்த்தமாடி, பின்பு அங்குள்ள நவதீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து, பரமசிவனுடைய சன்னிதியில் தாழ்ந்து வணங்கி, அமுதலிங்கத்தையும் அகிலாண்ட நாயகியையும் தரிசித்து, ஆனந்தக் கடலுள் ஆழ்ந்தனன். பின்னர் அங்கிருந்த முனிவர்களைக்கண்டு, அந்தச் சாயை தன்னைத்தொடர்ந்து வருத்தியதையும், இத்தலத்தின் எல்லையுள் வந்தவுடன் அது நீங்கியதையும் தெரிவிக்க, அவர்கள் "ஸ்தலமும், தீர்த்தமும் மூர்த்தியும் ஆகிய மூன்றிலும் சிறந்ததாகிய வித்தலத்தில், பேயும், பிரம்மராக்ஷஸமும், நோயுமாகிய தீங்குகள் அணுகமாட்டா; ஆதலின், அச்சாயை நீ இவ்வெல்லையைக் கடந்து சென்றால் உன்னை நெருக்கும்; எந்தலே! அது எவ்விடத்தும் நீங்கும்படியான

முயற்சியை இத்தலத்திலேயே செய்வாயாக; சிவலிங்கப் பிரதிஷ்டையைச் செய்து, அச்சிவபிரானிடத்துச் சிந்தையை நிறுத்தி, நீராலும் மலராலும் ஆராதிக்கிற பூசையின் பலத்தினால் இக்கொலைப் பாவத்தைப் போக்கிக்கொள்வாயாக" என்றனர். முனிவரர்கள் இங்ஙனம் கூற, திருமால், விருப்புவெறுப்பற்ற பரமசிவனைப்பூசிக்க விரும்பி, அங்கதனையழைத்து "நீ யிங்கே ஒரு சிவலிங்கத்தைக்கொண்டுவருக" என்று ஏவி, சன்னிதிக்குமேல்பக்கத்திலுள்ள ஓர் தீர்த்தத்தைக் கண்டு அதன் கரையில் தங்கினான். அங்கதன் சாளக்கிராம கிரியையடைந்து, ஒரு மரகதலிங்கத்தைக் கைக்கொண்டு இராமனிருக்கும் இடஞ்சேர்ந்தான். இராமபிரான் சிற்ப விதிப்படி சிவலிங்கத்தின் அளவுக்கேற்ப ஆலயமமைத்து ஆகம விதிப்படி பிரதிஷ்டைசெய்து அன்பினாலே மனங்கரைந்து,

"எண்ணி லுயிர்க்குந் தனதருளை யீயும் பொருட்டுப் பலவுருவாய்
நண்ணி யுலகுக் கைந்தொழிலு நடத்தி யந்த வுலகத்திற்
பண்ணி னிசையும் மலர்மணமும் பழத்தின் சுவையு மெனநிற்கும்
அண்ண லெவனே யவனடியை யன்பி னாற் பரசுவேன்."

"மாகாய வாசுகிநாண் மாமேருச் சிலைமாயப் பகழி யேந்தி
யேகாதிலத்தின்றேர்க்கிரவிமதி கோத்தியக்கி யெயின் மூன்றட்டுப்
போகாத புகழ்நிறுத்த புண்ணியனைப் புகழ்க்கால காலன் றன்னை
யாகாச கேசனைமா புருடனைமா கேச்சுரனை யறியா நின்றேன்."

"கங்கை நதியு மிளம்பிறையுங் கதிர்க்குஞ் செடிலத் திடைவிளங்க
மங்கை யுமையா ளிடப்பாலின் வயங்க வடியேன் பூசைகொள
விங்கண் விரைவி னெழுந்தருளல் வேண்டு மடியா ரிரும்பேறே
செங்கை மலரி னழலேந்துஞ் செல்வா தேவர் சிங்கமே."

"மங்கல மருளு மஞ்சனே தேவ
தேவனே மலிர்வெண் பாவ
மிங்குமுற் றகற்றிச் சுசத்தினை யருள்க
வெம்பிரா னெனக்கருள் சுரக்க

வெங்கிருந் தனினு மங்கணே விரைய
வெழுந்தருள் சொரூபராய் விடையாத்
தங்கவெண் கவச ராயுருத் திராய்த்
தலங்கிய நம்மையான் றெழுதேன்."

"இராசதவன் குணத்தோடு முலகமெலாம்
படைப்பவனு யிருந்தாய் போற்றி
பராவலுறுஞ் சாத்துவிதத் தொடுமுலகம்
புரப்பவனய்ப் பயின்றாய் போற்றி
விராவியதா மதகுணத்தி னெடுமெழிக்கு
முருத்திரனய் மிளிர்ந்தாய் போற்றி
வராகமுத லுருவாயு முகந்தொறும்புல்
லாரைவதைக் கின்றாய் போற்றி."

"எவ்வாயுந் திருமுடிக ளெவ்வாயு மொளிநுதலெவ் வாயுங் கண்கள்
எவ்வாயுந் திருச்செவிக ளெவ்வாயுஞ் செவ்வாயெவ் வாயுந் தோள்கள்
எவ்வாயுந் திருக்கரங்க ளெவ்வாயுந் திருவயிறெவ் வாயுந் தாள்கள்
எவ்வாயுந் திருமேனி யெனநிற்குந் தனிமுதல்வ னெம்மைக் காக்க."

"அஞ்சலெனவமைத்தவொருகரதலமும்வரதமெனவமைத்தகையும்
கஞ்சமல ரேந்துமிரு கரதலமு மூற்றிருக்குங் கருணை நோக்கும்
பஞ்சிகமழ் சீறடியு மழகெறிப்ப வணிகலன்கள் பலவுந் தாங்கி
வஞ்சமல விருள்சீக்கு மகிலாண்ட நாயகிதன் வடிவம் போற்றி."

எனப்பல தோத்திரங்களைச் செய்ய, அவற்றைச் சிவபெருமான் திருச்செவியேற்று, உமாதேவியாரோடும் விருஷபாரூடராய்க் காட்சிகொடுத்தருளினர். தாசரதி, தரிசித்த கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் பெருக, மனங்கரைந்துருகி வணங்கினன். சிவபெருமான், அருள்கூர்ந்து "இராமனே! நீ யென்னைத்துதித்தபடி, எவர் துதித்தாலும், அதை அன்போடு கேட்டாலும், பெரும்பாவங்களும் தீயின்முன் பஞ்சுபோல வெந்து நீங்க, இம்மை மறுமைப்பயன்களை யடைவர். அடர்த்துவந்த சாயையானது நீங்க, நீ அயோத்தியடைந்து நெடுங்காலமரசு செலுத்தி மனிதர்களுக்குத் தெய்வமாய், அவரவர் வேண்டிய வரங்களை யெல்லாம்

வழங்கி, அந்தத்தில் முத்தியைப் பெறுவை. மன்னவனே!
செல்லுவாய்." என்று விடையளித்துச் சிவபிரான் அந்தர்த்
தானமாயினர். இராமபிரானும் பூசையை முற்றுறச்செய்
து, அயோத்தியை யடைந்து அரசாட்சி புரிந்துவந்தனன்.
நீலநிறத்தையுடைய திருமாலால் பக்தியோடு பிரதிஷ்டை
செய்து பூசனை செய்யப்பட்ட நீலவிண்டு ஈசுவரனைப் பணி
ந்தவரும், அவர் திருநாமத்தைச் செபித்தோரும், தரிசித்
தோரும், கொலைப்பாதகங்களினின்றும் நீங்குவார்.

தேவலோகத்திலே, இந்திரனுடைய கொலு மண்டப
த்தில் தேவர்களும் முனிவர்களும் வந்து கூடினார்கள்.
வசிஷ்டரும் விசுவாமித்திரரும் வந்திருந்தார்கள். அங்கி
ருந்தவர்களிற் சிலர், பூலோகத்தில் சத்திய
ந்தவருந்தவர் யாரென வினவினர்: வசிஷ்
டமுனிவர், அரசர்க்கரசானாகிய அரிச்சந்திரன் ஒருபோது
ம் பொய்யுரையானெனக் கூறினர்: அதுகேட்ட விசுவா
மித்திரர், "அவனைப் பொய் சொல்லும்படி செய்வேன்"
என்றனர். வசிஷ்டமுனிவர் "விசுவாமித்திரனே! அரிச்ச
ந்திரன் பொய் சொல்லுவானானால் ஸுராபானஞ்செய்த
பிராமணனைப்போல ஒற்றைவஸ்திரத்தை யுடுத்து, எமன்
திசையாகிய தெற்கு நோக்கிச் செல்வேன். இதற்குத் தே
வர்களே சாக்ஷி" என்றனர். விசுவாமித்திரரும் அவ்வரச
ன் நெஞ்சறியப் பொய் சொல்லும்படி செய்யேனானால், நீ
சொன்ன சபதமே எனக்குமாகுக." என்றுகூறச் சுவர்க்க
த்தினின்றும் பூலோகத்திற்கு வந்து, அரிச்சந்திர ராஜனை
யடுத்து, அவனைப்பல துன்பங்களுக்குள்ளாக்கவும், அவ
ன் சத்தியத்தினின்றும் தவறானாயினான். தேவர்கள் பூமாரி
பெய்து அவனுக்குப் பலவரங்களை ஈந்தார்கள். வேந்தனு
ம் அவர்களை வணங்கி, "கடவுளர்களே! முனிவர் முன்பு
செய்த சபதத்தை அடியேனுக்காகச் செய்யாதொழிதல்
வேண்டும்." என்று வேண்ட, தேவர்கள் அரசனுடை

*பராசரன் வழி பட்டது.*

பரிவைப்பார்த்து, முனிவர்செய்த பிரதிக்கினியைச் செய்ய வேண்டாமென்றார்கள். அரசன், தேவர்கள் கொடுத்த வரங்களைப்பெற்று அயோத்திசென்று அரசாட்சி செய்தனன். விசுவாமித்திரர், நாணம் தலைக்கொண்டு, வசிஷ்டரிடத்துப் பகைமைபாராட்டி, தன்மந்திரங்களை ஜபித்து ஒரு ஆபிசாரயாகத்தையியற்றினர். அந்த யாககுண்டத்திருந்து ஒருபூதம் வெளிப்பட அதைப்பார்த்து, "வசிஷ்டரைக் கொன்றுவருவாய்" என்றனர். அந்தப்பூதம் போய்ப்பார்த்தபொழுது, வசிஷ்டர் அங்கு இல்லை. அவர் குமாரராகிய சத்தி நித்திரைசெய்துகொண்டிருக்கக்கண்டு, அவரைக்கொன்று அப்பூதம் விசுவாமித்திரரிடம் சென்று கூறி, அவருக்கு மகிழ்ச்சிமைவிளைவித்தது. சத்திமுனியின் மனைவியும் ஏனையோரும் மிக்கவிசனமடைந்து வருந்தும்போது, வசிஷ்டமுனிவர் வந்து நிகழ்ந்ததுதெரிந்து, ஆற்றுத்துயரமுற்று, சோகக்கடலில் அழுந்தினர்: அத்தருணத்தில், நான்முகன் அங்குவந்து வசிஷ்டமுனிவரைத் தேற்றி, பின்வருமாறு சொல்வானாயினன். "சத்தி இறந்தானென்று துக்கத்தால் கிலேசமடையாதே; உன்னுடைய குலம் மேம்பாடு அடையும்படி உன் மருகி கருப்பவதியாயிருக்கிறாள். அது ஆண்மகவாகப் பிறக்கும். அவன் அரக்கர்கள் குலத்தை வேரொடு களைவான்; நீ, அவன் காதில்படும்படி வேதங்களையெல்லாம் ஓதுதி" என்றனன். சற்குணசம்பன்னராகிய வசிஷ்டமுனிவர், ஒருவாறு துயர் நீங்கி மற்றவர்களையும்தேற்றி, சத்தியின் மனைவி காதில் படும்படி வேதங்களைச் சாங்கமாக ஓதினர். கருப்பத்திலிருந்த குழந்தையும் அவைகளையெல்லாங் கேட்டுணர்ந்தது. பத்துமாதமும் நிரம்பி குழந்தைபிறக்க, பூலோகமும் சுவர்க்கமும்களிந்தன. அரக்கர் வசிக்குமிடங்களிலெல்லாம் துர்நிமித்தங்கள் நிகழ்ந்தன. வசிஷ்டர், அக்குழந்தைக்குச் சாதகர்மம் முதலியவற்றைச் செய்து, பன்னிர

ண்டாம்நாளிலே பராசரனென்று நாமகரணமுஞ்செய்தன ர். எட்டாம் பிராயத்தில் உபநயனஞ்செய்யப்பெற்று, பரா சரமுனிவர் சுக்கிலபட்சத்துச் சந்திரன்போல, நாளுக்கு நாள் வளர்ந்து வந்தனர். அவர் தம் தாயைப்பார்த்து "அம்மா! நீயேன் ஆபரணங்களை யணிந்துகொள்ளவில்லை. நீ மிக்க துக்கமுற்றிருக்கிறாயே; அதற்கு காரணம்யாது? என் தந்தையார் எங்கேயிருக்கிறார்? வசிஷ்டமுனிவர் யாவர்? எனக்கு எல்லாம் விளங்கச்சொல்லவேண்டும்" என்று வினவ, அவள் "முனிவர்செல்வமே! என் துன்பத்தை நீக்க வந்த யானையிளங்கன்றே! யான் கொழுகொம்பற்ற கொடி போலக் கொழுநனை யிழந்தேன்; ஒருதீங்கையும் இயற்றாத உன் தந்தையை ஓர் அரக்கன்மாய்த்தனன். வசிஷ்ட முனிவர் உனக்குப் பாட்டனார்" என்று கூறி மறுகினாள். தம்தாய் இங்ஙனம் கூறிமனம்வருந்தி மூர்ச்சிக்கக்கண்ட முனிகுமாரர், தாயைப்பலமுறை கையால் தட்டியெழுப்பி, மூர்ச்சைதெளிவித்து, "அரக்கர் குலத்தைப் பெயரும் மாளும்படி இன்றேதொலைப்பேன்," என்று கூறி வணங்கி, அவளால் ஆசீர்வதிக்கப்பெற்று, வசிஷ்டமுனிவருடைய அனுக்கிரகத்தையும் பெற்றுக்கொண்டு புறப்பட்டனர். புறப்பட்டு, ஞானதலத்தையடைந்து அங்குள்ள தீர்த்தங் களில் ஸ்நானஞ்செய்து உள்ளத்தில் மேன்மேல் ஓங்கி வள ர்கின்ற பக்தியோடு திருக்கோயிலையடைந்து துவஜஸ்தம் பத்தினருகே விழுந்து தெண்டனிட்டு மறைகளாலே பாடி த்துதித்து, உலகமாதாவாகிய அகிலாண்ட நாயகியையும் பணிந்தார். அவ்விடம் விட்டு நீங்கி, கோயிலை வலமாகச் சென்று, வெளிப்போந்து, பிதிரர்கள்களிக்க, தம்முடைய பிதாவைக் குறித்துச் செய்யவேண்டிய கர்மங்களையெல்லா ம் அன்போடு இயற்றினார். தந்தாதை, விருஷபத்துவச மசைந்தாடுகின்ற விமானத்தின்மேலே பலவகைச் சிறப்புக் களோடும் எதிர்தோன்றி, "அறிவில்லாத அரக்கனாலே

கொல்லப்பட்டமையால் மிகுந்த பாவத்திற்குள்ளாகிப் பைசாசமாய்ப் பிறந்து, இதுகாறும் பெரிய துன்பத்தை யனுபவித்தேன்; மைந்தனே! நீயின்று இந்த ஞானக்ஷேத்திரத்தில் இயற்றிய நல்வினைப்பயனால் என்னுடைய பாவங்களெல்லாம் நீங்கி, நான் நற்கதிபெற்றேன்". என்று சொல்லிச் சிவலோகத்தையடைய, பராசரர் அரக்கர்குலத்தை மாய்க்கும்படியான யாகத்தைச் செய்யத்தொடங்கினர். சிவபெருமான் சம்புமூலத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற கோயிலின் வடகிழக்கு எல்லையில் ஒரு குண்டத்தை யியற்றி ஆபிசார ஓமத்தைச் செய்தனர். அக்கினியில் ஆகுதியைப் பெய்தவுடன், மந்திரங்கள் சென்று, அரக்கரையும், தானவரையும், பூதவேதாளங்களையுங் கொணர்ந்து குண்டத்தில் தள்ளின; தினந்தோறும் தீயவருடைய இனங்களையெல்லாம் ஒழித்தபிறகு, தென்மேற்குத்திக்கின் காவலனாகிய, நிருதியின் வாகனமாகிய பூதத்தையும் கட்டி இழுத்தன. அப்பூதம், மந்திரங்களை யெதிர்த்துத் தன் வலியிழந்து தளர்ச்சியுற்றதை நிருதி பார்த்து, மந்திரங்களை யெதிர்க்கும் சக்தி தன்னிடத்துமில்லாமையாலே, மந்திரங்களுக்கு நல்வார்த்தை சொல்லி யிரந்தும், அம்மந்திரங்கள் விடாமல் அவனையும் சேர்த்து இழுத்தன. நிருதியானவன், மனந்தளர்ந்து வேறு பற்றுக்கோடில்லாமையாலே, நாவலின் நீழலில் வாழ்கின்ற சிவபெருமானுடைய திருவடிகளையே சரணமாகவடைந்து,

"பாலனுக் காகக் காலன் படவுதை செய்தா யோலம்
ஆலமுண் டமர ராவி யளித்தரு டலைவ வோலம்
வேலனு லவுணர்க் காய்ந்து விண்குடி நிறுத்தா யோலஞ்
சீலமார் சம்பு நீழற் சிவபிரா னேலவோலம்."

"முப்புரம் பொடித்த மேரு மூரிவெஞ் சிலையா யோலம்
அப்பவிர் வேணி வைத்திட் டகனிலம் புரந்தா யோலஞ்
செப்பிள முலையாள் பூசை செய்தநீர்த் திரளே யோலம்
வைப்பெனச் சம்பு நீழல் வதிந்தருண் முதல்வா வோலம்.

என்று, பலவாறு தோத்திரஞ்செய்ய, கண்ணுதற்கடவுளது திருவருளால் ஆகாயத்தில் "நிருதியின் வாகனமாகிய பூதத்தை யெனக்குத் தருவாயாக" வென்று ஒரு ஒலி நிகழ்ந்தது. பராசரமுனிவர், அவ்வொலியைத்தம் செவியாரக்கேட்டு, உவகையுற்று ஆகாயத்தை நோக்க, பூதமும் நிருதியும் சமீபத்திற் சென்றார்கள். அவர்களைப்பக்கத்தேயிருக்கச்செய்து, "வஞ்சினத்தால் கொல்லுதனினும் வேள்விமுகத்தில் கொடுத்தலே சிறந்ததென்று கருதினேன்" என்றுகூறி, "கொடுத்தேன், கொடுத்தேன்" என்று சொல்லுகையில், சம்புமூலப்பெருமான், உமாதேவியோடு விருஷபாரூடராய்க் காட்சிகொடுத்தனர். முனிவர்கண்டு எழுந்து சிரமேற் கரங்குவித்து, ஆனந்தக்கூத்தாடிப் பூமியில் தண்டம்போல விழுந்து எழுந்து, இறைவனுடைய பாதங்களைத் துதிப்பாராயினர்.

"ஆதிப் பெருஞ்செல்வ வருட்கடலே யடியாரிளைப்
பாறு மலர்த் தருவே
பூதிக் கவயத் திருமே னியனே புரமூன்று
மெரித்த புரா தனனே
காதிப் பழவல் வினையைச் சிறியேன் கருதா
ரையுநீற் றியகண் ணுதலே
சோதிப் பொருளே தொழுவார் பருகுஞ் சுடர்வா
னமிழ்தே சரணஞ் சரணம்."

"ஆரந் தொடையான் மனையாள் களங்கங் காரம்
புனலோ டுகுடத் தநுழைந்
தீரந் திகழ்சென் னியினுட் டுபொழு திலகுந்
திருமே னியனிந் தருளி
வாரந் தகுநல் லருள்வைத் தவனே மணியே
மலர்பம் பியகா விரியின்
தீரந் திகழ்நள் ளிடையே வதியுஞ் சிவனே
பவனே சரணஞ் சரணம்."

என்று, பராசரர் புகழ்களைப் பாடிவணங்க, வெள்விடை மேல் எதிர் தோன்றிய நாயகனார், வேண்டும் வரங்களைக் கொள்கவென்று கூற, முனிகுமாரர், "அடியேன் செய்த யாகசாலையில் நிருதிக்குப் பூதத்தைத் திருப்பிக்கொடுக்கும் படி கருணை செய்தமையால்; தேவரீருக்குப் பச்சாத்தாபே சுவரரென்னும் பெயர் வழங்குக. அடியேனுக்குத் தேவரீருடைய திருவடிகளில் எந்நாளும் கெடாத பக்தியுண்டாகுக" வென்று பிரார்த்திக்க, பரமசிவன் அவ்வரங்களைக் கொடுத்தருளி நாவல் மூலத்தில் அமுதலிங்கத்தில் மறைந்தருளினார். அன்றுமுதல், பச்சாத்தாபேசுவரரென்னும் திருநாமம் வழங்கியது. கருணாமூர்த்தியாகிய பரமேசுவரனுடைய அருளைப்பெற்றுப் பராசரமுனிவர் தந்தை தந்தையாகிய வசிஷ்டரிடம் போய்ச் சேர்ந்து வாழ்ந்தனர். நிருதி, பச்சாத்தாபேசுவரர் அளித்த பூதத்தோடு தனது திசைசென்று பண்டுபோல் வாழ்ந்திருந்தான்.

(இன்னும் வரும்.)

M. V. இராமாநுஜாசாரியர்.

# சிலம்பியும் ஈயும்.

[இது MARY HOWITT என்ற ஆங்கில மாது பாடிய “The Spider and the Fly” என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு.]

“என்னுடை அறைக்குநீ எழஇசைந் தருள்வையோ ?
என்னும்நீ கண்டே இராதஓர் அழகிய
சிறியசம் பாஷணை அறைஅது மற்றதன்
உள்ளே செலும்வழி ஒரு சுழற்படி ஆம்.
அவ்விடம் வந்ததும் அழகிய பொருள்பல
உனக்குக் காட்ட உள்ளன.” என்றொரு
சிலம்பி ஓர் ஈக்குச் செப்ப, ஈ, “மாட்டேன்
மாட்டேன் எனை வரக் கேட்டல்வீண். எனெனில்,
உன் சுழற்படி வழ உயரச் சென்றவர்
எவரும் மீண்டும் இறங்கிக் கீழ்வர
என்றுமே இயலா” தென உரைத் ததுவே.

II

“நெடுந்தொலை மேலே நீ பறந் திருத்தலின்
இளைப்புமே விட்டே இருப்பாய் என்று
நிச்சயமாக நினைக்கின்றேன் யான்
என் சிறு படுக்கையில் இருந்திளைப் பாறுதி
அதனைச் சுற்றி அழகார் திரை உள.
விரிப்போ நேர்த்தியும் மேன்மையும் வாய்ந்தவை
ஆதலின் சற்றிளைப் பாறநீ இசைவையேல்
சுகமுற அடக்கமாச் சுற்றிஉள் கிடத்துவேன்.”
என்றச் சிலம்பி இயம்பலும் சிற்றீ.

"மாட்டேன். யான் வர மாட்டேன். எனெனில்
உன்படிக் கையிற்படுத் துறங்கினர் என்றுமே
மீண்டும் எழுந்து விழித்தலர் என யான்
பன்முறை கேள்விப் பட்டுளேன்" எனவே,

III

சூதார் சிலம்பிஅப் பேதையை நோக்கி
"அன்பார் நண்ப! நின்பால் என் அகத்
துள்ளமெய்ப் பிரீதியை உணர்த்த என்செய்வேன்!
சுவையார் பண்டம் எவையோ அவை எலாம்
உணவுசாலையில் ஒருங்கே வைத்துளேன்.
உன்வர வால்எனக் குண்டுமெய்த் திருப்தி
சிறிதெனும் உண்ணத் திருவுளம் பற்றுதி"
என்னலும், அச்சிற் றீ அதை நோக்கி
"மாட்டேன். அதுசெய மாட்டேன். அன்புடை
ஐயா! சற்றும் அதுமுடியாது. உன்
உணவு சாலையில் உள்ளன யாவையும்
பற்றிக் கேள்விப் பட்டுளே னல் அதை
மீண்டும் பார்க்க வேண்டேன்" என்றதே.

IV

பின்னும் அச்சிலம்பி "பிரியமார் பிராணி! நீ
சொற்சா துரியன். பொற்பார் அறிஞன். உன்
மெல்லிய சிறகின் நல்வனப் பென்னே!
உனனுடை விழிகளின் ஒளிதான் என்ன! ஓர்
சிறியகண் ணாடிஎன் அறையில்ஓர் தட்டில்
நான்வைத் திருக்கிறேன். நண்ப! ஓர் கணப்போ
தட்புகின் உன்னுடை உருவு காண் பாய்" என
"அன்பார் ஐய! நின் இன்பார் மொழிக்கு
வந்தனம். கால வந்தனம் உனக்கிவ்
வேளை ஈந் தின்னொரு நாளை யான் வருவேன்"
என்று மறுமொழி ஈ உரைத் ததுவே.

V

செருக்கார் பேதைஈ சீக்கிரம் திரும்பும்.
என்னச் சிலம்பி இனிதுணர்ந் தேஅவ்
இடம்விட் டகன்றுதன் இருப்பிடம் சென்றங்
கோர்சிறு மூலையில் உபாயமாய் நுண்ணிய
நூல் வலைஒன்றை நூற்றதில் ஈயை
உண்ணுதற் காகும்ஓர் உண்கலம் அமைத்தது.
அமைத்ததும் வாயில் அண்டையில் நின்று
"முத்தும் வெள்ளியும் மொய்த்த நின் சிறகுடன்
இங்குவா! இங்குவா! எழிலார் ஈயே!
பச்சை ஊதா நிறம் பதிந்ததுன் போர்வை.
உச்சியின் மேல் உனக் குள்ள தோர் கொண்டை.
ஒளிரும் மணிபோல் உனக்குள விழிகள்
என்னுடை விழிகளோ ஈயமே போல
மங்கலாய் உள" என மகிழ்ச்சியாய் பாடவே.

VI

அந்தோ! அந்தோ! அதிசீக் கிரத்தில் அவ்
அறிவிலாச் சிற்றீ அச்சிலம் பியின் நய
வஞ்சகம் வாய்ந்த வார்த்தையை நம்பி
பளபளத் திடுங்கண் பச்சைஊ தாநிறம்
என்னும் இவற்றையே எண்ணியும், தன்னுடைச்
சிரசின் மேல்திகழ் சிகரச் சிறப்பையும்
காணலாம் எனும் மனோ கற்பனை யுடனும்
சிவ்வென ஒலிக்கும் சிறகொடு பறந்து மேல்
வரவரக் கிட்டி வந்தது மெல்லென.
(அறிவிலாப் பிராணி! அதன் கதி என்னே!)
கடைசியில் அந்தக் கபடச் சிலம்பி
குபீர் எனப் பாய்ந்ததைக் குரூரமாக் கௌவித்
தன் சிற் றறையைச் சார்ந்த ஓர் இருண்ட
கூட்டுக் குத்தன் குறுஞ் சுழற் படி வழி
ஈர்த்துச் சென்றது. இதற்குப் பின்னர்
என்றுமே ஈ கீழ் இறங்கவே இலையே!

## VII

இக்கதை படிக்கும் யாவரும் கேண்மின்!
இனியா யினும் நீர் இருமின் எச் சரிக்கையாய்
பயனில் அறிவிலா நயமொழி களுக்கு நீர்
என்றும் செவி கொடா திருக்குமா வேண்டுவல்
கபடா லோசனைக் காரர்கள் எவர்க்கும்
காதும் மனமும் கண்ணும் கவிமின்
இந்தச் "சிலம்பியும் ஈயும்" என் கதையால்
உயர் மதிவாய்ந்து நீர் உலகிலுய் வீரே.

ம. கோபாலகிருஷ்ணையர்,
மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து
அக்கிராசனாதிபதி.

# கமலினீ கலஹம்ஸம்.

உள்ளிருந்து ஓர் புருஷன் வாடிய முகத்துடன் "உலகத்தில் இவ்விததுன்பத்தை யனுபவிக்கும் ஜீவனை நானிதுகாறும் கண்டதில்லை. ஈசா! இதிலும் உனக்கோர் ஸந்தோஷமோ?", என்று புலம்பிக்கொண்டே பெருமூச்சுடன் வெளியே வந்தான். இவ்விரு புருஷசிகாமணிகளையும் கண்டான். ஐயங்கொண்டான். "ஐய! நீங்கள் யாவர்? எத்தேசத்தவர்?" எனவினவினான். இருவருமுடனேயெழுந்து கீழ்நோக்கி நின்றனர். "இதுவும் ஓர் அற்புதமோ? நானிதுவரையில் இவ்வூரில் உங்களைக் கண்டிலேனே! உங்களது பிரதாபத்தைப் பார்க்கும்போது ஒருகுடையின்கீழ் அரசாளும் மகுடமன்னர்கள் போல் தோற்றுகின்றது. ஆனால் நீங்களணிவுண்ட கோலம் வெகுகாலம் துன்பக் கடலிலாழ்ந் திருப்பவர்களெனத் தெரிவிக்கின்றது. நும் வரலாற்றையறிய எனக்கு விருப்பமிக்கவுண்டு. விண்ணினின்றும் மானிடர்க்குபதேசிக்க வந்த மாமுனிகளோ? அன்றேன் முன்னாளில் யான் புரிந்த பெருந்தவமோ? கருணையுடனடியேனுக் கருள வேண்டும். சற்றுள்ளே தயவு செய்யவேண்டும்." எனவுரைத்தான். மூவருமுட்சென்றனர். மறுபடி கவாடமடைக்கப்பட்டது. உட்சென்று நோக்கினார்கள். தேய்பிறையின் ஒரு கலைபோன்றவுடலு

டையவோர் பெண்மணி, மானின் வால்போலவிழ்ந்த தலைமுடியுட னும், மீன்போலல்லும் பகலும் நீருடனிருக்கும் கண்களுடனும் மங்கிய மதிபோன்ற வதனத்தை மெல்லிய கமலம்போன்ற கைத்தலத்தி லமர்த்திக்கொண்டு மெய்மறந்து வாய்திறந்து மனந்தளர்ந்து அலறுகின்றாள். உள்ளே வந்த மூவருளொருவன் "அம்ம! இது ஸரியல்ல. நான் சொல்வதைச் சற்றுகேட்கவேண்டும். மானிடராக இம்மகிதலத்திற் பிறந்தவருள் துக்கமனுபவியாதோர் யாருமில்லை. இதோ வந்திருக்கும் மகா புருஷர்களைப் பார்க்கும்போது இவர்கள் படுந் துயரினும் பெரியது இவ்வுலகிலுமுண்டோ வெனத் தோற்றுகின்றது." என்றான். உடனே அவ்வுத்தமி சிறிது கண்திறந்து நோக்கினள். எழுந்து நின்றாள். கண்களைக் கையாலும் ஆடையாலும் துடைத்துக்கொண்டு தன் முன்னின்றோரை மறுபடியும் உற்றுநோக்கினள். ஒன்றும் ஸரியாகத் தோன்றவில்லை. மறுமுறையும் பார்த்தனள். மனம்பதறிற்று. உள்ளே வந்தவர்களுளொருவன் இவ்வனிதையைக் கண்டதும் பிரமைகொண்டவன் போலத் தன்னிலைதவறி நின்றான். இருவர் கண்ணிலும் நீர் பெருகிற்று. ஒருவரையொருவர் பார்க்கமுடியவில்லை சிலநிமிஷம். ஐயோ! என் செய்வார்கள் பாவம்! ஒருவரையொருவர் தரிசித்துக்கொள்ளும்படி யொருக்கால் நேரிடுமென்று இவர்கள் ஸ்வப்னத்திலும் நினைத்திருக்கவில்லை. பிரிந்து ஒன்றிரண்டன்று, பதினான்கு வருடங்களாயின. இளம்பிராய முதல் கற்பகமும் காமவல்லியும் போல் ஒருவரையொருவர் நேசித்து வெகுகாலம் ஸந்தான மின்றிவருந்தி கடைசியில் கடவுளருளால் ஓர் குழந்தையையடைந்து அடங்காமகிழ்வுடனிருக்கும் நல்லதருணத்தில் திடீரென்று நேர்ந்த ஆபத்தினால் பிரிந்துவிந்ததம்பதிகள் பத்துடன் நான்கும் தள்ளி இப்பொழுது சேர்வார்களாயின், இச்சமயத்திலிவர்களது மனத்தினிடமுதிப்பது பேரின்பமோ அன்றேல் பெருந்துயரோ அஃதின்னதென்றுரைக்க முடியாமைகொண்டு அனுபவத்தினால்மட்டும் அறியக்கூடும். பிரமித்துநின்ற அவ்வனிபன் மூர்ச்சித்து அவனியில் வீழ்ந்தான். பக்கத்திலிருந்தவமைச்சன் ஆசுவாஸப்படுத்தினன ரசனை. இத்தனை நாள்மட்டுமடங்கியிருந்த சோகாக்நி இன்று கனகலதையைக்கண்டதும் எரியத்துவக்கிற்று. மூர்ச்சை தெளிந்தெழுந்த அரசன் "உலகத்தில் மனிதனுக்கு வைராக்கியத்தினும் பாக்கியம் வேறில்லை. அதுவேசிலாக்கியம். பட்சிகளு

க்கு இருசிறகுகள் உயரப்பறப்பதற்கு மிகவும் உபயோகமானவை போல், பரம்பொருளுடன் சேர்ந்து பரமானந்தத்தைப் பெருவதற்கு வைராக்கியமும் ஆத்மக்ஞானமும் ஜீவனுக்கு உதவுகின்றன. இச் சம்சாரமெனும் ஸாகரத்தைத் தாண்டியவரே நித்தியாநந்தத்தைய னுபவிப்பவர்கள். அவிவேகிகளின் மனமெவ்வாறு நிலையிலாப் பொன், பெண், மண்முதலியவைகளில் விருப்பங்கொள்கின்றதோ, அவ்வாறே விவேகிகளின் மனம் தத்துவப்பொருளை விரும்புகின்றது. இது வேநிச்சயம், அட.

"அற்பமனமே அகில வாழ்வத்தனையுஞ் சொற்பனங்கண்டாய் உண்மை சொன்னேனுன்

கற்பனையொன் றில்லாவிடத்தே யெனைச்சும்மாவைத்திருக்க கல்லாய் நீதானோர் கவி"

என்று நானெத்தனையோ சமாதானங்கள் சொல்லியும் என்மனங் கேட்பதில்லை. தெய்வமே! பிரம்மாதிகளாலும் உன்னை வெல்ல முடியாது, இகபரசித்திகளும் உன்னையன்றிப்பலியாதே! அட வேத முடிப்பொருளே! முடியாது! இனிமுடியாது! இதுகாறுமெனக் குண்டாகிய துன்பங்கள் போதுங்கண்டாய். இனி யென்னையுன் னடிமைக்குடியாக வைத்தருளல் வேண்டும்.

"சகத்தின் வாழ்வைச் சதமெனவெண்ணியே
மிருத்த தீமை விளைய விளைக்கின்றேன்—
அகத்துளார முதாமைய! நின்முக்த்திச்
சுகத்தினுன் வந்து தோய்வதெக்காலமோ!"
"ஓயாதோ வென்கவலை யுள்ளே யாநந்தவெள்ளம்
பாயாதோவையா
பகராய் பராபரமே"
"கடலமுதே தேனே யென் கண்ணே
படமுடியா தென்னை முகம்பாராய் பராபரமே"

என்றும் இன்னும் பலவிதமாகவும் மெய்மறந்து பாடிக்கொ ண்டு பித்தனைப்போல் நின்றான். மந்திரி மிகவும் வருந்தி "ஐய! அரசே! இது ஸரியா? பூர்வஜன்மத்திய கன்மம் யாரையும் விடுவதி ல்லை. அநுபவித்தாலன்றியது தீராது. பிரம்மாதி தேவர்களுக் கும் அது மாறாது. ஆயினும் கழைக்கூத்தர்கள் ஆடும்பொழுது அவர்களது கவனம் உயிரிலும். பிறரைத் திருப்திசெய்விக்க உடல்

உயரவும் இருப்பது எவ்வண்ணமோ அவ்விதமே மேதினியில் மானிடராகப் பிறந்து விவேகிகள் தங்களது பூர்வஜன்ம கன்மத்தை யனுபவித்துத் தீர்க்குமட்டும் இச்சம்ஸாரத்தையும் இனியிப் பிறவிக்கடலிலுழலாவண்ணமிருக்க அகத்தினிடம் பரம்பொருளையும் வைத்திருக்கின்றனர். வயிறு பிழைப்பதற்குப் புலிவேஷங்கொண்டவன் மனிதர்களைக்கண்டு கோபங்கொண்டு கொன்றுதின்பதில்லை. அவ்வாறே வேடங்கொண்டவோர் புருஷன் மற்றொரு புருஷனைக் கண்டு மோஹங்கொள்வதில்லை. இவ்வண்ணமே கன்மங்களை யனுபவிப்பதற்கு இப்புவியிலுதித்தது இவ்வாத்துமாவென்றுணர்ந்து தத்வக்ஞானத்துடனிருந்து ஒன்றிலும் பற்றின்றி பேரானந்தத்தையடைவர் பெரியோர். ஆதலின் நாமித்துன்பங்களனுபவிப்பது முன்வினையின் பயனேயின்றி வேறின்று." என்றான். இது நிற்க. இவ்வேளையில் நமகதாநாயகனின் வரலாற்றைச் சற்று கவனித்து நோக்குவோம். "ராஜபுத்ர, ஒருவன் அதிபலசாலியாயிருப்பினும் தன்னைப்போன்ற சத்துருவை நாசஞ்செய்யக் கருதுவானேயாகில் அவனுக்கு ரதம், கரி, பரி, பதாதி முதலிய நால்வகைப்படைகளும் குறைவின்றியிருக்கவேண்டும். இவைகளிருப்பினும், தன்னைப்போன்ற மன்னர்களினுதவி, ஸரியானவுபாயம், இடம் பொருளேவல் முதலியவற்றை யறிந்துநடத்தல் சத்துருவுக்கு அபகாரம் விளைவித்தல், காரியலாபம் ஆகியவைந்துவிதமான அங்கங்களுமிருக்கவேண்டும். மேலும், தனக்குநற்காலமும் எதிரிக்குக் கெடுகாலமுமாக விருக்கும்பொழுதே படையெடுத்துச் செல்லவேண்டும். இது ராஜநீதி. நாம் பெயருக்குமாத்திரமே ராஜகுமாரனென்றும் மந்திரிகுமாரனென்றும் சொல்லிக்கொள்கிறோம். அரசனுக்குரிய சாதனங்களில் கிஞ்சிற்றும் நம்மிடமில்லை. சக்திக்குத் தகுந்த யுக்தியால் ஓர் காரியத்தைச் செய்யமுயன்றாலன்றோ வக்காரியம் கைகூடும்! ஓர்வேளை நமக்குநற்காலமிருந்தால் நாமிருவரும் இச்சந்திரபுரத் திற்சந்தித்துச் சந்தோஷமடைந்தவாறு நம்பெற்றோரும் ரத்னத்வீபத்தில் பரஸ்பரம் பார்த்து எவ்விதமேனும் ரத்னஸேனனும் வரலாற்றைமுற்றும் நன்குணர்ந்தால் நமது துன்பம் நம்மை விட்டு நீங்கும். அன்றேல் தற்காலத்தில் நாம் தனிமையாயிருந்து செய்யக்கூடிய பிரதீகாரமொன்றையும் காணோம்" என்றான் மந்திரியின் புதல்வனாகிய ராஜஹம்ஸன். அதைக்கேட்ட மன்னனின் குமாரன் "மஹாபுத்திமானாகிய மந்திரி

குமார, ராஜஹம்ஸ, தூரத்திலிருக்கும்போது வெகுசலபமாகத்தோன்றியவிக்காரியம் சமீபத்தில் வந்தாலன்றோ தெரிகிறது. நீ சொல்வதுமுற்றும் உண்மையே. என்னவோ! நமது பாக்கியம்போலிருக்கின்றது." என்றான். "கலஹம்ஸ, நான் சொன்னதுபோல் நமது பெற்றோரின் மூலமாய் நமது விருத்தாந்தமுழுமையும் ரத்னஸேனனறிந்தால் உடனே தனது படைகளுடன் வந்து ஜயஸேனனை வென்று நமக்கு இத்தேசத்துடன் ரத்னத்வீபத்தையும் முடிசூட்டுவான் என்பதிலொன்றுமையமில்லை. அவ்வாறுதான் நடக்குமென்று எனக்குத் தோன்றுகின்றது" என்றான். இவ்வாறு இவ்விருவரும் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே "ஜயஸேனன் மடிந்தான்! ஜயஸேனன் மடிந்தான்!!" என்ற ஆகோஷம்கேட்டது. இருவரும் சற்றுநேரம் பிரமித்து நின்றனர். திரும்பவும் அவ்வாறே பலர் சொல்லிக்கொண்டோடுவதைச் செவியுற்றனர். உடனே இருவரும் எழுந்து வீதியின்கண் வந்து நோக்கினார்கள். ஓர் வீரபுருஷன் இவர்களிடமோடிவந்து இருவரையும் அழைத்துச்சென்றான். இருவரும் அவனுடன் அரண்மனையை யடைந்தனர். அங்கு சென்றவுடன் ஓர் புருஷன் ஓடியெதிரேவந்திவர்களை யிருகத்தழுவிக்கொண்டு "கலஹம்ஸா! என்ன காரியம் செய்தேன் யான்? உங்களிருவரையும் கடுந்துயருக்குட்படுத்தினேனே! என்செய்வோம்!" என்றான். ரத்னஸேனன் இவ்வாறு மொழிந்தவுடன் கலஹம்ஸன் தன்னெதிரில் நின்றவோர் பெண்மணியைக் கண்டு ஆச்சரியமும் ஆனந்தமுங்கொண்டான். உடனே மந்திரியெழுந்து "மகாராஜ, நம்கண்மணிகள் பட்ட கஷ்டங்களுக்கு இன்றோடு முடிவுவந்தது. நாம் ஒருவரையொருவர் சந்தித்து இவ்வாறு நம்குழந்தைகள் இன்பமுறுவதைக் காண்போமென்று கனவிலும் நினைத்ததில்லை. ஏதோ பூர்வஜன்மத்தில் நாமியற்றிய வினையின் பயனால் இதுவளவும் துன்பமடைந்தோம். ஈசனருளால் இன்றோடு முடிவுபெற்றது. இனி நம் கண்மணி கலஹம்ஸனுக்கு முடிசூட்டிக் கமலினியையும் விமர்சையுடன் விவாகம் செய்விக்கவேண்டும். இன்னும் அதிகமாக நமக்கு வேண்டுவதென்ன" வென்றான். இதினும் நாம் செய்யவேண்டுவதொன்றுமில்லை. ஈசா! இவ்வாறு விளையாடுவதில் உனக்கோரானந்தம். போதும். நான்பட்டதுன்பங்களுக்கு இன்று நீ கண்திறந்து நோக்கி என்னை யனுக்கிரகித்தாய். இனி யிம்மேதினியில் என

க்கு வேண்டுவதொன்றுமில்லை. உலகத்தில் எத்தனையோ மடங்கு சுகமெய்தினாலும் மறுபடியும் அதற்குமதிகம் இச்சிப்பதியற்கை. இவ்விதச் சிற்றின்பங்களிலாசையை யொழித்து உன்னிடம் மனத்தைவைத்தவரே நித்தியாநந்தத்தையடைவர்:—

"ஆசைக்கோரளவில்லை யகிலமெலாங்கட்டி
யாளினுங் கடன்மீதிலே
யாணைசெலவே நினைவராளகேச நிகராக
வம்பொன் மிகவைத்தபேரும்
நேசித்து ரசவாதவித்தைக் கலைந்திடுவர்
நெடுநாளிருந்தபேரும்
நிலையாகவேயினுங் காயகற்பந்தேடி
நெஞ்சுபுண்ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீரவுண்பதும்
உறங்குவதுமாக முடியும்
உள்ளதே போதுநா னானெனக்குளறியே
யொன்றைவிட்டொன்று பற்றிப்
பாசக்கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற

பரிபூரணானந்தமே.

ஓம் தத்ஸத்.

குப்புஸாமி ஐயர்.

# வளையாபதி.

இது பஞ்சகாவியங்களில் ஒன்று. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்துமே பஞ்சகாவியங்கள் எனப்படுவன. இவற்றுள் முதன் மூன்றும் அச்சேறிப் புத்தகரூபமாக வெளிவந்துலாவுகின்றமையால், யாவரும் அவற்றைப்படித்து, கருத்து, கதை முதலியவற்றை அறிந்து கொள்வது எளிதாயிருக்கின்றது. வளையாபதி, குண்டலகேசியோ அப்படியன்று. அவைகள் அச்சிடப்படாதது ஒன்றுமட்டுமல்ல; ஏட்டுப்பிரதிகள்கிடைப்பதே அரிதாக இருக்கிறது. சிற்சில இடங்களில் ஏட்டுப்பிரதிகள் இருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் அவைகள் வெளிவருவதில்லை. இந்நூல்கள் இறந்துபட்டனவோ என்று சந்தேகிக்கக் கூடிய நிலைமையில் தானிருக்கின்றன. ஆகையால் அநேகருக்கு அந்நூல்கள் இருப்பதே தெரியாமலிருப்பது ஒரு ஆச்சரியமாகாது. பெருமை வாய்ந்த இந்நூல்கள் நமக்குக்கிடைப்பது அரிதேனும், நாம் அவற்றின் கதையை அறிந்துகொள்ள ஒரு மார்க்கமிருக்கின்றது. அதற்காக நாம் சந்தோஷப் படவேண்டியதவசியமே. சூடாமணிப் புலவரியற்றிய வைசியபுராணத்தில் பஞ்ச காவியங்களின் கதைகளும் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

அப்புராணத்தின் 35வது படல ஆரம்பத்தில் "நேரார் குண்டலகேசிப்பேர் நெடுநூலின் சீருரைத்தாம்" என ஆசிரியர் கூறியுள்ளாராதலின், 34வது படலத்திற் செப்பியகதை குண்டலகேசியின் கதையெனவே விளங்குகின்றது. மேலும், அப்புராணத்தில் 31-32-33வது படலங்களில் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலைகளின் கதைகள் முறையே கூறப்பட்டிருக்கின்றன. 35வது படல இறுதியில் "அருமையான ஐங்காவியந்தன்னிலே உறியவிக்கதைகாவியமொன்றரோ" எனக்கூறியிருக்கின்றது. ஆகவே 35வது படலத்திற் கூறப்பட்டுள்ள கதை வளையாபதி என்பதிற் சிறிதும் ஐயமில்லை. அப்படலத்திற் கூறியதை யொட்டியே அதன் சுருக்கத்தை ஈங்கெடுத்தெழுதுவோம்.

காவிரிப்பூம் பட்டினத்தில் தெய்வபக்தி, தர்மசிந்தை முதலிய நற்குணங்களும், செல்வாக்கும் ஒருங்கே பொருந்தி, பட்டணத்தார் புகழ்ச்சிக்கும் பாத்திரனாக இருந்த வைரவாணிபன் என்னும் வர்த்தகன் ஒருவனிருந்தான். பட்டணத்திலும் அக்கம் பக்கத்திலும் உள்ளவர்கள் அவனது அளவற்ற திரவியத்தை எண்ணி அவனை நவகோடி நாராயணன் என்றே அழைத்துவந்தார்கள். அவ்வாணிபன் தனது ஸ்வஜாதியில் ஒருபெண்ணையும், பிறஜாதியில் ஒரு பெண்ணையும் ஆக இரண்டுபெண்களை மணம்புரிந்துமனங்களித்து வாழ்ந்துவந்தான். அப்போது வாணியஜாதியிலுள்ள சில முதியோர்கள், வைரவாணிபன் பிறஜாதிப் பெண்ணை மணம்புரிந்து வாழ்வதைப் பார்த்து மனம்பொறாதவர்களாகி, அவன் அப்பிற ஜாதி மனைவியை உடனே கைவிடாவிட்டால் அவனை ஜாதிப்பிரஷ்டம் செய்வதாகப் பயமுறுத்தினார்கள். அவனும் தன்னினத்தாருள் தனக்குண்டான செல்வாக்கையும் மதிப்பையும் இழக்க மனம் ஒவ்வாதவனாகித் தன் மற்றைஜாதி மனைவியை தன்னை விட்டுவிட்டு

வேறிடம் போகும்படி திட்டஞ்செய்துவிட்டான். இங்ஙனம் செய்த சின்னாட்குப் பின்னர் தன்னுடைய வியாபார சம்பந்தமாகக் கப்பலேறிக் கடல்மார்க்கமாக பிறதேசங்களுக்கு வைரவாணிபன் யாத்திரை போகநேர்ந்தது.

தன்னுடைய மணவாளனால் கைவிடப்பட்டபொழுதே கர்ப்பிணியாக விருந்த வைரவாணிபனின் மனைவி உடனே பக்கத்துக் கிராமத்திலிருந்தகாளிகோவிலுக்குச்சென்று நமஸ்கரித்து "அம்மையே! ஜயங்கொண்டவளே! குற்றமற்றவளே! என்றுமிருப்பவளே!" என்று பலவாறாக விசனத்துடன்விளித்து "என் குறையைக் கேட்டும் எனது ஆதரவற்ற நிலைமையைப் பார்த்தும் மனமிரங்கி என் கணவன் மறுபடியும் என்னைச் சேர்த்துக்கொள்ளும்படி வரம் அருள்வாயாக" என்று பிரார்த்தித்தனள். இவ்வாறு மனமுறுகித் தளர்வுற்றுப் பிரார்த்தித்துக்கொண்டிருந்த அப்பெண்ணுக்கெதிரில் காளிதேவிபிரசன்னமாகி "ஓ சுந்தரமாதே! இனி மனந்தேறுக; விசனப்பட வேண்டாம்; இந்த கிராமத்தில் நீ வந்துகுடியிரு; சிலநாட்குப்பின் எல்லாம்நன்மையாக முடியும்; நான் உன்னைச் சந்தோஷப்படும்படி செய்கிறேன்". என்று சொல்லிமறைந்தனள். அப்பெண்ணும் காளிதேவியின் ஆக்கினையின்படியே அக்கிராமத்தில் குடியிருந்து வந்தாள். சில மாதங்கள் கழிந்தன. அவளுக்கு சௌந்தர்யமுள்ள ஆண்குழந்தை யொன்று பிறந்து, அவள் மனதிற்கும் கண்ணுக்கும் அதிக ஆநந்தத்தை அளித்தது. தன் குலத்திற்கும் நாட்டிற்கும் பெருமையும் கீர்த்தியும் கொண்டுவரும் என்றே யாவரும் சொல்லும்படியாக இருந்தன. அக்குழந்தையின் முகக்குறிகள். சிலவருடங்கள் சென்றன. குழந்தையும் வளர்ந்து வாலிபனானான். இப்பிள்ளை ஒருநாள் வேறு சிலபிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டிருக்கையில், இவனுக்கும் மற்றொருபிள்ளைக்கும் சண்டையுண்

டாயிற்று. அச்சண்டையில் இவனை நோக்கி "பெற்றவன் பெயரறியாப்பிள்ளையன்றோ நீ" என்றுகூறிப்பரிகசித்தான். அந்த மற்றப்பிள்ளை இப்பரிகாச வார்த்தையைக் கேட்டவுடன் மிகவும்வெட்கி உடனே தன்தாயிடம் ஓடிச்சென்று நடந்தசங்கதிகளை அவளிடம்சொல்லித் தன்னுடைய தகப்பன் வரலாற்றைப்பற்றி வினவினன். இவற்றிற்கெல்லாம் அமைதியுடன் செவிகொடுத்த தாய் மிகுந்த துயரத்தோடும் 'காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள வைரவாணிபன் என்னும் வர்த்தகன் தான் உன் தகப்பன்' என்றுகூறி, பின்புதான் அவனைவிட்டு நீங்கவேண்டியதற்கு நேர்ந்த காரணத்தையும் விஸ்தாரமாக எடுத்துரைத்தாள். இவற்றையெல்லாம் பொறுமையுடன் கேட்ட ஆண் சிங்கம்போன்ற அவ்வாலிபன் தன் தகப்பன் தன் தாய்க்குச்செய்த கொடுமையை எண்ணிக் கோபாவேசம் கொண்டு, காவிரிப்பூம்பட்டினத்துக்குச் சென்று வைரவாணிபன் வீட்டிற்புகுந்து, (கப்பல் யாத்திரையினின்றும் அவன் திரும்பி வந்துவிட்டான்) அவனைப்பார்த்து "நீ விலக்கி வைத்திருக்கும் மனைவிக்குப்பிறந்த உன் மகன்தான் நான்" என்று சொன்னன். வைரவாணிபன் தன் மனைவியை நீக்கும்பொழுது அவள் கர்ப்பிணியாயிருந்ததை அறியாதவன் ஆதலால், இப்போது வந்த இச்சிறுவன் தன் மனைவியின் குணக்கேட்டால் உதித்தபிள்ளை யென்றெண்ணி அவனைப்பார்த்து "உன் வெட்கங்கெட்ட வார்த்தைகளால் என்னைத் தொந்திரவு செய்யாதுபோ" என்று சொல்லியும், அவ்வாலிபன் அதற்குச் செவிகொடாமல் தான் வைரவாணிபன் மகன் தான்என்று வற்புறுத்திக் கூற, வாணிபன் ஒன்றுந் தோன்றுதவனுகித் தன் இனத்தாரிற் சில முதியோருடன் ஆலோசிக்கலானன். அச்சிறுவனே தான் வைரவாணிபன் மகன் என்பதற்கு யாவரும் ஆக்ஷேபிக்கக்கூடாத சாக்ஷியம்தருவதாயும் கூறி

ளுன். அப்படியானல் இது விஷயத்தில் ஒரு நாள் எல்லோருமாகச் சேர்ந்து தீர்மானம் செய்வது உத்தமம் என்று அங்கிருந்தவர்களிற் சிலர் சொல்ல, அவ்வாலிபனும் அதற்கிசைந்தான்; தீர்மானிப்பதற்காக ஒரு நாளும் குறிக்கப்பட்டது.

உடனே அப்பிள்ளை வீட்டிற்குச் சென்று நடந்தவர்த்தமான முற்றும் தன் தாயினிடம் கூற, அவள் காளிகோவிலுக்குச் சென்று பிரார்த்தித்தாள். காளிகாதேவதையும் உடனே சாக்ஷியம்பகருவதாக வாக்களித்தாள். குறிக்கப்பட்டதினத்தில் எல்லோரும் ஒன்றுசேர்ந்தனர். அவ்வாலிபன் தன் தாயுடன் வந்தான். வைரவாணிபனும் அங்கே இருந்தான். கூடிய சபையோர் அப்பெண்ணை நோக்கி "உன்னுடைய கற்பைத் தக்க சாக்ஷியத்துடன் எங்களுக்கு மெய்ப்பிக்கவேண்டும்" என்றுசொல்ல, அவள்காளிகாதேவியைத் துதித்தாள். தயாளகுணமுள்ள காளியும் உடனே சபையோர் முன்னே தோன்றி "இப்பெண்மணியின் கற்பைப் பற்றிச் சிறிதும் ஐயமுறவேண்டுவதில்லை; இப்பிள்ளை வைரவாணிபன் புதல்வனே" என்று கூறி மறைய, எல்லாரும் சந்தேக நிவர்த்தியாகி நம்பினர்கள். உடனே வைரவாணிபன் அதிக சந்தோஷத்துடன் தன் மகனைத் தழுவிக்கொண்டு அவனுக்கு அளகாபுரி என்னும்பட்டணத்தையும், மற்றும் பலதிரவியங்களையும் ஆஸ்தியாகக்கொடுத்து, அவனையும் அவன் தாயையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டான்.

இக்கதையின் முக்கியகருத்து, மாதர்கட்குக் கற்பினுமிக்க தொன்றில்லை என்பதே என்னலாம்.

அடுத்த சஞ்சிகையிற் குண்டலகேசியைப் பற்றிக் கூறுவோம்.

ம. வீ. மீனுக்ஷிசுந்தரமுதலியார், B.A.

# சென்னைக்கல்விப்பொருட்காட்சி

## சாலையின் அமைப்பு.

இது சென்னைமாநகரத்தின் சமுத்திரக் கரையோரத்தில் விளங்குவதாகிய சர்வ கலாசாலை கட்டடமாகிய ஸெனெட் ஆவுஸ் என்கிற நான்கு சிகரங்களோடு கூடிய கலசமஹால் என்னும் அலங்காரமும் விஸ்தாரமுமான கட்டடத்திலுள்ள பெரிய ஆலில் அமைக்கப்பட்டதென்று முந்தியே கூறியிருக்கிறோம். இந்த ஆலில் பக்கத்திற்கு ஒன்பது அறைகளாகத்தடுத்து மத்தியில் ஜனங்கள் போகவும் வரவும் இடம் விட்டும், மேற்படி அறைகளிற் சென்றால் ஜனங்கள் நின்றுக்கொண்டே இருபுறமும் வரிசையாய் வைத்திருக்கப்பட்ட பொருள்களைப்பார்த்துக் களிக்கும்படியாகவும், மேஜைகளமைத்து அவைகளின் பேரில் பொருள்களையனுப்பியவருடைய பெயர், விலாசம் முதலியவைகளுடன் வெகு அலங்காரமாகவும் விநோதமாகவும் வைக்கப்பட்டிருந்தது. படங்கள் முதலியவைகளை சுவர்போல் தடுக்கப்பட்டிருந்த பலகைகளில் ஆணியடித்துபொருத்தப் பட்டிருந்தது. அநேக பொருள்கள் கண்ணாடி பெட்டிகளில் பத்திரமாப் அடக்கஞ்செய்து வைக்கப்பட்டிருந்தது. இப்படி 18 அறைகளில் வைக்கப்பட்டிருந்ததுடன் எதிர்புறத்திலிருந்த பிரசங்கமேடையிலும் மேஜைகளமைத்து பல பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு

அறையின் முகப்பிலும் இன்னவிடத்திலிருந்து வந்த பொருள்களென்பதாக பெரிய எழுத்துகளில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது. பிரசங்கமேடைக்குப் பின்புறத்திலுள்ள அறையில் மெஸ்ஸெர்ஸ் மெக்மில்லன் கம்பெனியாரும், லாங்குமென்ஸ் கிரீன் கம்பெனியாரும், பிளாக்கி அண்டுசன் கம்பெனியாரும் தங்கள் பிரசுரங்களை மேஜைகளின் பேரில் வரிசையாக அடுக்கிவைத்துக்கொண்டு, தங்கள் ஏஜெண்டுகளால் தங்கள் தங்கள் பிரசுரங்களின் மேன்மையைப் பற்றி உபாத்தியாயர்களுக்கு எடுத்துக் கூறிக்கொண்டும், கேட்டலாக் என்கிற புஸ்தக விலைப்பட்டியை விலையின்றிக் கொடுத்துக்கொண்டுமிருந்தார்கள். கல்விக்காட்சிப் பொருள்கள் வரிசைப்படுத்தி வைக்கப்பட்ட ஒவ்வொரு அறையின் முன்புறத்திலும் ஒரு உபாத்தியாயர் நின்றுக்கொண்டு சந்தேகப்பட்டுக் கேட்கிறவர்களுக்கு வேண்டிய சமாதானங்களைச் சொல்லிக்கொண்டேயிருந்தார். ஆகவே கல்விக்காட்சிப்பொருள் அமைப்பு வெகு திறமையாயும் சாமர்த்தியமாயும் செய்யப்பட்டிருந்ததென்பதில் தடையில்லை.

## கல்விக்காட்சிப்பொருள்கள்.

அடியில் கண்ட விடங்களிலிருந்து காட்சிப்பொருள்கள் வந்திருந்தன.

சென்னை ஸ்கூல் அப் ஆர்ட்ஸ், (சாஸ்திரபாடசாலை), ஷை பச்சையப்பன் காலேஜ், ரிபார்மெடரிஸ்கூல், கிருஸ்டியன் லிடரேச்சர் ஸொஸைடி, இராயபுரம் யுனைடெட் பிரீ சர்ச் போர்டிங் ஸ்கூல், ஷை போர்ட் டிரெயினிங் ஸ்கூல், புரசவாகம் போர்டு ஸ்கூல், கீழ்பாக் இன்டஸ்டிரியல் ஸ்கூல், பிரசிடென்சி டிரெயினிங் ஸ்கூல், கீழ்பாக் சர்ச் ஆப் ஸ்காட்லாண்டு மிஷன் ஸ்கூல், சென்னை செண்ட் மேரிஸ் லோயர் செகண்டெரி ஸ்கூல், ஷை பிர்மோரா

கிட் ஸ்கூல், முத்தியாலுபேட்டை ஐஸ்கூல், தஞ்சாவூர் செகண்டெரி டிரெயினிங் ஸ்கூல், திருச்சி டிரெயினிங் ஸ்கூல், திருநெல்வேலி சாராதாக்கர் காலேஜ், காஞ்சீவரம் போர்டு பிரைமரி ஸ்கூல், குற்றாலம் போர்டு ஸ்கூல், ஆலத்தூர் இந்து ரிலிஜியெஸ் பாய்ஸ் ஸ்கூல், மங்களூர் பாசல் 'ஜெர்மன் மிஷன் பிரஸ், கூர்க் ஸ்கூல், பெனுகொண்டா போர்டு ஸ்கூல், எக்மோர் எஸ். பி. ஜி. ஸெண்டு ஜான் ஸ்கூல், சென்னை கோவிந்தநாயகர் ஸ்கூல், காசர் கோட் போர்டு ஸ்கூல், கில்போர்டு கிராமர் ஸ்கூல் (இங்கிலாண்டு), நியூபெரி கிரஸ் ஸ்கூல், பக்லாண்டு ஸ்கூல், லிவர்பூல் எடுகேஷனல் கம்மிட்டி, இங்குபென் கவுன்சல் கம்மிட்டி, பெட்டிங்டன் டெக்னிகல் இன்ஸ்டியூட், இப்ஸ் விச் செகண்டெரி ஸ்கூல், நியு போர்ட் எலிமெண்டரி ஸ்கூல், நார்த்ஆம்ப்டன் பிறப் எடுகேஷனல் கம்மிடி; முதலிய பல பாடசாலைகளிலிருந்தும் மற்ற ஸ்தாபனங்களிலிருந்தும் ஏராளமான கல்விப்பொருள்கள் வந்திருந்தன. C. ராமசாமி நாயுடு என்பவரால் செய்யப்பட்ட மின்சார சாஸ்திர சம்பந்தமான கருவிகளும், S. P. C. K. பிரஸிலிருந்து அனுப்பப்பட்டிருந்த புஸ்தகங்களும் படங்களும், சுப்பம்மாள், R. கிருஷ்ணசர்மா என்றவர்களால் அனுப்பப்பட்டிருந்த சாகுந்தலம் என்ற தோட்டக்காட்சி பொருளும் புகழக்கூடியதாகவே இருந்தன. அநேகமாய் இந்த இராஜதானியிலுள்ள இரண்டு மூன்று ஜில்லாக்களைத் தவிர மற்ற ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் கல்விப்பொருள்கள் வந்திருந்தன. தமிழ் ஜில்லாக்களிலிருந்து வந்திருந்த பொருள்கள் அதிகமென்று சொல்லக் கூடுமாயினும் தென்கன்னடத்திலிருந்து வந்த காட்சிப்பொருள்களைப் பார்க்கும்பொழுது அவை அதிகமாகவே இருந்தது.

(இன்னும் வரும்.)

டி. சி. வேங்கடரமணஐயர்.



தோட்டக்காடு இராமகிருஷ்ண பிள்ளை.




# இராமகிருஷ்ணபிள்ளை.

## தென்னிந்தியாகவிஞர்.

தோட்டக்காடு இராமகிருஷ்ணபிள்ளை என்பவர் சான்றோருடைத்தென்று சிறப்பித்துக் கூறும், தொண்டைநாட்டின் முக்கிய நகராகிய செங்கற்பட்டில் தன் தாய் வழிப்பாட்டனார் வீட்டில் 1855-ம் வருஷத்தில் பிறந்தனர். இவர் பிறந்த நாட்டின் மேன்மையைப்பற்றித் தமிழ் வல்லுனர்க்கு மிகவாக எடுத்துரைப்பது அவசியமில்லையெனினும் தமிழ் மொழியினுக்குத் திலகமென விளங்கும் பல புலவர் பெருமான்கள் பிறந்தவிடமென்ற சிறப்பினதாகும். வைஷ்ணவமத ஸ்தாபகரும் வேதாந்தநூற் கரைகண்ட மகாநுபவருமாகிய

இராமாநுஜரும், வெண்பாவிற் புகழேந்தியென்ற பிரக்யாதி பெற்ற புலவர் பெருமானும், உலகத்தில் வழங்கும் பாஷைகளனைத்தினுக்கும் ஒரு பூஷணமாக விளங்கும் குறளிற்கு ஆசிரியரான திருவள்ளுவனாரும், அவர் தம் சகோதரியாகிய ஔவையாரும், எமையாளும் பன்னிருவருள் நால்வரும் பிறந்த விடமான இத்தொண்டை மண்டலத்தின் மேன்மையை என்னென வெடுத்தியம்ப வல்லேம். இவ்வித மகிமை தங்கிய நாட்டினிற் பிறந்த நம் பிள்ளையவர்கள் தமிழ்மொழியொன்றிலல்லாது பிறபாஷையாகிய ஆங்கிலத்திலும் புலவரென நன்கு மதிக்கப்படுதல் ஒரு வியப்பாகுமோ?

இயற்கையைப் புகழ்தல் சிறந்த புலவரின் தன்மையென்பது எவரும் ஒப்புக்கொள்ளத் தகுந்தது. சாதாரணமாகத் தன்னைச் சுற்றியிருக்கும் இயற்கையரசியின் சீரினைக்கண்டு வியந்து வாயான் மொழிதல் மாந்தரியல்பு. ஆகவே நம் பிள்ளையவர்கள் செய்த ஆங்கில நூல்களில் தான்பிறந்து வளர்ந்த நாட்டைப் புகழாமலுமிருத்தல் கூடுமோ? தான் பிறந்த இடத்தின் ஞாபகம் எப்பொழுதும் இவர் மனத்தை விட்டகன்றிலது.

இவர் தாய்வழிப் பாட்டனார் ஆர்க்காட்டு நவாபினிடம் கணக்குப்பிள்ளையாக விருந்தனராம். இவர் மிகுந்த ஞாபக சக்தியுடையவர். இவர்தம் ஞாபக சக்தியைப் பரீக்ஷிக்க நவாபு அவர்களும் இவர் பார்த்துவந்த கிராமத்தின் கணக்கை உடனே தன் சமுகம் கொணர உத்தரவிட்டனர். நம் பிள்ளையாரும் சிறிதேனும் பின்னிடையாது வெற்றோலையை எடுத்து படபடவென்று கடன்மடைவிண்டென கணக்குக்களைக் குற்றங்குறையின்றி வெளியிட்டனர். இவர்சொன்ன சீக்கிரத்தையுற்று நோக்கி ஓலைச்சுருளை வாங்கிப்பார்க்க வெறும் ஓலையாகவிருந்தது. இதுகாரணம் பற்றி இவரை "வெற்றோலை ஆண்டியாபிள்ளை" என்னுஞ்

சிறப்புப் பெயரிட்டு அழைத்தனர். மேலும் இவ்வாண்டியா பிள்ளை யென்பவர் மிகுந்த தெய்வபக்தியுடையவர். செங்கற்பட்டுக்கோட்டைக்குள்ளிருந்த விஷ்ணுகோயிலிலிருந்த விக்கிரகத்தை வெளியே கொணர்ந்து தனிக்கோயில் கட்டுவித்தனர் என்று சில சிலாசாஸனங்களாற் றெரியவருகிறது. இதன்றியும் இவ்வாண்டியாபிள்ளை இராஜவிசுவாசமுள்ளவரென்பது திண்ணம். ஏனெனில் பிரான்ஸ தேசத்து 'டியூப்ளே' என்ற கவர்னரிடம் திவானகவிருந்த ஆனந்த இரங்கபிள்ளை என்பவர் தம் பெண்ணை வருந்திக் கொடுக்கவந்தும் மணஞ்செய்துகொள்ளாமல் நிராகரித்தனர். ஆங்கிலரும் பிரான்சுதேசத்தவரும் சமாதானஞ்செய்துகொண்ட பிறகே அப்பெண்ணை இவர் மணந்தனர். அறிவு, தெய்வபக்தி, இராஜவிசுவாசம் ஆகிய இவைகளையுடைய ஆன்றோர் வமிசத்திற் பிறந்த நம்புலவர் பெருமானிடம் மேற்கண்டகுணங்கள் இயற்கையாகவே குடியிருக்கிறதென்று சொல்லவும் வேண்டுமோ?

இதுநிற்க. பிள்ளையவர்களின் தாய்வழிப்பாட்டியார் ஐதருடன் செங்கம்மாவில் போர்செய்த ஜெனரல் ஜோஸப் ஸ்மித் என்பவரிடம் துபாஷாகவிருந்த வரதப்பிள்ளையின் பெயர்த்தி. நம்பிள்ளையவர்கள் சிறுவயதினராயிருந்தபொழுது இந்த அம்மையால் வளர்க்கப்பட்டனர். அக்காலத்திய தென் இந்திய சரித்திரத்தை யடிக்கடி கதைரூபமாக இந்த அம்மை போதித்து வந்தனர். அக்கதைகளனைத்தும் பிற்காலத்தில் இவர் மனத்தை விட்டகன்றிலது.

இராமகிருஷ்ணபிள்ளையின் தந்தை வமிசத்தினரும் நற்குடிப்பிறப்பினர். இவர்கள் மிகுந்த பூஸ்திதியுள்ளவர். தோட்டக்காடு என்ற கிராமம் இவர்களுடையதாகவிருந்தது. "மானமே யுயிரினும் மாண்புடைத்தாமால்" என்னும் "மானமே யாருயிர் மானமே யறம், மானமே செம்பொரு

ண் மானமே இன்பம் மானமே பேரொளி மானமே புகழ், மானமே யெவற்றினுமாட்சி சான்றதால்'' என்ற சேரமான் கணைக்காலிரும் பொறையைப் போன்ற மனத்தினர் நம் பிள்ளையவர்களின் பாட்டனார். இவர் தம் அழகிய தங் கையை யருகினில் வசிக்கும் பாளையக்காரன் சிறையெடுத் துச்செல்ல முயலுகின்றான் என்ற செய்தியை யுணர்ந்து உடனே தம் தங்கையைக்கொன்று மானத்தைக் காப்பாற் றிக்கொண்ட மேன்மையாளர். ஆகவே பாளையக்காரருக் கும் தோட்டக்காடு குடும்பத்திற்கும் மனஸ்தாபம் அனேக காலம் செழித்து ஓங்கி நின்றது.

கி. பி. 1866-ம் வருஷம் இராமகிருஷ்ணபிள்ளை படிப் பினிமித்தம் சென்னைக்குப் புறப்பட்டனர். சென்னைக் கிறிஸ்தவக்கலாசாலையில் ஒரு மாணவனைச் சேர்ந்தனர். பிள்ளையவர்களின் விடாமுயற்சியும் நல்லொழுக்கமும் கலாசாலை உபாத்தியாயரிடம் நல்லபிப்பிராயத்தை யுண்டு பண்ணியது. டாக்டர் மில்லர் இவரிடம் மிகுந்த பிரியம் பாராட்டினர். 1869-ம் வருஷத்தில் பிரதம பரீக்ஷைக்குப் போகும் ஓர் வகுப்பில் வாசித்தனர். அப்பொழுது சென் னை கவர்னராகவிருந்த 'லார்டு நேபியர்' கலாசாலையைப் பார்க்கவந்தனர். இவர் வகுப்பில் கவர்னர் கேட்ட சில கேள்விகளுக்கு இவர் உத்தரம் அளித்த விதத்தைக் கண்டு கவர்னர் மிகவும் வியந்தனர். அவர் பிள்ளையவர்களின் முது கைத் தட்டிக்கொடுத்து "இச்சிறுவன் தன் வயதிற்குத் தெரியவேண்டியதினும் அதிகமான விஷயங்களை யுணர்ந்தி ருக்கிறான்'' என்று சிறப்பித்துக் கூறினர். கவர்னர் எதிர் பார்த்தவண்ணமே இவர் தம் இருபத்தொன்றாவது வயதி ல் பி. ஏ. பட்டம் பெற்றனர்.

கி. பி. 1876-77 வருஷத்தில் சீதாராமர் என்ற ஒரு சிறு நூலை ஆங்கிலத்தில் இயற்றினர். ஆங்கில உலகினர் இக்

கவியினினிமையைப் பற்றிப் புகழ்ந்து கொண்டாடினமை யால் பிள்ளையவர்கள் "இந்தியக்கதைகள்" என்ற நூலைப் பின்னும் இயற்றியுதவினர். டாக்டர் மில்லர் துரையவர் கள் இதற்கு முகவுரையும் எழுதி யாதரித்தனர். அக்கா லத்தில் ஆங்கில சமஸ்தான வித்வானயமர்ந்திருந்த "லார்டு டெனிசன்" (தேனிசை வள்ளல்) துரையவர்களுக்கு மேற் சொன்ன நூலை யுரிமையாக்கினர். கவிவாணர்கள் இந்நூலை மிகவும் பாராட்டினர். தற்காலத்துச் சமஸ்தான வித்வானகிய ஆல்பிரட் ஆஸ்டின், ஜேம்ஸ் பிரைஸ் முதலியபல நூலாசிரியர்கள் இவர்தம் கவித்திறமையைப் புகழ்ந்தன ரன்றியும் 'தென்னிந்தியப்புலவர்' என்ற பட்டமும் மகிழ்ந்து அளித்தனர். 'ஜேம்ஸ் பிரைஸ்' துரையவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடிய 'பத்மினி' என்ற ஒரு கதையையும் சில காலத்திற்குப் பின் வெளியிட்டனர். நம்மவரின் வழக்கமும் பழக்கமும் இக்கதையினுல் மேலையோர்க்கு எளிதி லுணர்ந்தறியும் வண்ணம் தெரிவித்தனர். முன்னமேயே வெளியிட்ட "இந்தியகிரும வாழ்க்கை"யைப் பற்றிய நூலிற்கு கவர்னராயிருந்த 'கிராண்டு டப்' என்பவர் முகவுரை எழுதி இவரைக்கொண்டாடினர். பின்னர் கவர்னராயிருந்த 'ஆவலாக்' என்பவர் இவரை வரவழைத்து நன்மொழி பகர்ந்து மேன்மைப்படுத்தினர். நம் புலவர் 1889ம் வருஷம் ஆங்கில அரசர் முடிசூடிக்கொண்டபொழுது "முடிசூட்டுக்கவிகள்" வரைந்தனர். அதன் மேன்மையைக் கொண்டாடாத பத்திரிகைகள் எதுவுமில்லை.

இவரது சமயம் வைணவம். மிகவும் தெய்வபக்தியுடையவர். இவர் மேன்மொழிப் புலமை எய்தியதற்கு முதற்காரணமாயிருந்தது "ராயல் ஏஷியாடிக் ஸொஸைடி' புத்தகசாலையில் வேலையாயிருந்தது என்று நம்பக்கிடக்கின்றது. கலாசாலையை விட்டதும் உலகத்திலுள்ள மேலான

அறிவையளிக்கும் புத்தகங்களை வாசிக்க அவகாசமான உத்தியோகமுங்கிடைத்தது. இவர் செய்த வாழ்வினைப் பயனேயாம். இவ்வுத்தியோகத்திற் சிலகாலம் இருந்த பின்னரே சென்னை நியாயஸ்தலத்தில் மொழிபெயர்க்குநராக வமர்ந்தனர்.

இறுதியாக இவர் மனத்தை வருத்தும்படியான ஒரு சம்பவம் நேர்ந்தது. இவர்க்கு மிகவும் பிரியமாயிருந்த ஒரே மகவு 1879-ம் வருஷம் ஜூலை 25வ இறந்தது. இவர் தம் இல்வாழ்க்கையை இனிமையாக்கத் தோன்றி மின்னலென மறைந்த புத்திரனிறந்த நாள்முதல் மாநுட வாழ்க்கையின் பொய்ம்மையை வெள்ளென வுணர்ந்தனர்.

தற்காலத்தில் பிள்ளையவர்கள் சென்னைநியாயஸ்தலத்தில் "இண்டர்ப்ருடர்" (மொழிபெயர்க்குநர்)ஆக இருக்கின்றனர். சென்னைச் சர்வகலாசாலையில் தமிழ்மொழி பரீக்ஷகர்த்தராகவும் வதிகின்றனர். மேலும் பல பரீக்ஷைகளுக்கும் தமிழில் பாடபுத்தகங்கள் இவையிவையென நியமிக்கும் கர்த்தருள் ஒருவராயமர்ந்திருக்கின்றனர். கிறித்தவக் கலாசாலை தினக்கொண்டாட்டம் இவர்தம் பெருமுயற்சியால் நாளைக்கும் நடந்துவருகின்றது. டாக்டர் மில்லரிடம் தான் கல்விபயின்றதை உலகினர் அறியும் வண்ணம் அவர் தம் சிலையை யியற்றுவதற்கு பெருமுயற்சியெடுத்து அவர்தம் மாணக்கரிடம் பொருளுதவி வேண்டி எடுத்தகாரியத்தை முடிவுறச்செய்த நன்றியறிவாளர்.

மதியாருஞ் சீர்த்தோட்டக் காடுவரு மகிபனிவன் மாரி யைப்போல்
வழங்குமெம்மான் பொய்கூறு வாக்குடையன் பாமேவு வரைப்பு யத்தன்

நிதியாருஞ் சீரிராம கிருஷ்ணனெனு ந் திருநாமம்
    நேர்ந்த வண்ணல்

நிலவுலகிற் கொருதிலக னணியினுக்கு மணிக்கலனும்
    நேரில் லாத

மதியோக்கு மேன்மொழியுந் தென்மொழியு மொரு
    மொழியாய் வளர்ப்ப வேண்டி

வகைநூல்கள் பலவியற்றி யறிவளித்தும் புகழ்படைத்து
    மண்ணவர்தம்

துதியேற்று மிறைவன்ற னருள்கொண்டும் நீடூழி
    சுகமே வாழி

தொன்மைநெறி சிறிதேனும் வழுவாமல் நீடூழி
    சுகமே வாழி.

சருக்கை இராமசாமி ஐயங்கார், பி.ஏ.





# வீரமாதேவன்

## அல்லது

## விஷத்துகில்.

### நாடகபாத்திரங்கள்.

நாராயணதாஸன்.—பிரதாபநகரத் தரசன்.

வீரமாதேவன்.—அவன் மகன்; பின் அரசனைவான்.

ராயஸிம்மன் / அமரஸிம்மன் } வீரமாதேவனின் மாற்ருந்தாய் மகன்கள்.

நரஸிம்மதேவன் / பிருதிவிஸிம்மன் } பிரதாப நகரத்துப் பிரபுக்கள்.

தத்தாத்திரேயமுனி.—ஓர் முனிவர்.

விக்கிரமதேவன்.—ராயஸிம்மனின் தோழன்.

விஜயபாலன்.—அவந்திபுரத்தரசன்.

கௌரிசங்கரன்.—விஜயபாலன் மந்திரி.

கலியாணஸிம்மன்.—கௌரிசங்கரன் மகன்.

உக்கிரஸேனன்.—கூர்ஜர தேசாதிபதி. / பார்கவஸிம்மன்.—காச்மீரதேசாதிபதி. / ரணமாலன்.—ஜோதிபுரியதிபதி. } டில்லியில் ஆக்பரின் தர்பாருக்கு வந்தவர்கள்.

ஆக்பர்.—இந்திய சக்ரவர்த்தி.

மானஸிம்மன்.—ஆம்பர் தேசாதிபதி, ஆக்பரின் அந்தரங்க மந்திரி.

ரேணுகாதேவி.—விஜயபாலன் மகள், வீரமாதேவன் காதலி.

கமலாவதி.—வீரமா தேவனின் மாற்ருந்தாய் மகள்: ஜெயபூர் அரசனின் மனைவி.

பரிவாரங்கள், சேவகர்கள், வைத்தியர், நகர்ச்சனங்கள், குற்றவாளிகள் முதலியோர்.

நாடகம் நிகழ்விடம்.—பிரதாபநகரம், ஜெயபூர், அவந்திபுரம், பிரயாகை முதலிய பற்பல விடங்களில்.

## அங்கம் I.

### முதலாவது களம்.

அவந்தி நகரத்தினரண்மனைக் கடுத்ததோர் பூஞ்சோலை.

(வீரமாதேவனும் ரேணுகாதேவியும் பிரவேசித்தல்.)

வீரமாதேவன்.—கண்மணி! எத்தனை நாள்கள் தான் நாம் இவ்வாறு மறைவாய் அந்திப்போதில் இப்பூஞ்சோலையில் சந்திப்பது? பேசிக்கொண்டிருக்கையில் கூட யாராவது வந்துவிடுவார்களோ என்று எந்நேரமும் பயம் உண்டாகிறதே. இதற்கு எப்போது விமோசனமுண்டாகும்?

ரேணுகாதேவி.—உயிர்த்துணைவரே! விமோசனம் எப்போது என்று என்னையா கேட்கிறது? இரண்டு மாதத்துக்கு முன்பு தங்களை யிந்தச்சோலையில் கண்ட தக்ஷணத்திலேயே அடியேன் தங்களுடையவளாய்ப் போய்விட்டேன். தங்களுக்கு எப்போது சவுகரியமோ அப்போதே விமோசனந்தான்.

வீரமா.—கண்மணி! உன் வார்த்தைக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தேன். எனக்கும் என் தகப்பனுரைப் பார்க்கவேண்டுமென்னும் ஆசையும் கிளம்பிவிட்டது. உன்னை விட்டுவிட்டுப்போக எனக்கு இஷ்டமேயில்லை. நீயும் கூடவருவதற்கு ஒரு ஏற்பாடு சொல்லு பார்ப்போம்.

ரேணுகா.—துணைவரே! கல்விகேள்விகளில் வல்ல ஆடவர்களுக்கு ஸ்திரீகள் புத்திமதி சொல்வதுண்டோ? தாங்கள் எவ்வாறு சொல்லுகிறீர்களோ அவ்வாறே நடக்க நான் சித்தனுகவிருக்கிறேன். "நெருப்பில் விழு" என்று கட்டளையிட்டாலும் உடனே வீழ்கிறேன்.

வீரமா.—காதலி, உனது சாமர்த்தியத்துக்கும் அன்புக்கும் எல்லையுண்டோ? இரண்டு மாதமாய் உன்னோடு பழகி வருகிறேனே. நான் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறேன். அது உனக்குத் திருப்தியாகவிருக்குமோ, என்னவோ?

ரேணுகா.—அன்பரே! தாங்கள் என்ன ஏற்பாடு செய்தாலும் எனக்குத் திருப்திதான். செய்திருப்பதைச் சொல்லுங்கள்.

வீரமா.—உனக்குக் குதிரைசவாரி செய்யத்தெரியுமா?

ரேணுகா.—நான் குழந்தையாயிருந்த காலத்தில் குதிரையின்மீதேறி யுலாவப்போவதுண்டு. நாலைந்து வருஷமாகப் போவதில்லை. இருந்தாலும் தைரியமாகப்போவேன்.

வீரமா.—வாயுவேக மனோவேகமாய் ஓடத்தக்க இரண்டு பெரிய குதிரைகள் வாங்கியிருக்கிறேன். ஒரு வைரவாளுக்கும்; நூலேணியொன்றுக்கும் சொல்லியிருக்கிறேன். நாளைய சாயந்திரம் அவைகளை இவ்விடத்துக்குக் கொண்டுவந்து கொடுக்கிறேன்.

ரேணுகா.—வாளும் நூலேணியும் எதற்காகவென்று நான் கேட்கலாமோ?

வீரமா.—காதலி! சொல்லமாட்டேனோ! அவ்வாள் அதிக கடினமான இரும்பையும் ஒரு நொடியில் அறுக்கும். நாளையதிங்கட்கிழமை இரவு பத்து நாழிகைக்குமேல் எழுந்து எல்லாரும் குறட்டை விட்டுத் தூங்கும் சமயத்தில் உனது மாடத்தின் பெரிய ஜன்னலை வாளால் அறுத்து, அங்கிருந்து நூலேணியை விசிறினையானால் அதை நான் கீழேயிருந்து பற்றிக்கொள்ளுகிறேன். பயப்படாமல் இறங்கி வா; நாமிருவரும் ஓடிப்போவோம்.

ரேணுகா.—அவ்வாறு நான் வருவதாகவிருந்தால் முன்னுலேயே ஏதாவது பிரயத்தனம் செய்யவேண்டியிருக்குமே. அதைக்கண்டு தோழிகளும் தாதிகளும் எதற்கென்று கேட்டால் என்ன சொல்லுகிறது. காரியம் முடிவது கஷ்டமாகவிருக்குமே.

வீரமா.—இதற்கு ஏன் பயப்படுகிறுய்? அடுத்த மங்கள வாரத்தன்று அம்பாள் ஸந்நிதியில் பூஜையென்றும், அதற்காகத்தான் அவ்வித ஏற்பாடென்றும் சொல்லிவிடு. வேறு யாருக்குத் தெரியப்போகிறது, நம்முடைய யோஜனை?

ரேணுகா.—சரி, அப்படியே செய்கிறேன். எல்லாம் ஈசன் செயல்.

வீரமா.—மறந்தும் இந்தச் சங்கதியை வெளியில் விட்டுவிடாதே. நான் போகவேண்டும்.

ரேணுகா.—இவ்வளவு சீக்கிரத்திலேயே போகவேண்டுமா? இன்னும் சந்திரிகைகூடப் புறப்படவில்லையே. தோழிகள் எல்லோரும் பூப்பறித்துக்கொண்டு மண்டபத்திற்குத் திரும்பிப்போவதற்கு இன்னும் இரண்டு நாழிகை செல்லும். தாமரைபோன்ற முகத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதே எனக்கு ஆனந்தத்தை விளைவிக்கின்றது.

வீரமா.—சூரியன் நன்ருய் அஸ்தமித்துவிட்டான். நான்கு பக்கங்களிலும் இருள் வந்து சூழ்கின்றது; சற்றுத் தாமதித்தால் சோலை வாயிலண்டை காவற்காரர்கள் வந்துவிடுவார்கள். நான் இப்போதே புறப்பட்டுப் போனுல் உயிருடனிருப்பேன்; தாமதித்தால் இறந்து போவேன்.

ரேணுகா.—காவற்காரர்கள் வருஞ்சமயம் எனக்குத்தெரியும். அவர்கள் வருவதற்கு இன்னும் கொஞ்சநேரஞ்

செல்லும். தோழிப்பெண்கள் கூட இன்னும் வந்த தாகத் தெரியவில்லையே. அவர்கள் வரும் வரையிலா வது தங்கியிருக்கக்கூடாதா?

வீரமா.—வேண்டாம்; நேற்றையதினம் காவற்காரர்கள் கண்ணிலகப்படாமற் சென்றது அருமையாய் விட் டது. அதோ உன் தோழிகளும் வந்துவிட்டார்கள். நாம பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்கப்போகிறார் கள். நான் போய்வருகிறேன்.

ரேணுகா.—நாளைய சாயந்தரம் வரும்போது அவைகளைக் கொண்டுவாருங்கள். மறுபடியும் தங்களைக்காணும் வரையில் ஒரு நொடி போவது ஒரு யுகமாயிருக்கி றதே. மாறுவேஷம் பூண்டு எனது அந்தப்புரத்து க்கு வாருங்கள்.

வீரமா.—அது முடியாத காரியம். கண்டுவிட்டால் என் னுயிர் போவதன்றி, உன்னுயிரும் போய்விடும். இன் னும் மூன்று நாள்கள் தானே. பிறகு இன்பமாக வாழலாம். போய்வரட்டுமா?

ரேணுகா.—எவ்வாறு மனமொப்பிப் "போய்வாருங்கள்" என்பேன். தங்களைவிட்டுப் பிரிந்திருப்பதால், என க்கு நித்திரையே வருவதில்லை. அன்னாகாரங்களிலும் விருப்பில்லை. உடம்பு மெலிகின்றது. தாதியர்கள் எனக்குப் பேய் பிடித்திருக்கிறதென்று சொல்லிக் கொள்கிறார்கள்.

வீரமா.—உன்னைப் பேய் பிடித்திருப்பது உண்மைதான். உண்மைப்பேயல்ல; காமப்பேய். அது இன்னும் மூன்று நாளில் அகன்றுவிடும்; போய்வரட்டுமா? பதில் கொடு.

ரேணுகா.—என் மனத்துக்கு விரோதமான காரியத்தை எவ்வாறு செய்கிறது. ஒரு தரம் முத்தமிட்டுக்

கொள்கிறேன், திருப்தியாகவில்லை; மறுபடியும் முத்த மிட்டுக்கொள்கிறேன்.

வீரமா.—தோழிகள் நெருங்கிவிட்டார்கள். நான் போய் வருகிறேன். ஜாக்கிரதையாகவிரு. சமாசாரம் ரகஸியமாகவிருக்கட்டும்.

(போதல்).

தோழிகள் வருதல்.

முதல் தோழி.—ரேணுகை! மண்டபத்திலிருந்து நெடுந் தூரம் வந்துவிட்டாயே! ஏன்?

ரேணுகா.—நீங்கள் போனபிறகு தனிமையாகவிருக்கப் பிரியப்படவில்லை. சோலையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகிறேன்.

முதற்.—முகம் வாடியிருக்கிறதே, ஏன்?

ரேணுகா.—கையில் முள் தைத்துவிட்டது; அதை யெடுத்துவிட்டேன். வலிமாத்திரம் கொஞ்சமிருக்கிறது.

மூன்றுந்தோழி.—ரேணுகை! நாங்கள் வரும்போது ஒரு செடி மறைவிலிருந்து மந்திரிகுமாரன் கலியாணஸிம்மன் பதுங்கியோடினான். அவன் இங்கே ஏன் வந்தான்?

ரேணுகா.—கலியாணஸிம்மனா? ஐயோ! எங்கே வந்தான் அவன்? நாங்கள் பேசி——

இரண்டாந்தோழி.—நான் கூடப் பார்த்தேன்; கலியாண ஸிம்மன் தான். போகும்போது கோபக்குறியுடன் விளங்கிய முகத்துடனே போனான்.

முதற்.—ஒரு சமயம் உன்னோடு பேசிக்கொண்——

ரேணுகா.—சீ! அந்த நாயோடா நான் பேசுவேன்? என்ன துஷ்டத்தனம், அந்தப்புரச் சோலையில் ஆடவர் வருவது? மந்திரிகுமாரனாகவிருந்தால் என்ன, அவ்வளவு துணிவா? இன்றைய இரவே கொடிய தண்டனை செய்துவைக்கிறேன்.

இரண்டா.—அவன் எதற்காக வந்தானென்று தெரிந்துகொண்டுதான் தண்டிக்கவேண்டும். பதறிச்செய்யும் காரியம் பழிப்புக்கு இடமாகும்.

ரேணுகா.—நீங்கள் எல்லோரும் தனித்தனியே இதைப் பற்றி விசாரியுங்கள். நானும் விசாரிக்கிறேன். நாளைக்கு ஒருவரும் இங்கே வரவேண்டாம். இவ்விஷயம் முடிந்தபிறகு பார்த்துக்கொள்ளலாம்.

முதற்.—நாழிகையாய்விட்டதே, போவோமா?

ரேணுகா.—சரி, போவோம்.

(எல்லாரும் போதல்).

## இரண்டாங் களம்.

### பிரதாபநகரத்தைச் சேர்ந்ததோர் காடு.

(நாராயணதாஸ், பிருதிவிஸிம்மன், நரஸிம்மதேவன் வேலைக்காரர்களுடன் பிரவேசித்தல்).

நாராயணதாஸ்.—துணைவர்களே! காட்டில் நாம் வாழ்வது இன்பமாகவிருக்கவில்லையா? ராஜ்யத்திலிருந்துகொண்டிருக்கையில் பலவிதமான துன்பங்களுக்குள்ளானோமே. இங்கே துன்பமேது, கவலையேது? சுயேச்சையாகவிருக்கிறோம். ராஜ்யம் போனால் என்ன? அதனுடன் கூடக் கவலையும் முகஸ்துதியும் போய் விட்டன. நம்மை யிங்குத்தேற்றுவார் கடவுள்தாம்.

பிருதிவிஸிம்மன்.—பிரபுவே! கஷ்டகாலத்திலும் மன நிலையைக் கைவிடாதவனே மேலானவன் என்று நூல்கள் கூறுகின்றன. தாங்கள் சங்கடகாலத்திலும் பொறுமையுடனிருப்பது மேலானது தான்.

நரஸிம்மதேவன்.—முன்னாளில் அரசராக விருந்தோரில் பலர் நாடிழந்து காட்டில் வசித்தனர். தங்கள் முன்னோராகிய ஸ்ரீ இராமபிரான், நளச்சக்கிரவர்த்தி, தர்மபுத்திரர் முதலானோர் நாட்டையிழக்கவில்லையா?

**பிருதிவி.**—பிரபுவே! தங்கள் முன்னோர்களின் பூர்வசரிதையைக் கேட்கவேண்டுமென்னும் அவா வுடையேன். சொல்லிக்கொண்டிருந்தால் பொழுதுபோகுமல்லவா? சித்தமெப்படியோ?

**நாராயண.**—தர்மபுத்திரர் ஹஸ்தினபுரத்தில் ராஜ்யபாரம் செய்கையில் நமது பிரதாப நகரத்தை வேணிவச்சராஜர் ஆண்டுவந்தார். அவர் நாககன்னிகையை மணந்து இன்பமுடன் வாழ்ந்துவந்தனர். அவருக்குப் பிறகு நெடுங்காலத்துக்கப்பால், சிலாதித்தன் என்பவர் யவனருடன் செய்த சண்டையில் தோற்று உயிரிழந்தனராம். அவருடைய மகன் தான் குகன். நாமெல்லோரும் அவருடைய சந்ததியாரானபடியால் தான் 'குகையர்' என்று பட்டப்பேர் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

**பிருதிவி.**—அதற்குப்பிறகு ஆண்டவர்களின் சரிதை யெனக்கு நன்றாய்த் தெரியும். துருக்கர்கள் வராமற்போனால் நாம் சுகமாய் வாழலாம்.

**நாராய.**—துருக்கர்கள் நம்மை மாத்திரமா கெடுத்துவிட்டார்கள். உதையபூர் மகாராண பிரதாபஸிம்மர் எந்தக் காட்டிலேயோ பெண்சாதி பிள்ளைகளுடன் ஒளிந்துகொண்டிருக்கிறார்.

**நரஸிம்ம.**—மற்றைய ராஜபுத்திர வரசர்களைப்போல மகாராண ஆக்பரோடு ரத்த சம்பந்தம் செய்து தம் குலத்தைக் கெடுத்துக்கொள்ளப் பிரியப்படவில்லை. அதனால் தான் துன்பமனுபவிக்கிறார்.

**நாராய.**—துன்பத்தைக்காட்டிலும் மரணம் பெரியதல்லவா? பின்னால் உதிக்கும் ஜனங்களெல்லாரும் மற்றைய ராஜபுத்திரர்களைக் கண்டபடியெல்லாம் திட்டுவார்கள்—அதெல்லாம் போகட்டும்; என் மகன் வீரமாதே

வன் எங்குள்ளான்? புறப்பட்டுப்போய் இரண்டு மாதத்துக்கு மேலாகின்றதே. திரும்பிவராததற்குக் காரணம் தெரியவில்லை. எங்கேயாவது——

நரஸிம்ம.—இதோ ராஜஸிம்மர் வருகிறார். அவரைக்கேட்டால் தெரியலாம்.

ராஜஸிம்மன் வருதல்.

நாராயண.—அப்பா குழந்தாய்! உன் அண்ணன் வீரமாதேவன் பிரிந்துபோய் நெடுநாளாயிற்றே. எங்கேயிருக்கிறானென்று தெரியுமா?

ராஜஸிம்மன்.—யமன் கோயிலிலேயிருக்கிறான். எங்கேயாவது கெட்டலைவான். இங்கேயிருந்தால் ஏதாவது வீண் சண்டைபோட்டுக்கொண்டிருப்பான். தொலைந்தது நல்லது தான்.

நாராய.—சீ! கண்டபடியெல்லாம் பிதற்றாதே. உனது முன்னோர்களை நினை. உனது அண்ணனிடத்தில் உனக்கு எவ்வளவு அன்பும் பிரியமும்?

நரஸிம்ம.—அவர் போகும்போது கூட யார் போனார்?

நாராய.—அவனது கைவாளும், கவசமும் தான். தெய்வத்துணையேயன்றி மனிதத்துணையில்லை.

பிருதிவி—பிரபுவே! சோகிக்கவேண்டாம். க்ஷத்திரியர்களுக்கு வீரமும் கையாயுதங்களுந்தான் துணை. வீரமாதேவரின் குணநிசயங்களை நான் நன்றாய் அறிவேன். ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். கூடிய சீக்கிரத்தில் கீர்த்தியோடு வந்துவிடுவார்.

நாராய.—எனது உயிர் அவனிடத்தில்தானிருக்கிறது. ஒரு க்ஷணம்போவது கஷ்டமாகவிருக்கிறது. இருந்தாலும் அவனைக்கண்டுபிடிக்கவேண்டியது அவசியம்.

பிருதிவி.—அப்படியானால் நமது வேலைக்காரர்களை நான்கு திக்குகளிலும் தேடும்படியனுப்புவோம்.

ராஜஸி.—இது வீண் வேலைதான். போனவன் உயிருடன் இருக்கிருனென்பது என்ன நிச்சயம். எங்கேயாவது காட்டில் மிருகங்களால் மரணமடைந்திருப்பான். அவனைத் தேடப்போவதைப் பார்க்கிலும் சும்மாவிருக்கலாம்.

நாராய.—சொல்வதற்கெல்லாம் விரோதமாக ஏன் சொல்லுகிருய்? கொஞ்சநேரம் சும்மாவிரு. உன்னைக்கேட்கிறபோது நீ சொல்லலாம்.

பிருதிவி.—முதல் முதலில் மகாராணு பிரதாபஸிம்மர் இருக்குமிடத்தில் தேடுவோம். ஒரு சமயம் அங்கே போயிருக்கலாம்.

நாராய.—பாருங்கள். இன்னும் ஒரு மாதத்துக்குள் திரும்பி விடவேண்டும்.—இப்போது நாம் இன்றிராச்சாப்பாட்டுக்காக வேட்டையாடப் போவோம். (ஒரு வேலைக்காரனைப் பார்த்து) நீ போய் ஏரியில் மீன் பிடித்துக்கொண்டுவா (இன்னொருவனைப் பார்த்து) நீ போய் மதுரமான தேன் கொண்டுவா. (இன்னொருவனைப் பார்த்து) நீ போய் விறகு வெட்டிவா.—வாருங்கள் நாமெல்லாரும் வேட்டைக்குப் போவோம்.

(எல்லோரும் போதல்).

மூன்றங்கம்.

அவந்திபுரத்தரண்மனை.

(விஜயபாலனும் கலியாணஸிம்மனும் வருதல்)

விஜயபாலன்.—என்னவோ விசேஷம் என்றுயே, என்ன அது?

கலியாணஸிம்மன்.—மகாராஜ்! சொல்வதற்கு மனமெழவில்லை. முந்தாநாள் தினம் தாங்கள் வேட்டையாடப் போனபோது பிச்சைக்காரன் போல் கூட வந்தவன் யாரென்று தெரியுமா?

விஜயபா.—ஊரிலுள்ள பிச்சைக்காரர்களையெல்லாம் கணக்கிட்டுப் பேர் தெரிந்துகொள்ளவேண்டியது அரசர்களின் கடமைகளில் ஒன்ருே!

கலியாண.—மகாராஜ்! நான் எண்ணியது அதுவன்று. அவன் உண்மைப் பிச்சைக்காரன் அல்ல. பிரதாபநகரத்து அரசன் நாராயணதாஸனின் மகன் வீரமாதேவனும்.

விஜயபா.—அவனைத்தான் காணுமென்று தேடிக்கொண்டு வந்தார்களே. அவனுகவிருந்தால் கூடப்போயிருக்க மாட்டானு?

கலியாண.—அவன் போகாததற்குக்காரணமுண்டு. சொல்லுகிறேன் கவனித்துக் கேட்கவேணும். தங்களுடைய குமாரத்தி ரேணுகாதேவியை ஸிரோஹி நாட்டரசன் மகன் சூடாசந்திரனுக்குக் கொடுப்பதாகவிருந்தீர்களே. அதற்கு விரோதமாக இந்தப் பிச்சைக்காரன் கிளம்பியிருக்கிறுன்.

விஜயபா.—(திடுக்கிட்டு) என்ன, என்ன? எப்படி?

கலியாண.—இன்றைய இரவு அவன் ரேணுகையை அபகரித்துக்கொண்டுபோவதாகவிருக்கிறுன்.

விஜயபா.—ஐயோ! உனக்கு இவ்விஷயம் எப்படித் தெரிந்தது?

கலியாண.—முந்தாநாள் அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.

விஜயபா.—யாரிருவரும்? எவ்விடத்தில்? என்ன?

கலியாண.—முந்தாநாள் சாயந்தரம் ரேணுகையும் வீரமாதேவனும் பூஞ்சோலையில் பேசிக்கொண்டிருந்தார்கள். இன்றைய இரவு அவ்விருவரும் ஓடிப்போவதாகப் பேசிக்கொண்டார்கள்.

விஜயபா.—எப்படிப்போவதாக?

கலியாண.—இரவு பதினைந்து நாழிகைக்கு அந்தப்புரச் சாளரத்தின் வழியாய் நூலேணியால் கீழே யிறங்கிப் போவதாக ஏற்பாடு செய்துள்ளார்.

விஜயபா.—முன்னமேயே சொன்னதற்காக உனக்கு வந்தனம். சரி, நீ போகலாம்; தகுந்த காவல்வைத்து ஏற்பாடுசெய்கிறேன்.

(கலியாணஸிம்மன் போதல்).

கௌரிசங்கரன் வருதல்.

கௌரிசங்கரன்.—மகாராஜ்! வந்தனம்.

விஜயபா.—வாரும், மந்திரி! உம்மிடத்தில் ஒரு விசேஷ சங்கதி சொல்லவேண்டியிருக்கிறது.

கௌரிசங்.—மகாராஜ்! தயாராகவிருக்கிறேன்.

விஜயபா.—அன்றையதினம் நாம் வேட்டைக்குப்போன போது நம்முடன் கூடவந்த பிச்சைக்காரன் யாரென்று உமக்குத் தெரியுமா?

கௌரிசங்.—தெரியாது; தெரிந்துகொண்டு சொல்லுகிறேன்.

விஜயபா.—அவன் பிரதாபநகரத்து நாராயணதாஸனின் மகனும், வீரமாதேவனும்.

கௌரிசங்.—சக்கரவர்த்திக்கு விரோதமாகக் கிளம்பியதால் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டு, இப்போது எங்கேயோ காட்டில் நாராயணதாஸன் வாசம்பண்ணுவதாகக் கேள்வி. அவர்மகன் வீரமாதேவனை நான் நன்றாய் அறிவேன்; நல்லகுணவான்; தைரியசாலி.

விஜயபா.—அதெல்லாமிருக்கட்டும். அவன் ஒரு கெட்டகாரியம் செய்யத்துணிந்துவிட்டான்: குழந்தை ரேணுகையை அபகரித்துக்கொண்டுபோவதாக.

கௌரிசங்.—மகாராஜ்! என்ன யோஜனை செய்திருக்கிறீர்கள், இவ்விஷயத்தில்?

விஜயபா.—ராத்திரி காவலிருந்து அவனைப்பிடித்து மாறு கால் மாறுகை வாங்கி ஊரைவிட்டு ஓட்டிவிடுகிறது.

கௌரிசங்.—மகாராஜ்! நான் சொல்வதைக் கேட்கவேண்டும். முதல்முதலில் தங்கள் குமாரத்தியின் கருத்தை யறியவேண்டும். அவளுக்கும் அவன் செய்யவெண்ணியது உடன்பாடானால், இருவரையும் நாட்டிய மணம் செய்துகொடுத்துவிடவேண்டும். தங்கள் குழந்தைக்கு நன்மையைத்தேடுவது அவசியமல்லவா? ஆதலால் தானிவ்வாறு சொல்லுகிறேன்.

விஜயபா.—அப்படியானால் விரோஹியானுக்கு என்ன சொல்கிறது? அவனுடைய விரோதங்கூடாது.

கௌரிசங்.—பின்னால் வரும்போது பார்த்துக்கொள்ளுவோம். நமக்கு ஆக்பர் சக்கரவர்த்தியின் துணையிருக்கும்வரையில் பயமேயில்லை. ஆகையால் விரோஹியானுக்கு நாம் பயப்படவேண்டியதில்லை.

விஜயபா.—ஆனால் எப்படிச்செய்யவேண்டுமோ அவ்வாறே செய்யும்.

கௌரிசங்.—முதலில் ரேணுகாதேவியின் மனக்கருத்தை யறிந்துகொண்டு தான் மற்றை யேற்பாடு செய்யவேண்டும். ஆதலால் அதையறியப்போகிறேன்.

விஜயபா.—சரி, போய்வாரும்; சாயந்தரத்துக்குள் எனக்கு சமாசாரம் தெரியவேண்டும்.

கௌரிசங்.—அப்படியே தெரிவிக்கிறேன், மகாராஜ.

(இருவரும்போதல்.)

## ரேணுகையின் அந்தப்புரம்.

ரேணுகாதேவி.—(தனியாய்) தெய்வமே! இப்படியும் செய்துவிட்டாயா? என்னருமை நாதனினின்றும் என்னைப் பிரிப்பது தர்மமா? அம்பாள்! உனது கருணை யிவ்வளவுதானா? அன்றையதினம் கலியாணஸிம்மன் நாங்கள்

பேசிக்கொண்டிருந்ததைச்கேட்டுக்கொண்டு அரசனிடத்தில் சொல்லுவதாகச் சென்றனளே. ஐயோ! என் தாயிருந்தால் எனக்கு இப்படித் துக்கமுண்டாகுமா? அரசன் இவ்விஷயத்தை யறிந்துவிட்டால் என்னைக் கடுமையாய்த் தண்டிப்பாரே. என்னையே நினைந்து வருந்தும் என்னுயிர்த் துணைவரையும் கொடியவாளுக் கிரையாக்கிவிடுவாரே. என்னசெய்வேன்? பிராணனை விட்டுவிடலாமா? அப்படியானால் எனது நாதரின் அனுமதிவேண்டுமே! என் எண்ணத்தை யவருக்கு எப்படித் தெரியப்படுத்துவது? இன்றைப் பொழுது போவதற்குள் என்னென்ன விபத்துக்கள் நேரிடுமோ? நாதா! நாதா! துணையில்லாமற் றவிக்கிறேன்! கருணைக்கடலே! என்னைக் காப்பாற்றுவிடில் இன்றிரவே உயிரை விட்டுவிடுவேன்.

(சுவர்ணகுமாரி வருதல்).

சுவர்ண.—ரேணுகை! ரேணுகை! தூங்குகிறாயா? என் தரையில் படுத்துக் கொண்டிருக்கிறாய்?

ரேணு.—யார் அது, சுவர்ணமா? வா.

சுவர்ண.—ஏன் அழுகிறாய்?

ரேணு.—அழுகையென்ன, எனக்கு? சந்தோஷந்தான். ஏதோ அன்னை போனதை நினைத்தேன். என்னையறியாமல் துக்கம் வந்துவிட்டது.

சுவர்ண.—வருத்தப்பட்டு என்ன செய்கிறது?—நான் உன்னிடத்தில் ஒரு காரியமாய் வந்திருக்கிறேன். உன்னுடைய நன்மைக்காகவே வந்திருக்கிறேன். நான் கேட்கிறவைகளுக்கெல்லாம் உண்மையாய்ப் பதில் சொல்லுவாயா?

ரேணு.—என்ன கேட்கிறாய்?

சுவர்ண.—உன்னிடத்தில் ஒரு நாலேணியும், வைரவாளுமி

ருக்கின்றனவாமே: அவற்றை யெனக்குக் காட்டக்கூடாதா?

ரேணு.—(திடுக்கிட்டு) என்னிடத்தில் ஏது?

சுவர்ண.—(ரேணுகை) நீ என்னிடம் உண்மையைச் சொல்லவில்லை. நீ விரும்பிய புருஷனை யடைய நான் ஏற்பாடுசெய்திருக்கிறேன். பயப்படாதே.

ரேணு.—என் பேரில் கோபித்துக் கொள்ளாதே. நான் சொல்வதை ஒருவரிடத்திலும் சொல்லாமலிருப்பதாக வாக்களிப்பாயா?

சுவர்ண.—நீ என் பேரில் இப்படி அவநம்பிக்கைப்படலாமா? நீ சொன்னதையெல்லாம் நான் யாரிடத்திலாவது சொன்னதுண்டா? ஒரு ரகஸியம் கேள். நீயும் வீரமாதேவனும் இன்றைய இரவு ஒருவரும் அறியாதபடி புறப்பட்டுப்போவதாக விருக்கிறீர்களாமே: அது உண்மைதானு?

ரேணு.—(தலைகுனிந்துகொண்டு) உன் அண்ணன் சொன்னனே?

சுவர்ண.—இல்லை, இல்லை; இவ்விஷயம் எப்படியோ அரசனுக்குத்தெரிந்து, அவர் என் தகப்பனரைக் கேட்டாராம். அவரும் உன் கருத்தையறிந்த பிறகு தான் பதில் சொல்லுவேன் என்று வந்துவிட்டார். அதற்காகத்தான் என்னையனுப்பினர்.

ரேணு.—அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.

சுவர்ண.—பயப்படாதே. என் தகப்பனர் உன் பக்கமாகவேயிருக்கிறர். உன்னுடைய இஷ்டத்துக்கு விரோதமாகப்போவது பிழையென்று அரசனிடம் சொல்லியிருக்கிறராம். ஆதலால் உன்னிஷ்டத்தை யெனக்குத் தெரிவித்தால், நான் பூர்த்திப்பெற வைக்கிறேன்.

ரேணு.—எனக்கு அவர் பேரில் தான் ஆசை. இதை வெளியில் சொல்லாதே.

சுவர்ண.—அதைரியப்படாதே: இன்னும் ஒரு நாழிகைக்கெல்லாம் உனக்குச் சந்தோஷ சமாசாரம் கொண்டு வருகிறேன்: உன் விருப்பம் நிறைவேறும். வீரமாதேவரையே நீ நாயகராக அடைவாய். நான் போய் வருகிறேன். தகப்பனர் காத்துக்கொண்டிருப்பார்.

ரேணு.—என்னை வீணுக்கிவிடாதே: என் எண்ணம் நிறைவேருமற்போனல் இன்றிரவு என் உயிர் என்னைவிட்டு நீங்கிவிடும்.

சுவர்ண.—ரேணுகை! பயப்படாதே. நீ சந்தோஷமாகவிருப்பாய்; இன்னும் ஒரு நாழிகைக்குள் வருகிறேன். நீயும் குளித்துவிட்டுப் போஜனம் செய்.

ரேணு.—சிக்கிரம் வந்துவிடு; நீ வந்தபிறகு தான் சாப்பிடுவேன்.

(இருவரும் போதல்).

## நான்காங் களம்.

### ஓர் காடு.

வீரமாதேவனும் ரேணுகாதேவியும் வருதல்.

வீரமாதேவன்.—ஏதோ அதிருஷ்டவசத்தால் தான் நம்மிருவருக்கும் உன் தகப்பனர் மனமொப்பிக் கலியாணம் செய்துவைத்தார் இல்லாவிட்டால்—

ரேணு.—கலியாணஸிம்மன் நம்முடைய யோஜனையைப் பிறருக்குத் தெரியப்படுத்தாதிருந்தால் நாம் ஒரு மாதத்துக்கு முன்னமேயே புறப்பட்டு வந்திருக்கலாம். அவன் நமக்கு விரோதமாய்த் தோன்றினும் முடிவில் நன்மைக்குக்காரணம் அவனகவேயிருந்தான்.

வீரமா.—மந்திரி கௌரிசங்கரர் தாம் நமக்கு நன்மை செய்தவர்.

ரேணு,—அவருந்தான். என் தோழி சுவர்ணகுமாரிகூடத்தான். எல்லாரையும் நான் திரும்பி எப்போது

பார்ப்பேன்? தாயில்லாப் பெண்ணுகிய எனக்கு எல்லாரும் தாய்போன்றிருந்தனர். அதோ இரண்டுபேர் கத்தியும் கையுமாக வருகிருர்களே எனக்குப் பயமாகவிருக்கிறதே.

வீரமா.—பயப்படாதே: நானிருக்கிறேன்.

இரண்டுபேர்கள் ஆயுதபாணிகளாய் வருதல்.

முதலாவதவன்.—யாரங்கே போகிறது? நில்லு, நில்லு.

வீரமா.—இரண்டு ஏழைப்பிரயாணிகள். ஏன் நிற்கச் சொல்லுகிறீர்?

முதலா.—இது எங்கள் காடு. இதன் வழியாய்ப் போவார்களுக்கெல்லாம் எங்கள் எஜமானர் கைக் குறியடங்கிய ராதாரிச் சிட்டு வேண்டும். அதைக் காட்டு.

வீரமா.—எனக்கு இந்த விஷயம் ஒன்றுந் தெரியாது. ஏதோ வந்து விட்டேன். போக விடும்; நாங்கள் இந்த வழியாய் இனி வருவதில்லே.

இரண்.—ராதாரியில்லாமற் போகின்றவர்களுடைய உயிரும் பொருளும் எங்களுடையது. ஆதலால் உனது ஆபரணங்களேக் கழற்றிவை.

முதலா.—இதோ நிற்கிருளே இவள் யார்?

வீரமா.—என் தங்கை. அவள் புருஷனகத்துக்குக் கொண்டுவிடப் போகிறேன்.

ரேணு.—(தனக்குள்) ஐயோ! தங்கையா? தெய்வமே! என்னேயேன் இந்தத் துன்பத்துக்குள்ளாக்குகிருய்?

இரண்.—எங்கே போனல் தானென்ன? நகைகளே கீழே வை. எங்கள் எஜமானருடைய குமாரர் இன்னும் இரண்டு நாளில் வந்து விடுவார். அவருக்கு மனேவியாக இவ்விளம் பெண் இருக்கலாம். நீ எங்கள் எஜமானருக்கு வேலைக்காரனுகவிருக்கலாம்.

முதலா—அது தான் சரி, இவர்களைக் கொல்வதற்கு ஏனோ மனம் வரவில்லை.

ரேணு.—(தனக்குள்) ஐயோ! என் நாதரை யிழந்து விடவேண்டுமா? என்னை வேறொருவனுக்கும் பெண்டாக்குவார்களா?

இரண்.—சரி, நீங்கள் வாருங்கள் எங்கள் எஜமானரண்டைக்கு.

(நால்வரும் போதல்).

## (காட்டில் மற்றோரிடம்).

நாராயணதாஸனும் பரிவாரங்களும் ஒரு வழியாகவும், வீரமாதேவன் முதலிய நால்வரும் வேறுவழியாகவும் பிரவேசித்தல்

வீரமா.—(தனக்குள்) இதோ வருகிறவர் என் தகப்பனாரைப் போன்றிருக்கிறதே. (ரேணுகாதேவியுடன் ரகஸியமாய்) பயப்படாதே: என் தகப்பனாரிடத்துக்குத் தான் வந்திருக்கிறோம்.

நாராயண.—இவ்விருவரும் யாவர்? எங்கிருந்து வந்தனர்?

முதலா—.ஆண்டவனே! இவ்விருவரும் ராதாரியில்லாமல் காட்டுவழியே சென்றார்கள். ஆதலால் பிடித்துவந்தோம். அவர்கள் ஆபரணங்கள் இதோ இருக்கின்றன. (ஒரு மூட்டையைக் கீழே வைக்கின்றான்).

நாராயண.—(வீரமாதேவனை நோக்கி) நீ யார்? உனது முகம் நான் நன்றாயறிந்த முகமாகத்தோன்றுகின்றதே. உன்னுடன் கூடவருபவள் யார்?

வீரமா—.—பிரபுவே! தங்களையும் நான் இதற்குமுன்பு இக்காட்டிலேயே கண்டிருக்கிறேன். தங்கள் குமாரன் வீரமாதேவனிருந்தால் என்னை அடையாளம் கண்டுபிடித்திருப்பார், இந்நேரம்.

நாராயண.—அவன் இன்னும் கூடியசீக்கிரத்தில் வந்துவிடுவான். அவந்திபுரத்தரசன் மகளைக்கலியாணம் செய்துகொண்டதாகக்கேள்வி. இப்போது வந்துவிடுவான்.

வீரமா.—பிரபுவே! இதோ என்னுடன் நிற்கிறாளே, அவள்தான் உமது குமாரர் வீரமாதேவனுடைய மனைவி ரேணுகாதேவி. தங்களிடம் விட்டுவிட்டு வரும்படி வீரமாதேவர் என்னையனுப்பினார். அதற்கு அடையாளமாக இக்கவசத்தையும் கொடுத்தார்.

(தன் மார்பைத்தொட்டுக்காட்டல்.)

நாராயண.—எதோ, கவசத்தை எடு. அதின் உட்புறத்தில் எங்கள் ராஜமுத்திரையாய வேற்குறியிருக்கிறதா பார்ப்போம்.

வீரமா.—பாருங்கள் (மார்பினின்றும் கவசத்தைக் கழற்றிக் கீழே போடுதல்).

நாராயண.—(திடுக்கிட்டு எழுந்து) குழந்தாய்! இந்நேரம் ஏன் உன்னை மறைத்துக்கொண்டிருந்தனை. நான் யாரோவென வெண்ணினேனே.

(வீரமாதேவனைத் தழுவிக்கொள்ளல்).

வீரமா.—பிரபுவே! எனது மார்பில் இக்காயத்தின் வடு இல்லாமற்போனால் தாங்கள் என்னை அடையாளம் கண்டுபிடிக்க முடியுமா? இதோ நிற்கிறாளே இவளைத்தான் நான் கலியாணம் செய்துகொண்டேன். என்னையிவ்விடம் கொல்லாமல் கொண்டுவந்துவிட்ட இவ்விரு சேவகர்களும் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை.

முதலா.—ஆண்டவனே! தெரியாமல் செய்துவிட்டேன் மன்னிக்கவேண்டும். (அடிபணிதல்).

இரண்.—துரையே! தப்பிதம் செய்துவிட்டேன். அடியேன்மீது கோபம்வேண்டாம்; மன்னித்தருளவேண்டும். (அடிபணிதல்.)

வீரமா.—எழுந்திருங்கள்; எழுந்திருங்கள்; உங்கள்மீது சற்றேனும் கோபமில்லை. உங்கள் எஜமானர் சொற்படி

நடந்தவர்களாதலால் உங்கள்பேரில் குற்றமேயில்லை. எழுந்திருங்கள்.

(இருவரும் எழுந்து வணங்கிப்போதல்.)

**நாராயண.**—குழந்தாய்! ஒரு மறைவான இடந்தேடி அதில் உன் மனைவியை இருக்கச்செய். அவளுக்குத் துணையாக நமது பிரபுக்களின் மனைவியிருப்பார்கள். உனக்காகத்தான் இந்நாள் பொறுத்திருந்தேன். இனி நாம் ராஜயத்தைப் பெறுவதற்கு முயற்சிசெய்யவேண்டும்.

**வீரமா.**—அப்படியே செய்கிறது.

**நாராயண.**—பிரபுக்களே! இன்றையதினம் நமது மகனும், மருமகளும் வந்துவிட்டார்களாகையால் ஒரு பெரிய விருந்து செய்யவேண்டும். அதற்கு வேண்டியவைகளை யெல்லாம் சேகரஞ் செய்யுங்கள். புது மாமிசம், நறுந்தேன், பழவர்க்கங்கள், மீன், கிழங்குகள் முதலியவைகள் எல்லாம் கொண்டுவாருங்கள். நாமும்போவோம்.

(எல்லோரும் போதல்).

ஐந்தாங் களம்.

## டில்லியில் சக்கிரவர்த்தி ஆக்பருடைய அரண்மனை மண்டபம்.

(ஆக்பர், மானஸிம்மன், பிரபுக்கள் முதலியோர் வீற்றிருத்தல்.)

**ஆக்பர்.**—மானஸிங்! நமக்கு ஒரு விருப்பமிருக்கிறது. அதைச் சொல்லுகிறோம்; கேட்டுக்கொண்டு அதன்படி நடந்து நிறைவேற்றும்.

**மானஸிம்மன்.**—அப்படியே நடக்கச் சித்தமாகவிருக்கிறேன்.

**ஆக்.**—இன்னும் ரம்ஜானுக்கு ஒரு மாதமிருக்கிறது. அது கழிந்ததும் ஒரு பெரிய தர்பார் நடத்தவேணுமென்

றிருக்கிறோம். அதற்கு நமது ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு அரசனும் அவரவர்களுடைய குமாரர்களோடும் பிரபுக்களோடும் வந்து விஜயம் செய்யவேண்டும். எவன் வரத்தவறுகிறானோ அவனுக்குத் தகுந்த தண்டனை விதிப்போம். இவ்விதமாக ஓர் விளம்பரம் எழுதியிருக்கிறோம். இதைப்படியும். (ஒரு கடிதத்தைக் கொடுத்தல்).

மான.—(கடிதத்தை வாங்கிப்படித்தல்) "அல்லாவின் துணை. பிஸ்மில்லாஹி: இந்துஸ்தான் முழுமையும் ஒரு குடைக்கீழாளும் ஜிலாலுடீன் மகம்மது ஸுல்தான் ஷா ஆக்பர் மகாசக்கரவர்த்தியிடமிருந்து, அவர்களுடைய ராஜ்யத்திலுள்ள சகல சிற்றரசர்களுக்கும் தாக்கீது. இந்த ரம்ஜான் பண்டிகை கழிந்தபிறகு வரும் பௌர்ணமியன்றையதினம் நமது பட்டினமாகிய டில்லியில் ஒரு பெரிய தர்பார் நடக்கப்போகிறது. அதற்கு நமது நாட்டிலுள்ள அரசர்கள், அரசகுமாரர்கள், ஸர்தார்கள், ஜாகிர்தார்கள், ஜெமீன்தார்கள், பிரபுக்கள், வித்வான்கள், முதலிய எல்லோரும் வரவேண்டும். வெகு தூரத்துக்கப்பாலுள்ளவர்களும் வர வேண்டியதற்காகவே தர்பார் பின்பு நடக்கிறது. உண்மைக் காரணமில்லாமல் வீண் சாக்குப்போக்குச் சொல்லி வராமலிருப்போர் எல்லாரும் நமது அப்பிரீதியையும் கோபத்தையும் சம்பாதித்துக்கொள்வார்கள். இந்தத் தாக்கிதைக் கண்ட தக்ஷணமே ஒவ்வொருவரும் பதில் அனுப்பவேண்டியது. அவரவர்களுக்கு வேண்டிய சவுகரியங்கள் இங்கு செய்துவைக்கப்படும். ஒவ்வொருவரும் தகுந்த மரியாதையுடன் வரவேண்டியது. இதில் எள்ளளவும் தவறக்கூடாது. சுபர்தார். பிஸ்மில்லாஹி."

ஆக்.—போதுமல்லவா?

மான.—போதும், மகாராஜ் ஸுல்தான்.

ஆக்.—நமக்குக் கீழ் எத்தனை சிற்றரசர்களிருக்கிறார்களோ அவ்வளவுபேருக்கும் இந்தத் தாக்கீது நகல்கள் அனுப்பப்படவேண்டும். ஹிந்துக்களாகிய சிற்றரசர்களுக்கு நமது "லால்பாக்" அரண்மனையையும் "சந்திரமஹா"லையும் ஒழித்து விடுதிகள் ஏற்படுத்துங்கள். மற்றையோர்களுக்கு "ஆக்பர் மஹால்" தெருவிலுள்ள அரண்மனைகளில் ஏற்பாடு செய்யுங்கள். நகரெல்லாம் இப்போதே தொடங்கி அலங்கரிக்கப்படவேண்டும். ஒன்றும் குறைவிருக்கக்கூடாது. தெரிந்ததா?

மான.—ஒன்றும் குறைவில்லாமல் செய்துவிடுகிறேன், ஸுல்தான்.

ஆக்.—சரி, பொழுதுபோய்விட்டது. நாம் தொழப்போகவேண்டும். மற்றை விஷயங்களெல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளுவோம்.

(எல்லோரும் போதல்.)

## அங்கம் 2.

### முதலாவது களம்.

### பிரதாபநகரத்தைச் சேர்ந்ததோர் காடு.

(நாராயணதாசனும் வீரமாதேவனும் பரிவாரங்களுடன் வருதல்.)

நாராயணதாஸ்.—பிரபுக்களே ஆக்பர் அனுப்பிய தாக்கீதைப் பார்த்தீர்களா? எல்லோரையும் தர்பாருக்கு அழைத்திருக்கிறன். நாமும் போகலாம்.

வீரமாதேவன்.—பிரபுவே! நம்மை நாட்டை விட்டுத் துரத்திய ஆக்பர்முன்னே நாம் போவதா?

நாரா.—அதனல் பாதகமொன்றுமில்லை. ஒருவேளை நம்முடைய ராஜ்யத்தைத் திரும்பிக் கொடுத்தாலும் கொடுப்பான்.

வீர.—ஏது, எனக்குத்தோன்றவில்லை. அவனைக் கெஞ்சுவது வீரத்தனமாகாது. க்ஷத்திரிய தருமமுமன்று.

நரஸிம்மதேவன்.—ஆண்டவனே! நாம் போவதில் பாதகமொன்றுமிருக்கமாட்டாது. நம்முடைய ராஜ்யத்தைத்தான் பிடுங்கிக்கொண்டுவிட்டான். இனி நம்மையென்னசெய்யமுடியும். மேலும் தர்பார் எதற்காகவென்றும் நாம் அறிந்துகொள்ளலாம்.

பிருதிவிஸிம்மன்.—பிரபுவே! நாமும் போகலாமென்றேதோன்றுகின்றது. நமக்கு வேண்டியவர்ளில் பலர் வருவார்கள். அவர்கள் மூலமாக ஆக்பரையும் நாம் கண்டுபேசலாம். நம்முடைய காரியமும் கைகூடும்.

வீர.—நமது வீரமுள்ளவரையில் நாம் ஏன் பிறரைக்கெஞ்சவேண்டும்?

நாரா.—அப்படியல்ல. ஒரு காரியத்தைச்செய்வதில் சாம தானபேத தண்டமென்னும் நால்வகை உபாயத்தை

யும் யோஜிக்கவேண்டும். காரியம் எளிதில் முடிவதாகவிருந்தால் நாம் என் வீணில் கஷ்டப்படவேண்டும்?

வீர.—ஒருவேளை ஆக்பர் நம்மையெல்லோரையும் கொன்றுவிடுவதற்காக இந்த தர்பார் கூட்டுகிருனே என்னவோ?

பிரு.—ஆக்பர் அப்படிச் செய்யவே மாட்டான். அவனுடைய மனம் கெட்ட வழிகளில் செல்லாது.

வீர.—அப்படியானல் தர்பார் கூட்டுகிற காரியத்தை என் வெளிப்படுத்தவில்லை?

பிரு.—அது தான் ராஜ்ய தந்திரம். வெளிப்படுத்தினல் அதற்கு ஏதாவது இடையூறு உண்டாகலாம்.

நாரா.—எப்படியிருந்தாலும் நாம் ஜாக்கிரதையாகவே போவோம்.

நர.—போகாமலிருந்தால் எப்படியும் தெரிந்து விடும், கடைசியில் நமக்கு இன்னும் கெடுதியுண்டாகும்.

நாரா.—எல்லாவற்றுக்கும் போவோம்; ஏதாவது கெடுதியுண்டானல் நம்முடைய தைரியம் எங்கே போய் விட்டது? வீரம் எங்கே போய் விட்டது?

பிரு.—கேடு நேர்வதாக விருந்தால் நமக்கு மாத்திரமா? நம்மைப் போல எவ்வளவு பேர் வருவார்கள். எல்லாரையும் சேர்ந்தாற் போல ஆக்பர் கெடுதி செய்ய மாட்டான். மேலும் அவனுடைய முதல் மந்திரியாகிய ராஜா மானஸிம்மன் அப்படிப்பட்ட கெட்ட காரியங்களைச் செய்யவிடமாட்டான்.

நாரா.—ஆமாம், எல்லோருக்கும் நேர்வது நமக்கும் நேரட்டும். நாம் போக வேண்டியது அவசியமென்று தோன்றுகிறது.

வீர.—நீங்கள் எல்லோரும் போகும்போது எனக்குமாத்திரம் என்னவேலை இங்கு? நானும் வந்து உங்களுடன் சுகதுக்கங்களை யனுபவிக்கிறேன்.

நாரா.—நல்லது. நாம் புறப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நரஸிம்மதேவரே! நீர் போய் பல்லக்குக்கும் மற்றை ஆயுதங்களுக்கும் ஏற்பாடு செய்து வாரும். நாங்கள் மற்றையேற்பாடு செய்கிறோம்.

(எல்லோரும் போதல்.)

## இரண்டாங் களம்.

### டில்லி அரண்மனை மண்டபம்.

(ஆக்பர், மானஸிம்மன் முதலியவர்களும் தர்பாருக்கு வந்த அரசர்களும் அவரவர்கள் தகுந்தபடி வீற்றிருக்கின்றனர். வீரமாதேவனும் நாராயணதாஸனும் ஒரு பக்கத்தில் இருக்கின்றனர்.)

ஆக்.—ராஜா மானஸிங்! தர்பாருக்கு எல்லோரும் வந்துவிட்டார்களா? வராதவர்களும் உளரோ?

மான.—ஸுல்தான்! எல்லோரும் வந்துவிட்டார்கள். மேவார் மகாராணாவாகிய பிரதாபஸிம்மனும், கோடா தேசத்ததிபதியாகிய நவாப் நஸ்ருல்லாகான் பகதூரும் வரவில்லை. மற்றையோர்களில் பெரும்பான்மையோர் சபைக்கு வந்துவிட்டார்கள். சிலர் தங்கள் தங்கள் விடுதிகளினின்றும் வந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆக்.—வராதவர்களுடைய சமாதான மென்ன?

மான.—ஸுல்தான்! நஸ்ருல்லாகான் பகதூருக்கு உடம்பு சௌக்கியமில்லையாம். ஆதலால் அவருக்குப் பதிலாக அவரது முதல் ஸர்தாராகிய மீர் முகம்மது கான் வந்திருக்கிறார்.

ஆக்.—சரி! நல்லது. ராணா என்ன சொல்லுகிறான்.

மான.—ஸுல்தான்! சமாதானமும் வரவில்லை. பிரதிநிதியும் வரவில்லை. வரமாட்டார் போல் தோன்றுகின்றது.

ஆக்.—என்ன துணிவு! நம்முடைய உத்திரவைக் கீழ்படியாதவர்களும் இருக்கிறார்களா?

மான.—இதுவரையிலும் முடி வணங்காத பிரதாபஸிம்மனே இன்னும் வணங்காமலிருக்கிறான்.

ஆக்.—இவ்வுலகத்தில் நிலை பெற்றது எது? செல்வம் அழிந்து போகின்றது; பூமி பிறர்பாற் போய்விடுகின்றது. யாக்கையும் அழிந்து போகின்றது. அழியாமல் நிற்பது புகழும் பேருமே. இவ்வுலகத்திலுள்ள அரசர்களிலெல்லாம் மேலானவன் பிரதாபஸிம்மன். நம்மால் நாட்டை யிழந்து காட்டில் வசித்துப் பலவிதமான கஷ்டப்படுகையிலும் மானத்தைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறானே: இதல்லவா வீரம்? இதல்லவா க்ஷத்திரிய தருமம். அப்பிரதாபஸிம்மனைப் போல இனி யெவர் பிறக்கப்போகிறார்கள். இந்த சபையில் அவனுக்கு வேண்டியவர்கள் யாரேனு மிருந்தால் அவர்கள் அவனிடம் போய் நான் சொல்லிய வார்த்தையைச் சொல்லட்டும்.—அதென்ன முரசோசை கேட்கின்றதே. அரண்மனை மண்டபம் வரையிலும் முரசோசையுடன் வருபவன் யாவன்?

மான.—ஸுல்தான். வருபவர் பண்டிதேசத்து ராவ்ஸிராஜ்மாலன். அவ்வாறு வாசற்படி வரையிலும் முரசொலியுடனும் வரலாமென்று அவருக்கு மாத்திரம் அதிகாரம் உண்டு. ராஜசபையில் அவருடைய பிரபுக்கள் மாத்திரமே ஆயுதபாணிகளாக வரலாம்.

ஆக்.—மறந்துவிட்டேன். நாமே தாம் அவருக்கு இம்மரியாதைகளைச் செய்தோம்.

(ஸிராஜ்மாலன் வருதல்).

ஸிராஜ்மால், வாரும்.

ஸிராஜ்மால்.—ஸுல்தான்! தங்கள் உத்திரவுப்படியே வந்துள்ளேன். எனது பிரபுக்களும் கூடவே வருகிறார்கள்.

ஆக்.—நல்லது; உங்கள் இடங்களில் உட்காருங்கள்.

(இரண்டு போர்வீரர்கள் வெகுவேகமாய் ஓடிவந்து ஆக்பருக்குச் சலாம் பண்ணுகிறார்கள்).

என்ன, என்ன? ஏன் ஓடிவருகிறீர்கள்? என்ன சமாசாரம்?

போர்வீரர்.—ஸுல்தான், ஜிலாலுடீன்! அரண்மனை மிருகாசயத்திலிருந்து கூட்டை யுடைத்துக்கொண்டு ஒரு புலி புறப்பட்டு அந்தப்புரம் பக்கத்தில் ஓடுகின்றது. எங்களால் பிடிக்க முடியவில்லை. எஜமானர்களிடம் சொல்வதற்கு ஓடிவந்தோம்.

ஆக்.—ஜமேதார்! நூறு சிப்பாய்களையனுப்பி, அப்புலியைக் கட்டிப் பிடித்துவா. உயிருடன் பிடிக்கமுடியாமற் போனால் கொன்றுவிடு.

ஜமே.—ஸுல்தான்! மிகுந்த கோபத்துடன் ஓடிவருகிற புலியை மனிதர்கள் எதிர்த்துப் பிடிப்பார்களா?

ஆக்.—ஆனால் நமது பாய்ஸாகிப்புகள் எல்லோரும் புலி வாய்க்கு இரையாக வேண்டியது தானா?

ஜமே.—அவர்கள் எல்லாரும் பத்திரமாயே யிருப்பார்கள். புலி அங்கே போகாது.

ஆக்.—அங்கே போகும், போகாது என்பதைப் பற்றி நான் கேட்கவில்லை. சரி, உன்னைப்பற்றி பிற்பாடு விசாரணை செய்வோம்.— பிரபுக்களே! அரசர்களே! உங்களில் யாராவது ஒரு வீரன் அப்புலியை அடக்கும்படியானவன் இருக்கிறானா? இருந்தால் வரட்டும்.—ஒருவருமில்லையா? எல்லாரும் ஸ்திரீகளா? வீரன் ஒருவருமில்லையா? நமது நாட்டில் புலி புகுந்து விட்டது அதைச் கொல்ல வல்லவன் ஒருவனுமில்லையா?

வீர.—ஸாஹேல்தான், இதோ இருக்கிறேன்.

ஆக்.—நீ யார்?

வீர.—உயிரோடிருக்கும் புலியைப் பிடித்து வரத் தைரியம், மனிதர்களில் ராஜபுத்திரர்களுக்கே யுண்டு; வேறு ஒருவருக்கும் கிடையாது. ராஜபுத்திரன் புலியைக் கொன்றாலும் கொன்று விடுவான்; அல்லது ஒருவேளை அப்புலி கையால் அவன் இறந்து போவான். நான் ஓர் ராஜபுத்திர வீரன். என் பேர் வீரமாதேவன் என்பது. எனது நாட்டைப்பிடுங்கிக்கொண்ட சக்கரவர்த்திக்கு நான் நன்மையே செய்கிறேன்.

ஆக்.—உம்முடைய ராஜ்யம் உமக்குக் கிடைக்கும்; நீர் சொல்லிய வார்த்தைகளாலேயே சந்தோஷமடைந்தேன். இனி நீர் அப்புலியண்டை வெகு சீக்கிரமாகப் போம். நீர் வருகிற வரையில் இங்கே தானே பத்திரமாக விருக்கிறோம்.—(வீரமாதேவன் போதல்).—ஜமேதார்! அரண்மனை வாயிற் கதவைப் பூட்டிவிடு. சிப்பாய்களெல்லாரும் உருவிய கத்திகளுடன் நிற்கட்டும்.—மானஸிங்! அவன் யாவன்?

மான.—ஸாஹேல்தான்! அவர் பிரதாப நகரத்து நாராயண தாஸரின் மகன். வெகு பராக்கிரமசாலி. எனக்குக் கூட ஒரு சமயத்தில் உதவிபுரிந்திருக்கிறார். நாராயணதாஸரும் இதோ இருக்கிறார். அவர்கள் நாட்டை யிப்போது நவாப் அப்தல் ஆலி கான் நமக்காகப் பார்த்து வருகிறார்.

ஆக்.—நாராயணதாஸ்! உம்முடைய குமாரனின் வீரத்துக்கு மெச்சினேம். உமக்கு நியாயம் கிடைக்கும். உமது குமாரன் ஜயசாலியாய் வரட்டும்.

(திரை வீழ்தல்).

## மூன்றாங் களம்.

### சிற்றரசர்கள் தங்கி யிருக்கும் விடுதி.

(உக்கிரசேனன், பார்க்கவஸிம்மன், ரணமாலன் வருதல்.)

உக்கிரசேனன்.—என்ன வீரம், பார்த்தீர்களா! ஒரு புலியுடன் சண்டைசெய்து அதைக் கொன்றுவிட்டு வந்தானே! அவனல்லவா வீரன்!

பார்க்கவஸிம்மன்.—அதை எப்படிக் கொன்முன்?

ரணமாலன்.—முழுவதிலும் மஞ்சளாடையைப் போர்த்துக் கொண்டு, புலி போகும் வழியில் நின்முன். இவனைக் கொன்று தின்பதற்குக் கோபத்தோடு வந்த புலி காலைத் தூக்கிய சமயத்தில் அக்காலைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு அதைக் கீழே தள்ளி விட்டான். அது மறுபடியும் வீராவேசத்துடன் கிளம்பி வாயைத் திறந்துகொண்டு வருகையில், தன் இடதுகையிலிருந்த வாளை அப்புலிவாயில் கொடுத்துத் திருப்பினுன். உடனே அது கீழே விழுந்துவிட்டது. பிறகு வீரமாதேவன் அதைத்தூக்கித் தோளின்மேற் போட்டுக் கொண்டு ராஜசபைக்கு வந்தான்.

உக்.—வரும்போது அவன் உடம்பெல்லாம் ரத்தமயமாக விருந்தது.

ரண.—அவனுடைய உடம்பில் புலியின் நகங்களாலும் பற்களாலும் அறுபத்தேழு காயங்களிருந்தன. அதையெல்லாம் லக்ஷியம் பண்ணவேயில்லை.

பார்.—புலி எப்படிக் கூட்டினின்றும் தப்பியோடிவந்தது?

உக்.—ஆகாரம் கொண்டுபோய்ப் போடுபவன் கூட்டைத் திறந்துவைத்து விட்டுப்போனுனும். போதாதகுறைக்கு இரண்டு நாளாக அதற்கு ஆகாரமே கிடையாதாம்.

பார்.—வெகுபேரைக் கொன்றுவிட்டதாமே?

ரண.—அதிகமாக ஒன்றுமில்லை. மூன்றுசிப்பாய்களும் நான்கு வேலைக்காரர்களும் இறந்துபோய்விட்டார்கள். சிப்பாய்களில் பலபேர்களுக்குப் பலமான காயங்களாம். குதிரைகளிலும் அநேகம் போய்விட்டனவாம்.

உக்.—இன்னும் கொஞ்சநேரமிருந்தால் நாமெல்லோரும் அதோகதியாய்ப் போயிருப்போம். ஏதோ தெய்வ வசத்தால் தான் பிழைத்தோம்.

பார்.—சக்கரவர்த்தி என்ன வெகுமானம் செய்தார்?

ரண.—விலைமதிக்கப்பெறாத ஆடையொன்று, வைரக்கற்களிழைத்த பதக்கம் ஒன்று. உத்தமஜாதிக் குதிரையொன்று, ஒரு வாள், ஒரு தலையணி இவைகளை வீரமாதேவனுக்குக் கொடுத்தார். அவர் தகப்பனாராகிய நாராயணதாஸருக்கு அவருடைய ராஜ்யத்தைக்கொடுத்துவிட்டார்.

பார்.—பேஷ்! நல்ல வெகுமதி. தலையிற்றுணியைப் போட்டுக்கொண்டு வந்தவனுக்கு ராஜ்யம் கிடைத்துவிட்டதே. நல்ல அதிருஷ்டம் தான்.

ரண.—வீரமாதேவன் யார் தெரியுமா?

பார்.—யார்?

ரண.—அவந்திபுரத்து விஜயபாலன் மருமகன். ஸிரோஹி சூடா சந்திரனுக்குக் கொடுப்பதாக ஏற்பாடு பண்ணியிருந்த ரேணுகாதேவியை அபகரித்துக்கொண்டு போனவன் இவன் தான்.

உக்.—அபகரித்துக்கொண்டு போகவில்லை. விஜயபாலன் மனமொப்பிக் கலியாணம் செய்துகொடுத்தான்.

ரண.—எப்படியானால்தானென்ன? 'காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்றுவந்தவன் கொண்டுபோனான்' என்பதுபோல வீரமாதேவன் கொண்டுபோய்விட்டானல்லவா?

பார்.—அதைப்பற்றியெல்லாம் நமக்கென்ன? எத்தனையோ விஷயம் நடக்கிறது.—இப்போது நம்மை சக்கரவர்த்தியழைத்தது எதற்காக?

உக்.—மாதந்தோறும் ஒன்பது நாளைக்கு நடக்கிற சந்தைத் திருவிழாவுக்காகத்தான்.

பார்.—சந்தையில் என்ன விசேஷமுண்டாகும்?

உக்.—ஒவ்வொரு ஹிந்து ஸ்திரீயும் தங்கள் தங்களிடத்துள்ள அருமை வஸ்துக்களை அச்சந்தையில் விலை கூறக்கொண்டு வரலாம். அரண்மனை ஸ்திரீகளும் மற்றைஸ்திரீகளும் என்ன விலை சொன்னாலும் கொடுத்து வாங்கவேண்டியதுதானும். இச்சந்தை ஒன்பது நாளைக்கு நடக்குமாம்.

ரண.—கண்டுகொண்டேன், இதனுடைய பொருளை; நம்முடைய ஸ்திரீகளின் மானம் குலைந்துவிடும். அரசனும் மற்றையோரும் ஸ்திரீவேஷம்பூண்டு சந்தைக்கு வந்து நமது இந்திய ஸ்திரீகளின் மானத்தை விலைக்கு வாங்கப்போகிறார்கள். இதுதான் இச்சந்தையினின்றும் விளையும் நன்மை.

பார்.—இருக்கலாம், இருக்கலாம்; அம்மாதிரியே செய்வார்கள். மேலும் சந்தை நடக்கிற இடம் சக்கரவர்த்தியின் அரண்மனைக்குள்ளேயாம். ஏன் வெளியில் நடத்தக்கூடாது.

ரண.—எல்லாம் தங்கள் தங்கள் காரியம் முற்றுப்பெறுவதற்குத்தான். நமது ராஜபுத்திர ஸ்திரீகளின் கற்பு அழிந்துவிடப்போகிறது. துருக்கர்களுக்குப் பெண்ணைக்கொடுத்து மானங்கெட்ட பிழைப்பு பிழைப்பவர்கள் தாம் இனி நன்மையுடன் வாழ்வார்கள்.

உக்.—நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இச்சந்தைத் திருவிழா நன்மைக்காகத் தோன்றவில்லை போலும்.

ரண.—நன்மையேது? நமது நாட்டை யிழந்தோம்; புகழ் செல்வம் முதலியவற்றை யிழந்தோம். இனி நமது ஸ்திரீகளையும் இழந்துவிடுவோம்.

உக்.—அப்படியிருந்தால் ராஜா மானஸிம்மன் கூட இதற்குச் சம்மதிப்பானா?

ரண.—சம்மதிக்காமற் போனால், அவனதுயிரும் போய் விடும். துருக்கனோடு சம்பந்தஞ்செய்து மானத்தைக் குலைத்துக்கொண்டவன் வேறு என்னதான் செய்யத் துணியான்?

உக்.—நாமெல்லோரும் என்ன செய்கிறது?

பார்.—இதெப்படி முடிவதென்று பார்ப்போம்; பிறகு மற்றை யோஜனை செய்வோம்.

(மூவரும் போதல்).



## அங்கம் 3.

முதலாவது களம்.

பிரதாபநகரத் தரண்மனை.

(நாராயணதாஸன் இறக்குந்தருவாயிலிருக்கிறுன். பிருதிவிஸிம்மன், ராயஸிம்மன், அமரஸிம்மன், நரஸிம்மதேவன் முதலியோர் கூடவிருக்கின்றனர்.)

நாராயணதாஸ்.—பிரபுக்களே! பேசாமலிருங்கள் கொஞ்ச நேரமாயினும். மிகுந்த சிரமமாகவிருக்கிறது. சற்று நேரம் பாட்டு கேட்டால் நன்றாகவிருக்குமென்று தோன்றுகிறது.

பிருதிவிஸிம்மன்.—பக்கத்து அறையில் சங்கீதக்காரர்களைக் கூப்பிட்டுப் பாடச்சொல்லுங்கள்.

நாரா.—எனது கிரீடத்தையும் செங்கோலையும் என் படுக்கையின்மீது வையுங்கள்.

நரஸிம்மதேவன்.—கண் சுழலுகின்றதே: உடம்புகூட மாறுபாடடைகின்றதே: பாருங்கள்.

பிரு.—பேசாதேயுங்கள், பேசாதேயுங்கள்!

வீரமாதேவன் வருதல்.

வீரமாதேவன்.—ராயஸிம்மனை எங்கேயாவது கண்டதுண்டா?

ராயஸிம்மன்.—அண்ணு, இதோவிருக்கிறேன்.

வீர.—அரசருக்கு உடம்பு எப்படியிருக்கின்றது?

நர.—வெகு கெடுதலாகத்தானிருக்கிறது.

பிரு.—கொஞ்சநேரம் பேசாமலிருங்களேன். அல்லது மெதுவாய்ப் பேசுங்கள். ராஜா தூங்குகிறுற்போலவிருக்கிறது.

நர.—அப்படியானல் நாமெல்லோரும் வெளியில் போய்விடுவோம்.

பிரு.—யுவராஜ்! தாங்களும் கூட வருகிறீர்களோ?

வீர.—நீங்கள் போங்கள்; நான் பக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

(வீரமாதேவனைத்தவிர மற்றையோர் போதல்).

நாரா.—(விழித்துக்கொண்டு) குழந்தாய்! எனது காலம் குறுகிவிட்டது. இன்னும் இரண்டு நாழிகைக்குள் எனது பிராணன் போய்விடும். எனக்குப்பின் நீ தான் அரசனுகவேண்டும். உனது மாற்றாந்தாய் மகன்களான ராயவஸிம்மன், அமரஸிம்மன் இருவரையும் அவர்களுடைய தங்கை கமலாவதியையும் நன்றாக ஆதரித்துவா. பிராம்மணர்களைக் காப்பாற்று. அவர்களால் தான் நம் குலம் நசித்துப்போகாமல் வந்தது. நமது முன்னோரான குகனைக் காப்பாற்றியவள் ஓர் பார்ப்பினியல்லவா? பத்தினிப்பெண்டிரையும் ஏழை ஜனங்களையும் வருத்தாதே. மற்றப்படியெல்லாம் உனக்கு நல்வழி சொல்வதற்கு உன் மந்திரி முதலியோரிருக்கின்றனர்.—அவர்களைக் கூப்பிடு.

(வீரமாதேவன்போய்த் திரும்பிவருதல். எல்லோரும் உடன்வருதல்).

வீர.—எல்லோரும் வந்திருக்கிறார்கள்.

நாரா.—பிரபுக்களே! நீங்கள் அனைவரும் எனக்குத் துணைசெய்ததுபோல என் மகனுக்கும் துணை செய்யுங்கள். அவன் அறியாப் பிராயத்தான். ஆக்பரோடு செய்த சண்டையில் இழந்த ராஜ்யம் அவனாலே தான் மீட்டும் நமது கைக்கு வந்தது. அதை நன்றாய்ப் பரிபாலிக்கவேண்டியது உங்கள் கடமை.

பிரு.—ஆண்டவனே! தாங்கள் சொன்னபடியே செய்யக் காத்திருக்கிறோம்.

ராய.—ஐயா! எனக்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? சேனாதிபத்யம் எனக்குக் கொடுங்கள்; அல்லது ராஜ்யத்திலோர் பாகத்தையாவது பங்கிட்டுக்கொடுங்கள்.

நாரா.—அப்பா! அம்மாதிரியெல்லாம் முரட்டுத்தனம் செய்யாதே! உனக்கு அனுபவம் போதாது. உன் அண்ணன் சொற்படி நடந்துவா. உனக்குக் குறையொன்றுமே வாராது.

ராய.—(தனக்குள்) எனக்கு ஒன்றும் கொடுக்காவிட்டால் நானே அரசனாவதற்கு ஏற்பாடு செய்துவிடுகிறேன்.

நாரா.—குழந்தாய்! நமக்கு ஆக்பருடைய துணையிருக்கும் வரையில் பயமில்லை. அத்துணையை யிழந்துவிடாதே. —அதிகமாகப் பேசமுடியவில்லை. என்னை எடுத்துக் கொண்டு போங்கள்.

(நாராயணதாஸனை எடுத்துக்கொண்டு எல்லோரும் போதல்).

இரண்டாங் களம்.

பிரதாபநகரத் தெருவீதி.

(நாலைந்துபேர் வருதல்).

முதலாவதவன்.—அரசர் இறந்துபோய்விட்டனராம்; அரண்மனை முழுவதும் அழுகைக்குரல்தான் கேட்கின்றது.

மூன்றாவதவன்.—யுவராஜர் தாம் ராஜ்யத்துக்கு வருகிறாராம்.

இரண்டாவதவன்.—ஆமாம்; அவருக்குத் தான் வரவேண்டும். கையைவிட்டுப்போன ராஜ்யம் திரும்பிவந்தது அவராலே தானே.

நான்காவதவன்.—நமக்கென்ன; யார் ஆண்டால் தான் என்ன? ராமன் ஆண்டாலென்ன? ராவணன் ஆண்டாலென்ன?

முதலா.—அவ்வளவு அசிரத்தையாகவிருக்கலாமா? நம்முடைய ராஜா நன்மையாக ஆளுவாரானல் நமக்கும் நன்மைதானே.

மூன்ரு.—அப்படியில்லை; பெரிய ராஜாவுக்கு ராயஸிம்மரிடத்தில் தான் அதிகப்பிரியம்.

இரண்டா.—எப்படியிருந்தாலும் மூத்த குமாரன் தான் ராஜ்யத்துக்கு வரவேண்டும்.

முதலா.—யார் ராஜாவாகவிருந்தாலும் நாம் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது நம்முடைய கடமைதான்.

மூன்ரு.—ராயஸிம்மன் ராஜ்யத்துக்கு வருவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்வாரோ? அதோவருகிற குதிரைக்காரன் எல்லோரையும் வெருட்டிக்கொண்டு போகிருனே, ஏன்?

(குதிரைக்காரன் வருதல்).

குதிரைக்காரன்.—போங்கள், போங்கள்; வழியைவிட்டு விலகிவிடுங்கள். பெரிய மகாராஜாவின் களேபரம் இவ்வழியாய்த் தான் போகின்றது. ஒருவரும் வீதியில் இருக்கக்கூடாதென்று மகாராஜாவின் உத்தரவு. போங்கள், போங்கள்.

(எல்லோரும் போதல்).

### மூன்றங் களம்.

பிரதாபநகரம்: ஓர் தனிவீடு.

(ராயஸிம்மன், அமரஸிம்மன், வருதல்.)

ராயஸிம்மன்.—தம்பி! எத்தனை நாள் நாம் இவ்வாறு கஷ்டப்படுகிறது. நம்முடைய அண்ணன் நம்மை இவ்வாறு வருத்துகிருனே. நாம் ஏன் பொறுத்துக்கொண்டு வாழவேண்டும்.

அமர.—என்னுடைய அதிகாரத்தைப் பிடுங்கிக்கொண்ட பிறகு அவனிடம் எனக்கு இருந்த கொஞ்ச விசுவாச

மும் மாறிப்போய்விட்டது. ஆனால் நான் செய்தது பிழைதான்.

ராய.—நாம் நம்முடைய தங்கை கமலாவதியிடம் போய் விடுவோமா ?

அமர.—அங்கே போய் வீணாகக் காலங்கழித்துக்கொண்டிருந்தால் ஜனங்கள் நம்மை ஏசமாட்டார்களா? போனால் ஜயபூர் அரசனிடம் துணை கேட்கப்போகவேணும். எனக்கு அது இஷ்டமில்லை.

ராய.—பின்பு, என்னதான் செய்யலாம்? எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.

அமர.—நமது அண்ணன் ஒன்றுமில்லாத விஷயங்களையெல்லாம் பிரமாதப்படுத்திக்கொண்டிருக்கிறாரே. நாம் செய்யப்போகும் யோஜனை அவருக்குத் தெரிந்தால் என்ன செய்யமாட்டார்?

ராய.—நீ ஜயபூருக்குப்போய் கமலாவதியிடம் நம்முடைய கஷ்டத்தைச்சொல்லி, அவள் மூலமாய் அவள் புருஷனிடம் ஏதாவது உதவிகேள். அதற்குள் நான் ஏதாவது ஏற்பாடு செய்கிறேன். நம்முடைய ஜாகிர்கள் நமக்குக் கிடைத்தால் போதுமல்லவா?

அமர.—ஆமாம்; போதும்; கைசோர்ந்துபோன ராஜ்யம் நமது அண்ணனுடைய வீரத்தினாலேயே திரும்ப வந்ததினால், அவன் எல்லாம் தன்னுடையதென்று எண்ணிக்கொண்டிருக்கிறான். என்னவானாலும் அவனுக்கு விரோதமாகப்போவது எனக்குச் சரியெனத் தோன்றவில்லை.

ராய.—அதெல்லாமிருக்கட்டும்; நீ அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, கமலாதேவியைப் பார்க்கப்போவதுபோல் ஜயபூருக்குப்போய், அங்கு நடக்கும் விசேஷங்களை அடிக்கடி தெரிவித்துக்கொண்டிரு. நான்

இங்கேயேயிருந்து ஆகவேண்டியவைகளைச் செய்கிறேன்.

அமர.—நீரும் அடிக்கடி எனக்கு இவ்விடத்துச் சங்கதிகளைத் தெரிவித்துக்கொண் டிருக்கவேண்டும். நான் நாளையதினமே புறப்பட்டுப்போகிறேன்.

ராய.—சரி;—நாம் போவோம். நமது அண்ணன் சபைக் கூட்டுகிற நேரமாயிற்று; நம்மைத்தேடுவார். போவோம் வா.

(இருவரும் போதல்).

## நான்காங் களம்.

## வீரமாதேவன் தர்பார் மண்டபம்.

(வீரமாதேவன் சிங்காதனத்திலிருக்கிருன். மந்திரி முதலானவர்கள் நிற்கிருர்கள். குற்றவாளிகள் பலர் நிற்கின்றனர்.)

வீர.—மந்திரி, நமது சிறைச்சாலையிலிருந்து ஒரு கைதி வெளிப்பட்டு ஓடிப்போகும்படி அவ்வளவு அஜாக்கிரதையாய்ப் பாதுகாத்துக்கொண்டிருந்த காவல்காரன் இவன் தானு?

மந்திரி.—ஆமாம்; மகாராஜ்.

வீர.—(காவற்காரனைப் பார்த்து) நீ என் கைதியை ஓடிப்போகும்படி விட்டுவிட்டாய்?

காவற்காரன்.—ஆண்டவனே! என் பேரில் தப்பிதம் ஒன்றுமில்லை. ஓடிப்போன கைதிக்கு ஒரு கால் இல்லை. நொண்டிக்கொண்டு நடப்பான். அவனை வெளியில் விட்டால் பாதகமில்லையென்று எண்ணினேன். அவன் ஒரு காலுடனேயே ஓடிப்போவானென்று எனக்குத் தெரியாது.

வீர.—மந்திரி, இவன் செய்த பெருங்குற்றத்துக்காக இவனது காலை வாங்கிவிட உத்தரவு கொடுத்திருக்கிறேம். —(காவற்காரனை நோக்கி) நீபோ; என் முன்பே நிற்காதே.

(இரண்டு சிப்பாய்கள் காவற்காரனைப் பிடித்துக்கொண்டுபோதல்).

மங்.—மகாராஜ், இவன் தான் இன்றைய தினம் காலையில் தெருவில் சண்டை செய்துகொண்டிருந்தான்.

வீர.—சரி; அவனது இரண்டு கண்களேயும் பிடுங்கிவிடு; இனிமேல் ஒருவருடனும் சண்டைபோடமாட்டான்.

(அவனை ஒரு சிப்பாய் கொண்டுபோதல்).

மங்.—மகாராஜ், இதோ நிற்கிறவர்களுடைய வழக்குப்புதுமையானது. இவர்களுடைய தகப்பனர் கோபால கிருஷ்ண ஸேட் நிரம்ப தன்வந்தராயிருந்து இறந்துவிட்டார். அவருடைய சொத்தை இருவரும் பங்கிட்டுக்கொண்டதில் ஏதோ வழக்கு வந்ததாம். மகாராஜா முன்னிலையிலேயே சொத்தைப் பாகம் செய்துகொள்ள வந்திருக்கிறார்கள்.

வீர.—நல்லது; நம்முடைய முன்பாக இவர்கள் வந்தபடியால், அவர் சொத்தை மூன்றுபாகமாக்கி, ஒருபாகம் நமக்கும், மற்றை இரண்டு பாகங்கள் இவ்விருவருக்குமாகத் தீர்மானித்துவிட்டோம். அரண்மனைக் கஜானிஜியைக் கூப்பிட்டு அவ்வாறு நிறைவேற்றச் சொல்லும்.—நீங்களிருவரும் போகலாம்.

(வழக்குக்கு வந்தவர் இருவரும் போதல்).

மங்—மகாராஜ், இதோ நிற்கும் ஸ்திரீ வியபிசாரம் செய்ததாக ருசுவாயிருக்கிறது.

வீர.—சரி; நாற்சந்தியில் ஒரு கம்பத்தை நட்டு அக்கம்பத்தோடு இவளைச் சேர்த்துப் பிணித்துவிடு. இன்றைய முழுவதிலும், அவ்வழியாய்ப் போவார்களெல்லோரும் இவள் முகத்தில் காறியுமிழட்டும். அஸ்தமித்த பிறகு பட்டினியாய்ப்போட்ட வேட்டைநாய்களை

அவள் மீது ஏவிவிடு. போ.

(இரண்டு சிப்பாய்கள் அந்த ஸ்திரீயைக் கொண்டுபோதல்).

மந்.—மகாராஜ்; இங்கு இதோ நிற்பவன் கிருஷ்ணப் பிரஸாதருடைய வீட்டில் திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டனையை எதிர்பார்க்கிறான். திருட்டுச்சொத்தும் கன்னக்கோலும் இதோ இருக்கின்றன.

வீர.—இவனைப் பதினெட்டு மாதம் சிறையிலடைத்துவைக்க உத்திரவு கொடுத்தோம்.

(காவற்காரர்கள் கள்ளனைக்கொண்டுபோதல்.)

மந்.—மகாராஜ், இவன், அரண்மனைக் குருவாகிய வேங்கடேச சாஸ்திரியாரை இன்றையதினம் காலையில் அடித்துக் காயம் படுத்தியதாக ஏற்பட்டுள்ளது.

வீர.—பிராம்மணனை யடித்த குற்றம் பெரியதாகையால், இவனை ஆறு வருஷங் கடுங்காவலில் வைத்திருந்து பிறகு நாட்டைவிட்டு ஓட்டிவிடு.

(சேவகர்கள் இவனையும் கொண்டு போதல்.)

மந்.—மகாராஜ், இவன் இன்றையகாலையில் குடித்துவிட்டுத் தெருவில் வீழ்ந்துகிடந்தான்.

வீர.—கள்ளுக்கடைக்காரனுக்கு நூறு பொன் அபராதம்; இவனுக்கு நூறு கசையடி.

(கட்குடித்தவன் காவற்காரரால் கொண்டு போகப்படுகிறான்.)

மந்.—மகாராஜ், இன்றையதினம் தண்டனைக்காக இன்னும் பதின்மூன்று குற்றவாளிகள் இருக்கின்றனர்.

வீர.—இன்றைய இரவு அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும்; நமக்கு ராஜாங்க விஷயத்தைக் கவனிக்க இன்றைய பகற்போது சரியாயிருக்கும்; எல்லோரும் இப்போது போகலாம்.

(எல்லோரும் போதல்.)

## ஐந்தாங் களம்.

## பிருதிவிஸிம்மனின் மாளிகை.

(பிருதிவிஸிம்மனும் நரஸிம்மதேவனும் வருதல்.)

நர.—நம்முடைய அரசருக்கு விரோதமாகச் சூழ்ச்சி ஒன்று உண்டாயிருக்கிறதாகக் கேள்விப்படுகிறேனே; அதைப்பற்றி ஏதாவது தெரியுமோ?

பிரு.—எனக்கு ஒன்றுந்தெரியாதே: உமக்கு யார் சொன்னார்?

நர.—(மெதுவாய்) ராயஸிம்மன் நமது அரசனைக் கொன்று விட்டுத் தானே சிங்காதனமேறப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறான்.

பிரு.—ஐயோ! இதென்னவிபத்து! இந்தசமாசாரம் உமக்கு எப்படித் தெரிந்தது?

நர.—அரண்மனைச் சுயம்பாகித்தலைவன் எனது சேவகன் நாராயணனுக்கு உறவினனாம். நேற்றையதினம் காலையில் சுயம்பாகி நாராயணனிடம் ஒரு பொன்னைக்கொடுத்து ஒருவருக்கும் தெரியாமல் வச்சநாபி வாங்கி வரும்படி சொன்னானாம். எதெற்கென்று கேட்க உண்மையைச் சொல்லிவிட்டு, ஒருவருடனும் சொல்லாதே என்று கண்டித்துவிட்டுப் போய்விட்டானாம்.

பிரு.—இது உமக்கு எப்படித் தெரிந்தது?

நர.—இன்றைய காலையில் நாராயணன் என்னிடத்துக்கு வருகையில் அவன் துணியில் ஒரு முடிப்பிருந்தது. அதென்னவென்று கேட்டதும் ஏதோ உளறினான். எனக்குச் சந்தேகம் பிறந்து, உடனே அதை அவிழ்க்கச் சொல்லிப்பார்த்தேன். வச்சநாபியாகவிருந்தது. பயப்படுத்திக் கேட்டதின்பேரில், மகாராஜாவின் சுயம்பாகி வாங்கிவரும்படி சொன்னதாகச் சொன்னான்.

பிரு.—கண்டுகொண்டேன். சென்ற வெள்ளிக்கிழமை சாயந்தரம் ராயஸிம்மனும் அந்த சுயம்பாகியும் தனித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

நர.—சரிதான்; ராயஸிம்மன் ஏவலின்படி சுயம்பாகி நடக்கிறான்போலும். ஏதாவது கெடுதல் நடந்து விடப்போகிறதென்று உடனே அந்த வச்சநாபியை நான் வாங்கிவைத்திருக்கிறேன்.

பிரு.—நல்லவேலைசெய்தீர்; அதை யெடுத்துக் கொண்டு போய் அரசனிடம் காட்டி, சங்கதியைச் சொல்லிவிட்டுவருகிறேன். காலதாமதம் செய்யக்கூடாது. நீரும் வருகிறீரா?

நர.—நான் இப்போது எதற்காக வரவேண்டும்? மகாராஜா கூப்பிட்டனுப்பினல் வருகிறேன்.

பிரு.—சரி, உமது வேலைக்காரனைப் பத்திரப்படுத்தும்.

நர.—ஆகட்டும்; அப்படியே செய்கிறேன்.

(போதல்.)

பிரு.—(தனிமையில்) வேண்டியவன் போலாகவிருந்து கொலைக்குத் துணிந்துவிட்டானே ராயஸிம்மன். இதற்காகத்தான என்னிடம் வந்து பலதரம் நயவார்த்தை பேசினன். அமரஸிம்மனையும் வெளியிலனுப்பிவிட்டு, வெகு ரகஸியமாய்ச் செய்துவிட்டானே. இருக்கட்டும்: இவையெல்லாம் நான் போய் அரசனிடம் சொல்லிவருகிறேன்.

(போதல்).

அரண்மனைத்தனியறை.

(வீரமாதேவனும் பிருதிவிஸிம்மனும் வருதல்).

வீர.—அப்படியானல் நமது சுயம்பாகியும் ராயஸிம்மனுமா நமக்கு விரோதமாகத்தோன்றினர்கள்?

பிரு.—மகாராஜ்! எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. வெகுகாலமாக ராயஸிம்மன் தங்களை வெறுக்கிறான். எல்லாம் தங்கள் சுயம்பாகித்தலைவனைக் கூப்பிட்டுக் கேட்டால் வெளியாகும்.

வீர.—சரி; கூப்பிடுவோம்—யாரடா அங்கே? (ஒரு சேவகன் ஓடிவருதல்) ஓடிப்போய் பெரிய சமையற்காரனைக்கையோடழைத்துவா (சேவகன் போதல்) — ராயஸிம்மன் அவ்வளவு கெட்டவனென்று நான் எண்ணவில்லை.

பிரு.—மகாராஜ்! தங்களுக்குச் சகோதர வாஞ்சை மிக மேலாக விருக்கிறபடியால் தாங்கள் அப்படி நினைக்கிறீர்கள்.— இதோ சுயம்பாகி வருகிறான். (சுயம்பாகி வருதல்.)

சுய.—ஆண்டவனே! கட்டளை யென்ன?

வீர.—பிருதிவிஸிம்மர் சொல்லுவார்.

பிரு.—நீ, நரஸிம்மதேவர் சேவகன் நாராயணனிடம் நேற்றையதினம் காலையில் ஒரு பொன் கொடுத்தாயே, அது எதற்காக?

சுய.—(முகம் வியர்த்து) ஒன்றுக்குமில்லை, நல்ல தேன் வாங்கி வரக் கொடுத்தேன்.

வீர.—உண்மையைச் சொல்லிவிடு; இல்லாவிடில் உன் தலை போய்விடும்.

சுய.—ஆண்டவனே! காப்பாற்றவேண்டும். (அடிபணிதல்). ஏதோ தப்பிதம் செய்துவிட்டேன்; மன்னிக்கவேண்டும்.

வீர.—உண்மையை ஒளியாமல் சொல்லு. எழுந்திரு.

சுய.—(எழுந்திருந்து) ஆண்டவனே! நான் ஒரு பாவத்தையு மறியேன். எல்லாம் ராயஸிம்மர் தான் செய்யச் சொன்னார்.

வீர.—என்ன செய்யச்சொன்னான்?

சுய.—ஐயோ! பத்து நாளைக்கு முன்பு என்னிடம் ஆயிரம் பொன் கொடுத்து, எப்படியாவது தங்களுக்கு இறுதி நேரும்படி செய்யச்சொன்னார். நான் மாட்டேன் என்றேன். பிடிவாதமாகச்சொல்லி, அவ்வாறு செய்தால் அவர் ராஜாவாக ஆவாரென்றும் அப்போது எனக்குப் பெரிய ஜாகீர் கொடுப்பதாகவும் சொன்னார்; பணத்துக்கு ஆசைப்பட்டுச் சம்மதித்தேன். மன்னிக்கவேண்டும், மகாராஜா! ஆண்டவனே! காப்பாற்றவேண்டும்.

வீர.—என் சோற்றைத் தின்றுவிட்டு எனக்கே துரோகம் செய்யவெண்ணினையே: சரி, நீயும் அவனும் சேர்ந்தே மரணமடையலாம்.—யாரங்கே?

(கூப்பிடல்).

(இரண்டு சிப்பாய்கள் வருதல்).

இவனைக் கட்டிக்கொண்டுபோய்ச் சிறையில் போடுங்கள். (சிப்பாய்கள் சுயம்பாகியைக் கொண்டுபோதல்).—பிருதிவிஸிம்மரே! நமது தம்பியென்றும் பாராது ராயஸிம்மரைக் கொன்றுவிடும்படி கொலையாளிகளுக்குக் கட்டளையிட்டுவிட்டோம். நீர் போய் அக்கட்டளை நிறைவேறுகின்றதா எனப்பார்த்துவாரும்.

(இருவரும் போதல்).

## ஆறாங் களம்.

## ராயஸிம்மனின் மாளிகை.

(ராயஸிம்மனும் விக்கிரமதேவனும் வருதல்.)

விக்.—ஏன் உங்கள் முகம் வாட்டமடைந்திருக்கிறது?

ராய.—நேற்றிரவு ஓர் கனக்கண்டேன், அதை நினைத்தால் பயமாகவிருக்கிறது.

விக்.—என்ன கனவு? சொல்லுங்கள் கேட்போம்.

ராய.—எண்ணெதேய்த்துக்கொண்டு தலைவிரிகோலத்துடன் ஓர் எருமையின் முதுகிலேறித் தெற்கு முகமாகப் போனதாகக் கனவுகண்டேன். போகையில் யாரோ ஒருவன் என்னை அடித்தான். உடனே விழித்துக் கொண்டேன். என்ன கேடுவருமோ?

விக்.—ஒன்றும் கெடுதிவராது; பயப்படவேண்டாம்; கனவின்பயன் உண்மையாவது அருமை.

ராய.—எனக்கு ஆயாசமாகவிருக்கிறது நான் சற்று தூங்குகிறேன். நீ இங்கேயே இரு.

(ராயஸிம்மன் தூங்கல்).

(இரண்டு கொலையாளிகள் வருதல்.)

முதற்கொலையாளி.—இவன் யார்?

விக்.—நீங்கள் யார்? இவ்விடத்துக்கு எப்படி வந்தீர்கள்?

முதற்.—நாங்கள் ராயஸிம்மருடன் பேசவந்தோம் எங்கள் கால்களாலே தான் வந்தோம்.

முதற்.—நாங்கள் ராயஸிம்மரை வேலைதீர்த்துவிடப்போகிறோம். நீ ஓடிப்போய்விடு; இங்கிருந்தாயானால் நீயும் அவருடன் போகவேண்டியது தான்.

விக்.—ஏன்? மகாராஜா உத்திரவோ?

முதற்.—இதோ பார் மரண உத்திரவு.

(விக்கிரமதேவன் ஒரு கடிதத்தை வாங்கிப்படித்தல்.)

விக்.—நான் ஓடிப்போகிறேன். எனக்கு இப்போது சாக இஷ்டமில்லை. என் குஞ்சு குழந்தைகள் எல்லாம் நிராதரவாய்ப் போய்விடும்.

(போதல்.)

முதற்.—இவன் தூங்குகிறானே; இப்போதே சரிப்படுத்தி விடலாமா?

இரண்டாங்கொலையாளி.—கூடாது; விழித்துக்கொண்டுவிட்டால், தூங்குகையில் கொன்றார்கள் என்று சொல்லுவானே!

முதற்.—அதென்னடா, முட்டாளைப்போல வார்த்தை சொல்லுகிறாய்? விழித்துக்கொள்ளுவதேதடா?

இரண்.—அவன் விழித்துக்கொள்ளவேண்டாம்; ஜனங்கள் என்ன சொல்லுவார்கள்?

முதற்.—ஜனங்கள் சொல்லுவதை நாம் என் கேட்கவேண்டும்? நமக்கோ இவனைக்கொல்லும்படி மகாராஜா உத்திரவு இருக்கிறது. உத்திரவுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டியது அவசியந்தானே?

இரண்.—எனக்கு இவனைக்கொல்வதற்கு மனம் வரவில்லை. வேண்டுமானால் நீயே கொல்லு.

முதற்.—இவனைக்கொல்லாமற்போனால் நமது உயிர் போய்விடும். ஜாக்கிரதையாய்ப் பிழை.

இரண்.—ஒன்றை நினைத்தால் மற்றொன்றுக்குப் பொருந்தவில்லை. என்ன செய்கிறது? எல்லாம் தலைவன் சொல்லுகிறபடி செய்துதீரவேண்டியதுதானே.—பேசாதே: இதோ இவன் விழித்துக்கொள்ளுகிறான்.

(ராயஸிம்மன் விழித்துக்கொள்ளல்.)

ராய.—நீங்கள் யார்? ஏன் இங்கே வந்தீர்கள்? உங்களைப் பார்க்கையில் யமதூதர்களைப்போலவிருக்கிறதே.

முதற்.—நாங்கள் யமதூதர்களின் வேலைக்காகத்தான் வந்திருக்கிறோம்; ஆனால் யமனுடைய தூதரல்ல; மகாராஜாவின் தூதர்கள் தாம்.

ராய.—ஏன் என்னைக் கொலை செய்யப்போகிறீர்கள்? நான் என்ன தப்பிதம் பண்ணினேன்?

முதற்.—அதெல்லாம் எனக்கென்னதெரியும்? இதோ உன்னைக்கொல்லும்படி உத்திரவிருக்கிறது.

(கடிதத்தைக்காட்டல்.)

ராய.—என்னையேன் கொல்லுகிறீர்கள்? நான் உங்கள் இருவருக்கும் தலைக்கு நூறு நூறு பொன் கொடுத்துவிடு

கிறேன். என்னை விட்டுவிடுங்கள்; நான் எங்கேயாவது ஓடிப்போகிறேன்.

இரண்.—சரி நல்லது; இருநூறு பொன்னைக் கொடுத்து விடு; விட்டுவிடுகிறோம்.

முதற்.—சீ! உனக்கென்ன துர்ப்புத்தியா? கொன்றுவருவதாகச் சத்தியம் பண்ணிவந்தாயே?

இரண்.—நமக்கெல்லாம் சத்தியத்தையும் தர்மத்தையும் பார்த்துக் கட்டுமா? ஏதோ சொல்லுகிறது தான் போவது தான். நமக்கெல்லாம் வெள்ளையப்பன் தானே பிரதானம்.

முதற்.—கூடாது, கூடாது: நாம் விட்டுவிட்டால் நமது உயிர் போய்விடும்.

இரண்.—ஆனால் சரி.

ராய.—ஆனால் என்னை விடமாட்டீர்களா?

முதற்.—நாங்கள் என்ன செய்யலாம்? பின்புறம் தோட்டத்துக்கு வருவீர்களோ?

ராய.—நான் வரமாட்டேன்? நீங்கள் வேண்டுமானால் போகலாம்.

முதற்.—நீ வராமற்போனால் நான் கொண்டுபோகிறேன். இப்போது வருவாயா?

(கத்தியால் முதுகில் குத்தல்.)

ராய.—ஐயோ! கொலை! கொலை.

(கீழே வீழ்ந்திறத்தல்.)

முதற்.—ஒரு கொலைகாரன் தொலைந்தான். நீ இப்பிணத்தைத் தூக்கிக்கொண்டுபோய்க்கொல்லையில் புதைத்துவிட்டு, அவ்விடத்தைபோர் அடையாளமாக நினைத்துவா. நான் போய்ச் சங்கதியைச் சொல்லுகிறேன்.

(இரண்டாங்கொலையாளி பிணத்தைத்தூக்கிக்கொண்டு ஒருவழியாகவும், முதற்கொலையாளி வேறொரு வழியாகவும் போதல்.)

---

# அங்கம் 4.

## முதலாவது களம்.

### வீரமாதேவனரண்மனையிலோர் மண்டபம்.

(வீரமாதேவனும் தத்தாத்திரேயமுனிவரும் வருதல்.)

**வீரமாதேவன்.**—வரவேண்டும், பெரியவரே!

**தத்தாத்திரேயர்.**—ஆசீர்வாதம்! நெடுநாளாயிற்று அரசனைப் பார்த்து.

**வீர.**—பெரியவர்களுக்கு ஒழிவில்லைப் போலிருக்கிறது.

**தத்.**—என் போலியருக்கு ஒழிவேது, ஓய்ச்சலேது? எப்போதும் ஈசுவரனுடைய சரணாரவிந்தத்தைத் தியானம் செய்து கொண்டிருப்பதனால் விஷயாந்தரங்களில் மனஸ் செல்லமாட்டாது. இப்படிப்புறப்பட்டுவந்தேன்: இரண்டொருவார்த்தை சொல்வதற்காக.

**வீர.**—தாங்கள் வருவதைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். என்னையாட்கொண்டருளவேண்டும்.

**தத்.**—இந்த உலகத்தில் உனக்கு முன்னால் அரசாண்டவர்கள் எத்தனைப் பேரென்று தெரியுமா?

**வீர.**—தெரியாது; அநேகரிருக்கலாம்.

**தத்.**—நல்லது, அவர்களில் சிறப்புடனுண்டவர்களெல்லாரும் எங்கே போய்விட்டார்கள்? மாந்தாதா, சிபி, அரிச்சந்திரன், ராமன் முதலிய பிரபலர்கள் எல்லோரும் போய்விட்டார்களல்லவா? ஆதலால் உலகத்தில் நிலைத்திருப்பது இவ்யாக்கையல்லவென்று தெரிந்து கொண்டீரல்லவா?

**வீர.**—யாக்கை நிலையற்றதுதான்: ஆனால் புகழ் நிலையுள்ளது தானே.

தத்.—புகழ்நிலைபெற்றது தான்; ஆனால் மாந்தர்வாழ் வின் அந்திப்பயன் வீடடைவதுதான். அறம், பொருள், இன்பம் எல்லாம் வீட்டுக்குப் போகும் மார்க்கங்கள்; ஆதலால் அரசனே நீர் மோக்ஷமடையும் மார்க்கத்தைத்தேடவேண்டும்.

வீர.—நல்லது; அதற்கு என்ன செய்யவேண்டும்?

தத்.—சிவபெருமானின் சடாமுடியினின்றுவரும் மகோத்தமமான பரிசுத்த கங்காநதியில் ஸ்நாநம் செய்து புண்ணியக்ஷேத்திரங்களையெல்லாம் தரிசித்துவந்தால் பாவம் தீரும்.

வீர.—நான் பாவம் கணக்கில்லாமல் செய்துவிட்டேன். அவையெல்லாங்கழியும் வண்ணம் கங்கைமுதலான நதிகளிலாடியும், தலங்களைச்சேவித்தும், தானம் பல புரிந்தும் வருவேன். நல்லசமயத்தில் என்னை நல்வழிப்படுத்திய பெரியவராகிய தங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்.

தத்.—என்னைப் போன்ற துறவிகளுக்குக் கைம்மாறு எதற்காக? நீர் நன்மையடைவதே கைம்மாறு போலாகும். நான் போய்வருகிறேன்.

வீர.—அப்படியே. அனுக்கிரகிக்கவேண்டும்.

(போதல்).

இரண்டாங் களம்.

ஜெயபூர் அரண்மனை.

(அமரஸிம்மனும் கமலாவதியும் வருதல்.)

அமரஸிம்மன்.—என்ன, ஒரு மாதகாலமாய் நமது அண்ணனிடமிருந்து ஒரு சேதியும் வரவில்லையே! எங்கேயாவது ஊர்களுக்குப் போயிருக்கிறாரோ, என்னவோ, தெரியவில்லை.

கமலாவதி.—ஊர்களுக்குப் போயிருந்தால்தானென்ன? அவ்வவ்விடங்களிலிருந்தேனும்சங்கதியனுப்பலாமே; எங்கேயாவது தேசாந்தரம் போய்விட்டாரோ?

அம.—ஒருவேளை ராஜ்ய விஷயமாய் மகாராஜாவால் வெளியில் அனுப்பப்பட்டிருக்கிறாரோ, என்னவோ, அதுவும் தெரியவில்லை.

கம.—உயிருடன்தான் இருக்கிறாரென்பது என்ன நிச்சயம்? ஒருவேளை கொல்—

அம.—அப்படியிருக்காது; பயப்படாதே. (ஒரு சேவகன் வருதல். அவனைப் பார்த்து) ஏன், என்ன விசேஷம்?

சேவகன்.—ஐயா! பிரதாபநகரத்தினின்றும் ஓர் தூதுவன் வந்து தங்களைப் பார்க்கவேண்டுமென்று வாயிலில் காத்திருக்கிறான்.

அம.—கம.—வரச்சொல்லு; வரச்சொல்லு.

(சேவகன் போதல்).

அம.—நல்லசமயத்தில்தான் வந்தான். ஏதாவது சமாசாரம் நமது அண்ணன் அனுப்பியிருப்பார்.

கம.—இதோ வந்துவிட்டான். (தூதன் வருதல்).

அம.—வா, என்ன சங்கதி ஊரில்? எல்லாரும் சௌக்கியந்தானே?

தூதன்.—ஐயனே! நமஸ்காரம். எல்லோரும் நகரத்தில் சௌக்கியமாக விருக்கிறார்கள். மகாராஜா அவர்கள் காசியாத்திரை போகிறதாக விருக்கிறார்; ஆகையால் தங்களை உடனே கூட்டிவரச்சொன்னார்; மகாராஜா ஊரில் இல்லாதபோது ராஜ்யபாரம் தாங்கள் தாம் செய்யவேண்டுமாம்.

அம.—நமது சின்னண்ணன் எங்கேயானும் போயிருக்கிறாரோ? அவரிடத்திலிருந்து அநேக நாளாய்ச் சமாசாரம் ஒன்றும் வரவேயில்லையே.

தூதன்.—ஐயனே! தங்களுக்கு ஒன்றும் தெரியாதுபோன்றுள்ளது. அவர்—அவர்——

கம.—என்னமென்று விழுங்குகிறாய்? சொல்லேன், சீக்கிரம். அவருக்கென்ன ?

தூதன்.—சொல்லுவதற்கு நாவெழவில்லையே, அம்மணி.—அவர்—

கம.—என்ன, இறந்துபோய்விட்டாரா?

தூதன்.—ஆமாம், அம்மணி.

கம.—ஐயோ, ஐயோ! பாவி! போய்விட்டாரா?

அம.—எப்படி யிறந்துபோனார்? என்ன வியாதி? எத்தனை நாளாயிற்று?

தூதன்.—ஐயனே! ஏதோ மகாராஜா அவர்களை விஷமிட்டுக்கொல்வதாக ஏற்பாடு செய்திருந்தாராம்; அவ்விஷயம் தெரிந்ததும், மகாராஜா, ராயஸிம்மரைக் கொலை செய்துவிட உத்திரவு கொடுத்துவிட்டார்கள். அவர் போய் இன்றைக்கு இருபத்தெட்டு நாளாகின்றது.

கம.—பாவி! இவனு கொலைகாரனாக ஏற்பட்டான்? அண்ணா! அண்ணா! உம்மை இனி எப்போது பார்ப்பேன்.

(அழுதல்).

அம.—அம்மா! அழாதே. அவர் இவ்வளவு நாள்தான் பூமியில் இருக்க பாக்கியம் செய்திருந்தார். (தூதனைநோக்கி) நீ போகலாம். நான் இன்னும் இரண்டு தினத்தில் புறப்பட்டு வருகிறேனென்று மகாராஜாவிடம் சொல்லு.

(தூதன் போதல்).

கம.—எனக்கு முன்னாலேயே தெரியும், இவ்வாறு ஆகுமென்று. நீ போகவேண்டாம்; உனக்கும் அம்மா திரிபான கதியாய்விடும்.

அம.—அப்படியன்று. குற்றமில்லாமற்போனால் மகாராஜா தண்டிப்பாரா? நான் போகவேண்டியது அவசியம்.

நீ அதிகமாய்த் துக்கித்துக்கொண்டு விசாரப்படாதே. தைரியமாகவிரு.

கம.—என்ன தைரியம்? பிறந்து சில நாளிலேயே அன்னையை யிழந்து ஆதரிப்பாரின்றியிருந்த நாளெல்லாம் என்னைத்தேற்றினவர் அவரல்லவா? அவர் இறந்துவிட்டாரென்றால் எனக்குத் துக்கமாகவிருக்காதா?

அம.—போனதுபோகட்டும்: நீ விசாரப்படுவதினால் அவர் எழுந்து வரப்போகிறாரா? என்னவோ, அவர் தலைவிதிப்பயன் அப்படியிருந்தது. நான் போய்வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். நான் வரட்டுமா?

கம.—பெரியண்ணன் காசியாத்திரைக்குப் போய்த்திரும்பும்போது இங்கே வந்துவிட்டுப் போகலாமென்று நூறுதரமாகச் சொன்னதாகச்சொல்லு. அவர் வருவதற்கு நான் தகுந்த ஏற்பாடுகள் செய்துவைக்கிறேன். நீ போ (அமரஸிம்மன் போதல்) (கமலாவதி தனிமையில்) எனது உயிர்போன்ற அண்ணனைக் கொன்றுவிட்டானே; அந்தப் பழிக்குப்பழி வாங்கிவிடுகிறேன். விஷத்தினாலேயே யிவனைக் கொன்றுவிடுகிறேன். என்னைவிட்டு எப்படித்தப்புவான்; பார்ப்போம். யாரங்கே (கூப்பிடல். ஒரு வேலையாள் வருதல்) நீ போய் அரண்மனைத் தையற்காரனைக் கூப்பிட்டுவா. (சேவகன் போதல்) விலையுயர்ந்த உடையொன்று செய்யச் சொல்லி அதின் உட்புறமுழுவதிலும் விஷத்தைத் தடவிக்கொடுத்துவிடுகிறேன். அதைஉடுத்ததும் இறந்துபோய் விட்டும், என் அண்ணனைக் கொன்ற பழிக்கு இதுதான் பதில் பழி. அவனைக்கொல்லாமல் விடுவதில்லை. இச்சங்கதியொருவருக்கும் தெரியாமல் ரகஸியமாயிருக்கவேண்டும்: என் புருஷருக்குத் தெரிந்தால் என்

னையே கொன்றுவிடுவார். நாழிகையும் ஆய்விட்டது; போகிறேன்.

(போதல்).

மூன்றாங் களம்.

பிரயாகை.

(வீரமாதேவனும் ரேணுகாதேவியும் வருதல்.)

ரேணு.—நாதா! இன்னும் எந்தெந்த க்ஷேத்திரங்களுக்குப் போவதாகவிருக்கிறீர்கள். காசி, கயை, அயோத்தி, மதுரை, பதரி, நைமிச முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்தாய்விட்டதே. இங்கு வந்துகூட நெடுநாளாய்விட்டதே. தக்ஷிண தேசத்துக்குப் போகலாமா?

வீர.—நாட்டைவிட்டுப் புறப்பட்டு ஒரு வருஷத்துக்குமேலாகிவிட்டதல்லவா? அரசு எவ்வாறுயிற்றே, தெரியவில்லை. இனித் தாமதிக்க நேரமில்லை. நமது தங்கை கமலாவதி வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடி ஜெயபூரில் சிலநாள் தங்கிவிட்டு ஊருக்குப்போகவேண்டியதுதான்.

ரேணு.—பிரபுவே! நான் ஒன்று வேண்டிக்கொள்ளட்டுமா?

வீர.—என்ன கேட்கிறாய்?

ரேணு.—பிரபுவே! சவுகரியப்பட்டால் அவந்திபுரத்துக்கும் போய் வயது சென்ற என் பிதாவையும் பார்த்துவிட்டு வரலாமென்று தோன்றுகின்றது. தங்கள் இஷ்டம் எப்படியோ தெரியவில்லை.

வீர.—இப்போது சாவகாசமில்லையென்று சொன்னேனே. ஜெயபூரிலிருந்து நேராக பிரதாபநகரம் போய்ச்சில நாளிருந்துவிட்டு, மறுபடியும் பிரயாணம் புறப்பட்டு விடலாம்; அப்போது அவசியம் அவந்திபுரத்துக்குப் போவோம். ராஜ்ய கொந்தரைபைக்காட்டிலும் இப்

படித் தேசசஞ்சாரம் செய்வது இன்பமாகவிருக்கி றது. நாம் இன்னும் ஒரு வாரத்தில் இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுவிடுவோம். ஜெயபூருக்கும் சொ ல்லியனுப்பவேண்டும்.

ரேணு.—என் விருப்பத்தை இப்போதே நிறைவேற்றிக் கொள்ளவேண்டுமென்றிருந்தேன். தங்கள் சித்தம் வேறாகவிருக்கிறது. மறுத்துச் சொல்லவில்லை.

வீர.—எல்லாம் தெரிந்த நீயே இப்படி வருத்தபபடுகிறா யே! ஊருக்குப் போனதும் உன் கருத்தை முற்றுப் பெறவைக்கிறேன்.

ரேணு.—ஊருக்குப் போனபிறகு என்கருத்து முற்றுப் பெறுதென்று தோன்றுகின்றது. எல்லாம் தெய்வத் தின் செயலின்படியே நடக்கும். அவனன்றி யோரா ணுவும் அசையாது.

வீர.—நல்லது, நாளையதினம் மாகசுத்த பௌர்ணமி. கங் கையும் யமுனையும் சேருமிடத்தில் ஸ்நாநம் பண் ணினால் அனந்தகோடி புண்ணியம் லபிக்கும். பிற் பாடு யோஜித்துக் கொள்ளுவோம், மற்றைவிஷயங் களை.

(இருவரும் போதல்.)

### நான்காம் களம்.

### ஜெயபூர்

(தெருவீதி: நாலைந்துபேர் வருதல்).

முதலாவதவன்.—எதற்காக நகரலங்கரிக்கின்றனர்?

மூன்றாவதவன்.—பிரதாப நகரத்தரசன் வீரமாதேவர் வரு கிறாராம்; அதற்காகத்தான்.

இரண்டாவதவன்.—அவர் நமது மகாராணியின் தமைய னாரல்லவோ?

மூன்ரு.—ஆமாம். இங்கேயே ஒரு மாதமிருப்பார் போல் தோன்றுகின்றது.

நான்கா.—நமக்கெல்லாம் நல்ல சாப்பாடுகிடைக்கும்.

முதலா.—பற்பல வேடிக்கைகளும் பார்க்கலாம்.

இரண்.—அவர் எங்கே தங்கப்போகிருர்?

மூன்ரு.—லக்ஷ்மீவிலாஸ் அரண்மனையில் தான்; அது தானே மகாராணியின் அந்தப்புரத்துக்குச் சமீபத்திலுள்ளது. அந்த அரண்மனை எவ்வளவு விநோதமாகச் சிங்காரிக்கப்பட்டிருக்கிறது, தெரியுமா? பார்க்கப்பதினுயிரங்கண்கள் வேண்டும்.

முதலா.—முத்துப்பந்தல் போட்டிருக்கிறதாமே?

மூன்ரு.—முத்துப்பந்தல் மாத்திரமா? எவ்வளவு விநோதம்! சொல்லிமுடியாது. வருகிறவருக்கென்று எத்தனை சாமான்கள் வைத்திருக்கின்றன தெரியுமா? அருமை வேலைப்பாடுள்ள தந்தப்பெட்டிகள், தந்தப் பல்லக்குகள், மயில் விசிறி, பீலிக்குடை, இன்னும் என்னென்னவோ வைக்கப்பட்டிருக்கின்றன.

நான்கா.—நாமெல்லோரும் இப்போது பார்க்கலாமோ ?

மூன்ரு.—பார்க்கலாம்; நேற்ருேடு அதன் சிங்காரம் முற்றுப்பெற்றுவிட்டது. இன்று முதல் மூன்று நாளைக்கு நகரத்து ஜனங்கள் யாவரும் பார்க்கலாமென்று மகாராஜா உத்திரவிட்டிருக்கின்றனராம்.

முதலா.—என்றைக்கு வருகிருரோ?

மூன்ரு.—இன்றையதினம் திங்கட்கிழமையல்லவா? வெள்ளிக்கிழமை சாயந்தரம் வருகிருராம்.

நான்கா.—நாம் போய் அரண்மனை வேடிக்கையைப் பார்த்துவிட்டு வருவோமே.

எல்லோரும்.—ஆமாம்; போவோம்.

(எல்லோரும் போதல்.)

ஐந்தாங் களம்.

ஜேயபூர், லக்ஷ்மிவிலாஸ் அரண்மனே.

(வீரமாதேவன், ரேணுகாதேவி, கமலாவதி வருதல்.)

வீர.—கமலம் நான் வந்து ஒரு மாதமாகப்போகின்றதே. முன்னமேயே ஊருக்குப் போகவேண்டுமென்று கேட்டதற்கு, பிறகு ஆகட்டும் என்றாயே.

கம.—என்ன, அண்ணு! எப்போது வந்தாலும் ஊருக்குப் போகவேண்டுமென்கிறீர்களே? இங்கே யிருப்பது முள்ளின்மேலிருப்பதுபோன்றுள்ளதோ, உமக்கு?

ரேணு.—அப்படியா அதற்குப் பொருள் கொள்கிறது? எத்தனே நாள்தான் பிறர் வீட்டிலிருப்பதென்று சொல்லுகிறார்கள்போலும்.

கம.—இது பிறர் வீடா? என் வீடாகவிருந்தாலென்ன அவர் வீடாகவேயிருந்தால்தானென்ன? நான் பிறந்தகத்துக்கு வந்தால் ஆறுமாதம் ஒரு வருஷம் இருப்பதில்லையா?

வீர.—அதற்கும் இதற்குமா ஒப்புமை சொல்கிறது? குழந்தை அமரஸிம்மன் அறியாத சிறுவன். ராஜ்யம் காறுமாறாய்ப் போய்விடும். நான் போகவேண்டியது அவசியந்தான்.

கம.—இன்னும் பத்துநாள் இருந்துவிட்டுப் போங்கள்.

வீர.—பத்து நாளா? முடியவே முடியாது. நாளேக்கே புறப்படவேண்டும்.

கம.—நீர் வேண்டுமானுல்போம். ரேணுகைமாத்திரம் இங்கே யின்னும் சிலநாளிருந்துவிட்டு வரட்டும்.

ரேணு.—அவரைவிட்டுப் பிரிந்து ஒரு க்ஷணம் கூடவிருக்க முடியாது. அது தர்மமன்று; நியாயமுமன்று.

கம.—போகட்டும்; நீங்கள் இருவரும் பிடிவாதமாய்ச் சொல்லுகிறபடியால், இன்னும் ஒருவாரமிருந்து விட்டுப் போங்கள்.

வீர.—என்ன சொன்னலும் கேட்க மாட்டேனென்கின்ருயே. நாளைக்கே புறப்பட்டுவிடவேண்டும்.

கம.—உங்களுக்கென்று அநேகம் வஸ்துக்கள் கொண்டு வரும்படி சொல்லியனுப்பியிருந்தேன். பாதிவந்து விட்டன. இன்னும் பாதிவரவில்லை. வந்தவுடன் புறப்படலாம்.

வீர.—வராமலே யிருந்துவிட்டால் நாங்கள் ஊருக்குப்போகாமலே யிருந்துவிடுகிறதா?

கம.—அப்படியில்லை. நாளைக்கே எல்லாம் வந்துவிடும். வந்தவுடன் புறப்படலாம். தங்களுக்குப் பட்டாலும் ஜரிகையாலும் ஒரு மேலங்கவஸ்திரம் ஒன்று செய்யச் சொல்லியிருந்தேன். அது வரவில்லை. வந்ததும் புறப்பட்டுவிடலாம்.

வீர.—நீ இனமாகக் கொடுத்திருக்கும் சாமான்கள் எல்லாம் கொண்டுபோவதற்கே அநேகம் வண்டிகள்வேண்டியிருக்குமே: தந்தப்பெட்டிகள், காச்மீரச்சால்வைகள், பொன் வெள்ளித்தடிகள், விலையுயர்ந்த ஆபரணங்கள், பட்டுவஸ்திரங்கள், படங்கள் முதலானவைகள் போதாவா? நீ என்ன சொன்னலும் கேட்கமாட்டேன். நாளைய காலையில் புறப்படவேண்டியதுதான்.

கம.—அப்படியானல் நான் என்ன செய்கிறது? அதற்குள் வஸ்திரம் வந்துவிட்டால், நலம்: அருமையானவேலைப்பாடுள்ளதாகையால் என்முன்பாகவே உடுத்துக்கொண்டு நிற்பதை நான் பார்க்கவிரும்புகிறேன்.

வீர.—வந்தால்வரட்டும்; வராதபோனல், நான் போனபிறகு ஊருக்கு அனுப்பிவிடு. தயவுசெய்து நான் புறப்படுவதற்கு எற்பாடுகள் செய். நானும் போய் உன் கணவனிடத்தில் கலந்து வார்த்தை சொல்லிவருகிறேன்.

(மூவரும் போதல்).

---

# அங்கம் 5.

## முதலாவது களம்.

### பிரதாபநகரத்தரண்மனை தர்பார் மண்டபம்.

(வீரமாதேவன், அமரஸிம்மன், நரஸிம்மதேவன், பிருதிவிஸிம்மன் முதலியோர் பரிவாரங்களுடன் வருதல்).

வீரமாதேவன்.—நாம் தீர்த்தயாத்திரைபோய்ச் சுகமாய்த் திரும்பிவந்ததற்காகக் கோயில்களில் பிரார்த்தனைகள் நடக்கட்டும்.

பிருதிவிஸிம்மன்.—மகாராஜ்! அம்மாதிரியே ஏற்பாடு செய்துவிட்டேன்.

வீர.—நல்லது; நாம் வெளியே போயிருக்கையில் நமது தம்பி அமரஸிம்மன் செவ்வையாய் அரசுபுரிந்தனரல்லவா ?

பிரு.—மகாராஜ்! அவரை வைத்துக்கொண்டு சொல்வது முகஸ்துதியென்றெண்ணலாம்; உண்மையிலேயே தங்களைப்போலவே அரசு புரிந்தனர். ஒரு விதமான குறையுமில்லை.

வீர.—நிரம்பவும் சந்தோஷம்; அவ்வாறுதான் இருக்க வேண்டுமென்று எனது விருப்பமும்: நான் இனியும் புண்ணியக்ஷேத்திர தரிசனத்துக்காகப் புறப்படலாமென்றிருந்ததற்கு இது நல்ல சகுனமாகின்றது. ஆதலால் அவரே யினி ராஜ்யபாரம் புரியட்டும்.

அமரஸிம்மன்.—அண்ணா! குருவியின் தலையில் பனங்காயைத் தூக்கிவைத்ததுபோல, வயதிலும், அநுபவத்திலும் இளையவனான என்மீது பெருஞ்சுமையாகிய ராஜ்யத்தை ஏற்றிவைத்துவிட்டீர்கள். பிருதிவிஸிம்மரும் நரஸிம்மதேவரும் இல்லாமலிருந்தால் நான்

பட்டிருக்கக்கூடிய கஷ்டம் கொஞ்சநெஞ்சமாகவிருக்காது. எல்லாம் அவர்கள் உதவியால் தான் நடந்தது.

வீர —அவர்களுக்கு என் முழு நன்றியையும் செலுத்துகிறேன்: அவர்களிருக்கையில் உனக்கேன் கவலே? நான் மறுபடியும் தெக்ஷிண பிரதேசங்களுக்குப் போவதாகவிருக்கிறேன்.

அம.—அண்ணா! தாங்கள் எவ்விதம் சொல்லுகிறீர்களோ அவ்விதமே நடக்கச் சித்தமாகவிருக்கிறேன்.

வீர.—நல்லது; அதைப்பற்றிப் பிறகு சிந்திப்போம்: நமது தங்கை கமலாவதி நமக்குக்கொடுத்திருக்கும் வரிசைகளை நம் நாட்டு ஜனங்கள் காணும்படி இங்கு எடுத்துப் பரப்பச் சொல்லு.

(அமரஸிம்மன் போதல்).

பிரு.—மகாராஜ்! தாங்கள் வெளியே போயிருந்தபோது, ராயஸிம்மர் இறந்ததைப்பற்றி நாலைந்து பேர் கலகஞ் செய்தனர். அவர்களேயெல்லாம் அமரஸிம்மர் சிறையிலடைத்துவிட்டனர்.

வீர.—சந்தோஷம்; அவன் செய்த காரியங்களேயெல்லாம் சொல்லும், கேட்போம்.

பிரு.—பிரதாப நகரத்தில் தர்ம வைத்தியசாலைகள் நான்கு ஏற்படுத்தினர்; நாட்டுக்குடிகள் சமாசாரங்களே எளிதில் அனுப்பித் தெரிந்துகொள்வதற்காக அஞ்சல்கள் ஏற்படுத்தியிருக்கிறார்.

நரஸிம்மதேவன்.—நமது நாட்டிலுள்ள கோட்டைகளேயெல்லாம் பலப்படுத்திவிட்டார். குதிரைப்பட்டாளங்களே விருத்தியாக்கினர். குடிகளே வருத்தாமலேயே வரும்படியை அதிகரித்துவிட்டார்.

பிரு —நியாயம் சொல்லுவதில் அவருக்கு இணையில்லாமலே செய்துகொண்டார்.

வீர.—அப்படியானால், நீங்கள் சொல்வதைக்கேட்டால், என்னைக் காட்டிலும் அவன் செம்மையாய் ஆண்டனன்போல் தோன்றுகின்றது. எனக்கு அப்படிப் பட்ட தம்பியிருப்பது மேலான கவுரவமாகின்றது. இனிமேல் அவனுக்கே நாடறிய முடிசூட்டிவிட்டு நான் தேசசஞ்சாரம் செய்யப்போகிறேன்.

பிரு.—மகாராஜ்! அப்படி எங்களைக் கைவிடக்கூடாது; இருவரும் இருக்கவேண்டும். கைவிடாமல் காத்தளிப்பது தங்கள் கடமையல்லவா? இரண்டு கன்றினுக்கிரங்கும் ஒரு ஆவைப்போல் எங்களைச் செய்துவிடக்கூடாது.

வீர.—எனக்கோ ராஜ்யபத்தில் பிடிப்பில்லை; புண்ணிய க்ஷேத்திர தரிசனத்திலும் தீர்த்த ஸ்நாநத்திலும் மனம் மேலாடுகின்றது. ஆதலால் தான் சொன்னேன்.— இதோ வந்துவிட்டான்.

(அமரஸிம்மன் வருதல்).

அம.—அண்ணா! எல்லாப்பொருள்களும் வந்துவிட்டன.

வீர.—நல்லது; சபையில் அழகாய்ப்பரப்பிவைக்கச் சொல்லு. (சேவகர்கள் பரப்பிவைத்தல்.) அந்தத் தந்த பெட்டி விசாகாபட்டினத்தில் செய்ததாம். எவ்வளவு அழகாகவிருக்கிறது பாருங்கள்: ஒரு பக்கத்தில் மகா விஷ்ணுவின் தசாவதாரவுருவங்கள், மற்றொரு பக்கத்தில் சிவபிரானின் திருவிளையாடல்கள்: கால்கள் நான்கும் மரகதக்கற்களாலேயுள்ளன. இந்தத் துகிலைப் பாருங்கள். ஒரு பிடிக்குள் அடங்கிவிடும் போலிருக்கிறது. தம்பி, நமக்கு ஒரு அற்புத மேலாடையொன்று கொடுத்தாளே, கமலாவதி. அது எங்கே? நாம் புறப்பட்டுக் கொஞ்சதூரம் வந்ததும் தான் அது வந்ததாம். உடனே ஒரு ஆள் வசப்

கொடுத்தனுப்பினள். அதை அப்படியே வாங்கிக் கைப்பெட்டிக்குள் வைத்துவிட்டோம்: அதை யெடுத்துவரச்சொல்லு. (ஒரு சேவகன் ஓடிப்போய் துகிலுடன் திரும்பி வருதல்).

பிரு —(துகிலைக் கையில் வாங்கி) மகாராஜ்! அருமைவேலைப் பாடுள்ளதாகவேயிருக்கிறது; ஆனால் ஒருவிதமான துர்நாற்றமுண்டாகின்றது.

வீர.—பெட்டிக்குள் வைத்திருந்ததினால் ஆக்கெட்டவசனை யுண்டாகலாம்

பிரு.—மகாராஜ்! இல்லை; இந்தப்பளபளப்பையும் துர்நாற்றத்தையும் பார்த்தால் ஏதோ சந்தேகமாகவிருக்கிறது.

வீர.—வெகுநாளாகச் சிரமப்பட்டுச் சம்பாதித்துப் பிரியமுடன் கொடுத்த துகிலில் சந்தேகமா? இங்கே கொடும் அதைமேலே தரித்துக்கொள்ளுவோம்.

பிரு.—மகாராஜ்! இதைப்பரிசோதனை செய்தபிறகு தரித்துக்கொள்ளலாம். அரண்மனை வைத்தியரைக் கூப்பிடச்சொல்லுங்கள்.

(ஒரு சேவகன் போதல்).

வீர.—நான் சொல்வதைக்கேளும்: இதில் ஒன்றும் சந்தேகத்துக்கு இடமிராது. இங்கே கொடும். (கையில் வாங்கிப் போர்த்துக்கொள்ளுதல்). அழகாக விருக்கிறது. அக்கண்ணாடியில் உருவம் எவ்வளவு மேன்மையாக விளங்குகிறது, பாருங்கள்.

அம.—அண்ணா! இவைகளை யெல்லாம் எடுத்துப்போகச் சொல்லட்டுமா?

வீர.—எடுத்துப்போகலாம். இன்றையதினம் நாம் இருந்த வுடையோடே நியாயம் விசாரிப்போம்.

(சேவகர்கள் வரிசைப்பொருள்களைப் பத்திரமாய் எடுத்துப்போதல்).

பிரு—மகாராஜ்! என்ன முகத்தில் அதிகமாக வியர்வை யுண்டாகின்றதே?

அம.—முகம் வாட்டமடைகின்றதே.

பிரு.—உடம்பு நடுக்கமுறுகிறாற்போலுள்ளதே.

வீர—பேச முடியவில்லை; உடம்பெல்லாம் எரிகின்றது. மயக்கம் வருகின்றது.

பிரு—மேலாடையின் வேகம்போன்றுள்ளது; அதை யெடுத்துவிடுகிறேன்.

(எடுக்கப் போதல்).

வீர.—இல்லை. இல்லை; தாகம்—எரிச்சல்—அமரஸிம்மா! பேச—

(மயங்கிச் சிங்காதனத்தில் சாருதல்.)

பிரு.—வைத்தியர் வருகிறாரா, பாருங்கள்.

(சேவகர் இருவர் போதல்.)

முகத்தில் கொஞ்சம் தண்ணீரைத் தெளியுங்கள்.

(சேவகன் ஒருவன் முகத்தில் நீரைத்தெளித்தல். அரசன் கண்ணை விழித்துப்பார்த்தல்.)

வீர.—ஏதோ மோசம்தான் போல் தோன்றுகிறது. கண்ணை மறைக்கின்றது: மார்படைக்கின்றது. எரிச்சல் தேகமெல்லாம் உண்டாகின்றது. ஐயோ! தம்பி—மோசம்!—கமலாவதி—செய்து—

(சோர்ந்து விழல்).

அம—ஜமேதார்! எல்லோரையும் வெளியிலனுப்பிவிடு.

(ஜனங்களெல்லோரும் திடுக்கிட்டுப்போதல்).

(வைத்தியர் வருதல்).

பிரு—வைத்தியரே, மகாராஜாவுக்கு உடம்பு எப்படியிருக்கிறது, பாருங்கள்.

வைத்தியர்.—(கிட்டப்போய்க் கையைப்பிடித்துப்பார்த்து)—இதென்ன விபரீதம்; நாடி ஓடவில்லையே! (தாழ்ந்த குரலில்) மூச்சடங்கிவிட்டதே.

பிரு.—இந்த மேல் வஸ்திரத்தைப் பாரும். (அரசன் போர்த்திருந்த வஸ்திரத்தை யெடுத்துக்கொடுத்தல்.)

வைத்தியர்.—(கையில் வாங்கிக்கசக்கி முகர்ந்துபார்த்து) ஐயோ யார் செய்த வேலையிது? விஷத்தைத்தடவிவைத்திருக்கின்றனரே!

(கீழே போடல்).

பிரு.—நான் முன்பேயே அப்படித்தான் சந்தேகித்தேன்.

அம.—கமலாவதிதான் இப்படிச் செய்திருப்பாள். உடையை அவர் இருக்கும்போதே கொடாமல், அவர் ஊருக்குப்புறப்பட்டு வந்ததும் கொடுத்ததே அவள் துரோக சிந்தனையைக் காட்டுகின்றது. ஐயோ! அண்ணா! ஊரிலிருந்துவந்து இரண்டு நாள்கள்கூட ஆகவில்லையே!

நர.—உடனே ஜெயபூருக்குத் தூதனுப்பி, சங்கதியை விசாரிக்கும்படி செய்யவேண்டும்.

பிரு.—அதுதான் சரி, இப்போது மேல் ஆகவேண்டியவைகளை யோசிப்போம். புரோகிதரை வரவழைத்து ஏற்பாடு செய்யவேண்டும்.

(போதல்).

நர.—பிரபுவே! நீங்கள் இங்கேயே இருங்கள்; நான் போய் வந்துவிடுகிறேன்.

(போதல்).

அம.—ஐயோ! அண்ணா! அகாலமிருத்யூ வந்துவிட்டானே! பிரியமாக நடிப்பவள்போல நடித்துக் கொன்றுவிட்டாளே, பாவி கமலாவதி. அண்ணா! அண்ணா! என்றினியும்மைக்காண்பேன்! உம்முடைய வீரமும்தீரமும் யாருக்குவரும்! அண்ணா! அண்ணா!

(அரற்றுதல்) (திரைவீழ்தல்).

## இரண்டாங் களம்.

## ஜெயபூர்.

தெருவீதி: நாலைந்துபேர் வருதல்.

முதலாவதவன்.—என்ன அரண்மனையெல்லாம் அமளியாகவிருக்கிறது?

மூன்ரு.—உனக்குத் தெரியாதா? பிரதாபநகரத்து வீரமாதேவனை நமது ராணி விஷமிட்டுக் கொன்றுவிட்டாளாம்.

இரண்.—முன்பு இங்கே வந்திருந்தாரே, அவரையா?

முதலா.—இவ்விடத்தை விட்டுப்போய் இன்னும் பத்து நாள் கூட ஆகவில்லையே.

நான்கா.—எப்படிக்கொன்ருள்?

மூன்ரு.—ஒரு வேஷ்டியில் விஷத்தைத் தடவிக்கொடுத்தாளாம். அதையவர் உடுத்துக்கொண்டதும் இறந்து போய்விட்டாராம்.

இரண்.—இந்த சமாசாரம் எப்படித் தெரிந்தது?

மூன்ரு.—அங்கேயிருந்து தூதன் வந்திருக்கிருன்: அதை விசாரித்தார்கள். குற்றம் ருசுவானபடியால் ராணியை நெருப்புக்குழியில் தள்ளிவிடப்போகிருர்கள்.

இரண்.—எவ்விடத்தில்?

மூன்ரு.—அரண்மனை மைதானத்தில் ஓர் பெரிய குழி வெட்டியிருக்கிறது; அதில் விறகும் கட்டையும் கொண்டு வந்து அடுக்கியிருக்கிருர்கள். இன்றையதினம் சாயங்தரம் அக்குழியில் நெருப்பை மூட்டி, எரிந்துகொண்டிருக்கையில் அவளைத் தள்ளிவிடப்போகிருர்கள்.

முதலா.—நாமெல்லோரும் போகலாமா?

மூன்ரு.—நாமெல்லோரும் பார்ப்பதற்காகத்தான் வெளியில் குழிவெட்டினர்கள்.

இரண்.—மகாராஜா சம்மதித்தாரா?

மூன்ரு.—பிரதாபாகரத்தரசனுடைய சம்மந்தத்தினல் தமக்கு கவுரவமுண்டென்று எண்ணிக்கொண்டு அவர் இருக்க, இந்தப் பிசாசு இப்படிச்செய்துவிட்டது.

நான்கா.—இவளுக்கு இதுவும்போதாது. கண்டதுண்டமாய் வெட்டி நெருப்பில் போடவேண்டும்.

இரண்.—இதற்குத்தானு இவ்வளவுதூரம் வருந்தி அழைத்துவந்து பெரியவிருந்து செய்தாள்.

மூன்ரு.—பெரிய ராக்ஷஸி என்ருல் இவள்தான்.

முதலா.—ராக்ஷஸிகளிலேயும் கொலைபாதகி. இவளை நன்ருய்க்கொல்லலாம்.

நான்கா.—அவர் எவ்வளவு நல்லவர்: அவரைக்கொன்றுவிட்டாளே.

இரண்.—நன்ருய்க் கொல்லவேண்டும் இவளை. நாம் எல்லோரும் வேடிக்கைபார்க்கப் போவோம்.

(எல்லோரும் போதல்).

முற்றிற்று.

ஸ்ரீ சைலர்.




இப்பால் மதிலேறிக்குதித்து தப்பித்துக் கொண்டுபோன வெங்காஸாமி அன்றிரவெல்லாம் ஓடி மறுநாள் உதயத்தில் ஓர் இருண்டகாட்டில் புகுந்து வழிதப்பி, பசிதாகங்களால் உழன்று நடையால் அலுத்து அக்காட்டின் நடுவில் உள்ள ஓர் ஆலமரத்தின் கீழ் விழுந்து மூர்ச்சைபோனான். அக்காட்டிற்கு அப்பாலுள்ள ஓர் சிறு தேசத்தின் அரசன் வீரகேசரியென்னும் பெயருடையவன் அவ்வனத்தில் வேட்டையாட வந்திருந்தவன் ஓர் மானைத் துரத்திக்கொண்டு சென்று வெகுதூரம் வழிதப்பித் திரிகையில் அவ்வாலமரத்தின் கீழ் மூர்ச்சையாய்க்கிடந்த இச்சிறுவனைக்கண்டு, தன்குதிரையின்மேல் தான் தொங்கவைத்திருந்த இரண்டு ஜாடிகளில் ஒரு ஜாடியிலுள்ள குளிர்ந்த ஜலத்தை அவன் முகத்தில் தெளித்து மற்றொரு ஜாடியில் வைத்திருந்த ஷர்பத்தை அவனுக்குக் குடிக்கக் கொடுக்கவே வெங்காஸாமி களை தெளிந்து எழுந்துநிற்கவே அவன் வரலாற்றை அரசன் விசாரிக்கவும் வெங்காஸாமி, தான் ஒரு வேதியச் சிறுவனென்றும், தேசாந்தரம் புறப்பட்டதாயும், வரும் மார்க்கத்தில் இக் நாட்டில் வழிதப்பி வெகுநேரம் திரிந்து பசிதாகங்கள் பொறுக்கா

மல் தான் மூர்ச்சையானதாயும் சொல்ல, அச்சிறுவன் அழகுக்கும் தேககாந்திக்கும் காம்பீரியமான வார்த்தைகளுக்கும் ஆச்சரியப்பட்டதுமன்றி, தனக்கு ஓர் புத்திரியே ஒழிய புத்திரிகாசந்தானம் இல்லாததால் தான் பரமசிவனைநோக்கி தபம்செய்துவந்ததில், அவர் அதற்கு முதல்நாள் இராத்திரியில் இவ்வரசன் கனவில்வந்து "உனக்கு இந்த ஜன்மத்தில் புத்திரசம்பத்து இல்லை. நாளைத்தினம் நீ வேட்டையாடச் சென்றால், ஸ்ரீராமனை சீதாபிராட்டியினின்றும் பிரித்த பொன்மான்போல், ஒரு மாயமான் உன் கண்ணுக்குப் புலப்படும். அதைத் துரத்திக்கொண்டு நீ வெகுதூரம் செல்வாய், செல்லும்பொழுது வழியில் ஓர் பார்ப்பனச் சிறுவன் ஓராலமரத்தின் கீழ் மூர்ச்சையாயிருப்பான். அவனைக் களைதேற்ற நீ ஒரு ஜாடியில் குளிர்ந்த ஜலமும் மற்றொரு ஜாடியில் ஷர்பத்தும்கொண்டுபோ. அச்சிறுவனை அழைத்துவந்து அவனுக்கு உன் புத்திரியை கலியாணம் செய்து வைத்து அவனுக்கே இராசாங்கத்தையும் கொடு" என்று சொல்லியிருந்ததால் அச்சிறுவனையும் தன் குதிரையின் மேலேற்றிக்கொண்டு தன்னகரத்திற்குத் திரும்பினான். வெங்காஸாமிக்கு யாதொரு படிப்பும் வாராதென்று கூறியிருந்தோமல்லவா. அவ்விஷயத்தை இவ்வரசனும் தெரிந்துகொண்டு அவனைத் தன் மகள் சண்பகவல்லியென்றும் பெயரினை உடையவள் கற்றுக்கொண்டிருந்த பள்ளிக்கு அனுப்பினான்—அப்பள்ளியில்இவர்கள் இருவர் மாத்திரமல்ல. அவ்வூர் மந்திரிமகன் முதலான அநேக சிறுவர்களும் சிறுமியர்களும் வாசித்துக்கொண்டிருந்தார்கள்—மற்றய மாணுக்கரெல்லாம் கிரமமாக வித்தைக் கற்றுவருகையில், வெங்காஸாமி மாத்திரம் கல்விகற்காமல் ஆசிரியர் என்னசொன்னாலும் கேளாமல், எப்பொழுதும் மண்ணில் விளையாடுவதும் புரளுவதுமாயிருந்ததால், அவனுக்கு மாட்டி (மண்) என்று பெயர்கொடுத்து அவன் சிவப்பாயிருந்ததால் அப்பெயர்க்கு லால் (=சிவப்பு) என்றும் அடையையும் கொடுத்து லால்மாட்டி என்று இவனை ஏனைய மாணுக்கர்களும் அப்பள்ளியின் உபாத்தியாயரும் அழைப்பது வழக்கம். (லால்மாட்டி என்பது ஹிந்துஸ்தான் வார்த்தை). இவ்வண்ணம் இவன் படிக்காமல் நாட்களைக் கழித்துக் கொண்டுவருகையில் நவராத்திரி உத்ஸவம் வந்தது. அவ்வுத்ஸவாரம்ப தினமாகிய ஆசுவிஜசுத்த பிரதமைதினமே அவ்வாசிரியர் ஸரஸ்வதிதேவியை (வித்தைக்கு அபிமான தேவதை) ஓர் கலசத்

தில் ஆவாஹனம்செய்து, பிரதிதினமும் தப்பாமல் அர்க்கிய பாத்தியாதி ஷோடசோபசாரங்களும் தப்பாமல் செய்துவந்தார். பத்தாம் நாளாகிய விஜயதசமி தினம் தம்மாணுக்கர்களைக் கூட்டிக்கொண்டு அரசன் கொலுவிற்குச் செல்வதும் அங்கு அவர்களை அரசன் பரீக்ஷித்து அம்மாணுக்கர்களுக்கும் ஆசிரியருக்கும் தகுந்த வெகுமானங்கள் செய்வதும் வழக்கம். அங்ஙனம் அந்தவருஷம் விஜயதசமியன்றைக்கு ஆசிரியர் அரசனிடம் தன் மாணுக்கர்களைக் கூட்டிக்கொண்டு செல்லுகையில், இந்த வெங்காஸாமியைக் கூட்டிச்சென்றால் அவனுக்கு யாதொரு கல்வியும் வராததால் தன்னை மிகக் கோபிப்பாரென்று எண்ணிக்கொண்டு, அவனை அழைத்து, "அப்பா—நான் என்ன சொன்னலும் நீ படிக்காமலிருக்கிறாய்—உனக்கு இவ்வூரரசன் தன் மகளைக்கொடுத்து இராஜாங்கமும் தருவதாகச் சொல்லியிருக்கிறாரே. அங்ஙனம் அவர் சொல்லியிருக்க நீயோ அதையும் சட்டைசெய்யாமல் கல்விகற்காமல் திரிகிறாய், இன்றையத்தினம் நான் உன்னை அரசன் சமுகம் கூட்டிச்சென்றால்,என்பேரில் கோபிப்பார். ஆதலால் நீ எங்களுடன் வரக்கூடாது. இங்கேயே பள்ளியிலேயே இரு. இப்பள்ளியிலுள்ள 65 அறைகளின் சாவிகளையும் உன்னிடம் கொடுத்துப் போகிறேன். ஒவ்வொரு அறையாக முதல் 64 அறையையும் திறந்து பார். 65 வது அறையைமாத்திரம் திறக்காதே. ஒருவேளை நீ திறந்து பார்க்க எண்ணம் கொண்டாலும் வெளியிலிருந்தபடியே அதற் குள்ளிருக்கும் விநோதங்களைப் பார். உள்ளே நுழையாதே" என்று இங்ஙனம் ஆசிரியர் வெங்காஸாமியிடம் சொல்லி 65 சாவிகளடங்கிய கொத்தையும் அவனிடம் கொடுத்து மற்றைய மாணுக்கர்களைக் கூட்டிக் கொண்டு அரசரிடம் சென்றனர். அங்கு அரசன் மற்றைய மாணுக்கர்களையெல்லாம் பரிக்ஷித்து, பரிசுகள் அளித்த பிறகு வெங்காஸாமி மாத்திரம் வரவில்லையே அவன் எங்கேயென்று ஆசிரியரைக்கேட்க அவர் இனிப்பொய் சொன்னலொழிய வழியில்லையென்று அச்சிறுவன் அதிக தேவ பக்தி யுள்ளவனாததால், பள்ளியின் கண் ஸ்தாபிக்கப் பட்டிருந்த ஸரஸ்வதி தேவியின் கலசத்துக்கு பூசை செய்து கொண்டிருக்கிறான். ஆதலால் வர முடியவில்லை" யென்று கூறினர்.

இவ்வுண்ணம் அரசன் சபையில் ஆசிரியர் சொன்ன பொய் வார்த்தைகளே நிஜமாயின. வெங்காஸாமி முதல் 64 அறைகளைத்

திறந்து பார்க்க ஒவ்வொரு கதியிலும் சதுஷ் ஷஷ்டிகலா வித்தை யென்று கூறப்படும் 64 வித்தைகளில் ஒவ்வொரு வித்தைக்குறிய புத்தகங்களும் கருவிகளும்வைக்கப்பட்டிருந்ததால், எழுத்து வாசனை யே இல்லாத இவனுக்கு அவைகள் உபயோகப் படாமல் போயின. இங்ஙனம் ஒவ்வொரு அரையிலிருந்த சாஸ்திரங்களைப் பார்த்தும் 'ஐயோ இங்ஙனம் விஸ்தாரமாயுள்ள இவ்வித்தைகளைக் கற்காமல் போனேனே. எனக்கு யாதொரு வித்தையும் வராததால் அல்லவா என்னை இப்பள்ளியில் தனியேவிடுத்து ஏனை மாணுக்கரும்ஆசிரியரும் அரசன் மாட்டுச் சென்றனர். இனி துக்கித்தாவதென்ன. வயதோ எனக்கு அதிகம் ஆய்விட்டது. ஆயினும் எல்லாம் ஈசன் செயல். சிறு வயது முதலே தெய்வ பக்திசெய்துகொண்டும் ஸாதுக்களின் ஸங் கத்தில் சேர்ந்தும் சக்தியனுஸாரசம்தானுதிகள் செய்தும் வந்தேனை ல்லவா. அவ்வீசன் எனக்கும் ஓர் துறை காட்ட மாட்டானு" என்று இங்ஙனம் எண்ணி பெரு மூசசெறிந்து மீந்து நிற்கும் 65வது அரையையும் திறந்துபார்க்கவே அதில் ஸரஸ்வதி தேவியின் கலசம் ஆவாஹனம் செய்யப்பட்டிருந்ததையும், அன்றைய பூஜைக்கு வேண் டிய சாமக்கிரியைகள் வைத்திருப்பதையும் கண்டு, இதுவும் ஈசன் செயல். வெள்ளைக் கலசம், வெள்ளையணிகள், வெள்ளைப்பூ முதலி யன வைத்திருப்பதால் இது ஸரஸ்வதி தேவியின் கலசம்தான். வேறல்ல. ஆதலால் நானும் சீக்கிரத்தில், ஆசிரியரும் ஏனை மாணு க்கரும் திரும்பிவரும் முன்னேயே, ஸ்நானம்செய்து இவ்வம்மனை பயபக்தியுடன் அர்ச்சித்து வரம்வேண்டிக்கொண்டால், எனக்கு ஒருவேளை நான் நம்பியிருக்கும் ஈசுவரனுடைய கிருபையால், ஸர ஸ்வதிதேவியேன் பிரத்தியக்ஷமாய் எனக்கு சகலவித்தைகளையும் அனுக்கிரகிக்கக் கூடாது' என்று ஆலோசித்து அங்ஙனமே ஸ்நா னம்செய்து மடியுடுத்தி அக்கலசத்தினிடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு தன் ஆசிரியர் தினமும் பூஜைசெய்வதை தானும் பார்த்தி ருந்தவனுதலால் அங்ஙனமே கிரமமாக அர்க்கியபாத்தியாதி ஷோட சோபசாரங்களையும் செய்து அம்மனை தனக்கு கடாக்ஷிக்கும்படி வேண்டிக்கொள்ளவே, முன்காலத்தில் காளிதாஸனுக்கும் அதற்குப் பின் காளமேகனுக்கும், பிரத்தியக்ஷயமானதுபோல் வெங்காஸாமி க்கும் ஸரஸ்வதிதேவி காட்சிகொடுக்கவே வெங்காஸாமியும் உடனே யெழுந்து தாயின் திருவடிகளில் பணிந்து தனக்கு சகல வித்தியா

வியவங்களையும் அருளும்படி பிரார்த்திக்க, அம்மன் அவன் நாவில் பிரணவ மந்திரத்தையும் பஞ்சாக்ஷரம் அஷ்டாக்ஷரம் ஷடக்ஷரம் முதலியவைகளை தன் திருக்கையால் எழுதி அவனுக்கு 64 வித்தைகளிலும் தேர்ச்சியுண்டாகும்படி வரமளித்து உடனே அந்தர்த்தானமாயினள். வெங்காஸாமியும் இவ்வண்ணம் ஸரஸ்வதி தேவியின் கடாக்ஷம் பெறவே முன்னிலும் அதிக காந்தியையும் தேஜஸ்ஸையும் அடைந்தபடியால் பிறர் அதை அறியாமலிருக்கும் வண்ணம் அடுப்பங்கரியை அரைத்து உடம்பெங்கும் பூசிக்கொண்டான்.

ஆசிரியரும் ஏனைமாணாக்கரும் அரசன் சபைக்குப்போயிருந்தவர்கள் அவ்வரசனால் அளிக்கப்பட்ட வெகுமதிகளுடன் திரும்பிவரவே, வெங்காஸாமியும் மிகுந்த பயபக்தியுடன் தன்னாசிரியரிடம் அவ்வறுபத்தைந்து சாவிகளையும் திரும்பக்கொடுத்துவிட்டான். அச்சாவிகளைப் பெற்றுக்கொண்டு ஆசிரியர் அவனை இதுகாறும் நீ என்னசெய்துகொண்டிருந்தாய் என்று கேட்கத் தான் அவர் கட்டளைப்படியே இரண்டொரு அறைகளைத் திறந்து பார்த்ததாகவும் அவ்வறைகள் நிறைய புத்தகங்களிருந்ததால் எழுத்து வாசனை யென்பதே யில்லாத தனக்கு அவைகளால் யாதொரு பயனுமில்லாமல் போனதால் அவைகளை உடனே மூடிவிட்டு ஆசிரியரும் ஏனைமாணாக்கரும் திரும்பிவரும் வரையிலும் தான் விளையாடிக் கொண்டிருந்ததாகவும் சொன்னான். அதைக் கேட்டு ஆசிரியரும் நகைத்து சும்மாயிருந்தனர்.

அப்பாலும் வெங்காஸாமி பயிரங்கத்தில் முட்டாளைப் போலத் திரிந்து கொண்டிருக்கவே அவனை முழுமூடன் என்றே எல்லாரும் நிச்சயித்தனர். இங்ஙனம் சில மாதங்கள் கழிந்த பிறகு சண்பகவல்லியும் புஷ்பிணியானாள். அதை அரசன் தெரிந்து கொண்டு அவளைப் பள்ளிக்குப் போகாமல் நிறுத்தி இனி தான் கண்ட கனவின் பிரகாரம் அவளை வெங்காஸாமிக்கு கல்யாணம் செய்யும் யத்தனத்தில் இருந்தான். சண்பகவல்லிக்கோ இவ்வெங்காஸாமி கல்வியில்லாதவனாயும் எப்பொழுதும் கரியையே பூசிக்கொண்டிருப்பதால் விகார ரூபமுள்ளவனாயும், மண்ணின்மேலேயே புரண்டு விளையாடிக்கொண்டிருப்பவனாயும் இருந்தபடியால் அவனை மணக்க இஷ்டமில்லை. தான் பிறந்ததுமுதலாக மேற்சொன்ன கனாகாணும்வரையிலும் அரசன் தன்னைக் கல்யாணம் செய்துகொடுப்பதாகச் சொல்லியிருந்த அவ்வூர் மந்திரிமகன் சகல கலைகளிலும் தன்னைப்

போன்ற நேர்ச்சி உள்ளவனும் மன்மதன்போன்ற ரூபமுள்ளவனு யுமிருப்பதால் அவனையே மணக்கக்கோரி, தான் எவ்வண்ணம் மன்றாடினாலும் தன் தகப்பன் அப்பார்ப்பனச் சிறவனுக்கே தன்னை விவாகம் செய்துவைப்பான் என்னும் ஓர் அச்சத்தினால், வேறுதேய த்திற்காயினும் அவனுடன் தானும்கூடி ஓடிப்போய், அங்கு இருவரும் மணந்துகொண்டு சுகமாக இருக்கலாமென்று எண்ணினவளாய் அம்மந்திரிமகனுக்குப் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதலாயினள்.

"என்பிரியமுள்ள அமாத்திய புத்திரரே. என்னுடன் சகபாடியாய் படித்துவந்தவரே.

உம்மிலேயே என்மனம் லயமாயிருக்கிறது. உம்மையன்றி வேறொருவரையும் மணக்க இஷ்டமில்லை. ஆயினும் என் தகப்பனர் எழுத்துவாசனை யென்பதேயில்லாத காமாட்டியாகிய லால் மாட்டிக்கு என்னை அதிக சீக்கிரத்தில் மணம்புரிவதாக நிச்சயித்திருக்கின்றனர். அதனால் நாமிருவரும் மற்றொரு தேசத்திற்குப்போய் அங்கு மணந்துகொண்டு சுகத்துடன் வாழலாம் என்று எண்ணியிருக்கிறேன். ஆதலால் அடியாளிடம் அன்புபுரிந்து இன்று இராத்திரி ஊருக்கு வெளியிலிருக்கும் பத்திரகாளியம்மன் ஆலயத்துக்கு சமீபத்தில் வந்திருந்தால் அங்கு நானும் என் தாதியும் அதிக வேகமாகச் செல்லத்தக்க இரண்டு குதிரைகளின்மேல் வந்து சேருகிறோம்.—நான் ஏறிவரும் குதிரையில் தாங்களும் ஏறிக்கொண்டால், பொழுதுவிடியுமுன் வெகுதூரம் செல்லலாம்.

இங்ஙனம்,
தங்கள்மேல் காதல்கொண்ட
சண்பகவல்லி.

என்று இங்ஙனம் ஓர் கடிதம் எழுதி, இந்தக் கடிதத்தை வேறெவரிடமாவது கொடுத்தால் ஒருவேளை அவர்கள் அதைத் திறந்து அதில் என்ன சங்கதி எழுதியிருக்கிறதென்று பார்த்துக்கொள்ளவும் தன் இரகசியத்தை, அரசனிடம் சொல்லவுமிடமுண்டு. லால் மாட்டியாகிய காமாட்டியிடம் கொடுத்தால் அவனுக்கோ எழுத்து வாசனை சுத்தமாயில்லை. ஆதலால் அவன் அதைப் படித்துப்பார்க்க முடியாது என்று கருதி லால்மாட்டியைக் கூப்பிட்டு அவனுடன் சிறிதுநேரம் இன்பமாக வசித்து. அக்கடிதத்தை அவனிடம் கொடு

த்து அமாத்திய புத்திரனிடம் கொடுக்கும்படி சொல்லியனுப்ப அவனும் அக்கருத்திற்கு இணங்கினவன்போல் அக்கடிதத்தை வாங்கிக்கொண்டு காற்றுவாக்காய் இம்மந்திரி மகனுக்கு சண்பகவல்லியைக் கொடுப்பதாய்யோசனையிருந்த சங்கதியைக் கேட்டறிந்திருந்தபடியால், இந்நீர்மூடி ஒளியப்போய் தலையாறிவீட்டில் ஒளிந்தாளே மந்திரிமகனுக்கு எழுதிய கடிதத்தை என்னிடமே கொடுத்தாளே என்று சந்தோஷப்பட்டு அக்கடிதத்தை மந்திரிமகனிடம் கொடுக்காமலே தானே இரகசியமான இடத்தில் பிரித்துப்பார்த்து அதில் வரையப்பட்டிருக்கும் சங்கதிகளைப் படித்துக்கொண்டு, அக்கடிதத்தை அங்கேயே கிழித்தெறிந்துவிட்டு அன்று இராத்திரியில் அரசன்மகள் குறித்திருந்த சங்கேதஸ்தலத்தில் தானே வந்து காத்துக்கொண்டிருந்தான்.

இப்பால் சண்பகவல்லியும் தனக்கு அதிக ஆப்தமான ஓர் தாதியிடம் தன் கருத்தை வெளியிட்டு அவளைத் தன்னுடன் கூடவரும்படி வேண்ட, அத்தாதி அதிக புத்திசாலியும் அனுபோகமுள்ளவளுமாதலால் தன் எஜமானியை நோக்கி பின்வருமாறு கூறலாயினள்.

"ஓ இராஜநந்தனையே, இத்துராலோசனையை விட்டுவிடு. சாக்ஷாத் ஜகதீசுவரன் உன் தகப்பனர் கனவில்வந்து இந்த லால்மாட்டிச்சே உன்னை விவாகம் செய்துகொடுக்கச்சொன்ன வார்த்தை எக்காலும் பொய்க்காது. மேலும் முன் ஒருகாலத்தில் உன்னைப்போன்ற ஓர் ராஜகன்னிகை தனக்கு தன் தகப்பன் ஏற்பாடுசெய்திருக்கும் அயல்நாட்டு மன்னனை மணக்க இஷ்டமில்லாமல் தனது ஊர் மந்திரிமகனை மணக்கக்கோறி நீ இப்பொழுது எழுதியதுபோல அவனுக்கும் ஓர் கடிதம் எழுதி தான் அன்றுமாலையில் தன்வழக்கம்போல் ஊருக்கருகாமையான ஓர் காட்டில்வந்து உலாவிக்கொண்டிருக்கையில், அங்கே ஓர் வேடன் தன்கைவில்லில் ஓர் கொடிய நாராசத்தை ஏற்றிக்கொண்டு ஓர் பெரிய மதயானையைத் தொடர்ந்துகொண்டேபோகையில், அவன்நோக்கம் மேல்நோக்கமாகவே இருந்தபடியால், கீழே பூமியின்கண் தன்புற்றின்மேலே தன்தலையை வைத்துக்கொண்டு படுத்திருந்த ஓர் கிருஷ்ணசர்ப்பத்தைப் பாராமல் அதன் தலைமேல் தன் அடியைவைத்து அத்தலையை நசுக்கவே, அது அவனையும் கடித்துகொன்றுவிட்டு தானும் மாண்டது. இதுகாறும் அவ்வாரணத்தின்மேல் அக்கானவன் இரண்டுமூன்று அம்புகள்

எய்திருந்ததால் அவ்வாரணமும் இவர்கள்மாண்ட சற்றுநேரத்திற்குள்ளாக, திடீரென்று கீழே விழுந்து உயிர்துறந்தது. ஆகவே, இம்மூன்றுபேரும்—அதாவது யானை, கானவன், பாம்பு—இறந்துகிடக்கவே அங்கோர் நரி தற்செயலாய் வந்து இச்சவங்களைப்பார்த்து, இந்தவாரணம் தனக்கு ஆறுமாதத்திற்கு உணவுக்குதவு மென்றும் அவ்வேடன் ஏழுநாளைய உணவிற்காவானென்றும், அந்நாகம் தனக்கு அன்றை உணவுக்காகும் என்றும் சொல்லிவிட்டு, அவ்வேடன் கையில் இருந்த வில்லில் கட்டப்பட்டிருந்த நரம்பின் நாண் அதிகமிருதுவாயிருந்ததால் அதை முன்பாகத்தின்று உருசி பார்ப்பேன் என்று போய் அந்நரம்பு நாணைக் கடிக்கவே, நாண் அறுபட்டதும், அதில் அவ்வேடன் தொடுத்திருந்த நாராசம், அதன் நேராக நின்றுகொண்டிருந்த இந்நரியின் கழுத்தில்பட்டு ஊடுருவிச்சென்றதால் அந்நரியும் இறக்கவே அங்கு சவங்கள் நான்காயின. இவ்வதிசயங்களையெல்லாம் கண்ணுற்றிருந்த அவ்வரசகுமாரத்தி தன்னுள்ளே பின்வருமாறு ஆலோசிக்கலாயினள்.

கரியொரு ஆறுதிங்கள் கானவனேழுநாளாம்
இருதலைப் புற்றினாகம் இன்றுணுமிரையீதென்று
வரிசிலைவேடன் கையில் விற்குணக நரம்பைக்கவ்வி
நரியனுர் பட்டபாடு நாளைநாம் படவேயாகும்.

என்று சொல்லிவிட்டு, தன் தகப்பனுர் தன்க்ஷேமத்தையும் மேன்மையையும் சுகத்தையும் கருதிச்செய்யும் விவாக ஏற்பாட்டைத் தப்பித்துகொள்ளத்தான் எத்தனித்திருப்பது இந்நரியின் ஆலோசனையைப்போல் முடியுமென்று பயந்து, தன வீட்டுக்கு சென்று அன்று இராத்திரி தான் நேமித்திருந்த சங்கேதஸ்தலத்திற்கு தன் தாதியை அனுப்பி, தன் எண்ணம் மாறுப்பட்ட சங்கதியையும் அதற்கு உண்டாகிய காரணத்தையும் அம்மந்திரிமகனுக்கு அறிவித்து அவனைத் தன்வீடு சேரும்படிசெய்து தானும் தன் தகப்பனுர் நேமித்திருந்த மன்னனையே மணஞ்செய்து சுகமாயிருந்தாள். ஆதலால் ஓ இராஜநந்தனையே, நீயும் உன் தகப்பனுரிஷ்டப்படி வெங்காஸாமியை மணந்து சுகமாயிரு என்று அந்த தாதி அநேக விதங்களாக போதித்தும் சண்பகவல்லி அவ்வார்த்தைகட்கு செவிகொடாமல் ஒரே பிடியாய்பிடிக்க தாதியும் கடைசியாக ஒப்புக்கொண்டு இருவரும் இரண்டு குதிரைகளின்மே லேறிக்கொண்டு சங்கே

தஸ்தானத்திற்கு நடுராத்திரியில் வந்தனர். தாதி தான் ஏறிவந்த குதிரையின்மேல் தன் எஜமானியின் ஆடையாபரணங்கள் அடங்கிய ஓர் பேழையை வைத்துக்கொண்டுவந்தனள்.

முன் கூறியபடி வெங்காஸாமியும் அவ்விடத்தில்வந்து காத்துக்கொண்டிருந்தான். இருட்டுக்காலமாதலால் அவனை அடையாளம் கண்டுபிடிக்கமாட்டாமல் அவனையே தன் பிரியமுள்ள அமாத்திய புத்திரனென்றெண்ணி, அவனைத் தன் குதிரையின்மேல் தன் பக்கத்தில் ஏற்றிக்கொண்டு தானும் அவனும் தன் தாதியுமாக விடியுமுன் வெகுதூரம் சென்றனர். போகும் அவசரத்தினாலும், தன் குதிரையை காடுமேடு மலை வனாந்திரங்களில் ஜாக்கிரதையாய் நடத்தவேண்டியிருந்ததாலும், தன் பின்பாக குதிரையின்மேலேறி வருபவனைத் திரும்பிப்பாராமல், வந்தனள். தன்பின் ஏறிவருபவன் அமாத்திய புத்திரனே யென்று நம்பி திரும்பிப்பாராமலே, "ஓ அமாத்திய புத்திரரே, என் பிரியரே, நாம் வெகுதூரம் கடந்துவந்துவிட்டோமல்லவா இனி நமக்குப் பயமில்லையே" என்று சொன்னதற்கு லால்மாட்டியும் விடையளிக்காது மவுனமாயிருக்கத்திரும்பிப் பார்த்தபொழுது தன்கூட ஏறிவருபவன் அமாத்திய புத்திரனாயில்லாமல், லால்மாட்டி என்று பெயர்பெற்ற காமாட்டியாயிருக்கக்கண்டு, அவனை உடனே கீழேயிறங்கச்செய்து "இவ்விதமாக நீ வந்ததற்குக் காரணம் என்ன" என்று அவனைக் கேட்டாள். அதற்கு அவன் தாங்கள் கொடுத்த கடிதத்தைக் கொண்டுபோய் நான் மந்திரிநந்தனனிடம் கொடுக்க அவன் அதை வாங்கி வாசித்துப்பார்த்து இங்ஙனம் வலுவில் ஓர் ஆடவனுக்கு ஓர் பெண்மகள் கடிதம் எழுதலாமா என்றும், அங்ஙனம் எழுதிய பெண் மானமற்றவளென்றும் அவளைத் தான் மணப்பது சரியல்லவென்றும் அப்பெண்மணியை லால்மாட்டிக்கு விவாகம் செய்யும்படி ஈசுவரன் அரசனுக்கு கொடுத்திருக்கும் கட்டளைக்கு விரோதமாகத்தான் அவளை மணக்கக் கருதினால் அதினால் தனக்கே ஆபத்துக்கள் நேரிடுமென்றும் சொல்லி, அக்கடிதத்தில் தாங்கள் வரைந்திருந்த வயனங்களையெல்லாம் எனக்கு விசதமாகும்படி படித்துக்காட்டி அக்கடிதத்தை கிழித்தெறிந்துவிட்டு என்னை நோக்கி 'சீ, புத்தியற்றவனே நீ எழுத்துவாசனை யற்றவனென்று உன்னையே எனக்கு தூதாக அனுப்பினளே. உனக்கு வெட்கமில்லையா'. என்றசொல்லி என்னை ஏசியதும் நான் அதிக

துக்கித்து, இதற்கு என்னசெய்யலாம் என்று ஆலோசித்து நானே அச்சங்கேத விடத்திற்கு வந்துசேர்ந்து தங்களுடன் இதுவரையி லும் ஏறிவந்தேன்" என்றுகூற, அரசன் மகள் தன் முகத்திலும் மார் பிலும் புடைத்துக்கொண்டு கோவென்றழ, கூடவந்த தாதியான வள் அவளைத் தேற்ற ஓர் சிறுகதைசொல்வாளாயினள்.

"ஓ இராஜநன்தனையே உன் அதிகமான துக்கத்தை நீறத்தி விடு. ஈசுவரன் வரத்தை விலக்கப்போகாதென்று நான் நேற்று இராத்திரி என்னவிதமாய்ச் சொல்லியும் நீ அதைக்கேளாமல் பிடி வாதமாய் உன் தகப்பனுர் வீட்டைவிட்டு வெளிப்பட்டு வந்தாயல் லவா. ஈசுவரன் ஸங்கல்பம் ஒன்றிருக்க நாம் ஒன்று நினைத்தால் நமது ஆலோசனை ஈடேறுமா. ஓர் சிறு கதை சொல்லுகிறேன் கேள்.

ஓர் நகரத்தில் ஓர் அரசன் தன் மகளை ஓர் வேதியன் மாட் டுப் படிப்பித்தனன். அவ்வேதியன் 64 சாஸ்திரங்களிலும் தேர்ந்த வனுயிருந்தபடியால், அக்கல்விகளையெல்லாம் அப்பெண்மணிச்குக் குறைவறக் கற்றுக்கொடுத்தான். அப்பெண் இங்ஙனம் வித்தை கற்றுக்கொண்டு வருகையில் யௌவனச் சின்னங்கள் ஏற்பட அர சனும் அவளை இனி அவ்வேதியரிடத்தில் படிக்க அனுப்புவது சரி யல்லவென்று தீர்மானித்து, குருதட்சணைக்கு என்று ஏராளமான வஸ்துக்களையும் தனங்களையும் அவளிடம் கொடுத்து "இவைகளைக் கொண்டுபோய் நீ அவ்வேதியரிடம் உனக்குப் படிப்புக் கற்றுக் கொடுத்ததற்கு தக்ஷிணையாக கொடுத்து அவர் ஆசீர்வாதம் பெற்று கன்னிகாமாடம் சேர்" என்று சொல்லவே அங்ஙனமே அக்கன் னிகை அவ்வேதியன் மாட்டுக் சென்று அத்தனகனகங்களை அவனுக் களித்து இனி தான் கன்னிகாமாடத்திற்குச் சேர உத்திரவு கேட்க, அவரும் அங்ஙனம் ஆக்ஞை அளிக்காமல், "ஓ பெண்ணே, நான் இதுகாறும் அநேகச் சிறுவர்கள் சிறுமியர்களுக்குக் கலைபயிற்றி யிருக்கின்றேன். ஆயினும் உன்னைப்போல் இவ்வளவு புத்திநுட்ப மிருந்தவர்களை நான் பார்த்ததில்லை. மேலும் நீ இப்போதே, உன் வயதுவரும் முன்னேயே இலக்குமி தேவியைவிடவும், இரதி தேவி யைவிடவும், இந்திராணி தேவியைவிடவும், அதிகமான வனப்பும், தேககாந்தியும், சௌந்தரியமும், சரீரமிருதுத்துவமும் உடையவளா யிருக்கிறுய். இனி நீ புஷ்பிணியும் ஆனல் எங்ஙனம் உன் சரீரம்

பிரகாசிக்குமோ அதை வர்ணிக்க இரண்டு ஆயிரம் நாவுடைய ஆதி சேஷனாலும் ஆகாதே. ஆதலால், இந்த தனகனகங்கள் எனக்கு வேண்டுவதில்லை. இதுவரையிலும் உன் தகப்பனார் எனக்கு அப்போதப்போது கொடுத்துவந்த வஸ்துக்கள் ஏராளமாயிருக்கின்றன. ஆனால் என் கோறிக்கையொன்றிருக்கிறது அதை நீ எப்படியாவது நிறைவேற்றவேண்டியது. நீ புஷ்பிணி ஆனதும் ஒரு தரம் என்னிடம் வந்து எனக்கு சம்போகசுகம் கொடுக்கவேண்டும்" என்று இங்ஙனம் நாண், அச்சம் எல்லாவற்றையும் சாமத்தால் விடுத்து, "காமாதுராணாம் நபயம்நலஜ்ஜா" என்னும் ஸம்ஸ்கிருத வார்த்தைகட்கிணங்கச்சொல்லவே, அந்த உத்தமி சீறி, "நீர் எனக்கு குருவாயிருந்ததால் இம்மட்டும் பொறுத்தேன். இங்ஙனம் கூறுதல் உமக்கு அழகா—தருமமா. என் தகப்பனாரிடம் உமது இவ்வார்த்தைகளை நான் சொன்னால் உமது கண்ணைப் பிடுங்கிப்போடுவாரே. ஆயினும் எனக்கு நீர் வித்தை கற்பித்ததால் தகப்பனாருக்கு சமானம். ஆதலால் நான் அவரிடம் சொல்லாமல் விடுகிறேன்" என்று கடினமான வார்த்தைகள் கூறி தனது கன்னிகாமாடத்துக்குச் சென்றனள். இவ்வந்தணனோ புத்தியற்றவனாகையாலும், ஹடவாதியாகையாலும் சமயம் பார்த்துக்கொண்டிருந்தனன். அவ்விராஜபுத்திரி புஷ்பிணி ஆகவே அவ்வந்தணனே அவ்வூரில் ஜோதிஷசாஸ்திரம் தெரிந்தவனாதலால், அரசன் அவனை வரவழைத்து தன் மகள் புஷ்பிணி ஆன நேரத்தைச்சொல்லி, பலங்கள் சொல்லும் என்று சொல்ல, அவ்வந்தணன், ஏதோ சில சக்கரங்கள் தாறுமாறாகக் கீறிக்கொண்டு, வெகு நேரம் ஆலோசனை செய்வதாகப் பாசாங்கு செய்து அரசனைப் பார்த்து 'கோ' என்று அழத்தொடங்கினான். அதற்கு அரசன் அதிக ஆச்சரியப்பட்டு "என் இங்ஙனம் அழுகிறீர். என் மகள் புஷ்பிணி ஆனாள் என்று சுபசங்கதி சொல்லி உம்மை அதன் பலத்தைச்சொல்லச்சொன்னால் அழுவானேன்" என்று அவ்வேதியனைக்கேட்க, அதற்கு அம்மறையோன் "ஓ அரசனே. தங்களிடம் நான் அழுவதற்குள்ள காரணத்தைச் சொல்ல என் நாவெழவில்லையே" என்று அறைய, அதற்கு மன்னன் "நீவிர் பயப்படாமல் கூறும்" என அப்பால் அவ்வந்தணன் "இந்தத் தங்கள் மகள் புஷ்பிணியான லக்கினம் முதலானதுகளின் பலம் அதிக விபரீதமாக இருக்கின்றது. தமக்கும் தமது இராஜாங்கத்துக்கும் கூட கெடுதியாயிருக்கிறது. ஆத

லால் கூடிய சீக்கிரத்தில் இந்த கன்னிகையைத் தமது நகரத்தி லிருந்து அப்புறப்படுத்தினலொழிய தங்களுக்கும் தங்கள் இராஜாங் கத்துக்கும் க்ஷேமமாகமாட்டாது" என்று சொல்லவே, அவ்வேதி யனுக்கும் தன் மகளுக்கும் நடந்த மர்ம வார்த்தைகளை அறியாத அரசன் அம்மறையோன் வார்த்தைகளை நம்பி, தன் மகளை அப்புறப் படுத்தத் துணிந்து அந்நாட்டாருக்கு இவ்வார்த்தைகள் தெரிந்தால் தன்னை ஏசுவார்களென்று பயந்து, ருதுஸ்நானமான பிறகு நாலாம் நாள் நடு இராத்திரியில் அம்மகள் தூங்கும் காலத்தில் அவளை அலங் காமல் எடுத்து கீழே மிருகங்களின் தோல்களால் மூடப்பட்டிருந்த ஒரு பேழையில்வைத்து, அப்பெட்டியின் வாயை மூடி பூட்டுபோட்டு அந்நகரின் அருகில் பாயும் ஓராற்றில் மிதக்கவிட்டுவிட்டான். இந்த சங்கதி அரசனுக்கும், அவன் ஏவலாளர்க்கும், அம்மறையோனுக்கும் மாத்திரம் தெரியுமே ஒழிய அந்நகரிலுள்ள ஏனையோர்க்குத் தெரி யாது. அவ்வேதியன் இங்ஙனம் அப்பெண்மணி ஆற்றில் விடப்பட் டதை அறிந்து ஆனந்தத்தால் உடம்பு பூரித்து, ஷெ ஆற்று ஓரமா கவே இருந்த அடுத்த நகருக்குச்சென்று, ஓர் வீட்டை வாடகைக்கு பேசி தீர்மானித்து, அப்பேழை அந்நகரின் சமீபத்துக்கு மிதந்து வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனன். ஆயினும் கடவுள் செயல் வேறல்லவா? அப்பேழை மிதந்து வருகையில், வழிநடுவே ஓர் அரசன் மகன் அவ்வாற்றில் ஸ்நானம் செய்யவந்தான். அவன் அப் பேழையைப் பார்த்து தன் ஏவலாளர்களால் அதைக் கரைக்கிழுத்து அதைத் திறந்து பார்க்கையில் உள்ளே தூங்கிக்கொண்டிருக்கும் பெண்மணியைக் கண்டு அவளை எழுப்பி அவள் வரலாற்றை விசாரிக் கவே, தான் அடுத்தநகரின் அரசன் மகள் என்றும், தான் புஷ்பிணி யான நாலாம் நாள் ஸ்நானம் செய்து இராத்திரி தன் அரண்மனையி ல் படுத்திருந்தது தான் தனக்கு தெரியுமென்றும் சொன்னாள். பிறகு அரசன் மகன் அக்கன்னிகையை நோக்கி "உன்னிடம் பகை யுள்ளார் எவரேனும் அந்நகரில் உளரோ" என அரசகன்னிகை, தன் வாத்தியார் வரலாற்றைக் கூறவே, அரசன் மகன் அவ்வாத்தி யாரால் நேர்ந்ததிவ்விடுக்கண்ணென்றறிந்து, அப்பேழையில் தான் முதல்நாள் வேட்டையில் பிடித்திருந்த ஓர் கரடியைப் போட்டடை த்து முன்போல் பூட்டுபோட்டு ஆற்றில் விட்டுவிட்டான். அக்கரடி யுடன் அப்பேழை ஆற்றில் மிதந்து வருவதை அவ்வேதியன்கண்டு

மனமகிழ்ந்து, அப்பெட்டியைக் கரைக்குச் சேர்ப்பித்து, இரண்டாள்கள் தலையின்பேரில் அதை எடுப்பித்து தான் வாடகைக்கு வாங்கி இருக்கும் வீடு சேர்ப்பித்து, படுக்கை அறைக்குள் அப்பெட்டியை வைத்துக்கொண்டு படுக்கையறையை சிங்காரித்து தின்பண்டங்கள் சந்தனம் தாம்பூலம் பூ முதலியவைகளை சித்தப்படுத்திக்கொண்டு, வாத்தியக்காரர்களை வரவழைத்து, படுக்கையறைக்குள் என்ன கூச்சல் ஆனாலும் சட்டை பண்ணாமல் வாத்தியங்களை ஒலித்துக்கொண்டிருக்கும்படி திட்டம் செய்து, படுக்கையறையில் தானும் நுழைந்து, கதவை தாளிட்டு பேழையிடம் நெருங்கி, பூட்டை உடைத்து, "அடியே பெண்மணியே என்னை யப்பொழுது பலவிதமாக ஏசினாயே, இப்பொழுது பார்த்தாயா என் சாமர்த்தியத்தை, உன்னை என் கைவசப்படுத்திக்கொண்டேன். இனி உரலில் அகப்பட்டவள் உலக்கைக்குத் தப்பமுடியுமா. வா வெளியே. இனி வேறு வழியுனக்கில்லை" யென்று சொல்லிக்கொண்டே மேல்மூடியைத் திறக்கவே உள்ளே அடைபட்டிருந்த கரடியானது வெளியில் குதித்து, அவ்வறையை விட்டு வெளியில்செல்ல வழியில்லாததால் அவ்வேதியன்மேல் திரும்பி அவன் கழுத்தைப் பிடித்துக்கடித்துக் கொல்ல ஆரம்பித்தது "ஐயோ, குய்யோ, முறையோ அனியாயமாய் என்னைக் கரடி கொல்லுகிறதே" என்று அவ்வேதியன் பலவாறாகக் கூச்சல் போட்டாலும், கூச்சல் அதிகரிக்க அதிகரிக்க வாத்தியகோஷம் அதிகரித்து வந்ததால், அவ்வேதியனுயிரை அக்கரடி சீக்கிரத்தில் மாய்த்துவிட்டது. கூச்சலும் நின்றுவிட்டது. வெகு நாழிகையானாலும் கதவைத் திறந்துகொண்டு அவ்வேதியன் வெளியில் வாராததால் ஏவலாளர்கள் ஆலோசனை செய்து, கதவைத் தட்டிப்பார்த்தும் பதில் சத்தம் ஒன்றும் உள்ளிருந்து வாராததால் பயந்து கதவை கொல்லர்களால் திறப்பிக்கவே, உள்ளிருந்த கரடி அவர்கள் மத்தியில் குதித்து ஓடிப்போய்விட்டது.

பிறகு அவ்வரசகன்னிகையைக் கொண்டுபோன அரசன் மகன் அப்பெண்ணை அவள் தகப்பனாரிடம் கூட்டிக்கொண்டு போய்விட்டு நடந்த வர்த்தமானங்களையெல்லாம் சொல்ல, அவ்வரசன் வேதியன் மேல்சீறி, அவனை சிக்ஷை செய்யும் பொருட்டு தன் ஏவலாளர்களால் அம்மறையோனை ஊரெங்கும் தேடுவித்தும் அவன் அகப்படாமல் மறுநகரில் கரடியால் அவன் மாய்ந்த சங்கதியைத் தெரிந்து கடவு

ளாலேயே அவனுக்குத் தகுந்த தண்டனை செய்யப்பட்டதென்று எண்ணி, தன் மகளை அவ்விராஜகுமாரனுக்குக் கல்யாணம் செய்வித்து எல்லாரும் சுகமாக இருந்தார்கள். ஆதலால் ஓ இராஜநந்தனையே முன்னேமேயே என் வார்த்தையைக் கேளாமல் உன் தகப்பனார் நகரத்தை விட்டுவந்தனை. பகவானால் நியமிக்கப்பட்டது தப்புமா. ஆதலால் இனி நாம் விசனப்பட்டாவதென்ன. நாங்களிருவரும் பெண்மக்கள். நமக்கு ஓர் ஆண் துணையில்லாமல் இருக்கலாகாது. ஆதலால் இந்த லால்மாட்டியை நமக்கு வேலைக்காரனாக வைத்துக்கொண்டு, இனி அடுத்தாப் போலவரும் நகரத்துள் பிரவேசித்து, ஒரு வீடு வாடகைக்குத் தீர்மானித்துக்கொண்டு அதில் சில நாள் இருந்தால், பிறகு உன் அழகிற்கும் வித்தைக்கும் மெச்சி யாராவது ராஜவமிசத்தோர் உன்னை விவாஹம் பண்ணிக்கொள்ளக்கூடாதா. என் விருதாவில் அழுகிறாய் அம்மா, உன் அழுகையை நிறுத்திவிட்டு தைரியங்கொள்'' என்று தாதி அநேக விதமாகப் போதிக்கவே அவ்விராஜநந்தனை அழுகையை நிறுத்தி, தானும் தன் தாதியும் ஓர் குதிரையில் ஏறிக்கொண்டு, லால்மாட்டியை அந்த நகைப்பெட்டியுடன் வேறு குதிரையின் மேல் ஏறச்செய்து வெகுதூரம் வழி நடக்கவே அங்கோர் பெரிய பட்டணம் புலப்பட்டது. அப்பட்டணத்துக்குள்ளே செல்லாமல், வெளியேயிருந்த ஓர் சத்திரத்தில் இறங்கிக்கொண்டு, லால்மாட்டியிடம் கொஞ்சம் திரவியம் கொடுத்து வேண்டிய சாமக்கிரியைகளும் பாத்திரங்கள் வகைறாக்களும், வாவழைத்துக்கொண்டு, தாதி சமையல்செய்து அரசன் மகளுக்குப் பறிமாறி, தானும் பிறகு உண்டு. மீந்ததை லால்மாட்டிக்குப்போடவே அவனும் அதைச் சாப்பிட்ட பிறகு அவனை ஊருக்குள் சென்று தங்களுக்குத் தகுந்த ஓர் விடுதியைச் சித்தம் செய்துகொண்டுவரும்படி கட்டளையிட, அவன் அவ்வார்த்தையை சிரசா வஹித்து அந்த ஊருக்குள் சென்றனன்.

அவ்வூரை ஆளும் அரசனுக்கு மதனகேசரியென்று பெயர். அவன் நல்ல வனப்புவாய்ந்தவன். நற்குணங்களும் பொருந்தினவன். அவனுக்கும் ஒரே புத்திரிதான் உண்டு. அவள் பெயர் சிங்காரவல்லி. இங்ஙனமிருக்க அவ்வூருக்கு ஓர் வணிகன் ஒரு மாதத்திற்கு முன்பாக வந்து ஓர் மாணிக்கத்தை அரசனிடம் காட்டி அதை விலைக்கு வாங்கிக்கொள்ளும்படி அரசனைக் கோறினன். அம்மாணிக்கமோ

சிறிய உருவாயிருந்தபோதிலும் அபூர்வமான பிரகாசமுள்ளதாயிருந்தபடியால், அதின் விவரம் இன்னதென்று தெரியாமல் வணிகர்களுக்கு அதன் விலையை மதிப்பது அசாத்தியமாயிருந்தது. விலையே மதிக்கக்கூடாதிருந்தபொழுது அம்மாணிக்கத்தை அரசன் எங்ஙனம் விலைக்கு வாங்குவான்; வாங்க முடியவில்லை. அதற்கு அவ்வணிகன் "இவ்வொரு சிறிய மாணிக்கத்தை விலைமதித்து வாங்கிக்கொள்ள சக்தியில்லாத உனக்கு வேந்தன் என்னும் பெயர் என்னத்திற்கு" என்று உதாசீனமாய்ச் சொல்ல, அரசன் நாற்பது நாளைக்குள்ளாக அதை தான் விலைமதிப்பித்து வாங்கிக்கொள்வதாகச்சொல்லி அவ்வணிகனை உடன்படுத்தி அம்மாணிக்கத்தின்கண் உள்ள இரகசியத்தை தெரியப்படுத்தி அதனை விலைமதிப்பவர்களுக்கு அளவற்ற செல்வம் கொடுப்பதாக ஊரெங்கும் பறை அறைவித்து, தானும் தன் இஷ்ட தேவதாப் பிரார்த்தனை செய்து இங்ஙனம் ஓர் வணிகனால் தனக்கு நேரிட்ட அவமானத்திற்காக மனம் வருந்தி, அன்ன ஆகாரம்விட்டு, க்ஷீரபானத்தின்பேரிலேயே தன் ஜீவனை வைத்துக்கொண்டிருந்தான். வெங்காஸாமியும் அவ்வூருக்குள் நுழையும்பொழுது தன் மீதிலுள்ள கரியைப்போக்கி சென்றதனால், அக்கோட்டை வாயில் காவலாளர், ஊருக்குள் புதிதாய் வரும் பெரிய மனிதர்களையெல்லாம் கேட்பதுபோல் இவனையும் "உமக்கு இரத்தினபரீக்ஷை தெரியுமோ" என்று கேட்டார்கள். அதற்கு வெங்காஸாமியும் தனக்குத்தெரியும் என்று சொல்லவே அவனிடம் தங்கள் அரசனுக்கு நேர்ந்திருக்கும் அவமானத்தையும் அவன் இருக்கும் நிலைமையையும் தெரிவித்து அவனைத் தங்கள் அரசனிடம் அழைத்துக்கொண்டுபோய்விட்டனர். அரசனும் அவ்வெங்காஸாமியை அர்க்கியபாத்தியாதிகளால் பூஜித்து ஓர் ஆசனத்தில் உட்காரச்செய்ய வெங்காஸாமியும் அரசனை நோக்கி "நான் காசி தேசத்து வேதியன். தங்களுக்கு நேர்ந்திருக்கும் இந்த ஆபத்தை என் மந்திரசக்தியால் அறிந்தே அவ்விடுக்கண்ணைத் தீர்க்க இங்குவந்தேன். அம்மாணிக்கத்தின் இரகசியத்தை நான் தப்பாமல் வெளியிடுகிறேன். ஓ, அரசனே நீர் துக்கப்படவேண்டியதில்லை சுகமாக போஜனாதிகள் என்றும்போல் செய்துகொண்டிரும்" என்று சொல்லி அவ்வரசன் அனுமதியின்பேரில் ஓர் பொன் கலசத்தில் ஸாஸ்வதி தேவியை (நாமகளை) ஸ்தாபித்து கிரமப்பிரகாரம் ஒன்பது நாள் பூஜைசெய்து வந்தனன். பத்தாம்நாள் வாணி அவனுக்கு

மறுபடியும் பிரத்தியக்ஷமாகி, அம்மாணிக்கத்துக்குள் கொஞ்சம் ஜலமும் ஒரு துண்டு அப்ரஞ்சி (அதிக சுத்தமான தங்கம்) இருப்பதாகவும், அதனால்தான் அதற்கு அவ்வளவு காந்தியிருக்கிறதென்றும் சொல்லிப்போயினள். இங்ஙனம் உண்மையை அறிந்துகொண்ட வெங்காஸாமி, அரசனிடம் சென்று அவ்வணிகனை வரவழைத்து "ஐயா, உமது மாணிக்கம் கெட்டி உடைமையல்ல. உள்ளே காலியிடம், அவ்விடத்தில் கொஞ்சம் ஜலமும், ஒரு துண்டு அபரஞ்சியும் இருக்கிறது. ஆதலால் உம் மாணிக்கம் அத்தங்கத்தின் விலையைவிட அதிக விலையாகமாட்டாது" என்று சொல்லவே, அவ்வணிகனுக்கு அதிக கோபம் பிறந்து "என் மாணிக்கத்தை இவ்வண்ணம் இகழ நீர் யார்—ஓய் வேதியரே நான் அநேக சதுரர்களால் விலைமதிப்பித்து கோடிக்கதிகமாக திரவியத்தைக் கொட்டிக்கொடுத்து வாங்கி வந்திருக்கிறேனே" என்று சொல்லவே, அதற்கு அரசன் ஆனால் அம்மாணிக்கத்தை உடைத்துப்பார்ப்போம் இவ்வேதியர் சொல்லுகிறபடி இருந்தால் நீ அம்மாணிக்கத்தின் விலையை இழந்துவிடவேண்டியது அல்லது அது நிஜமான மாணிக்கமாகவே இருந்தால், நீர் கொடுத்ததாகச் சொல்லும் பணத்திற்கு இரட்டிப்பு நான் கொடுக்கிறேன்" என்று சொல்லி அவ்வணிகனை உடன்படுத்தி, அம்மாணிக்கத்தை உடைக்கவே, அதில், வெங்காஸாமி சொன்னபடி கொஞ்சம் ஜலமும் ஒரு துண்டு அபரஞ்சியும் தான் இருந்தது. "ஐயோ, அந்தோ, நான் அந்நியாயமாய் இவ்வேதியனுடன் பந்தயம்வைத்துக் கெட்டேனே" என்று அவ்வணிகன் அழுதுகொண்டே தன்னிருப்பிடம் சென்றான்.

இவ்வண்ணம் அவ்வணிகனால் தனக்கு நேர்ந்துள்ள இடுக்கண் தீரவே அரசனும் வெங்காஸாமியை அதிகமாகக் கொண்டாடி இரத்தினப்பரீக்ஷையில் வல்லவரென்பதைக் குறிக்க, இரத்தினபாரிக்ஷராயன் என்று மறுநாமமிட்டு அவனைத் தன்னிடமிருக்கும்படி வேண்டிக்கொண்டு அவனுக்குத்தன் அரண்மனைக்கடுத்த அரண்மனையை விடுதியாகக்கொடுத்து அவனுக்கு செலவுக்கு ஏராளமான பொருள்களையும் கொடுத்தனன். வெங்காஸாமியும், தன் உடம்பில் வழக்கப்படி கரி பூசிக்கொண்டு சண்பகவல்லியிடம் வந்து, வீடு ஒன்று தீர்மானம் செய்ததாகத் தெரிவித்து அஸ்தமித்தபிறகு மூடுபல்லக்கில் சண்பகவல்லியையும் அவள் தாதியையும் ஏற்றிக்கொண்டுவந்து அவ்

வரண்மனையில் சேர்ப்பித்தான். இவர்கள் முன்னால் வெங்காஸாமி வரும்பொழுதெல்லாம் கரி பூசிக்கொண்டே வருவான். வெளியில் திரியும்பொழுதெல்லாம் அக்கரியை துடைத்துவிட்டுத் தகுந்த ஆடையாபரணங்கள் வாகனங்களுடன் திரிவான். அவ்வரண்மனையில் மேல்மாடியில் அரசநந்தனையும், தாதியும் படுப்பார்கள். கீழே லால்மாட்டி படுப்பான். இங்ஙனம் சில நாள் சென்றபிறகு, ஓர் இராத்திரி மேடையின்மீது ஹம்ஸதூளிகாமஞ்சத்தின்மேல் படுத்துக் கொண்டிருந்த சண்பகவல்லிக்குத் தூக்கம் வராமல் தான் மந்திரி மகனை மணம்புரியக்கோரியபடி தனக்கு நேராமல், இங்ஙனம் தான் வேற்றூரில் தனிமையாய் வசித்திருக்க தனக்கு அமைப்பிருந்ததை எண்ணி எண்ணி மனம்நொந்து பிறகு ஒருவாறு தன் மனதை திடப் படுத்திக்கொண்டு, தனக்கு சீக்கிரத்தில் தகுந்த கணவனைக் கூட்டி வைக்கவேண்டுமென்று கடவுளின் தியானமாக நான்கு வெவ்வேறு குரல்களாக நான்கு கீர்த்தனைகளைப் பாடினாள்.

முன்னமேயே இரத்தினபாரிகாராயனுக்கு அரசன் விட்டவிடுதி அரசன் அரண்மனைக்கு அடுத்ததென்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா. அப்படி அது அடுத்ததுமாத்திரமல்ல. அவ்வரசன் அரண்மனையைப்போலவே ஒவ்வொரு அம்சத்திலும் கட்டப்பட்டுள்ளது. (இங்ஙனம் இரண்டு வீடுகளைக் கட்டிக்கொண்டு ஒன்றில் குடியிருந்துகொண்டு மற்றொன்றை புதுப்பித்துவருவது முன்காலத்தரசர்களுக்கு வழக்கம்) இங்ஙனம் தான் இருக்கும் வீட்டின் மேடையின் மீது படுத்திருந்த சண்பகவல்லி பாட ஆரம்பித்ததும் அதற்கு இணையாயிருந்த அடுத்த வீட்டின் மேடையின்மேல் படுத்துக்கொண்டிருந்த மதனகேசரியும் விழித்தெழுந்து கர்ணமிருதமாயிருந்த அந்தப் பாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்தனன். சண்பகவல்லி கீர்த்தனைகள் பாடி முடிந்ததும் தூங்கினாள். அரசனுக்கோ தூக்கம் வராமல் விடியும்வரையில் படுக்கையில் புரண்டுகொண்டிருந்து, பொழுது விடிந்ததும் கீழேயிறங்கி நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டு மந்திரியை வரவழைத்து, இராத்திரி தான் கேட்ட சங்கீதத்தின் மகிமையை அதிகமும் புகழ்ந்து, "இரத்தினபாரிகாராயன் வீட்டில் நாலு பேர் கன்னிகைகள் இருக்கிறார்கள், அவர்கள் எல்லாரும் இனிமையாய்ப் பாடுகிறார்கள். அவர்களின் வடிவு எவ்வண்ணம் இருக்குமோ நான் அறியக்கோறுகிறேன்" என்று சொல்லவே மந்திரி "சுவாமி,

இரத்தினபாரிகராயன் மனையில் இருப்பவர்கள் நால்வரல்ல ஒருவளே. அக்கன்னிகை ஒருத்தியே வெவ்வேறு குரலாகப்பாடியதால் தாங்கள் நால்வர் இருக்கிறார்கள் என்று எண்ணுகிறீர்கள். அம்மாதைத் தாங்கள் பார்ப்பது அதிக கடினமல்ல. இன்னம் கொஞ்ச நேரத்திற்குள்ளாக இரத்தினபாரிகராயன் என்றைப்போல உங்கள் தரிசனத்திற்கு வருவான். அவனிடம் சாதாரணமாக வார்த்தைகளாடிக்கொண்டே, 'ஐயா இரத்தினபாரிகராயரே, நான் வெகு நாளைக்குமுன், என் தகப்பனார் அரசாண்டுகொண்டிருந்தபொழுது, காசி யாத்திரை சென்றிருந்தேன். அப்பொழுது அத்தேசத்து மாதரின் சமையல் சாப்பிட்டிருக்கிறேன். அவர்கள் வெகு ருசியாக சமைப்பார்கள். இன்னும் அச்சமயலை நினைத்துக்கொண்டால் என் நாவில் ஜலம் ஊறுகிறது. மறுபடியும் அத்தேயத்து மாதர் சமயலை உண்ண ஆசையாயிருக்கிறது என்று சொன்னால் அவன் அவசியம் தங்களைத் தன் வீட்டிற்குச் சாப்பாட்டுக்கு வரச்சொல்லிக் கோறுவான். அப்பொழுது சமீபத்திலுள்ள என்னையும் விருந்துக்கழைப்பான். அப்பொழுது நானும் வருகிறேன். அப்பெண்மணியைப் பார்த்துவரலாம்'' என்றனன்.

இங்ஙனம் இவர்கள் இருவரும் ஆலோசனை செய்து உட்கார்ந்துகொண்டிருக்கையில், இரத்தினபாரிகராயனும் வழக்கப்படி அரசனைக் காணவரவே, அவனுடன் அரசன் கொஞ்சம் நேரம் வரையிலும் வெவ்வேறு விஷயங்களாய் வார்த்தைகளாடிக் கொண்டிருந்து பிறகு சமயல் சம்பந்தமான வார்த்தைகளை ஆரம்பித்து, தான் சிறு வயதாயிருந்தபொழுது காசி யாத்திரைக்குப் போயிருந்த பொழுது அத்தேயத்து மாதர் செய்த பக்குவான்னங்களைத் தான் உண்டதாயும் இப்பொழுது தனக்கு மறுபடியும் அவ்வண்ணம் அந்த நாட்டு மாதர் சமயலை உண்ண ஆசையா யிருப்பதாயும் வெளிப்படையாய்ச் சொல்ல, இரத்தினபாரிகராயன் அரசன் கருத்தை அறிந்தும் மறுமொழி ஒன்றும் சொல்லாமல் தன் வீட்டிற்கு சென்று இவ்வார்த்தைகளை வேலைக்காரியிடம் சொல்லி இராஜநந்தனைக்கு தெரிவிக்கச் சொல்ல, இவ்வார்த்தைகளையெல்லாம் கேட்டுக்கொண்டே உள்ளே நின்றுகொண்டிருந்த சண்பகவல்லி வெளியில் வந்து "அடா லால் மாட்டி, நிர்மூடா, உன்னிடமாவது இவ்வூர் அரசனாவது பேசவாவது என்ன. பெரும் பொ

ய்யை என் சொல்லுகிறாய். உன் நாக்கு பிளக்காதா. உனக்கு வெட்கமில்லையா'' என்று வெங்காஸாமியை ஏச, தாதி எப்பொழுதும்போல் தன் அரச புத்திரியின் கோபத்தைத் தணித்து, உனக்கு ஏன் இவ்விதமான கோபம் பிறக்குமோ தெரியவில்லை. ஒருகால் நீ இவ்விடம் இவ் வீட்டில் குடியிருக்கும் சங்கதியை எவ்வண்ணமோ அடுத்த வீட்டில் குடியிருக்கும் அரசன் தெரிந்துகொண்டு உன்னைப் பார்க்கவேண்டுமென்றும் ஆலோசனையால், இங்கு நமது வேலைக்காரனாயிருக்கும் இந்த லால்மாட்டியை வரவழைத்து ஏன் இங்ஙனம் அவனுடன் பேசியிருக்கக் கூடாது. நல்லது இவன் மெய்யும் பொய்யும் சீக்கிரம் தெரிந்துகொள்வோம். விருந்துக்கு வரச்சொல்லி ஒரு நாள் குறிப்பிட்டு, அரசனையும் மந்திரியையும் இருவரையும் இவன் அழைக்கட்டும். அவர்கள் வருவார்களானால் இவன் சொல்வது மெய்யாகுமல்லவா'' என்று சொல்ல, சண்பகவல்லி அக்கருத்துக்கிசைந்து அங்ஙனமே அரசனையும் மந்திரியையும் அடுத்த வெள்ளிகிழமைதினம் விருந்துக்கழைத்து வரச்சொன்னாள். வெங்காஸாமியும் சென்று அவ்வண்ணமே அரசனையும் மந்திரியையும் அழைத்து விட்டு வந்தான். தான் முதல் இராத்திரி நாலு குரல்களாகப் பாடியதை அரசன் கேட்டிருப்பதால் தான் இவ்வண்ணம் தன்னைப்பார்க்க ஏற்பாடு செய்திருக்கிறான் என்று சண்பகவல்லி தீர்மானித்து தான் நாலு குரல்களாகப்பாடியதால் நால்வர் இருப்பதாக அரசனுக்கு மெய்ப்பிக்க வேண்டுமென்று சண்பகவல்லி ஆலோசனை செய்து தன் சமையல் அறையை நான்கு பகுதிகளாகத்தடுத்து, ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு வர்ணமான கதவுகள் (மஞ்சள், பச்சை, சிகப்பு, வெண்மை) ஏற்படுத்தி ஒவ்வொரு பகுதியிலும், அதன் கதவின் நிறத்துக்குத்தகுந்த உண்டிகளை சித்தம் செய்து வைத்து தானும் நான்கு நிறமான ஆடையாபரணங்களை சித்தம் செய்துகொண்டு, வெள்ளிக்கிழமை வந்ததும் லால்மாட்டியால் அரசனையும் மந்திரியையும் வரவழைத்து அவர்களுடன் லால்மாட்டியையும் உட்காரச்செய்து முதலில் வெள்ளை பீதாம்பரத்தையும், அதன்மேல் சிகப்பு பீதாம்பரத்தையும், அதன் மேல் பச்சை பீதாம்பரத்தையும், அதன்மேல் மஞ்சள் வர்ணமுள்ள பீதாம்பரத்தையும் உடுத்திக்கொண்டு மஞ்சள் நிறமான (தங்கத்தால் செய்த) ஆபரணங்களை அணிந்துகொண்டு, தலையில் முதலில் மல்

லிகைப்பூவால் ஜடையும் அதன்மேல் ரோஜாப்பூவால் ஜடையும் அதன்மேல் மருவு, மருக்கொழுந்தால் ஜடையும் அதன்மேல் சாமந்திப்பூவால் ஜடையும் போட்டுக்கொண்டு முதல்முதலில் தங்கத்தட்டில் பருப்பு முதலிய மஞ்சள் நிறமான உண்டிகளை எடுத்துவந்து அம்மூவர் இலையிலும் பரிமாறும்பொழுது, மந்திரி அதிக சாமர்த்தியமாய் தான் அப்பொழுது தன்கையில் குழைத்துக்கொண்டிருந்த சந்தனத்தில் ஓர் துளி அவள் வலது பாதத்தின்மேல் அவளுக்குத் தெரியாமல் தெளிக்கும்படி செய்தனன். அதிசீக்கிரத்தில் பரிமாறி அவள் உள்ளே செல்லும் முன்னேயே அந்த சந்தனத்துளியை ஜாடையாகத் தன் அரசனுக்கு காண்பித்தான். பரிமாறினதும் சண்பகவல்லி, மஞ்சள் கதவின் வழியாக உள்நுழைந்து, உடனே தன் மேலுள்ள தங்க ஆபரணங்களை நீக்கி, பச்சையால் செய்யப்பட்ட ஆபரணங்களணிந்து மஞ்சள் பட்டை அவிழ்த்தெறிந்து மஞ்சள் சடையையும் நீக்கி, அவற்றினுள்ளிருந்த பச்சைப்பட்டுடனும் பச்சைச்சடையுடனும், புறப்பட்டு, மரகதத்தட்டில், பச்சடி காய்கறி முதலிய பச்சை நிறமான அடிசல்களை எடுத்துக்கொண்டு, பச்சைக் கதவின் வழியாய் வந்து பரிமாறிக்கொண்டிருக்கையில் அரசனும் மந்திரியும் அவள் காலில் விழுந்திருந்த சந்தனத்துளியைப் பார்த்துக் கொண்டிருந்தபடியால் இவ்வளவு சீக்கிரத்தில் இவவண்ணம் ஆடை ஆபரணசடைகளை மாற்றிக்கொண்டதற்கு அதிகவியப்படைந்தனர். அப்பச்சைநிறமான உண்டிகளை வட்டித்த பின்னர் உடனே பச்சைக்கதவின்வழியாகவே உள்நுழைந்து, பச்சையாபரணங்களைநீக்கி, ரத்தினங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்து, பச்சை சடையையும் பச்சைப்பட்டையும் நீக்கி, அவைகளின் கீழிருந்த சிவப்பு சடையுடனும், சிவப்புப்பட்டுடனும், சிவப்பு நிறமான பாத்திரங்களில் சிவப்பு நிறமான குழம்பு வகைருக்களை எடுத்துவந்து வட்டித்து செல்லும்பொழுதும், அவள் காலில் இருந்த சந்தனத்துளியை அரசனும் மந்திரியும் பார்த்துக்கொண்டே இருந்தனர். பிறகு சண்பகவல்லி, சிவப்பு வாசல் வழியாய் உள் நுழைந்து, உடனே அவ்விரத்தின உடைமைகளைக் கழைந்து வெள்ளியாலும் முத்தினாலும் செய்யப்பட்ட வெள்ளை உடைமைகளை அணிந்துகொண்டு, ரோஜாபூவின் சடையையும் சிவப்பு பீதாம்பரத்தையும் நீக்கவே அவைகளின் உள்ளிருந்த வெள்ளைப்பீதாம்பரத்துடனும் மல்லிகைப் பூச்சடையுடனு

ம், வெள்ளித்தட்டில் வெள்ளை நிறமான சாதத்தைக்கொண்டு பறி மாறி உள் சென்றனள். இங்ஙனம் அதிசீக்கிரத்தில் நான்கு வேஷங்களாக நான்கு தடவைகளில், நான்கு விதமான உண்டிகளை வட்டித்துச் சென்ற சொகுஸையும் நாஜுக்கையும் பார்த்து அரசனும் மந்திரியும் அதிக வியப்படைந்து, விருந்துக் களிக்கப்பட்டவைகள் அதிக உருசிகரமாயிருக்கக் கண்டு உண்டு, ரத்னபாரிகராயனால் கொடுக்கப்பட்ட, உள்ளிருந்து தங்கத்தட்டில் வைத்துவந்த, தாம்பூலாதிகளை அருந்தி தம் விடுதிகள் சேர்ந்தனர்.

அவ்வூர் அரசன் சங்கீதத்தில் அதிகமான ஆவலுடையவன் என்று முன்னமேயே சொல்லி யிருந்தோமல்லவா. ஆதலால் அவன் அக்கன்னிகையின் அழகைக் கண்டதும் அவளுக்கு ஆடலில் உள்ள சாமர்த்தியத்தையும் பார்க்கக் கோறி அமைச்சனை நோக்கி "அமாத்தியரே நீர் செய்த சாமர்த்தியத்தினால் அக்கன்னியைப்பார்க்கலானேன். நீர் வெகு சாதுர்யமாக சந்தனத்துளி தெளித்ததால், நால்வர் அல்ல ஒரு மாதே என்றும் தெரிந்துகொண்டேன். ஆயினும் நான்குதரமும் பறிமாற வந்த பொழுதெல்லாம் திடீரென்றுதோன்றி உடனே மறைந்து போனபடியால் அம்மாதினழகை முழுமையும் எனக்குப் பார்க்கச் சாவகாசப்படவில்லை. ஆதலால் அவளழகை நான் முழுமையும் நோக்கும்படியாகவும் அவளுக்கு பாடலின் கண் உள்ள நேர்ச்சியே ஆடலின் கண்ணும் உளதா என்று அறியவும் தக்க ஒரு உபாயம் நீர் எப்படியாவது செய்யவேண்டும்" என்று அரசன் தன்னை வேண்டிக்கொள்ளவே, வெகு காலம் ஆலோசித்து மந்திரி அரசனை நோக்கி "ஸ்வாமீ, இந்நகரின்கண் ஸரஸ்வதி தேவியின் உத்ஸவம் நடந்து வெகு நாளாகிறது. (முன் காலத்தில் ஸரஸ்வதி உத்ஸவம், காளிகாதேவியின் உத்ஸவம் என்று இவ்விதமான திருவிழாக்கள் நல்ல வஸந்த காலத்தில் ஊருக்கு வெளியிலுள்ள தோட்டங்களில் செய்வதும், அதில் எத்திறத்தாரும் கலந்து, இக்காலத்திய பிக்னிக் (Picnic) மாதிரி உண்டிகள் கொண்டுபோயோ, அல்லது அத்தோப்பிலேயே சமைத்தோ சாப்பிட்டு, இராத்திரியானதும், அத்தோப்பின் மத்தியில் ஓர் ரமணீயமான பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரு மண்டபத்தில் அந்த தேவதையின் கலசத்தை ஸ்தாபனம் செய்து அதன் முன்னர் ஆடல்பாடல்கள் நடத்திக்களிப்பதுண்டு.) அத்திருவிழாவை, வரும் வெள்ளிக்கிழமைத்தி

னம் நடத்தும்படி ஏற்பாடு செய்வோம். வழக்கத்தைவிட அதிக ஆடம்பரமாகவே செய்வோம்—என் மனைவியும் தங்கள் அரசியும் போய் ரத்னபாரிகராயன் மனைவியை அழைத்துவரட்டும். பொழுது பட்டவுடன் எல்லாரும் பார்க்க கணிகையர்கள் ஆடல்பாடலானவுடன் ஊராரையெல்லாம் அனுப்பிவிட்டு, நானும் என் மனைவியும் தாங்களும் தங்கள் அரசியும் இரத்தினபாரிகராயனும் அவன் தேவீயும் ஆக நாங்கள் ஆறுபேர் மாத்திரம் தங்கினல் அப்போது அம்மாதை அவ்வம்மனின் முன்னிலையில் நர்த்தனம் செய்விக்கும்படியான ஏற்பாடு செய்கிறேன்." என்றனன். அரசனும் அவ்வார்த்தைக்கிணங்கி அங்ஙனமே பறை சாற்றுவிக்கவே, எல்லாரும் மறுவெள்ளிக்கிழமைத்தினம்—ஊருக்கு வெளியிலுள்ள தோட்டத்தில்—சேர்ந்தார்கள். இராத்திரி ஆனதும், ஊரார் எல்லார் முன்னிலையிலும் கணிகைமார்களால் நர்த்தனம், ஸங்கீதம் முதலியன செய்துவிட்டு, பிறகு அவர்களையும், அக்கணிகர்களையும் அனுப்பிவிட்டு, பண்டாரவல்லியென்னும் ஓர் பண்டார (பூஜாரிப்) பெண்ணும், சங்கேதப்படி தாங்கள் மூன்று தம்பதிகளும் [அதாவது இராஜன், இராணி 1, மந்திரி அவன் மனைவி 2, இரத்னபாரிகராயன், சண்பகவல்லி 3] மாத்திரம் நின்றார்கள்—அப்பொழுது அரசனை நோக்கி, மந்திரி, "ஸ்வாமீ—வழக்கப்படி அம்மன் முன்பாக தங்கள் அரசி நர்த்தனம் செய்யட்டும். அதற்குத்தாங்கள் வாத்தியம் அடிக்கவேண்டும்" என்று சொல்ல, அரசனும் தன்கழுத்தில் மத்தளத்தைமாட்டிக்கொண்டு அடிக்கத்தொடங்க, அரசியும் நர்த்தனம் செய்தனள். நாம் முன்னமேயே இவ்வரசிக்கு ஒரு வயது வந்த புத்திரி உண்டென்று சொல்லியிருக்கிறோம் அல்லவா. ஆதலால் இவ்வம்மாளால் நர்த்தனம் சரியாய் செய்யமுடியவில்லை. மேலும் கொஞ்சம் பெருத்த உடல்காரியாதலால் சீக்கிரத்தில் பெருமூச்சுவிட ஆரம்பித்து நர்த்தனத்தை நிறுத்திவிடும்படி நேரிட்டது. பிறகு மந்திரி தன் கழுத்தில் மத்தளத்தைக் கட்டிக்கொண்டு அடிக்க ஆரம்பிக்கவே அவன் மனைவியும் நர்த்தனத்துக்காரம்பித்தனள். இப்பெண்மணி இளவயதானதால், அரசியைவிட எவ்வளவோ மடங்கு அதிக நேர்த்தியாக நர்த்தனம் செய்தனள். இந்நர்த்தனமும் முடிந்தபிறகு இரத்தினபாரிகாராயன் கழுத்தில் மத்தளம் கட்டப்பட்டது. சண்பகவல்லி நர்த்தனம் செய்யும்படி நேர்ந்தது. அப்பொழுது தன் ஆசை நேசனை மந்திரி மக

ன் தன் பக்கத்தில் இருந்தால் அவன் சாமர்த்தியமாய் மத்தளம் அடிப்பானே. நாமும் நன்ருய் நர்த்தனம் செய்யலாமே. ஐயோ என்விதி இந்தலால்மாட்டியை என் பக்கத்தில் சேர்த்ததே என்று சண்பகவல்லி பட்டமனத்துயரத்தைச் சொல்ல, இரண்டாயிரம் நாவுடைய ஆதிசேஷனுலும் முடியாதென்ருல் நம்மால் முடியுமோ. ஆயினும் அவள் நர்த்தனம் செய்யவேண்டிவந்ததால் அரைமனதோடும் ஆரம்பித்தனள். இரத்தினபாரிகாராயனுக்கு ஸரஸ்வதி பிரத்தியக்ஷமானதும் எல்லா வித்தைகளிலும் நேர்ச்சியை அவனுக்களித்ததும் சண்பகவல்லிக்குத் தெரியாதல்லவா. ஆதலால் அங்ஙனம் அவள் துக்கித்தது சகஜம் தானே. இங்ஙனம் அரைமனதுடன் நர்த்தனம் ஆரம்பிக்கவும், இரத்தினபாரிகராயன் தான் அடிக்கும் மத்தளத்தில் தனக்குள்ள முழுச்சாமர்த்தியத்தையும் ஸரஸ்வதி தேவியின் வரத்தின் மகிமையையும் காட்டவே, சண்பகவல்லிக்கு பேரானந்தம் பிறந்து தன் முழுமனதோடும், தன் முழு நேர்ச்சியோடும் நர்த்தனம் செய்ய ஆரம்பித்தனள். சண்பகவல்லி எவ்வளவுக்கெவ்வளவு அதிக நேர்மையுடன் நர்த்தனம் செய்தாளோ அவ்வளவுக்கவ்வளவு இரத்தினபாரிகராயனும் மத்தளத்தில் தன் சாமர்த்தியத்தைக் காண்பிக்க, சண்பகவல்லி இன்னமும் நேர்ச்சியாய் நர்த்தனம்செய்ய, இவனும் அதிக கவனமாய் மத்தளம் அடிக்க, இங்ஙனம் இவ்விருவருக்கும் ஓர்வித ஆனந்தக்களிப்புண்டாக, சண்பகவல்லிக்கு அவனிடமிருந்த வெறுப்பு நீங்கி, அவன் வித்தையின்கண் ஓர் வியப்புண்டாக, அவனைத்திரும்பிப்பார்க்க, அவன் அன்றையத்தினம் தன் உடம்பில் கரிபூசாமலிருந்ததால் அவன் தேககாந்தியை கண்டு பிரமித்து 'இம்மகான், சாம்பலால் மூடப்பட்ட நெருப்புபோல் தன் சாமர்த்தியம் முழுமையையும் தன்னழகையும் மறைத்துக்கொண்டு, நம்மிடத்தில் அநேகவித அவமானமும் துன்பமும் பொறுமையாய் பெற்று வந்தானே.' என்னும் ஓர் பச்சாத்தாபம் அவள் மனதில் உதித்து, அவன் மத்தளம் அடித்த நேர்மைக்கு அவனை மெச்சிக்கொண்டு, தன்மனதில் உண்டான ஆனந்தம் அவனுக்குத்தெரியும்படியாக, தன் கழுத்தில் போட்டுக்கொண்டிருந்த விலையுயர்ந்த ஒரு முத்தாரத்தை நர்த்தனம் செய்துகொண்டிருக்கையிலேயே கழட்டி எடுத்து அவன் கழுத்தில் போட்டாள். அப்படி அந்த ஹாரம் அவன் கழுத்தில் போடப்பட்டது, அவன் மெய்ம்மறந்து மத்தளம் அடிக்குங்கால

த்தில் அவன் மத்தளத்தின்மேல் பிறழ்வதனால் அபசத்தம் உண்டாக, அதனை அறிந்த இரத்தினபாரிகராயன், அம்மாலையைத் தானும் தன் கழுத்தினின்றும் எடுத்து அடுத்தாற்போலிருந்த ஒருகல்லினால் செய்யப்பட்ட பெண் பதுமையின் கழுத்தில் போட்டுவிட்டு, தன் வேலையில் கருத்தாயிருந்தனன். இங்ஙனம் இரத்தினபாரிகராய ன் மத்தளம் அடிக்க சண்பகவல்லி நர்த்தனம் செய்து முடித்தபிறகு, எல்லோரும் திரும்ப அவரவர் விடுதி வந்து சேர்ந்தனர். இரத்தின பாரிகராயனும் தான் அந்தப்பதுமையின் கழுத்தில் போட்டிருந்த முத்துமாலையை மறந்து வீடுவந்து சேர்ந்தான்.

சண்பகவல்லியும் திரும்பிவந்தவள், தன் மேடையின்மீது சேர் ந்து தன் தாதியை வரவழைத்து, "இரத்தினபாரிகராயரை இங்கு வரும்படி நான் வேண்டிக்கொண்டதாக அவரிடம் தெரிவி" என்று சொல்ல, அவள் அரசியை "இத்தினபாரிகராயன் என்பது யார்" என்று கேட்க, இதுகாறும் தாங்கள் தூஷித்துவந்த லால்மாட்டியின் பெயர்தான் இரத்தினபாரிகராயன் என்றும் அவ்வூரில் அவர் தனது வித்தியாவல்லமையால், அவ்வூராசனுக்கு நேர்ந்திருந்ததோர் பெரி டுக்கணைத் தீர்த்து அப்பெயரடைந்தனரென்றும் அவர் சாமர்த்தி யமும் அவரழகும், அன்று இராத்திரிதான் தனக்கு ஸரஸ்வதியம்ம ன் தேவாலயத்தில் தெரிந்ததென்றும் கூறினள். தாதியும் அதிக ஆச்சரியத்துடன் இவ்வார்த்தைகளைக் கேட்டு, தன் அரசியின் கட் டளைப்படி இரத்தினபாரிகராயனை அழைத்துச்செல்லக்கீழேயிறங்கி வந்தாள். அம்மகானும், தினமும் தான் படுத்துறங்குமிடமாகிய அவ்வீட்டின் கீழ்ப்பக்கத்தில் உள்ள ஓர் அறையில் தூங்கிக்கொண்டி ருந்தான். தாதியும் அவ்வறைக்குட்சென்று, அவனை எழுப்பி, அதிக மரியாதையாய் "ஓய் இரத்தினபாரிகராயரே, உம்மை சண்பகவல்லி கூட்டிக்கொண்டு வரும்படி என்னை ஏவினள். ஆதலால் தாங்கள் கிருபைகூர்ந்து மாளிகையின்மேல் அவளிருக்குமிடத்திற்கு தயவு செய்யவேண்டும்" என்று சொல்ல, "இதுகாறும் பகற்காலங்களில் என்னைக்கண்டபொழுதெல்லாம் ஏசித்திட்டி அவமானப்படுத்திக் கொண்டிருந்த இராஜநந்தனைக்கு, இராக்காலங்களிலும் கூட அவ்வி தமாக என்னைப் பாடுபடுத்த மனமுண்டாயிற்று எனக்கு என்ன விதி பிடித்திருக்கிறது. அங்ஙனம் அவளிடம் இராக்காலங்களிலும் வருத்தமடைய—தீராது பகற்காலங்களில் அவள் புளித்தும்பாடெல்

லாம் என்னைப்படுத்தட்டும். இராக்காலத்தில் நான் அவள் முன்னிலையில் வரமாட்டேன்" என்று கண்டிப்பாய் சொல்லிவிடவே, தாதியானவள் திரும்பிப்போய் அவ்வார்த்தைகளை அவளிடம் சொல்ல, அதற்கு சண்பகவல்லியும் அதிக வியாகூலப்பட்டு, தான் இதுகாறும் அம்மகானிடம் நடத்திய நடவடிக்கைக்குத் தன்னை அதிகமும் இகழ்ந்துகொண்டு, தாதியிடம் "மறுபடியும் நீ போய் அவரை நான் மிகவும் வேண்டிக்கொண்டதாகச் சொல் 'சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே' என்னும் மூத்தோர் வாக்கியப்படி நாங்கள் செய்த பிழைகளைப் பொறுப்பது முறைமையென்று அவருக்கு வற்புறுத்து. "எண்ணறக்கற்றும் எழுத்தற வாசித்தும், பெண்புத்தி பீவாரப்போச்சுது" என்று ஔவையார் ஒருகாலத்தில் அருளியபடி, பெண்புத்தி பேதைமையாதலால் நான் அங்ஙனம் அவரை இகழ்ந்து வந்ததனைப் பாராட்டாமல் பொறுத்துக்கொள்ளச்சொல்" என்று கூறி மறுபடியும் தாதியை அனுப்பவே, அவள் இரத்தினபாரிகராயனிடம் சென்று எவ்விதமாக நல்வார்த்தைகள் சொல்லியும் அவன் கேட்காமல், நான் வருவதேயில்லையென்று கடினமாயுரைக்க, அவள் சண்பகவல்லியிடம் சென்று "இரத்தினபாரிகராயன் ஒரே பிடிவாதமாயிருக்கிறுன். ஆதலால் நீயே சென்று அவரை வேண்டிக்கொண்டால் ஒழிய அவர் இங்கு வரப்போகிறதில்லை" என்று சொல்லவே, சண்பகவல்லியும் தீராப்பொறியாய் எழுந்து, காமம் ஓர்பால்தூண்ட, தான் முன் அவரை நடத்திய நடவடிக்கைகளின் நினைவு ஓர் பால் தன்னை வருத்த, மெள்ளமெள்ள வந்து, "இரத்தினபாரிகராயரே, நான் செய்த பிழையைப் பொருத்தருளி அடியாளிடம் கிருபை வையும்" என்று கூறவே அவ்வார்த்தைகளைக்கேட்டு வெங்காஸாமியும் திடுக்கிட்டெழுந்தவன்போல் எழுந்து நின்று கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு அதிக பயபக்தியுள்ளவன்போல நடித்து "எது இன்றைய இராத்திரி இவ்வடியான்மேல் இவ்வளவுகோபம்—எனக்குள்ள பேயரையே மாற்றி வேறெதோ பேரிட்டழைக்க என்ன காரணம்—அரசனும் மந்திரியும் என்னை நிர்ப்பந்தம் செய்தபடியால் நான் மத்தளம் அடித்தேனே ஒழிய வேறில்லை, அதற்குத்தாங்கள் நர்த்தனம் செய்வீரென்று நான் எண்ணவேயில்லை. அங்ஙனம் நான் அந்த வாத்தியத்தை முழக்கியதில் எதாவது தப்பிதம் இருந்தாலும் என்னை மன்னிக்கவேண்டும். அரசி

யரே நான் ஏழையாகிய லால்மாட்டியல்லவா. என்பேரில் இவ்வளவு கோபம் தங்களுக்குப் பிறக்கலாமா" என்று அதிக வினயமாகச் சொல்பவன் போல் கூற அரசன் மகளும் இந்த கர்ண கொரேமான வார்த்தைகளைக்கேட்டு அவனுடைய கால்களில் வீழ்ந்து எழுந்து அஞ்சலிபத்தளாய் நின்று "ஏதையா இரத்தினபாரிகராயரே, உமக்கு என்மேல் இவ்வளவு நிர்ப்பந்தமாகிய கோபம்—உமது மகிமையை அறியாமல் நான் செய்த தப்பிதங்களையெல்லாம் பொறுத்தருளும். இதுவரையிலும் நான் உமதழகை ஏறிட்டுப்பார்த்தவளுமல்ல. உமக்குள்ள வித்தியாமகிமையை அறிந்தவளுமல்ல. இப்போது என் வணக்கத்தை ஏற்றுக்கொண்டு நான் செய்த அபசாரங்களையெல்லாம் மன்னித்து, என்னுடன் வந்தாலாயிற்று. இல்லாவிடில் நான் இங்கேயே உம்முடைய பாதத்தில் என் உயிரை மாய்த்துக்கொள்ளுகிறேன்" என்று சொல்லி, தன் கையில் கொண்டுவந்திருந்த ஒரு கத்தியால் தன் கழுத்தை அறுத்துக்கொள்ள யத்தனித்தவுடன், வெங்காஸாமியும் சாமர்த்தியமாய் அந்தக் கத்தியைப் பிடுங்கிக்கொண்டு "என் விதி தப்பாது, இவள் என்ன செய்தாலும் அனுபவிக்க வேண்டும்" என்று முணுமுணுத்துக்கொண்டே அவள் பின்னால்சென்று ஸ்நான அறையைச் சேர்ந்து சண்பகவல்லி ஜலம்மொண்டு கொடுக்க தான் ஸ்நானம் செய்தபிறகு அவளும் ஸ்நானம்செய்து மடியுடுத்தி, தாதி பறிமாற இருவரும் சமபந்தியாய் உட்கார்ந்து சாப்பாடு முடித்துக் கைகழுவி கட்டிலின்மேல் உட்கார்ந்து இருவரும் தாம்பூலம் போட்டுக்கொண்டிருக்கையில் அரசன் மகள் வெங்காஸாமியை நோக்கி "இரத்தினபாரிகராயரே நான் நன்ருய் நர்த்தனம்செய்தேனல்லவா? உமது மத்தள வாசிப்புக்கேற்றபடி என் நர்த்தனமும் இருந்ததல்லவா" என்றுசொல்லி, பின்னும் "நான் உமது மகிமையை அதுகாறும் அறிந்துகொண்டவள் அல்ல, அப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன். தெரிந்துகொண்டதும் என் கழுத்திலிருந்த முத்துமாலையை உமது கழுத்தில் போட்டேனல்லவா. அதனாலாவது எனக்கு தம்மிடத்தில் ஏற்பட்ட (புதிய) நண்பின்குணம் விளங்கவில்லையா" என்று கூறவே, இரத்தினபாரிகராயனுக்கு தன் கழுத்தில் அரசியால் போடப்பட்ட மாலையைத் தான் பதுமையின் கழுத்தில் போட்டது நினைவு வந்து, அதனை கொண்டுவரப் புறப்பட்டான். அதைப்பார்த்து சண்பகவல்லியும் தடுத்து, அந்த முத்துமாலை போ

னதால் எனக்கு ஒரு விசனமுமில்லை. அதைவிட விலையுயர்ந்த மாலைகள் அநேகம் இருக்கின்றன. இவ்விரவில் அவ்விடம் போகாதேயும். எனக்கு வலக்கண் துடிக்கின்றது. ஏதோ இடுக்கண் உமக்கு நேரிடும்போல் இருக்கிறது. போகாதேயும் போகாதேயும்'' என்று என்ன சொல்லி தடுத்தபோதிலும் கேட்காமல், அவ்விரவிலேயே அவன் புறப்பட்டான்.

இக்கதை யிவ்விதமிருக்க, அங்கே கோவிலில் அரசன் மனைவி முதலியோர் நர்த்தனம் செய்துகொண்டிருக்கையில் ஓர் பூஜாரிப் பெண்–பண்டாரவல்லியென்னும் பெயரினள்–காவலிருந்தாள் என்று சொல்லியிருக்கிறோமல்லவா. அப்பெண், இரத்தினபாரிகராயன் மத்தளம் அடித்த நேர்ச்சியையும், அவனழகையும் கண்டு மோகித்து, தனக்கு எப்படியாவது அவனைக் கூட்டிவைத்தால் ஒழியத்தீராதென்றும் அங்ஙனம் அவரைச் சேர்க்காவிடில் தான் பிராணன் விடுவதாயும், சரஸ்வதி அம்மனை அநேகவிதம் வேண்டிக்கொள்ள, அப்பொழுது அம்மன் அசரீரவாக்காய் "ஒ பண்டாரவல்லியே, இன்னம் கொஞ்சம் நேரத்திற்குள்ளாக அம்மகான் இவ்விடம் வருவார். முத்துமாலையை பதுமையின் கழுத்தினின்றும் எடுத்துத்தன் கழுத்தில்போட்டுக்கொள்ளவே, அம்முத்துமாலையின்கண் மறைந்திருக்குமோர் சிறிய நாகம் அவரைக்கடிக்கும். அவர் உடனே இறப்பார். அப்பொழுது இந்த விக்கிரகத்தின் முன்னால் கிடக்கும் இறகை எடுத்து அவர் தலைமயிரில் சொருகினால், உயிர் பிழைத்து எழுவார். அவரிடம் அப்பொழுது உன் கோரிக்கையைச் சொல்லிக்கொள்'' என்று உரைக்கவே, அவ்வார்த்தைகளைக் கேட்ட பண்டாரவல்லி அதிக சந்தோஷமாக அவ்விடத்திலேயே இரத்தினபாரிகாராயன் வரவை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருந்தனள்.

இங்ஙனம் இவள் காத்துக்கொண்டிருக்கையில் இரத்தினபாரிகராயனும் முத்துமாலைக்காக வந்தவன், அதையெடுத்துத் தன் கழுத்தில் போட்டுக்கொள்ளவே, தேவி அருளியிருந்தபடி, அதில் மறைந்திருந்த ஓர் நாகம் அவனைக்கடிக்கவே, விஷம் தலைக்கேறி திடீரென்று கீழே விழுந்து இறந்தான். அங்கு காத்துக்கொண்டிருந்த பூஜாரிச்சியும் தேவியின் உத்தரவின்படி அம்மன் விக்கிரகத்தின் முன் கிடந்த இறகை எடுத்து அவன் தலைமயிரில் சொருகவே, இரத்தினபாரிகராயன் உயிர் பிழைத்து ஓர் பறவை ரூபமாய் "ஜிவ்'' என்று பறந்து

போனான். அதைக் கண்ணுற்ற பூஜாரிப்பெண் ஆச்சரியத்தையும் துக்கத்தையும் அடைந்து தன் வீட்டுக்குத் திரும்பினள்.

இரத்தினபாரிகராயனும் பறவைரூபமடைந்து பறந்துபோனவன் அவ்வூரரசன்மகள் சிங்காரவல்லி தன் மேடைமீது உலாவிக்கொண்டிருக்க அவள் முன்னிலையில் போய் இறங்கவே, அவளப்பறவையை நோக்கி, அதனழகைக்கண்டு வியந்து, அதனைப்பிடிக்க முயல, அவள்கையில் அகப்பட்டுக்கொண்டான். அப்பறவையை அவள் பிடித்துக்கொண்டுபோய் ஒரு கூண்டில் விட்டு அதற்கு உண்டி முதலானதுகள் உதவி வந்தாள். ஒருநாள் இராத்திரி அப்பறவையை எடுத்து தன் மடிமீது வைத்துக்கொண்டு அதனுடன் விளையாடிக்கொண்டு அதன் தலையை தடவிக்கொண்டே இருக்கையில், இரத்தினபாரிகராயன் தலைமயிரில் சொருகியிருந்த இறகு கீழே விழுந்து போகவே, இரத்தினபாரிகராயன் தன் சுயரூபத்தோடும் அவளெதிரில் நின்றான். அவளும் (அவனுடைய) நவமோகனமான வடிவைக் கண்டு காமம் மீறி அவனை இறுகக் கட்டிக்கொண்டு தாங்கள் யார். இவ்விதமாக பறவை யுருவாகி இவ்விடம் வரக்காரணமென்ன. நான் இன்னமும் கன்னிகையாகவே யிருக்கிறேன். தங்கள்மேல் மயலானேன். என்னை காந்தருவ விவாக ரீதியாக மணந்து எனக்கு பரமானந்தத்தை விளைவிக்கவேண்டும்" என்று சொல்ல, அக்கருத்துக்கு இரத்தினபாரிகராயனுமிசைந்து, மோதிரங்கள் மாற்றிக்கொண்டு, காந்தருவ விவாகம் செய்துகொண்டு, அதிக அன்புடன் இருவரும் சம்போகித்து வந்தனர். பொழுது விடிந்ததும் அவ்விறகை இரத்தினபாரிகராயன் தலைமயிரில் சொருகவே அவன் முன்போல் பறவையானான். மறுநாளிராத்திரி அவ்விறகை யெடுத்துவிடவே, பழைய உரு ஆனான். இங்ஙனம் சிலநாள்நடக்கவே, சிங்காரவல்லியும் கர்ப்பமானாள். கர்ப்பம் தரித்து ஐந்துமாதமாகவே, அவள் சேலைகளைத் துவைக்கும் வண்ணாத்தி, அவள் தாயாரிடம் சென்று "அம்மா ஏதோ சமுசயமாயிருக்கிறது. தங்கள் மகள் சேலையின் முடி முன்போல் இல்லை இப்பொழுது அதிகமாயிருக்கிறது. ஏதோ கர்ப்பசின்னமாய், இடைபெருத்ததாகத் தோன்றுகின்றது. இது விஷயம் நான் விண்ணப்பம் செய்துகொண்டதைத் தாங்கள் தீரவிசாரியாவிட்டால் அபவாதத்துக்கிடமாகும்" என்று கூறித் தன்னிருப்பிடம் சென்றனள். அவ்வார்த்தையைக் கேட்ட அரசி திடுக்கிட்டு, தன்

மகளிருப்பிடம் சென்று, அவள் இருக்கும் நிலையை உற்றநோக்கி வண்ணாத்தியின் வார்த்தை நிஜமென்றறிந்து, தன்மகளை யாதொன்றும் விசாரிக்காமலே வீட்டுக்கு திரும்பிவந்து, தன் கணவனிடம் இச்சங்கதிகளையெல்லாம் சொல்லிக்கொண்டு துக்கிக்க, அவ்வரசன் தன்முதல் தலையாரியை வரவழைத்து அவனிடம் இச்சங்கதியை சூசனையாய் ஒரு திருடன் தன் மகள் வீட்டுக்கு வெகுநாளாக வரத்துப்போக்காயிருக்கிறான். அவனை எவ்விதமாகிலும் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்ல, அத்தலையாரியும் அவன் சேவகர்களும் எத்தனை நாளாய் வெகு ஜாக்கிரதையாக சிங்காரவல்லியின் அரண்மனையைச் சுற்றிலும் காவலிருந்தபோதிலும், வெளித்திருடனாயில்லாதபடியால் அவர்களுக்கு அவன் அகப்படவில்லை. அதன்மேல் அம்முதல் தலையாரி தான் ஒரு பெண்வேஷம் போட்டுக்கொண்டு, சிங்காரவல்லியின் தாதிகளுடன் தானும் ஓர் தாதியாய்த் திரிந்துகொண்டிருந்தான். இராத்திரி எல்லா தாதிகளையும் வெளிக்கனுப்பின பிறகுதான் சிங்காரவல்லி, இரத்தினபாரிகராயனுடன் கொஞ்சிகுலாவுவதாதலால் அத்தலையாரிக்கு சிலநாள் வரையிலும் இரத்தினபாரிகராயன் இருப்பு தெரியவில்லை. ஒரு நாள் இராத்திரி அதிக உஷ்ணமாயிருந்ததால், தன்னறையின் சன்னலை கொஞ்சம் திறந்துவைத்து, சிங்காரவல்லி, தன் கணவனுடன் படுத்துதூங்க, அதைக் கண்ட தலையாரி, மறுநாள் காலையில், சிங்காரவல்லியிடம் தன் சுயரூபத்துடன் வந்து, அப்பறவையை அரசன் பார்க்கக்கோறுகிறபடியால் அதை தன்னிடம் கொடுவென்று கேட்க, சிங்காரவல்லி பயந்து, அப்பறவையைக் கூண்டினின்றும் எடுத்து அவனிடம் கொடுக்கும் பாவனைபோல், அது எதேச்சையாய் பறந்துபோகும்படி விட்டுவிட்டனள். உடனே தலையாரியும், (கூடுவிட்டு கூடுபாயும் வித்தையறிந்தவனாதலால்) ஒரு ராசாளியின் உருவம் எடுத்து அப்பறவையின் பின்றெல் துரத்திக்கொண்டு சென்றனன். இங்ஙனம், அம்மகான் முன்னும், தலையாரி பின்னுமாக பறந்துபோகையில், ஒரிருண்ட மூங்கிற் காட்டில் நுழையவே, ஒரு மூங்கில் கொம்பு பட்டு, பறவையாயிருந்த இரத்தினபாரிகராயன் தலையில் சொருகப்பட்டிருந்த இறகு கீழே விழுந்துபோகவே, இரத்தினபாரிகராயன் தன் சுயரூபமெடுத்து ஓடலுற்றனன். தலையாரியும் தன் சுயரூபமெடுத்து அவன்பிறகு ஓட ஆரம்பிக்கவே, அவ்விரத்தினபாரிகராயன் இத்

தலையாரி கையில் அகப்படாமல் தப்பித்துக்கொண்டு, தன் வழியில் இருந்த ஓர் அந்தணன் வீட்டுக்குள் நுழையவே, அவ்வீட்டார் அவனை "நீர் யார், இங்குவந்து நுழைந்த காரணம் என்ன"வென்று கேட்க "நான் ஒரு தேசத்தரசன். என் சேனைகளைக்கொன்று என் தேசத்தைச் சத்துருக்கள் பிடித்துக்கொள்ளவே நான் மாத்திரம் உயிர் தப்பி ஓடிவரும் வழியில், இந்த ஊர்த் தலையாரிகளில் ஒருவன் என்னைக் கண்டு, என் கழுத்தில் இருக்கும் இந்த முத்துமாலையைக் கவரத் துரத்திவருகிறான். அவனிடம் என்னை ஒப்புவிக்காமல் நீங்கள் எப்படியாவது என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று அம்மகான் வேண்டிக்கொள்ள, அவர்கள் அதற்கு "ஆம் நாங்கள் உமது பிராணனையும் மானத்தையும் காப்பாற்றுகிறோம். இதோ நிற்கும் எமது கடைப்பெண்ணை நீர் கல்யாணம் செய்துகொள்ளுகிறீரா" என்று கேட்க அதற்கு அவன் சம்மதிக்க, பின்னாலேயே தலையாரி வந்து இங்கே யாராவது புதுஆட்கள் வந்தார்களா என்று அவ்வீட்டாரைக் கேட்க, அவர்கள் இல்லையென்று மறுத்துவிடவே, அவ்வேதியர் வார்த்தையை நிஜமென்று நம்பி, தலையாரி அவ்விடம்விட்டு முன்னுக்குச் சென்று எங்கெங்குந்தேடியும், அம்மகான் அகப்படாததால் தன் வீடு சென்றனன். பிறகு அப்பிராமணச் சிறுமி தன்னை மணக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தவே, "இவ்வூர் அரசனிடம் தெரியப்படுத்தி என் அந்தஸ்துக்குத் தகுந்தபடி உன்னை மணக்கின்றேன் வா" என்று அவளிடம் சொல்லி அவளை அழைத்துக்கொண்டு அரசன் அரண்மனையை நோக்கிச் செல்லுமிடத்து வழியில் பூஜாரிச்சி (பண்டாரவல்லி) இம்மகானைக் கண்ணுற்று, "நாகம் கடித்தபொழுது என்னால் அல்லவா நீர் உயிர் பெற்றீர். என்னையும் நீர் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்த அவளையும் கூட்டிக்கொண்டு அரசன் கொலுவிருக்குமிடத்திற்கு செல்ல, மதனகேசரியரசனும் இரத்தினபாரிகராயனைக் கண்டு எழுந்து அவருக்கு ஆசனம் கொடுத்து "இத்தனை நாளாக எங்கிருந்தீர் இவ்விரு கன்னிகைகள் யார். என் அவர்களை என்னிடம் அழைத்து வந்திருக்கிறீர்கள்" என்று வினவ, தனக்கு சரஸ்வதியம்மன் திருவிழா இராத்திரிமுதல் அதுவரையிலும் நடந்த சங்கதிகளையெல்லாம் ஒன்றும் விடாமல் சொல்ல, தன் மகளின் ஆசைநாயகர் இவரே என்றறிந்த அரசன் உடல் பூரித்து, அக்கன்னிகைகளை நோக்கி, "உயிர் கொடுத்தவள்

தாயாருக்குச் சமானம், ஆபத்தைக் காத்தவள் சகோதரிக்குச் சமானம். ஆதலால் உங்கள் இருவரையும் இவர் மணப்பது தகாது. உங்களுக்குச் சரியான வரன்களைத் தேடி நானே உங்களுக்கு கல்யாணம் செய்து வைக்கிறேன்'' என்று சொல்லி அவர்களை அவர்கள் இருப்பிடத்திற்கனுப்பிவிட்டு, மந்திரியைக் கூப்பிட்டு, ஆகாயமளாவியமணப்பந்தல் ஒன்று சித்தம் செய்யச்சொல்லி, சாஸ்திரோக்தமாய் தன் மகளை இரத்தினபாரிகராயனுக்கு தாரை வார்த்துக்கொடுத்தான். இரத்தினபாரிகராயனும், கல்யாணச் சடங்குகள் முடித்துக்கொண்டு, சண்பகவல்லி இருக்கும் மாளிகைக்குப் போகவே, இவன் பிரிந்தது முதல் அன்ன ஆகாரமில்லாமல் அழுதுக்கொண்டே படுத்த படுக்கையில் கிடந்து வருத்தப்படும் அவ்விராஜபுத்திரி இவரைப் பார்த்தவுடன், சூரியனைக்கண்ட தாமரையைப்போல் முகம்மலர்ந்து எழுந்துவந்து அவர் பாதத்தில் வீழ்ந்து தன்னையும் விவாகம்செய்துக் கொள்ளக் கோறவே, இரத்தினபாரிகராயனும் அதற்குச் சம்மதித்து ''உன்னை நான் விவாகம் செய்துகொள்ள யாதோர் ஆக்ஷேபணையுமில்லை. ஆயினும் உன் தகப்பனார் ஊருக்குச்சென்று அங்குஉன்னை அவரால் உதகதாரா பூர்வகமாய்ப்பெற்று மணஞ்செய்து கொள்ளுகிறேன்'' என்றுசொல்லி அவளை அதற்கிணங்கச்செய்து தான் அவ்விராத்திரி முத்துமாலைக்காகச் சென்றதுமுதல் தனக்கு நேர்ந்த விபத்துகளெல்லாம் தெரியப்படுத்தி சிங்காரவல்லியையும் காட்ட, இருவரும் ஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டு அதிக நேசமாயிருப்பதாகச் சம்மதித்தனர். சில நாள் சென்றபிறகு தன் நிஜவரலாற்றை மதனகேசரியிடம் தெரியப்படுத்தி, சண்பகவல்லியை மணக்கும் பொருட்டு அவளூருக்குப் போகத் தனக்கு விடைகொடுக்கும்படி இரத்தினபாரிகராயன், தன் மாமனை மதனகேசரியை வேண்ட, அவனும் அக்கருத்துக்கிசைந்து தன்மகளையும் அவருடன் பிரயாணப்படுத்தி, இரதகஜதுரகபதாதிகளென்று சொல்லும் நால்வகைச் சேனைகளுடனும் அனுப்ப, இரத்தினபாரிகாயனும், சண்பகவல்லியும், அவள் தாதியும், சிங்காரவல்லியும் வீரகேசரியின் நகரத்திற்கு வந்து சேர்ந்தனர். அங்ஙனம் அவ்வூருக்கு இவர்களெல்லாம் வந்து சேர்ந்து ஊருக்கு வெளியிலுள்ள ஓர் நந்தவனத்திலிறங்கி, தம் வரவை அவ்வரசனுக்கு அறிவிக்க, அவ்வரசனும், மந்திரி, புரோகிதர் முதலிய பரிவாரங்களுடனே அச்சோலைக்கு வந்து தன் மகளையும்

இரத்தினபாரிகராயனையும் பார்த்து அதகாறும் மகளைக்காணுத துக்கத்தால் இளைத்த உடல் பூரித்து, அவர்களை அதிக வைபவத்துடன் கூட்டிக்கொண்டு சென்று தன் அரண்மனையடைந்து புரோகிதர்களால் நிச்சயிக்கப்பட்ட நல்ல சுபமுகூர்த்தத்தில், ஓர் பெரிய கல்யாணப்பந்தல் போடுவித்து, தன் மகளை சாஸ்திரோக்தமாக இரத்தினபாரிகராயனுக்கு தாராபூர்வகமாய் விவாகம் செய்து முடித்தனன். பிறகு கொஞ்சநாள் அங்கிருந்து வீரகேசரியரசனிடம் தன் நிஜவரலாற்றைத் தெரிவித்த, சூரகேசரியுடைய நகரம் சென்று தன் முதல் மனையாளான அம்புஜவல்லியைப் பார்க்கவேண்டுமென்று இரத்தினபாரிகராயன் வேண்டிக்கொள்ள, சூரகேசரியும் அவ்வாற்றைக்கிணங்கி, இன்னம் அதிகமான சேனைகளையும், பரிவாரங்களையும் கூட்டி அனுப்ப, இரத்தினபாரிகராயனும், சண்பகவல்லியும், சிங்காரவல்லியும், சூரகேசரியினுடைய நகரம் வந்துசேர்ந்து முன்போலவேஊருக்குவெளியிலிருந்த ஓர்தோட்டத்திலிறங்கிக்கொண்டு, அவ்வரசனுக்குத் தம்வரவைத் தெரிவிக்கவே அவ்வரசனும், தன் சகல சேனபரிவாரங்களுடனும் எதிர்கொண்டு வந்து இவர்களைத் தன் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போனன். அங்கே அம்புஜவல்லியைக் கண்டு இரத்தினபாரிகராயனும் சண்பகவல்லியும் சிங்காரவல்லியும் அவளுக்குத்தகுந்தபடி உபசாரணைகள் செய்து சில காலம் தன் மூவர் மனைவிகளுடனும் சாசசல்லாபமாய்ச் சுகித்துக் கொண்டிருந்தனன். சூரகேசரி அரசனும் அவனைத்தன் இராஜ்ஜியத்துக்கு இளவரசாக நியமித்தனன்.

இங்ஙனம் சிலகாலம் கழிந்தபிறகு, தன் தாயாரையும் தன் தமயனையும் திரும்பப்பார்க்கக் கோறி, இரத்தினபாரிகராயன் தன் ஊர்க்கு சேனைகளுடனும் தன் மூவர் மனைவியருடனும் தக்க பரிவாரத்துடனும் சென்முன். அங்கு இவன் அவர்களை விட்டுவந்தபிறகு, அவர்களுக்கு அதிக கஷ்டகாலங்கள் நேர்ந்து அந்தநிலத்தை கடன்காரர்கள் பிடுங்கிக்கொள்ள, அவர்கள் அடுத்த காட்டுக்குட்சென்று விறகு கொண்டுவந்து அவ்வூரில் விற்று அதிஞல் வரும் சுவல்பலாபத்திஞல் கடுமையான காலக்ஷேபம் செய்துகொண்டு வந்தார்கள். இளைய அரசனுகிய இரத்தினபாரிகராயன் அவ்வூருக்குசேனை முதலான பரிவாரங்களுடன் வருவதாக முன்னமே அக்கிராமத்தடி

காரிகளுக்கு சங்கதி தெரியவே, தயிர், விறகு, சாய்கறி, நெய், இலை முதலிய சில்லரைச்சாமான்களை வெட்டியில் (அதாவது விலை கொடாமலும் அல்லது பாதிக்குக் குறைந்தவிலை கொடுத்தும்) பிடிக்க ஆரம்பிக்கவே, வெங்காஸாமியின் தமயனும் தாயாரும் அதற்குப் பயந்துகொண்டு காட்டிலேயே ஒளித்துக்கொண்டனர். வெங்காஸாமியாகிய இரத்தினபாரிகராயனும் அவ்வூரினிடம் வந்து அவர்களைப் பற்றி விசாரிக்கும்பொழுது அவர்கள் காட்டினிடையே ஒளித்துக்கொண்டிருக்கிறார்களென்றும் ஊருக்குள் வருவதில்லையென்றும், அன்னபானாதிகளுக்கு மிகசிரமப்படுகிறார்களென்றும் கேட்டு அதிக துக்கத்துடன், அவர்களை எப்படியாவது தேடிப்பிடித்துத் தன் முன்பாகக்கொண்டுவர வேண்டுமென்று கிராமஸ்தர்களை (மணியம் கணக்கர்களை) நிர்ப்பந்தப்படுத்த அவர்கள், தாங்களும் தங்கள் தலையாரிகளுமாக காடெல்லாம் தேடி, ஒரு மூலையில் ஒளித்துக்கொண்டிருந்த நாராயணனையும் அவன் தாயாரையும் கண்டுபிடித்து இளவரசன் முன்னிலையில் கொண்டுவந்துவிட அவன் அவர்களைநோக்கி அவர்கள் வரலாற்றை விசாரித்துத் தன்னை யவர்கள் எப்போதாவது பார்த்ததாக நினைவிருக்கிறதா என்று கேட்கத் தாயாரும் அண்ணனும் உடனே அவனை அடையாளம் கண்டுபிடித்தார்களென்றாலும், கேவலம் தரித்திரதிசையில் தங்களைவிட்டுப்போனவெங்காஸாமிக்கு இவ்வளவு உயர்ந்த அந்தஸ்து வந்திருக்கக்கூடுமா என்று அவர்கள் சந்தேகித்து ஏதொன்றும் சொல்ல நாவெழாமல் நிற்கவே, அவர்களைப் பின்னும் பலவாறு வெங்காஸாமி வேண்டிக்கொள்ள, தாயார் மாத்திரம் மனம் துணிந்து இரத்தினபாரிகராயனைப் பார்த்து "ஸ்வாமி, நான் சொல்வதில் குற்றங்கள் இருந்தாலும் என்னை மன்னிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். தங்களைப் பார்க்குமிடத்து என்னுடைய இரண்டாவதுமகன் வெங்காஸாமி என்று செல்லப் பெயருள்ள வெங்கடரமணன் என்பவனைப்போல இருக்கிறது. அவன் வெகுகாலத்திக்கு முன் இங்கிருக்கும் என் மூத்தமகனாகிய நாராயணனுடன் சச்சரவு செய்துகொண்டு ஒருபடி உளுந்து நான் வழிச்செலவுக்குக் கட்டிக்கொடுக்க அதனுடன் தேசாந்திரம் சென்றான். ஆயினும் நிர்ப்பாக்கியவதியாகிய என்வயிற்றிற்பிறந்த அப்பிள்ளைக்கு இவ்வளவு யோக்கியதை நேரக்காரணமில்லை. ஆதலால் அவனைப் போலத் தாங்கள் இருக்கிறீர்கள் என்று சொல்லத்துணிந்த என்னை

மன்னித்தருளவேண்டியது உமது கடன். நீர் பலகாறும் என்னைவற்புறுத்தி கேட்டதால் நான் சொன்னேன்'' என்று சொல்லி சாஷ்டாங்கமாக அவ்விளவரசன் காலில் விழ வெங்காஸாமியும் எழுந்து அவ்வம்மாளை கைபிடித்தெழுப்பி அவள்காலிலும் நாராயணன் காலிலும் தான் விழுந்து தன் மூவர் மனைவிகளையும் வரவழைத்து அவர்களையும் விழச்செய்து ஆதியோடந்தமாகத் தனக்கு நேர்ந்த சங்கதிகளைத்தெரியப்படுத்தி, அவர்களுக்கு மங்களஸ்நாநம்செய்வித்துநல்ல ஆகாரங்கள் உண்பித்து அவர்களையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு தன் நகரத்திற்குச்சென்று, தன் தமயனுக்குவித்தைமுதலியவைகளை ஸரஸ்வதியின் அனுக்கிரகத்தால் கற்பித்து அவனுக்குத் தகுந்தவேதியர் வீட்டில் கல்யாணம் செய்வித்து வெகுகாலம் சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தனன். தன் மாமன்மார் மூவரும் மரித்தபிறகு மூன்று இராஜாங்கங்களையும் தான் ஒருவனே, தன் அண்ணனை முதல் மந்திரியாக வைத்துக்கொண்டு ஆண்டு வந்தான். ஆதலால் என் பிரியமுள்ள சிறுவர்களே! எல்லாவற்றிலும் தெய்வபக்தி சிறந்ததாதலால் நீங்களும் தெய்வபக்தி செய்துவரும்படியாக இச்சிறுகதை யெழுதலானேன். மேலும் தாயார் வார்த்தையை அவமதிக்காமல், அந்த அம்மாள் உத்திரவு பெற்றுக்கொண்டே அவளிடமிருந்து ஒருபடி உளுந்தாவது கொண்டுபோனதால்தான் இரத்தினபாரிகராயனுக்கு இவ்வளவுசெல்வமும்வந்ததாதலால், நீங்களும் உங்கள் தாய்மாரை கனப்படுத்தி அவர்கள் உத்திரவின்படி வாழுங்கள்.

R. கோனேட்டி அய்யர்.






## கல்யாணகோலாஹலம்.

வெட்டாச்சு தூர்ப்பிள்ளைகளுள்ளபேர்க்கு
குழந்தை குப்புக்கொரு கன்னியெங்கே
உள்ளூரிலே பெண்களிருக்குதென்றால்
ஸம்பந்தமாகாதொருபோதுமூரில் 1

ஆயில்யமாம் பிச்சுமகள்க்கு சுப்பன்
மகள்கு மூலம் ஹரிபெண் கருப்பு
கேட்டன்ஸாநுவ்ரவாஸம் சிவய்யன்
மகள்கு சேஷன்மகளோ ஸமொத்ரம் 2

கிஷ்ணன்மகள்க்கில்லெ பொறுத்தமொன்றும்
செல்லன்மகள்காச்சுது உமநிஷித்ரம்
பெண்ணைக்கொடான் சங்கரய்யனிங்கே
ஜெஸாஜாம் சாமுமகள் நினைச்சால் 3

கேழ்பூன் பணம் ரொம்ப மகள்கு ராமன்
பொல்லாதவாள் பெண்டுகளப்புவீட்டில்

மலட்டு ஜாதி மருமான் மகள்கள்
அய்யாவய்யன் பெண் அனவத்த சோகை
காமாக்ஷிபெண்ணுக்கொரு காலிலூனம்
கண்ணொன்னிலூனம் கமலாமகள்கு 4

அம்மாஞ்சி யேழை மகளை நமக்கு
குடுக்கரே னென்னொரு நாளுரைச்சான்
முன்னூரு ரூபாயுடமைக்குமாக
கேட்டானவன் தன் செலவுக்குமாக 5

சீமானிடத்தில் ஒரு பங்கை வைச்சால்
அவன் குடுப்பன் இருநூறு ரூபாய்
எதிர்மனைத் தோட்டமு வீடுவைச்சால்
சாமா குடுப்பன் இருநூறு ரூபாய். 6

ஆள்கூலி சாமான் ஜவுளிக்குமாக
பல்லக்கு வண்டில் வரதக்ஷிணைக்கும்,
ஸம்பந்தி ஸம்ஹாவனை யூருகோலம்
ஹரிக்குமாய் மத்தொரு நூறு ரூபாய் 7

பல்லக்கிலே பிள்ளையை வைக்கவேணும்
வண்டில்களில் மத்தவரேறவேணும்
பூச்சந்தனம் வெத்திலை பாக்கு வாழ
யெலை பழம் காய்கரி வாங்கவேணும்
குடம்முதல் பித்தளை செம்பு வாங்கி
குறச்சலில்லாம லெடுக்கவேணும் 8

பாட்டா மாமா மாப்பிளை மச்சினன்கள்
பேத்திப்பெண்கள் பேரனம்மாஞ்சி அத்தான்
சேஷீ நாணீ சுப்பி காமாக்ஷி மீனாள்
சீதைப்பாட்டி மத்த பந்துக்களுக்கும் 9

உள்ளூரிலே சங்கரனப்பு நாணு
அநந்தராமன் முதலான பேர்க்கும்
பேஷ்காரமீனு முனிஸீப்பு கர்ணம்
போலீஸூதாருக்கு முறைக்கவேணும்.

வரத கிருஷ்ணமாசாரியார்.

மனைவி:—குளிர்ந்தகாத்து அடிக்கும் சமயத்தில் நான் வாயை மூடிக்கொண்டு இருக்கவேணுமென்று வயித்தியர் சொன்னார்.

புருஷன்:—ஆனால் ஜன்னல்கதவை உடனே திறந்துவிடுகிறேன்.

ஒரு உபாத்தியாயர் தன் பையன்களுக்கு 'அகம்பாவம்' என்னும் வார்த்தைக்கு அர்த்தத்தை விவரித்துச்சொல்லிவிட்டு பின்வருமாறு பையன்களைக்கேட்டார்.

"பையன்களா! நான் சொன்னது நன்றாகத் தெரிந்ததா. உதாரணமாக—நான் என்னுடையபடிப்பைப்பற்றி மிகவாகசிலாகித்துப் பேசிக்கொண்டும், எனக்கு சமஸ்கிருதம் தெரியுமென்றும், நான் மிகவும் அழகானவனென்றும் நானே சொல்லிக்கொண்டேனேயானால் என்னை என்னவென்று சொல்லுவீர்கள்."

பையன்கள்:—(மிகப் பரப்பரப்புடன்)—புளுகர் என்பதாக சொல்லுவோம்.

ஒரு ரயில்வே உத்தியோகஸ்தன்:—ஆபத்திலிருந்த ரயிலை தப்பித்துவைத்த மகாபுருஷன் இவர்தான்.

கூட்டமாயிருந்த ஜனங்கள்:—ஆமய்யா, ஆமய்யா; எங்களையெல்லாம் காப்பாற்றிய மகாபுருஷர் இவர்தான்.

ரயில்வே உத்தியோகஸ்தர்:—அநேக நூறு ஜனங்களையும், விலையுயர்ந்த அநேக பதார்த்தங்களையும் நஷ்டம் சேதம் முதலியவை

ஒன்றுமில்லாமல் காப்பாற்றிய மகாபுருஷனே! உமக்கு நல்ல வெகுமதி கொடுக்க உத்தேசித்திருக்கிறேன்.

மகாபுருஷன்:—மெத்த ஸந்தோஷமய்யா.

ஜனங்கள்:—ஆம் அவருக்கு அவசியம் நல்ல வெகுமதி கொடுக்க வேண்டும்.

உத்தியோகஸ்தன்:—(தனக்குக் கீழ்பட்ட உத்தியோகஸ்தனை நோக்கி) அப்பா இந்த ஜனங்களிடம் தலைக்கு ஒரு ரூபாய் வீதம் வசூல் செய்து இவருக்கு அந்த தொகையை வெகுமதியாகக் கொடு.

ஜட்ஜ்:—ஐயா வக்கீலே, நீர் விசாரித்த ஸாக்ஷிகளெல்லாம் கேஸுக்கு ஒன்றும் ஸம்பந்தமில்லையே.

வக்கீல்:—இந்த ஸாக்ஷிகளைக்கொண்டுதான் என் கேஸை ஜயிக்கப் போகிறேன். நான் 40 வருஷகாலமாய் வக்கீலாகவிருக்கிறேனே. நானென்ன முட்டாளா?

ஜட்ஜ்:—நீர் இப்பொழுது கேட்கும் கேள்வியில் சட்டசம்பந்தமான விஷயம் ஒன்றுமில்லை. ஆதலால் ஸங்கதியின் உண்மையையறிந்து ஜூரிமார்களே உமக்கு பதில் சொல்லட்டும்.

ஒரு வக்கீல் தன் கக்ஷிக்காரன் மேல் ஏற்பட்டிருந்த கொலைக் குற்றத்தைப் பற்றி எவ்வளவு பேசியும் அந்தக் கக்ஷிக்காரனுக்கு மரணதண்டனையை விதித்து விட்டார்கள். அவன் சிறையில் தன்னைத் தூக்கில் போடும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் ஒரு சமயம் அவன் வக்கீல் அச்சிறைக்கு அவஸரமாக வந்து "அடே அப்பா கடைசியாக நல்ல ஸமாசாரமடா" என்றார். கக்ஷிக்காரனும் "என்ன, என்னை மன்னித்து விட்டார்களா" என்றான். வக்கீல் "மன்னிப்பு இல்லை. இப்பொழுது தான் உன் மாமன் இறந்து போய் உனக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைத்திருக்கிறது. அதை என்

ணிடம் அனுப்பியிருக்கிறார்கள். ஆதலால் உனக்காக மிகவும் சிரமப்பட்டு வேலை செய்த உன் வக்கீலுக்கு ஒன்றும் கொடுக்காமல் இறந்து போய் விடுவோமே என்று நீ இனி வருத்தப்பட வேண்டாம்" என்று சொல்லி அவ்வளவுபணத்தையும் எடுத்துக்கொண்டு கக்ஷிக்காரனை ஈசுவரத்தியானம் செய்துகொண்டிருக்கச் சொல்லிவிட்டுத்தன் வீடுபோய்ச் சேர்ந்தார்.

ராமன்:—தாங்கள் எனக்கு விற்ற "மோடார்கார்" நகரவேமாட்டேனென்கிறதே. ஆனால் தாங்கள் அதனால் தங்களுக்கு ஆறு தடவைகளில் பெஞ்சுகோர்ட்டாரால் அபராதம் விழுந்ததாகச் சொன்னீர்களே.

கோபாலன்:—ஆம் வாஸ்தவம்தான். பப்ளிக்ரோட்டை அடைத்துக்கொண்டு நின்றதற்காகத்தான் எனக்கு அபராதம் விழுந்தது.

